உ

திருவருள் துணை

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்



இயற்றியவர் :

மகாவித்துவான் திரிசிரபுரம்

மீனாட்சி சுந்தரம்பிள்ளை

வெளியீடு :

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம்

மேலரண்சாலை, திருச்சிராப்பள்ளி-620 008.

தொலைப்பேசி எண் : 0431-2704584

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்



இயற்றியவர் :

மகாவித்துவான் திரிசிரபுரம் **மீனாட்சி சுந்தரம்பிள்ளை**

உரையாசிரியர்

முனைவர் பழ.முத்தப்பன்

வெளியீடு :

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம்

மேலரண்சாலை, திருச்சிராப்பள்ளி-620 008.

தொலைப்பேசி எண் : 0431-2704584

நூல் குறிப்பு

நூலின் பெயர்	:	சேக்கிழார் பிள்ளைத்தமிழ்
ஆசிரியர்	:	மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை
உரையாசிரியர்	:	முனைவர் பழ.முத்தப்பன்
உரிமை	:	திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்
மொழி	:	தமிழ்
முதல் பதிப்பு	:	8, ஏப்பிரல் 2018
தாள்	:	16 கி.கி. மேப்லித்தோ
எழுத்து	:	12 புள்ளிகள்
பக்கம்	:	176
படிகள்	:	500
வெளியீடு	:	திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம் மேலரண்சாலை, திருச்சிராப்பள்ளி-8.
அச்சகம்	:	ஆர்.ஜி.பிரிண்டர்ஸ் சின்னக்கடைவீதி, திருச்சிராப்பள்ளி-2. போன் : 0431-2700417, 98949 08437

உ

திருச்சிற்றம்பலம்

முன்னுரை

தமிழகத்தின் நடுவண் அமைந்த காவிரியாற்றால் வளம் கொழிக்கும் குன்றுசூழ் நகரம் திருச்சிராப்பள்ளி. அந்நகரின் மேற்கே அமைந்துள்ள அதவத்தூரில் 6-4-1815-ஆம் ஆண்டு மீனாட்சி சுந்தரம் தோன்றினார். அவர்கள் திருச்சிராப்பள்ளி நகருக்குக் குடிபெயர்ந்து வாழ்ந்தபோது பலதமிழறிஞர்களின் பழக்கம் ஏற்பட்டது. அவர்களோடு அளவளாவி, தன் ஐயங்களைப் போக்கிக் கொண்டார். அவருக்குத் தண்டியலங்கார இலக்கணம் அறிந்து கொள்ள முடியவில்லையே என மனக்குறையிருந்தது. அதனை அவர் வாழ்ந்த பகுதியில் ஒரு துறவியிடம் கற்றுப் போக்கிக் கொண்டார்.

கற்பதிலும் கற்பித்தலிலும் ஆர்வங் கொண்டவர் பிள்ளை அவர்கள். திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் அம்பலவாண தேசிகர் மீது கலம்பகம் பாடி அவர்திருமுன்பே அரங்கேற்றினார். திருவாவடுதுறை ஆதீனத்தலைவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களுக்கு மகாவித்துவான் என்ற விருது வழங்கினார்.

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் புராணம், கோவை, குறவஞ்சி, அந்தாதி, பிள்ளைத்தமிழ், கலம்பகம், மாலை, தூது, உலா, பதிகம் ஆனந்தக்களிப்பு, அகவல் எனப் பலவகை நூல்களை இயற்றியுள்ளார்.

பிள்ளை அவர்கள் திருவாவடுதுறை ஆதீனப்புலவராய்த் திகழ்ந்த காலத்தில் பல புராணங்களை மாணவர்களுக்குக் கற்பித்தார். பெரிய புராணத்தைக் கற்கும்போது ஆழங்கால் பட்டதால் அதனை இயற்றிய சேக்கிழார் மீது பிள்ளைத் தமிழ்ப் பாடவேண்டும் என்ற அவர் எண்ணத்தின் வெளிப்பாடே சேக்கிழார்பிள்ளைத் தமிழ்.

சேக்கிழார் பிள்ளைத்தமிழில் காப்புப் பருவத்தில் உள்ள பத்துசெய்யுள்களும் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டர் தொகையிலுள்ள பத்து முதல் சீரைக் கொண்டு பாடப் பெற்றுள்ளன.

பிள்ளைத்தமிழ்க் காப்புப் பருவத்தில் பாட்டுடைத் தலைவனைத் தெய்வங்கள் காக்க எனப்பாடுவார்கள் ஆனால் பிள்ளை அவர்களோ ஒரு புரட்சியைச் செய்துள்ளார்.

தமிழ்ச்சங்கம் முதலில் திருத்தவத்துறைப் பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத் தமிழை இலவசமாக வெளியிட்டது. இவ்வாண்டு சேக்கிழார் பிள்ளைத் தமிழ் நூலை உரையுடன் ***8-4-2018*** ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை நூற்றாண்டு நினைவுப் பொற்கிழி வழங்கும் விழாவில் இலவசமாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறது.

8-4-2018 **திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம்**

உ

திருச்சிற்றம்பலம்

பதிப்புரை

திருச்சிராப்பள்ளியின் மையமாக அமைந்துள்ள திருச்சிராப் பள்ளித் தமிழ்ச்சங்கம் மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் நூற்றாண்டு நினைவாக1976 ஆம் ஆண்டு தமிழகத்தில் வணங்குதற்கும் போற்றுதற்கும் உரிய திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவர்களுக்கு முதன் முதலாகப் பொற்கிழி வழங்கி மகிழ்ந்தது. அவ்வாண்டு முதல் தமிழகத்தில் உள்ள தமிழறிஞர் ஒருவருக்கு ஒவ்வோர் ஆண்டும் விருதும் பொற்கிழியும் வழங்கிப் பாராட்டி வருகிறது.

சங்கத்திற்கு வரும் தமிழன்பர்களின் விருப்பத்தை ஏற்று, ஒவ்வோர் ஆண்டும் பிள்ளை அவர்களின் நூல் ஒன்றை அச்சிட்டு வெளியிடுவது எனத் தமிழ்ச் சங்கச் செயற்குழு ஒரு மனதுடன் தீர்மானித்தது, பிள்ளை அவர்களின் பிறந்தநாள் விழாவில் (8.4.2018 ஞாயிறு) அவர் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத் தமிழ் நூலை வெளியிடுகிறது.

பிள்ளை அவர்கள் திருத்தொண்டர் புராணம் பாடிய சேக்கிழார் மீது கொண்ட பக்தியால் அவர் மீது பிள்ளைத் தமிழ் பாட விரும்பினார். பிள்ளைத்தமிழ் வணங்குதற்குரிய தெய்வங்கள் போற்றுதற்குரிய வள்ளல்கள் இவர்களைப் பிள்ளையாகப் பாவித்து, பத்து பருவங்களாகப் பாடுவது. பிள்ளைத் தமிழ் ஆண்பாற்பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டு வகையாகப் பாடப்படுவது. இரண்டு பாற்பிள்ளைத் தமிழுக்கும் 1. காப்புப்பருவம், 2. செங்கீரைப்பருவம், 3. தாலப்பருவம், 4. சப்பாணிப்பருவம், 5. முத்தப்பருவம், 6. வாரானைப்பருவம், 7. அம்புலிப்பருவம் என ஏழு பருவங்களும் பொதுவான பருவங்கள். ஆண்பாற் பிள்ளைத்தமிழில் 8. சிற்றில், 9. சிறுபறை, 10.சிறுதேர் என மூன்று பருவங்களும், பெண்பாற்பிள்ளைத்தமிழில் 8. அம்மானை,

9. நீராடல், **10.** பொன்னூசல் என மூன்று பருவங்களும் அமையப்பாடுவார்கள்.

பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட விளங்கும் சேக்கிழார் பிள்ளைத் தமிழுக்கு மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி மேனாள் முதல்வரும் திருச்சிராப்பள்ளி செட்டிநாடு கலை அறிவியல் கல்லூரியின் மேனாள் முதல்வரும், தமிழ்ச்சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினருமான சித்தாந்த மணி முனைவர் பழ. முத்தப்பன் அவர்களிடம் உரை எழுதித் தருமாறு கேட்டவுடன் மனமுவந்து பணியை ஏற்கிறேன் எனக் கூறி உரை வளம் செய்துள்ளார். அவர்களுக்கும், இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய பெரியார் அரசுக் கலைக்கல்லூரி மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர். ப. சுப்பிரமணியன் அவர்களுக்கும், மெய்ப்புப் பார்த்து உதவிய புலவர் வ.கேசவன் அவர்களுக்கும், சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய ஆர்.ஜி. அச்சக உரிமையாளர் ஆர். ஞானசேகரன் அவர்களுக்கும், அவர்தம் பணியாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கற்பனைகளும் உவமைகளும் இலக்கணக்கூறுகளும் சைவ சித்தாந்தக் கருத்துகளும் சொல்லாட்சியும் நிறைந்த சேக்கிழார் பிள்ளைத்தமிழைத் தமிழ் அன்பர்களும் அறிஞர்களும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்ச்சங்கம் இந்நூலை வெளியிடுகிறது.

அன்பன்
புலவர். **சி.சிவக்கொழுந்து**
அமைச்சர்

அணிந்துரை

- *முனைவர் ப. சுப்பிரமணியன்*

19-ஆம் நூற்றாண்டுக் கம்பன், இணையிலாப் புலவன், மெய்ஞ்ஞானக்கடல், நாற்கவிக்கிறை, சிரமலை வாழ்சைவர் சிகாமணி முதலான பல விருதுகளைப் பெற்றுள்ள மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை எழுதியுள்ள எண்பதுக்கும் மேற்பட்ட நூல்களுள் ஒன்றாகிய சேக்கிழார் பிள்ளைத் தமிழ் சொற்சுவை, பொருட்சுவை, கற்பனைவளம், சந்த நயம் முதலிய சிறப்புகள் நிறைந்தது. இந்நூலில் சேக்கிழாரைக் குழந்தையாகப் பாவித்து, குழந்தையின் செயல்களைப் பத்து பருவங்களாக அமைத்துப்பாடப் பெற்றுள்ளது.

மகாவித்துவான் இயற்றியுள்ள பத்து பிள்ளைத்தமிழ் நூல்களுள் சேக்கிழார் பிள்ளைத் தமிழ் இறுதியாகச் செய்யப்பட்டது என்பர். இந்நூல் உருவாகக் காரணமாக அமைந்தவர் வன்றொண்டச் செட்டியார் என்பவர்.

பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவராம் சேக்கிழார் பற்றிய பிள்ளைத்தமிழ் நூலினைப் பக்தி மணங்கமழப் பாடியுள்ள மகாவித்துவானின் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் 103 விருத்தப் பாக்களால் ஆனது. நூலின் பாயிரத்தில் விநாயகக் கடவுள் வணக்கமாக ஒருபாடலும், குருவணக்கமும் அவை அடக்கமுமாக ஒரு பாடலும் உள்ளன. நூலின் காப்புப்பருவத்தில் 11 பாடல்களும், செங்கீரைப் பருவம், தாலப்பருவம், சப்பாணிப் பருவம், முத்தப்பருவம், வாரானைப்பருவம், அம்புலிப்பருவம், சிற்றில்பருவம் சிறுபறைப்பருவம், சிறுதேர்ப்பருவம் ஆகிய 9 பருவங்கள் ஒவ்வொன்றிலும் 10 பாடல்களும் உள்ளன.

விநாயகர் வணக்கம் விநாயகர் வணக்கமாக அமைந்துள்ள பாயிரப்பாடலில் விநாயகப்பெருமான் எடுத்த பேருருவம்

(விசுவரூபம்) காட்டப்படுகிறது. சேக்கிழார் பெரிய புராணப் பாயிரத்தில் **எடுக்கும் மாக்கதை** என்னும் திருவிருத்தத்தில் தடக்கை ஐந்துடை தாழ்செவி நீள் முடிக் கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம் என்னும் பகுதியிலுள்ள நீள்முடி என்பது விநாயகரின் விசுவரூபத் திருக்கோலம் ஆகும். இத்திருக் கோலத்தையே சேக்கிழார் தியானித்தார் என்று மகாவித்துவான் கருதியதால் தாமும் தம்பிள்ளைத் தமிழில் காப்புச் செய்யுளில் விநாயகப்பெருமானின் பேருருவத் திருக்கோலத்தையே வருணிக்கிறார்.

குன்றத்தூரின் வளம்-கற்பனை

சேக்கிழார் அவதரித்த குன்றத்தூர் பல்வேறு சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டது. நீர்வளம் நிலவளம் மிக்கது. குன்றத்தூர் பரந்தாமன் பள்ளி கொண்ட பாற்கடலை ஒத்து விளங்குவதாக மகாவித்துவான் பாடி மகிழ்கிறார்.

சேக்கிழாரின் பெருமை

சிறந்த கவிக்கோமானாகிய மகாவித்துவான் மற்றொரு கவிக்கோமானாகிய சேக்கிழாரைத் தம்பிள்ளைத்தமிழ் நூலில் போற்றிக் கவிகள் பல புனைந்துள்ளார். தம் பாடல்களில் அவரை உலகிலுள்ள பல உயர்ந்த பொருள்களாக உருவகிக்கிறார்.

சேக்கிழார்ரின் பாடற்சுவை

சேக்கிழாரின் பாடல்கள் தேனினும் இனிய தீந்தமிழ்ப் பாடல்கள். அவை சிந்தைக் கினியவை; செவிக்கினியவை; இருவினைக்கு மாமருந்தாய் அமைபவை. கல்லும் கனியக் கவிபாடும் சேக்கிழாரின் பாடற் சுவையினைத் தாம் அறிந்து மகிழ்ந்தவாறு மற்றவரும் கற்று இன்புற வேண்டும் என்னும் நோக்குடன் அப்பாடற் சுவை எத்தகையது என்பதை மகாவித்துவான் விளக்குகிறார்.

முக்திதரும் கவி சேக்கிழார் கவிபல பாடிய புலவன். அவரது கவி முப்பொருள்களாகிய பதி, பசு, பாசம் இல்லையென்பார்க்கு உண்டு என்றுகூறும் கவி; ஞானம் தரும் கவி; சித்தி தரும் கவி; சுத்தி தரும் கவி; புத்தி தரும் கவி; அனைத்தினுக்கும் மேலான வீடுபேறாகிய முக்தியினைத் தரும் கவி என்பது மகா வித்துவானின் உறுதியான எண்ணம்.

கற்பனை

பெருக்கெடுத்துவரும் ஆற்றை எதிர்த்துச் சென்ற வரால்மீன், அவ்வெள்ளத்தில் செல்லுகின்ற யானையை முட்டியது. அதனால் சினங் கொண்டு அச்சமுற்றுத்தாவி விண்ணைத் துளைத்துக் கொண்டு சென்று தேவருலகத்திலுள்ள காமதேனுவின் மடியை முட்டியது. காமதேனுவின் மடியிலிருந்து ஒழுகிய பால் முன்பு பெயரளவில் மட்டும் பாலாறு என்று கூறப்பட்ட ஆற்றில் கலந்து பெருக்கெடுத்தோடி அவ் ஆறு தன்பெயரைப்புதுப்பித்துக் கொண்டது. (முத்தப்-8)

இந்நூலின் ஆசிரியர் உவமையின் மூலம் கருத்தினை விளக்குகிறார். ஒழுக்கம் பொருந்திய மேலோர் கூட்டத்துள் அற்பரானவர் சென்று பொருந்தியதைப்போலக் குளத்திலிருக்கும் அன்னக்கூட்டம் நிலைகுலையுமாறு எருமைக் கூட்டங்களின் கால்கள் விரைந்து எழுந்து குளத்தில் பாய்கின்றன.

மேயபல ஆரியர் குழாத்தினுள் பூழியர்
  விராயதென வரயதூய
வெள்ளோதிமக் குழாம் நிலைகுலைய மேதிகாச
  விடைத்தெ ழீஇப்பாய. (முத்தப் -7)

சேக்கிழாரின் நாவன்மை.

சேக்கிழார் நாவன்மை படைத்தவர் என்பதைத்
தமிழ் நாவலர் ஏறே. (செங்கீரை-7)

என்றும்,

வலஞ்சார் பெருநாவலர் ஏறே. (முத்தப் -5)

என்றும் போற்றுகிறார்.

சேக்கிழாரின் சைவசமயத் தொண்டு பிள்ளை அவர்களைப் பெரிதும் கவர்கிறது அதனால் அவரை,

சகலாகம பண்டிதத் தெய்வச் சைவா. (தாலப்-2)

என்றும்,

சைவப்பயிர்தழையத் தழையும் புயல். (தாலப் 6)

என்றும்,

உலவாதமைந்த சிவபோகம் கொள்ளும்
சைவப்பயிர்வளர்க்கும் கொண்டல். (வாரானை-10)

என்றும்,

வயங்கும் சைவப்பெருவாழ்வே. (சிற்றில் 10)

என்றும் கொண்டாடுகிறார்.

பழந்தமிழ் நூற்செய்திகளும் மரபுகளும்

மகாவித்துவான் தம் பிள்ளைத் தமிழ் நூலில் தொல்காப்பியம் பற்றிக் குறிப்பிடுகிறார். சேக்கிழார் தம் நூலுக்குத் தொல் காப்பியத்தையே இலக்கணமாகக் கொண்டார் என்றும், தொல்காப்பியம் செய்தவர் திரணதூமாக்கினி என்றும், அவர் சிறப்பினை மிகுதியாகப்பெற்றவர் என்றும் அருந்தவத்தை உடையவர் என்றும் ஒருவருக்கும் தோற்காத நாவினை உடையவர் என்றும் குறிப்பிடுவார். (தாலப்-6)

தில்லைக்கூத்தன் உமாபதி சிவாசாரியாருக்குக் கொடுத்த திருமடலால் தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்த பெத்தான் சாம்பானுக்கு நிருவாண தீக்கையால் முக்தி கொடுத்த செய்தி நூலில் இடம்பெறுகிறது. (செங்கீரை-4)

தேவாரம் பாடிய மூவராலும் பாடல் பெற்ற பழையனூர் என்ற ஊரில் நீலி என்ற பேயாகிய பெண்ணைக் கண்டு அஞ்சிய ஒரு வணிகனைக் காப்பாற்றுவோம் என்று கூறி அவ்வாறு காப்பாற்ற முடியாததால் தாங்கள் கூறியபடி தீயில் மூழ்கிய எழுபதின்மர் தோன்றிய குலம் வேளாளர் குலம் என்றும்,

(வாரானை 6)

சோழர்கள் முடிசூடும் காலத்தில் வேளாளர் மரபினர் அம்முடியைத் தொட்டுக் கொடுக்கும் வழக்கம் உடையவர் என்றும் கூறியுள்ளார், *(சப்பாணி1)*

சேக்கிழார் பிள்ளைத் தமிழ் நூலுக்கு உரை வரைந்துள்ள முனைவர் பழ. முத்தப்பன் தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பழுதறக் கற்றவர். பல்லாண்டுகள் மாணாக்கர்க்குப் போதித்தவர். சைவத் திருமுறைகளில் தோய்ந்தவர். சைவ சித்தாந்த நூல்களை ஆய்ந்தவர்.

திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம் திரிசிரபுரத்தில் பிறந்து வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்னும் தன்னேரில்லாதத் தமிழ்ச் சான்றோருக்கு ஒவ்வோராண்டும் விழா எடுத்துச் சிறப்பிக்கும் அரிய செயல் போற்றுதற்குரியது. அப்பெருவிழாவில் அப்பெருமகன் படைத்துள்ள ஓர் அரியநூலை உரையுடன் வெளியிட்டு, தமிழ்கூறு நல்லுலகிற்கு அளித்து வருவது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியது.

பொருளடக்கம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

பாயிரம்

விநாயகக் கடவுள் வணக்கம்

மாமேவு வான்பிறை முடிப்பிறை யிரண்டென்ன
வாய்க்கடைத் தோற்றியஇரு
மருப்பிரண் டென்னஅம் கைக்கோ டிரண்டென்ன
மார்பின்முத் தாரமென்னப்
பாமேவு பேருதர பந்தம்என அரைசூழ்
படாம்எனத் தாளின்முத்தம்
பதித்தகழல் எனவிரவ மேலோங்கு பேருருப்
பண்ணவனை அஞ்சலிப்பாம்
ஏமேவு ஞானசபை இறைவர்தம் மேனியின்
இணங்குற எழுப்புலகெலாம்
என்னுமறை யாதியாக் கொண்டவர் உயிர்க்கருளும்
இயல்பனைத் தும்தெரித்து
நாமேவும் அம்முதலோ தொன்றவினை உருபுதொக
நான்கன்அடி ஆதிசெய்து
நால்சீரில் நால்நெறி விளக்கியொளிர் சேக்கிழார்
நற்றமிழ்க் கவிதழையவே. 1

பொழிப்புரை: பொன்னால் அமைக்கப் பெற்ற ஞானசபையின் இறைவராம் நடராசப் பெருமான், ஆகாய வழியாம் தம் திருமேனியின் அசரீரி வழியாகப் பொருந்தும்படித் தோற்றுவித்து அருளிய 'உலகெலாம்' என்னும், வேதச் சொல்லை முதலாகக் கொண்டு செய்யப் பெற்ற பாடலில், ஆதியாகிய இறைவர் உயிர்களுக்கு அருளும் இயல்புகள் அனைத்தையும் தெரிவித்து, நாவில் பொருந்திய உலகெலாம் என்ற முதல் சொல்லோடு பொருந்தும்படியாக, நான்காவது அடியில் வினைத்தொகைச் சொல் தொக்கு நிற்கும்படியாக, மலர் என்ற சொல்லை வைத்து நான்கடிகளை அமைத்து, ஒவ்வொரு

அடியிலும் நான்கு சீர் அமையுமாறும், அவ்வவ்வடிகளில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நெறிகளும் அமையுமாறு செய்து, பாடியருளிய சேக்கிழார் மீது பாடுகின்ற நல்ல தமிழ்க் கவிதையாகிய இப்பிள்ளைத்தமிழ் என்றென்றும் நிலைத்திருக்கும் படியாக பெருமை பொருந்திய வானத்தில் விளங்கும் பிறைச்சந்திரன், விநாயகப் பெருமான் பேருருவம் எடுத்த பொழுது, அவர்தம் முடியில் உள்ள பிறைச் சந்திரனோடு சேர்ந்து இரண்டு பிறைச் சந்திரன் என்று தோன்றுமாறும், மேலும் அவர் உருவம் வளர்ந்த பொழுது, விநாயகப் பெருமானின் திருவாயிலில் உள்ள தந்தத்தோடு மற்றொரு தந்தமாகவும், அவர் கையில் பிடித்த கொம்புடன் பிறைச்சந்திரன் சேர்ந்து கையில் இரண்டு கொம்பாகத் தோன்றுமாறும், மேலும் பெருமான் உயரும் பொழுது அச்சந்திரன் அவர் மார்பில் விளங்கும் முத்து மாலையாகத் தோன்றுமாறும், மேலும் அப்பெருமான் உயர அப்பிறை செய்யுட்களில் சிறப்பாகக் கூறப்படும் உதரபந்தமாகத் தோன்றவும், மேலும் பெருமான் உயரும் பொழுது அப்பிறை பெருமான் இடையில் அணியும் ஆடையாகத் தோன்றுமாறும், மேலும் பெருமான் உயரும் பொழுது அப்பிறை அவர் திருவடியில் முத்துக்கள் பதித்த வீரக்கழல் என்று தோன்றுமாறும் அமையும்படி பேருருவம் எடுத்த விநாயகப் பெருமானைப் போற்றி வணங்குவாம்.

கருத்துரை: நடராசப் பெருமான் உலகெலாம் என்று எடுத்துக் கொடுத்த மறைச் சொல்லை நூலின் முதல் பாடலில் முதல் சொல்லாக வைத்து, அச்சொல்லை வினைத் தொகையாக ஆக்கி நான்காவது அடியில் மலர் என்ற சொல்லை வினை முடிவாக வைத்து, நான்கு அடிகளிலும் சைவ நான்கு நெறிகளையும் அமைத்துப் பாடியருளிய சேக்கிழார் மீது பாடப்பெற்ற இப்பள்ளைத்தமிழ் இலக்கியம் என்றென்றும் நிலைத்து நிற்குமாறு பேருருவம் கொண்ட விநாயகப் பெருமானை வணங்குவாம்.

அருஞ்சொற்பொருள்: வான்பிறை - வானத்துச் சந்திரன், முடிப்பிறை - விநாயகர் தலையில் அணிந்த சந்திரன், மருப்பு - கொம்பு, கைக்கோடு - கையில் கொண்ட கொம்பு, உதரபந்தம் - வயிற்றில் கட்டப்பெறும் பட்டை, படாம் - ஆடை, கழல் -

காலில் அணியும் வீரக்கழல், பண்ணவன் - விநாயகப் பெருமான், ஞானசபை - பொற்சபை, மேனி - வெட்டவெளி, உயிர்த்தருளும் இயல்பு - இறைவனின் ஐந்து தொழில்கள், வினை உருபு தொக - முதலடியில் உள்ள உலகெலாம் என்ற சொல்லோடு மலர் சிலம்படி என்ற நான்காமடியில் உள்ள சொல்லை வினைத்தொகை தொக்கும்படியாக அமைத்து, உலகெலாம் மலர்கின்ற சிலம்படி என்று பொருள் கொள்ளுமாறு அமைந்த, நால்நெறி - சைவத்தின் நான்கு மார்க்கமாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம்.

குருவணக்கமும் அவையடக்கமும்

ஓங்குகயி லாயபரம் பரைநந்தி அடிகட்
குறுமரபெட் டாவதுபின் தோன்றலாய் எங்கள்
உயர்திருவா வடுதுறைச்சுப் பரமணிய குரவற்
குற்றபத்தொன் பதாவதுமுன் தோன்றலாய்ப் பொலிந்து
தேங்குசிவப் பிரகாச முதலியவாய் மலர்ந்து
திகழ்உமா பதிசிவனே குன்றையுற மேவித்
திருந்தும்ஏர் வளம்கொண்டு பெருமையின்மேல் ஆகிச்
சிறத்தலால் செம்மேனிக் குமரவேள் ஒத்தும்
பாங்குபெறத் துதிக்கையொடோர் கோட்டத்தன் ஆய
பயற்சியின்அக் குமரவேள் திருத்தமையன் ஒத்தும்
பரவுசேக் கிழானென்னும்பேர் பரித்தலின்அக் கணேசப்
பண்ணவனை இனிதுயிர்த்த திருத்தாதை ஒத்தும்
வீங்குபுகழ் படைத்தஅருள் மொழித்தேவன் புராணம்
விரித்துரைத்தான் அவனடிதாழ்ந்தென் அறிவிற்கேற்ப
மேயபிள்ளைத் தமிழெனஒன் றுரைப்பல் அஃதறிவால்
மிக்கவர்தம் குழாத்தினுக்கு மிக்கநகை தருமே. 2

பொழிப்புரை: *ஓங்கி வளருகின்ற திருக்கயிலாய பரம்பரையில் முதல் மாணவராய்த் திகழும் நந்தியம்பெருமானின் வழி வந்த: எட்டாவது தோன்றலாகவும், எங்களுடைய உயர்ந்த திருவாவடுதுறை ஆதீனத்தின் குருமூர்த்தியாகிய சுப்பிரமணிய தேசிகருக்கு முன் எழுந்தருளியிருந்தவர்களில் பத்தொன்பதாவதாகக் கணக்கிடப் பெறுகின்றவரும், ஓங்கு புகழ் கொண்ட சிவப்பிரகாசம் முதலிய நூல்களைத் திருவாய் மலர்ந்து அருளி*

விளங்கும் உமாபதி சிவம் குன்றத்தூரில் தோன்றியும் திருந்திய ஏர்வளத்தால் மிகுந்தும் பெருமையின் சிகரமாக விளங்கும் சிறப்புப் பெற்றதால், சிவந்த மேனியை உடைய முருகப் பெருமானை ஒத்தும், அழகு பெற்ற வழங்கத்தக்க இருபத்து நான்கு கோட்டங்களுள் ஒன்றான புலியூர்க் கோட்டத்தில் தோன்றியதால் முருகப் பெருமானின் சகோதரனான விநாயகப் பெருமானை ஒத்தும், வணங்கத்தக்க சேக்கிழார் என்னும் பெயர் பெற்றதால் அவ் விநாயகப் பெருமானைத் தோற்றுவித்த சிவபெருமானை ஒத்தும் விளங்குகின்ற, உயர்ந்த புகழ் படைத்த அருள்மொழித்தேவரைப் பற்றிய புராணத்தை விரித்து உரைத்தனன். ஆதலால் அவருடைய திருவடியை வணங்கி, என்னுடைய சிற்றறிவிற்கு ஏற்பப் பிள்ளைத்தமிழ் ஒன்றை உரைப்பின். அந்நூல் அறிவு மிக்கவர் கூட்டத்தில் (என்னைப் பற்றிய) நகைப்பையே தரும்.

கருத்துரை: திருக்கயிலாயப் பரம்பரையில் எட்டாவது அருளாளராகவும், திருவாவடுதுறை ஆதீனத்தில் தற்பொழுது அருளாட்சி செய்துவரும் சுப்பிரமணிய தேசிகருக்கு முன்னே, பத்தொன்பதாவது அருளாளராக விளங்கிய உமாபதிசிவமாகிய குரு, விநாயகரையும், முருகனையும், சிவனையும் ஒத்து விளங்கும் சேக்கிழார் மீது புராணம் செய்தவர் ஆவார். அவருடைய திருவடிகளை வணங்கிச் சேக்கிழார் பிள்ளைத்தமிழ் நூலை என்னுடைய சிற்றறிவால் பாடியுள்ளேன்.

அருஞ்சொற்பொருள்: கயிலாய பரம்பரை - தமிழகத்து ஆதீனங்கள் திருக்கயிலாய பரம்பரை என்று அழைக்கப்பெறும், நந்தியடிகள் - சிவபெருமானிடத்தில் மாணவராய் இருந்து அவருடைய உபதேசத்தைப் பெற்ற முதல் மாணவர் நந்தியம்பெருமான். எட்டாவது பின் தோன்றல் - நந்தியம் பெருமானுக்குப் பின்னே உபதேச பரம்பரையில் உமாபதி சிவம் எட்டாவது மாணவராவார். அதாவது நந்தியம்பெருமான், சனற்குமாரமுனிவர், சத்திய ஞான தரிசினிகள், பரஞ்சோதி முனிவர் இந்நால்வரும் அகச்சந்தான பரம்பரை எனப்படுவர். அவர்களுக்குப் பின் மெய்கண்டார், அருள்நந்திசிவம், மறைஞான சம்பந்தர் என்ற மூவருக்குப் பின் உபதேச பரம்பரையில் எட்டாவதாகத் தோன்றியவர் உமாபதி சிவம் ஆவார். இவர்கள்

நால்வரும் புறச்சந்தான பரம்பரையினர் எனக் கூறப்பெறுவர். சிவப்பரகாசம் முதலிய - உமாபதிசிவம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, சங்கற்ப நிராகரணம் என்ற சித்தாந்த நூல்களைச் செய்து அருளியவர். அருள்மொழித்தேவன் - சேக்கிழாரின் இயற்பெயர்,

இத்திருப்பாடலில் நூலாசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சேக்கிழாரை முருகனுக்கும், விநாயகருக்கும், சிவபெருமானுக்கும் ஒத்தவராகப் பாடியுள்ள பாடல் தொடர்களை இருபொருளில் கொள்ள வேண்டும். "குன்றையுற மேவித் திருந்தும் ஏர்வளம் கொண்டு பெருமையின் மேலாகிச் சிறத்தலால் செம்மேனிக் குமரவேள் ஒத்தும்" சேக்கிழாருக்கு குன்றத்தூரில் தோன்றி ஓங்கிய ஏர்வளமாகிய வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டு பெருமை மிக்கவராய் விளங்குதலால், முருகனுக்குக் கூறும்பொழுது குன்றத்தூரில் குன்றின் மேல் விளங்கியும், அழகிய மயிலின்மேல் இருக்கின்ற முருகன், "பாங்குபெறத் துதிக்கையோடு ஓர் கோட்டத்தனாகிய பயிற்சியின் அக்குமரவேள் திருத்தமையன் ஒத்தும்" சேக்கிழாருக்குக் கூறும்பொழுது சேக்கிழார் எப்பொழுதும் துதிக்கும் கையினை உடையவர், மேலும் தொண்டை நாட்டுக் கோட்டங்கள் இருபத்து நான்கில் புலியூர்க் கோட்டம் என்னும் ஒரு கோட்டத்தை உடையவர் (தோன்றியவர்) விநாயகருக்குக் கூறும்பொழுது தொங்கும் துதிக்கையை உடையவர், ஒரு கொம்பனை உடையவர். "பரவு சேக்கிழான் எனும் பேர் பிரித்தலின் அப்பண்ணவனை இனிது உயிர்த்த திருத்தாதை ஒத்தும்" சேக்கிழாருக்கு சேக்கிழார் என்னும் பெயரைக் கொண்டதால், சிவபெருமானுக்குக் கூறும்பொழுது சே - எருது, கிழான் - தலைவன் என்ற பெயர் சிவபெருமானுக்கு இருத்தலால். இவ்வாறு மூன்று கடவுளர்களைச் சேக்கிழார் ஒத்தவர் என்று சிலேடை அமைப்பில் நூலாசிரியர் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

1. காப்புப் பருவம்

(பிள்ளைத்தமிழ் இலக்கியம் பத்துப் பருவங்களாக நூறு பாடல்களைக் கொண்டு அமைவதாகும். இதில் காப்புப் பருவம், பிள்ளைத்தமிழ் ஆசிரியர் தாம் பாட அமைத்துக் கொண்ட பாட்டுடைத்தலைவனைத் தெய்வங்கள் காக்க வேண்டும் எனப் பாடும் பருவமாகும். இப்பருவம் குழந்தை தோன்றிய மூன்றாம் மாதத்திற்கு உரியதாகும். பிற சைவபிள்ளைத்தமிழ் நூல்களில் விநாயகர், முருகன், சிவன், உமையவள், நால்வர் உள்ளிட்ட தெய்வங்கள் இடம்பெறும். இந்நூலில் நூலாசிரியர் சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை அடியார்களைக் குறிப்பிட்டுச், சேக்கிழாரைக் காக்க வேண்டும் என்று போற்றிப் பாடியிருப்பது சிறப்பிற்கு உரியதாகும்)

தில்லை வாழ் அந்தணர்

கார்கொண்ட சோலைசூழ் ஆரூரர் ஓர் அரைக்
கால்நம்பி ஆரூரர்முக்
கால்அரைக் கால்ஆக முடிவுசெய் தருள்மாக்
கவித்திசையின் வீற்றிருக்கும்
ஏர்கொண்ட தில்லைமூ வாயிரர்முன் வழுவரும்
எழுவருந், தழுவரும்எம
திதயம் தழால்கொண் டுறைந்திடச் செய்தவரை
யெப்போதும் ஏத்தெடுப்பாம்
பார்கொண்ட தொண்டர் வர லாறுசொல் புராணம்அம்
பலவர் அரு ளால்அமைந்த
படிதெரித்திட உலகெ லாம்எனும் சுருதிநாப்
பண்ணும்ஊற் றும்பொருத்திப்
பேர்கொண்ட சைவபரி பாடையறி வரியசம்
பிரதாய முதலியாவும்
பிறங்கத் தெரித்தெம்மை யாண்டகுன் றத்தூர்ப்
பிரானைப் புரக்க என்றே. 1

பொழிப்புரை: உலகெலாம் புகழ் கொண்ட திருத்தொண்டர் வரலாற்றைச் சொல்லுகின்ற பெரியபுராணத்தில், அம்பலக் கூத்தனின் திருவருளால் உலகெலாம் என்ற வேதச்

சொல் தமக்குக் கிடைத்தது தெரியும்படியாக அச்சொல்லை நூலின் தொடக்கத்தில் கொண்டதோடு, நூலின் நடுவிலும் நூலின் இறுதியிலும் இடம்பெற வைத்து, சிறப்பு கொண்ட சைவபரிபாடை, அறிவதற்கு அரிய சம்பிரதாயங்கள் ஆகியன விளங்குமாறு அறிவித்து, எம்மை ஆண்ட குன்றத்தூரில் தோன்றிய தலைவனைக் காக்க என்று.

மேகங்கள் தவழுகின்ற சோலைகளை உடைய திருவாரூர் இறைவர் ஓர் அரைக்கால் பகுதியாகவும், நம்பியாரூரராம் சுந்தரர் முக்கால், அரைக்கால் பகுதியாகவும் நிறைவு செய்து பாடிய பெருமை பொருந்திய (திருத்தொண்டத் தொகையின்) முதற் பாடலில் எழுந்தருளியிருக்கும் சிறப்பு பொருந்திய தில்லை மூவாயிரவர் முதலாய எழுவரும், குற்றமற்ற அன்பால் தருவதன்றிப் பிறவற்றால் தருவதற்கு அரிய எமது மனத்தில் பொருந்தும்படி அமைந்தவர்களை எப்போதும் போற்றி வணங்குவாம்.

கருத்துரை: திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறும் பெரியபுராணத்தில், இறைவன் திருவருளால் கூறப்பெற்ற உலகெலாம் என்ற வேதச் சொல்லாகிய முதற் சொல்லை நூலின் முதலிலும், நூலின் இடையிலும், நூலின் இறுதியிலும் அமையும்படி வைத்து, சைவ ஒழுக்கங்களையும், சம்பிரதாய வழக்கங்களையும் வெளிப்படுத்தி, நூலைப் பாடியருளிய எமது தலைவராகிய சேக்கிழாரைக் காக்க என்று முதற் பாடலில் இடம்பெற்றுள்ள தில்லை மூவாயிரவர் முதலான ஏழு அடியார் களை இதயத்தில் எழுந்தருளச் செய்து அவர்களை வழிபடுவோமாக.

அருஞ்சொற்பொருள்: ஆரூரர் ஓர் அரைக்கால் - திருவாரூர் இறைவர் சுந்தரருக்குத் திருத்தொண்டத் தொகை பாட , தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன் என்று ஒருஅடியை எடுத்துக் கொடுத்தார். அவ்அடியை முதல்அடியாகக் கொண்டு பின்அடிகளைச் சுந்தரர் பாடிமுடித்தார். எனவே அந்த ஒருஅடி பாடலுக்கு அரைக்கால் என்ற பழைய அளவுமுறையைக் கொண்டதாகும். நம்பியாரூரர் முக்கால் அரைக்கால் முதற் பாடலின் பிறஅடிகள் முக்கால் அரைக்கால் என்ற பழைய அளவுமுறையைக் கொண்டன. தில்லை மூவாயிரர் - தில்லைவாழ்

அந்தணர் மூவாயிரவர், வழுஅறும் - குற்றமற்ற, எழுவர் - பாடலில் இடம்பெற்ற தில்லைவாழ் அந்தணர், திருநீலகண்டர், இயற்பகையார், இளையான்குடிமாறர், மெய்ப்பொருளார் , விறல்மிண்டர், அமர்நீதியார்ஆகிய எழுவர், ஏத்தெடுப்பாம் - வணங்குவாம், சுருதி - வேதம், நாப்பண் - உலகெலாம் என்ற சொல்லை நூலின் முதற் சொல்லாக வைத்ததோடு, அச்சொல்லை நூலின் இடையில் அதாவது திருஞானசம்பந்தர் வரலாற்றில் 216 வது பாடலின் ஈற்றிலும் வைத்து, ஈற்று - நூலின் இறுதிப் பாடலின் இறுதிச் சொல்லாக வைத்து, சம்பரதாயம் - தொன்று தொட்டு சைவ சமயத்தில் வழங்கிவரும் வழக்கு, குன்றத்தூர' பரான் - குன்றத்தூரில் தோன்றிய சேக்கிழாராகிய தலைவர், புரக்க - காக்க.

"இலைமலிந்த வேல்நம்பி"

இலைமலி எனும்கவியுள் எழுபுவன மும்பரசும்
எழுமுனிவர் ஏத்த அமர்வார்
எழுபுரவி வையமிசை எழுகதிரும் வட்குமணி
எழுஉருவும் உட்கும்ஒளிசால்
மலைமலி புயத்தர்எறி பத்தர்முதல் எழுபவமும்
மாய்த்தவிறல் எழுவோரையும்
வாயார வாழ்த்தித் துதித்தவர் அடிக்கமலம்
மலர்முடிக் கணிஆக்குவாம்
கலைமலி பெரும்புலவர் கைகுவிக் கக்கலைக்
கன்னிநின் றேவல்கேட்கக்
கனகசபை யார்முதல் அளித்தருள அளவாம
கத்துவம் அடைந்திருந்தும்
அலைமலி சுணங்கன்ஒப் பேன்என் றுரைத்தருளி
யாம்பெருக் கத்துவேண்டும்
ஆன்றபணி வெனும்மொழிப் பொருள்தேற்று
குன்றைநகர் ஆளியைக் காக்கஎன்றே. 2

பொழிப்புரை: சாத்திர அறிவு மிக்க பெரும் புலவர்கள் கைகுவித்து வணங்க, கலைக் கன்னியாம் கலைமகள் நின்று ஏவல் கேட்க, பொற்சபையார் வேத முதற் சொல்லாகிய உலகெலாம் என்ற சொல்லை அளித்து அருள, இத்தகைய அளவற்ற

பெருமைகளை அடைந்திருந்தும், தன்னை (அவையடக்கப் பாடலில்) அலைகள் நிறைந்த கடற்கரையில் உள்ள நாயைப் போன்றவன் என்று உரைத்து அருளி, அதன் மூலம் நாங்கள் கல்வி முதலாகிய பெருமைகளைக் கொண்டபோது, பணிவு வேண்டும் என்ற திருக்குறளின் பொருளை அறிந்து கொள்ளுமாறு செய்த, குன்றத்தூரின் சிங்கம் போன்ற சேக்கிழாரைக் காக்க என்று.

இலைமலிந்த என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகையின் இரண்டாவது பாடலில், ஏழு உலகங்களும் போற்றும் ஏழு முனிவர்களாலும் பாராட்டப் பெறும் ஏழு குதிரைகள் பூட்டப்பெற்ற ஒற்றைச் சக்கரத்தை உடைய உலகமாகிய தேரில் அமர்ந்துவரும் சூரியனின் ஒளியாகிய பெருமை குறையுமாறு, ஒளிபொருந்திய மணிகளால் இழைக்கப் பெற்ற இரும்பினால் ஆகிய தூணும் அஞ்சும்படி, மலை போன்ற வலிமையான தோள்களை உடைய எறிபத்தர் முதலாகிய, பிறப்புகளை ஒழித்த ஏழு அடியார்களையும் வாயார வாழ்த்திப் போற்றி, அவரின் திருவடித் தாமரைகளை எம்முடைய தலைக்கு அணியாக ஆக்கிக் கொள்வாம்.

கருத்துரை: சேக்கிழாரின் காலத்திற்குப் பின்னால் வந்த உமாபதிசிவம், சிவஞானமுனிவர் ஆகியோர் சேக்கிழாரைப் பெரிதும் போற்றுவார்கள். அவ்வாறு அவர்கள் போற்றவும், கலைமகள் சேக்கிழாரின் நாவில் இருந்து பெரியபுராணச் சொற்களை எடுத்துக் கொடுக்கவும், தில்லைக்கூத்தர் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்கவும் முதலிய அளவற்ற பெருமைகளைச் பெற்றிருந்தும், தன்னை நூலின் அவையடக்கப் பாடலில் கடலை நக்கிக் குடிக்கும் நாய் எனப் பாடியுள்ள சேக்கிழாரைக் காக்க என்று இலைமலிந்த என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகை இரண்டாவது பாடலில் கூறப் பெற்றுள்ள எறிபத்தர் முதலான ஏழு அடியவர்களின் திருவடிகளை என் தலைக்கு அணியாக்குவாம்.

அருஞ்சொற்பொருள் : பரசும் - போற்றும், எழுமுனிவர் - மரீசி, அங்கிரசன், புலகன், வசிட்டன், அத்திரி, புலத்தியன், பிருகு, வட்கும் - ஒளிகுறையும், எழுஉருவும் - இரும்பாலாகிய தூண், உட்கும் - அஞ்சும், எழுவோர்- எறிபத்தர், ஏனாதிநாதர், கண்ணப்பர், குங்குலியக்கலயர், மானக்கஞ்சாறர், அரிவாட்டாயர்,

ஆனாயர் முதலியோர், பெரும் புலவர் - உமாபதிசிவம், சிவஞானமுனிவர், கலைக்கன்னி - கலைமகள், மகத்துவம் - பெருமை, சுணங்கன் - நாய், மொழிப்பொருள் - திருக்குறளின் பொருள்.

"மும்மையால் உலகாண்ட"

மும்மைமறை யும்பரவும் உம்மையுல கும்புகழும்
மும்மையாப் பகரம்ஆதி
மும்மைஉயிர் குறில்நெடில் தனித்துமத சவ்வூர்ந்தும்
முதலமையும் நாமம்உற்றார்
செம்மைபெறும் மும்மையாம் வருணத் துதித்துச்
சிறந்தோங்கும் மூர்த்தியார் முன்
செறியும்இரு மும்மையார் செம்பொன் பாதாம்புயம்
சென்னிவைத் தேத்தெடுப்பாம்
நம்மையருள் சிவபாத இருதயர் உளத்துவகை
நண்ணவொண் பொருளாதலால்
நாடுமுழ வாரவலம் இயைதலால் யாவொரும்
நாவலர் பிரான்என்னலால்
வெம்மைதவிர் புகலியார் முதல்மூவர் ரும்புகலும்
வேதத் தமிழ்க்கண்உள்ள
மெய்ம்மையை விரித்துத் தெரித்தருள்செய் குன்றையூர்
வேந்தைப் புரக்கவென்றே. 3

பொழிப்புரை: முத்தி இன்பமாகிய அருளைத் தருகின்ற சிவபெருமானுடைய திருவடிகளைத் தம் இதயத்தில் என்றும் கொண்டு வழிபடுகின்ற சிவபாத இருதயரின் மனத்தில் மகிழ்ச்சி பொங்க, சேமநிதியாகத் தோன்றிய திருஞானசம்பந்தரை ஒத்தும், நாட்டு மக்களால் போற்றப் பெறுகின்ற உழவாரத் தொழிலில் வெற்றியை அடைதலால் திருநாவுக்கரசரை ஒத்தும், எல்லாராலும் புகழப்படுகின்ற நாவலர் பிரான் என்று கூறுவதால் சுந்தரரை ஒத்தும், உயிர்களுக்கு உரிய பிறவியாகிய துன்பத்தைத் தவிர்க்கின்ற சீர்காழியில் தோன்றிய ஞானசம்பந்தர் முதலாகிய மூவராலும் அருளப் பெற்ற, தமிழ்மறையில்(தேவாரத்தில்) உள்ள உண்மைப் பொருளை விரித்து, அனைவரும் தெரிந்து வாழ்வதற்கு அருள்செய்த, குன்றத்தூர் அரசராம் சேக்கிழாரைக் காக்க என்று,

மூன்று வேதங்களும் போற்றும்படியான மேல், நடு, கீழ் என்ற மூன்று உலகங்களும் புகழும்படியான, மும்மையால் எனத் தொடங்கும் மூன்றாவது பாடலில், அகர, இகர, உகரமாகிய மூன்று குறில் எழுத்துக்களையும், ஊகாரமாகிய நெடிலைத் தனித்தும், ம, த, ச ஆகிய மெய் எழுத்துக்களை ஊர்ந்தும் முதல் எழுத்துக்களாகக் கொண்டு, தங்களுக்கு உரிய பெயர்களைப் பெற்றவர்கள், செம்மையான நான்கு வருணங்களில் மூன்றாவது வருணமாகிய வணிகர் வருணத்தில் உதித்த சிறந்தவராகிய மூர்த்தியார் முதலாகிய ஆறு சிவனடியார்களின் பொன் தாமரையாம் திருவடிகளைத் தலையில் வைத்துப் போற்றுவோமாக.

கருத்துரை: திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தியார் ஆகியோரை ஒத்து விளங்கி, உயிர்களுக்குப் பிறவிநோயைப் போக்கப் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மூவரும் பாடிய தேவாரத்தில் உள்ள உண்மைப் பொருளை விளக்கி நாங்கள் அறிந்து வாழுமாறு செய்த, குன்றத்தூர் பேரரசாகிய சேக்கிழாரைக் காக்க என்று திருத்தொண்டத் தொகையின் மூன்றாவது பாடலில் இடம் பெற்ற அகர, இகர, உகரம் என்ற மூன்று குற்றெழுத்துக்களும், ஊ என்ற நெடில் எழுத்து தனித்தும், மெய்யெழுத்துக்களோடு ஊர்ந்தும் முதல் எழுத்தாக அமைய, தங்கள் திருப்பெயர்களைப் பெற்ற மூர்த்தியார் முதலான ஆறு திருத்தொண்டர்களின் திருவடிகளைத் தலையில் சூடிப் போற்றுவோமாக.

அருஞ்சொற்பொருள்: மும்மை உலகம் - மேல், நடு, கீழ் என்ற மூன்று உலகங்கள், அகரம் ஆதி மும்மை உயிர் குறில் - அகரத்தை முதலாகக் கொண்ட அகரம், இகரம், உகரம் என்ற மூன்று குறில் எழுத்துக்கள், நெடில் - ஊகாரம் என்ற நெடில் எழுத்து, ம. த. சவ்வூர்ந்து - மெய்யெழுத்துக்களாகிய ம், த், ச் ஆகியவற்றின் மேல் ஊர்ந்து, முதல் அமையும் - முதல் எழுத்துக்களாக அமைந்த, நாமமுற்றார் - பெயர்களைப் பெற்றவர், இரு மும்மையார் - இருமூன்று ஆறு சிவனடியார்களாகிய மூர்த்தியார், முருகர், உருத்திரபசுபதி, திருநாளைப் போவார், திருக்குறிப்புத் தொண்டர், சண்டேசுவரர் என்று ஆறு திருத்தொண்டர்கள், பாதாம்புயம் - திருவடித்தாமரை, நம்மை

அருள் நாவலர் பிரான் என்னலால் -- இப்பகுதியில் ஆசிரியர் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரரைச் சேக்கிழார் ஒத்தவர் என்று கூறியுள்ளார். எவ்வாறெனில் சிவனின் திருவடிகளைத் தன் இதயத்தில் கொண்ட தந்தையார் சிவபாத இருதயருக்குத் திருஞான சம்பந்தர் மெய்ப்பொருளாக விளங்குபவர். அதுபோலச் சேக்கிழாரும் சிவபெருமானின் திருவடிகளை மனத்தில் கொண்டு, சிவ அன்பர்கள் மனத்தில் மெய்ப்பொருளாக விளங்குபவர். எனவே திருஞானசம்பந்தரை ஒத்தவர்.

உழவாரத் திருப்பணியில் இடையறாது விளங்குபவர் திருநாவுக்கரசர். அது போலச் சேக்கிழாரும் உழவு ஆரச்செய்து பெருமை பெற்றவர். ஆதலால் திருநாவுக்கரசரை ஒத்தவர். சுந்தரர் திருநாவலூரில் தோன்றியமையால் நாவலர்பிரான் என்று எல்லாராலும் அழைக்கப் பெற்றவர். அதுபோலச் சேக்கிழாரும் நாவலர்களாகிய புலவர்களுக்குத் தலைவனாக விளங்கி நாவலர்கோன் என்று அழைக்கப் பெறுபவர். ஆதலால் சுந்தரரை ஒத்தும் சேக்கிழார் விளங்குகிறார். வெம்மை - பாண்டியனின் வெப்புநோய், புகலியார் - சீர்காழிக்கு மற்றொரு பெயரான திருப்புகலியூரில் தோன்றிய ஞானசம்பந்தர், வேதத்தமிழ் - தேவாரம், மெய்ம்மை - மெய்ப்பொருள்,

"திருநின்ற செம்மையே"

திருநின்ற செய்யுள்புகல் நீற்றறையுள் அருகந்தர்
சிந்தைவெந் திடவமர்ந்தும்
செறிதுயர்க் கடன்மறக் கல்லொடவர் ஆழவொர்
திரைகடல் கல்மிதந்துங்
கருநின்ற கண்டரருள் வெளிசெய்நா அரசர்முன்
கருதுபுகழ் எழுவோரையும்
கருத்திடை யருத்தியின் இருத்திமற் றவர்பதம்
காதலித் துத்துதிப்பாம்
தருநின்ற செங்கைத் தலங்குவித் திடுமுனம்
தையலொரு பாகர்தொண்டர்
சரித்திரம் அனைத்தும்ஒரு வாதுற நிரம்பத்
தவாமன அறைக்குவிக்க

உருநின்ற சீர் கொள்புலி யூர்க்கோட்டம் மேயதற்கு
ஒப்பவுல கேத்தநாளும்
ஓங்குபுலி யூர்க்கோட்டம் மேயகுன் றத்தூர்
ஒருத்தரைக் காக்கஎன்றே. 4

பொழிப்புரை: கற்பகத் தருவைப் போலப் பிறருக்குக் கொடுக்கும் தமது சிவந்த கை குவிந்து விரியும் முன்னர், உமையவளை ஒருபாகத்தில் கொண்ட இறைவனின் தொண்டர்கள் வரலாறு அனைத்தையும் ஒன்றும் குறையாமல் இறைவனின் மனமாகிய அறையில் குவிக்க, அழகு பொருந்திய பெருமை கொண்ட புலியூர்க்கோட்டத்தில் (சிதம்பரத்தில்) இறைவன் மேவியிருந்ததற்கு ஒப்ப, உலகோர் போற்றும் படியான புலியுர்க்கோட்டத்தில் ஒருபகுதியான குன்றத்தூரில் தோன்றிய சேக்கிழாரைக் காக்க என்று.

திருநின்ற என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகையின் நான்காவது பாடலில் கூறப்பெற்ற, நீற்றறையில் அடைத்த சமணர்களின் மனமானது வெந்திட அதில் அமர்ந்து அருளியும், சமணர்கள் மிகுந்த துன்பக் கடலில் பாவக் கல்லோடு ஆழுமாறு அவர்களால் பூட்டப்பெற்ற கல்லுடன் கரையில் மிதந்தும், கருமை நிறத்தைக் கண்டத்தில் கொண்ட இறைவனின் அத்தகைய அருளை உலகோர் அறிய அறிவுறுத்திய திருநாவுக்கரசர் முதலாக, எண்ணத்தக்க புகழை உடைய ஏழு சிவனடியார்களையும் நம் கருத்தில் விருப்பத்தோடு இருத்தி, மற்று அவர்களின் திருவடிகளைக் காதலித்துப் போற்றுவாம்.

கருத்துரை: கைகள் குவிந்து விரிவதற்கு முன்னே திருத்தொண்டர் வரலாறு பாடியருளிய, புலியூர்க்கோட்டம் என்று கூறப்பெறும் தில்லையில் எழுந்தருளிய சிவனைப் போல, புலியூர்க்கோட்டம் என்ற கோட்டத்தில் உலகோர் போற்றும்படித் தோன்றிய குன்றத்தூர் சேக்கிழாரைக் காக்க என்று திருத்தொண்டத் தொகையின் நான்காவது பாடலில் கூறப்பெற்ற, சிவபெருமான் செய்த அருளை உலகோர் அறியும்படி செய்த, திருநாவுக்கரசர் முதலாக அமைந்த சிவனடியார் எழுவரை மனத்தில் இருத்தி, அவர்களது திருவடிகளைப் போற்றித் துதிப்போம்.

அருஞ்சொற்பொருள் : அருகந்தர் - சமணர், செருதுயர் கடல் - மிகுந்த துன்பக்கடல், மறக்கல் - பாவக்கல், எழுவோர் - திருநாவுக்கரசர், குலச்சிறையார், பெருமிழலைக்குறும்பர், காரைக்கால் அம்மையார், அப்பூதி, திருநீல நக்கர், நமிநந்தி ஆகிய எழுவர், ஒருவாதுற - ஒன்றும் குறையாமல், புலியூர்க்கோட்டம் - தில்லைக்கு மற்றொரு பெயர், ஓங்கு புலியூர்க்கோட்டம் - குன்றத்தூர் அமைந்த பெரும்பகுதி.

"வம்பறாவரிவண்டு"

வம்பறா யாப்புநவில் வம்பறா முலையொரு
மடக்கொடியை வேட்டல்இன்றி
வண்பரம சரியநிலை வைகுநா ளேயொரு
மடப்பாவை யைப்பிறப்பித்
தும்பறா வுந்திறல் அரிக்குருளை போலெழுந்
துவகையார்க் கும்பிறப்பித்
துலாயவர்முன் ஐவரைவெல் அறுவர்பொன் பாதமலர்
உச்சிவைத் தேத்தெடுப்பாம்
அம்பறா ஆழிமுழு துண்டதிரு முனிவிரித்
தருளிய தமிழ்க்காக்கமா
அருள்மூவர் அருள்மறைப்பொருள்தெரியமுன்னொருவர்
அருள்மறைப் பொருள்விளக்கும்
நம்பறா வித்தியா ரணியமுனி வரனுளம்
நயப்பயாப் புறவிரித்த
நாவலர் பிரானைத் திருக்குன்றை யருள்மொழி
நலத்தனைக் காக்கஎன்றே. 5

பொழிப்புரை: நீர் வற்றாத கடலை வற்றும்படி உண்ட அகத்திய முனிவர் விரித்து அருளிய, இலக்கணங்களைக் கொண்ட தமிழ் மொழிக்கு ஆக்கமாகச் சம்பந்தர், அப்பர், சுந்தரர் என்ற மூவரும் அருளிச் செய்த தேவாரத்தின் பொருள் தெரியுமாறு, முற்காலத்தில் சிவபெருமானால் அருளப் பெற்ற வேதங்களுக்குப் பொருள் விளக்கம் தந்த அன்பு மாறாத வித்தியாரணிய முனிவரின் உள்ளம் மகிழுமாறு,

பெரியபுராணச் செய்யுட்களால் விரித்துரைத்த, நாவலர் பெருமானை திருக்குன்றையூர் அருள்மொழித் தேவன் என்ற பெயரை உடைய சேக்கிழாரைக் காக்க என்று வம்பறா எனத் தொடங்கும் திருத்தொண்டத் தொகையின் ஐந்தாவது பாடலில் கூறப்பெற்ற, கச்சணிந்த ஒரு பெண்ணைத் தான் மணந்து கொள்ளாது பிரம்மச்சாரியனாய் இருக்கும் பொழுது, ஒரு பெண்ணைத் தோற்றுவித்து அருளியவரும், யானையின் மீது தாவுகின்ற வலிமை கொண்ட சிங்கக்குட்டி போல், எல்லா இடத்திலும் அனைவருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்கி உலாவியவராகிய திருஞானசம்பந்தர் முதலாகக் கூறப்பெற்ற, ஐம்புலன்களை வென்ற ஆறு அடியவர்களின் பொன் போன்ற திருவடி மலர்களைத் தலையின் உச்சியில் வைத்துப் போற்றுவாம்.

கருத்துரை: அகத்திய முனிவர் அருளிச் செய்த அகத்தியம் என்ற இலக்கண நூலைக் கொண்டு விளங்கும் தமிழுக்கு, மேலும் ஆக்கமாகச் சம்பந்தர் முதலிய மூவரும் அருளிச் செய்த தேவாரத் திருமுறைக்குப் பொருள் விளங்க, முன்பு இறைவனின் வேதங்களுக்குப் பொருள் விரித்துரைத்த வித்தியாரண்ய முனிவரின் மனம் மகிழும் வண்ணம், தாம் பாடிய பெரியபுராணத்தின் மூலம் விரித்துரைத்த நாவலர் பெருமானாகிய சேக்கிழாரைக் காக்க என்று திருத்தொண்டத் தொகை ஐந்தாவது பாடலில் கூறப்பெற்ற திருஞானசம்பந்தர் முதலான ஆறு சிவனடியார்களின் திருவடிகளை நம் தலையில் சூடி வணங்குவாம்.

அருஞ்சொற்பொருள்: வம்பறா - கச்சு நீங்காத, பிரம்மசரியம் - திருமணம் ஆகாத இளவயது, ஒருமடப்பாவை - பூம்பாவை என்ற ஒரு பெண்ணை, தும்பல் - யானை, அரிக்குருளை - சிங்கக்குட்டி, உலாயவர் - திருத்தலங்கள் தோறும் சென்ற திருஞானசம்பந்தர், அறுவர் - திருஞானசம்பந்தர், ஏயர்கோன் கலிக்காமர், திருமூலர், தண்டியடிகள், மூர்க்கர், சோமாசிமாறர், திருமுனி - அகத்தியர், விரித்து அருளிய - அகத்தியம் என்ற இலக்கண நூல், அருள் மூவர் - சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், அருள்மறை - அருளிச் செய்த தேவாரம், அருள்மறை - சிவபெருமான் அருளிய வேதம், வித்தியாரணிய முனிவர் - வேதத்திற்குப் பொருள் விளக்கம் செய்த முனிவர்,

"வார்கொண்ட வனமுலையாள்"

வார்கொண்ட வனமுலை எனும்க வியுள் உயர்சைவ
மாண்பினர்கள் தலைவணக்கி
வாயார வாழ்த்தித் தியானித் திடச்சங்க
மங்கைவரு சாக்கியர்முதல்
ஏர்கொண்ட புகழ்கொடைவை வேல்அடையும் அடையுற்றும்
எய்தாதும் ஆகிநின்ற
இனியநகர் அடையும்ஏற் றொளிர்கின்ற அறுவரையும்
இறுவரையும் ஏத்தெடுப்பாம்
கார்கொண்ட அமணசிந் தாமணியை வளவர்கோன்
கங்குல்பகல் ஆராய்தரக்
கண்டொழித் தாவதிது வேயென்று தொண்டர்தம
கத்துவம் கருதவுய்த்துப்
பார்கொண்ட மன்னரல் லவைநீக்கி நல்லவை
பரித்திடச் செயல்அமைச்சர்
பண்பெனல் தெரித்தகுன் றத்தூர் உதித்தஎம்
பரமனைக் காக்கஎன்றே. 6

பொழிப்புரை: கருமை எனப்படும் அறியாமையைத் தம்மிடத்தே கொண்ட சமணர்களின் சீவகசிந்தாமணி என்ற நூலைச், சோழமன்னன் அநபாயன் இரவு பகல் ஈடுபட்டு அறிந்துவருதலைக் கண்டு அதனை ஒழிக்க, சிறந்தவழி இதுவே என்று கொண்டு திருத்தொண்டர்களின் பெருமை அனைத்தையும் அவன் மனம் ஏற்கும்படி செய்து, அதன் மூலம் உலகத்தை ஆளும் அரசர்கள் தீயவழியில் சென்றால், அதனை நீக்கி நன்மைகள் விளங்கச் செய்வது அமைச்சர் கடமை என்று தெரிந்து, அதனை உலகுக்கு அருளிய குன்றத்தூரில் எழுந்தருளிய எம்பெருமானைக் காத்தருள்க என்று.

வார்கொண்ட வனமுலை என்று தொடங்கும் பாடலில் குறிப்பிடப் பெற்ற உயர்ந்த சைவ நெறியில் நின்ற மாண்புடையவர்களைத் தலையால் வணங்கியும், வாயார வாழ்த்தியும், மனத்தால் தியானித்தும், சங்கமங்கையில் தோன்றிய சாக்கியர் முதல், அழகினை அடைமொழியாகக் கொண்டவரும், புகழை அடைமொழியாகக் கொண்டவரும், கொடையை

அடைமொழியாகக் கொண்டவரும், வைவேல் என்பதை அடைமொழியாகக் கொண்டவரும், அடைமொழி ஏதும் இல்லாதவரும், இனிய தன்னுடைய நகரினை அடைமொழியாகப் பெற்றவரும் ஆகிய ஒளி பொருந்திய அறுவரை இறக்கும்வரை போற்றி மகிழ்வாம்.

கருத்துரை: சமணர்களின் சீவகசிந்தாமணி நூலை இரவு பகலாகப் படித்து வந்த சோழ மன்னனின் மனத்தை மாற்றி, அவன் உள்ளம் கொள்ளுமாறு சிவனடியார்களின் வரலாறாம் பெரியபுராணத்தைக் கூறி, அரசனின் உள்ளத்தில் பதியுமாறு உணர்த்திய சேக்கிழாரைக் காக்க என்று, வார் கொண்ட வனமுலை என்று தொடங்கும் பாடலில் இடம்பெற்ற அடைமொழி களோடும், அடைமொழி இல்லாதும் தம் பெயர்களைப் பெற்ற, சைவநெறி பண்பாளர்களைத் தலையால் வணங்கி. வாயால் வாழ்த்தி, மனத்தால் போற்றி இறக்கும் வரை வணங்குவாம்.

அருஞ்சொற்பொருள் : சங்கமங்கை - சாக்கிய நாயனாரின் ஊர், ஏர்கொண்ட புகழ் - அழகுடைய புகழை அடைமொழியாகக் கொண்டவர் சிறப்புலியார், கொடை - கொடையை அடைமொழியாகக் கொண்டவர் கழறிற்றறிவார், வைவேல் - கூர்மையான வேலை அடைமொழியாகக் கொண்டவர் கூற்றுவர், எய்தாது - அடைமொழி இல்லாது பெயர் பெற்றவர் சாக்கியர், இனிய நகர் அடையும் - ஊரை அடைமொழியாகக் கொண்டவர்கள் சிறுத்தொண்டரும், கணநாதரும், அறுவர் - மேற்குறித்த ஆறு அடியவர்கள், இறுவரையும் - இறக்கும்வரை, கார்கொண்ட அமணர் - கருமைநிறம் பொருந்திய அறியாமையை உடைய சமணர்கள், சிந்தாமணியை - சீவகசிந்தாமணி என்ற நூலை, தொண்டர்தம் மகத்துவம் - தொண்டர்களின் பெருமை,

"பொய்யடிமை யில்லாத"

பொய்யடிமை இல்லாத செய்யுளின் இலக்கியம்
புகலிலக் கணமெய்ஞ்ஞானம்
போத நூல்ஆதியா யாவும்அரில் தபவுணர்பு
புரகரனை யேதுதித்து

மெய்யடிமை வாய்ந்தசங் கப்புலவர் முதலாய
வித்தக வொழுக்கம்மிக்கார்
விண்மருவு வார்பரவும் எண்மரும்எம் இருதயம்
விடாதமர வேத்தெடுப்பாம்.
செய்யமலர் ஆதனம் இருந்துபல சாதியும்
சேரப் படைத்ததேவுஞ்
செப்பரிய ஆயஅவ் அச்சாதி குறிகுணம்
செய்கைகுடி கொள்ளும்இயல்பு
வெய்யமொழி உணவுமுன் விரித்தெலாம் அறியவலர்
மெய்யறிஞர் எனல்விளக்கி
மேம்பட்ட வேளாண் குலக்கதிர் எனுங்குன்றை
விமலனைக் காக்கஎன்றே. 7

பொழிப்புரை: செம்மையான தாமரை மலராகிய இருக்கையில் இருந்து, பலசாதிகளைக் கொண்ட உயிர்களைப் படைக்கின்ற நான்முகனும் கூறுவதற்கரிய, திருத்தொண்டர் களின் சாதி , அடையாளம், குணம் , தொழில், குடிஒழுக்கம், மேற் கொள்ளும் மொழி, உணவு ஆகியவற்றை எல்லாம் பெரியபுராணத்தில் விரித்துப் பிறர் அறியும்படி விளக்குகின்ற மெய்அறிஞராக விளங்கி, மேன்மை பொருந்திய வேளாண் குலத்தில் கதிரவன் என்று கூறும் பெருமையுடைய குன்றையூர் குற்றமில்லாத சேக்கிழாரைக் காக்க என்று.

திருத்தொண்டத் தொகையில் பொய்யடிமை இல்லாத என்று தொடங்கும் பாடலில் கூறப் பெற்றிருக்கின்ற இலக்கியம், அதன் வழி தோன்றிய இலக்கணம், சிவஞானத்தை அறிவுறுத்தும் உண்மை நூல்கள் ஆகிய எல்லாவற்றையும் குற்றம் தீர உணர்ந்தும், சிவபரம் பொருளையே வணங்கி, இறைவனுக்கு அடிமை பூண்டு ஒழுகும் வியக்கத்தக்க ஒழுக்கம் மிக்கவராயும், விண்ணகத்துத் தேவர்கள் போற்றுகின்றவர்களாயும் விளங்கும் சங்கப் புலவர் முதலாகிய எண்மரை எம் இதயத்தில் விடாது, எழுந்தருளியிருக்கச் செய்து போற்றி வணங்குவாம்.

கருத்துரை: திருமாலின் உந்தித் தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும் கூறுவதற்கு அரிய உயிர்களின் சாதி, குணம் முதலியவற்றைப் பெரியபுராணத்தில் அடியவர்களின் சாதி, குணம் ஆகியவற்றை விரித்து உரைத்து உலகோர் அறியச் செய்த,

மெய்யறிஞராம் வேளாளர் குலக் கதிரவனாம் சேக்கிழாரைக் காக்க என்று. திருத்தொண்டத்தொகை ஏழாவது பாடலில் இடம் பெற்றுள்ள, சங்கப் புலவர் முதலான எட்டுத் திருத் தொண்டர்களை நம் இதயத்தில் எழுந்தருளச் செய்து, என்றைக்கும் போற்றுவாம்.

அருஞ்சொற்பொருள்: புகல் இலக்கணம் - இலக்கியங்கள் கூறுகின்ற இலக்கணத்தை உணர்த்தும் நூல்கள், மெய்ஞ்ஞானம் போதநூல் - மெய்ஞ்ஞானத்தை உணர்த்தும் சிவஞான நூல்கள், புரகரன் - முப்புரங்களை அழித்த சிவபெருமான், விண்மருவு - விண்ணகத்தில் வாழும் தேவர்கள், எண்மர் - பொய்யடிமை இல்லாத புலவர், புகழ்ச்சோழர், நரசிங்க முனையரையர், அதிபத்தர், கலிக்கம்பர், கலியனார், சத்தியார், ஐயடிகள் காடவர்கோன் என்ற எட்டு சிவனடியார்கள், செய்ய மலர் - திருமாலின் உந்தியாகிய சிவந்த தாமரை, ஆதனம் - இருக்கை, வேளாண்குலக்கதிர் - வேளாள குலத்தின் சூரியன், விமலன் - மலமற்ற தூய்மை உடையவர்.

''கறைக்கண்டன் கழலடியே''

கறைக்கண்டன் யாப்பன்ஐந் ததிகாரி மேல்ஓர்அதி
காரிமலை மங்கைஒருபால்
கலந்திருக் கவும்நிருவி காரிநிர் அகங்காரி
காரியா காரிநாளும்
மறைக்கண் டருஞ்சோதி ஓங்காரி அருள்ஏய
ஆங்காரி முதல்அமர்ந்த
வன்கணம் புல்லர்முன் சைவராம் ஐவரும்
மகிழ்ச்சிஉற வேத்தெடுப்பாம்
பிறைக்கண்டம் இதுபகலில் முகில்நுழைவ ததிசயப்
பெற்றிஎன் றாடுவார்கண்
பெட்பப் பெருக்கெடுத் துவருபால் ஆற்றலை
பிறங்குவளை வீச அஃதத்
துறைக்கண்ட நிமிர்கந்தி அம்சோலை தவழ்தரும்
தொண்டைவள நாட்டுநாட்டும்
தொல்புகழ்க் குன்றைவரு பாலறா வாயர்முன்
தோன்றலை காக்கஎன்றே. 8

பொழிப்புரை: சந்திரனின் துண்டமாகிய பிறைச்சந்திரன் பகலில் மேகத்தில் நுழைந்து செல்லுகின்ற அதிசயம் போல, ஆற்றில் நீராடுபவர்கள் விரும்பச் சென்று ஆடுவதற்குரிய பாலாற்றின் அலைகள், ஒளி பொருந்திய சங்குகளை வீச, அச்சங்குகள் பாலாற்றங்கரையில் நெருங்கி உயர்ந்து விளங்கும் பாக்குமரச் சோலையில் தவழ்ந்து செல்லுகின்ற காட்சி கொண்ட தொண்டை நாட்டில், தொன்மையான புகழை நாட்டும் குன்றத்தூரில் பிறந்த பாலறாவாயர் என்பவருக்கு முன் தோன்றிய சேக்கிழாரைக் காக்க என்று.

கறைக்கண்டன் என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகையின் எட்டாவது பாடலில் கூறப்பெற்ற படைத்தல் முதலிய தொழில்களுக்குரிய ஐந்து அதிகாரிகளுக்கும் மேலான ஓர் அதிகாரியாகி, இமயத்தரசன் மகளை ஒருபாகத்தில் கொண்டிருந்தும், காம விகாரம் ஒன்றும் இல்லாதவராய், செருக்கு இல்லாதவராய், விடத்தை உண்டவராய், வேதமும் அறிய முடியாத சோதி வடிவானவராய், ஓங்கார வடிவாயுத் தன்னுடைய அருட்சத்தியால் அனைத்தையும் செய்தருளுகின்ற இறைவனைத் தலைமையாகக் கொண்ட கணம்புல்லர் முதலான சைவ அடியார்களாம் ஐவரையும் மகிழ்ச்சியோடு வணங்கிப் போற்றுவாம்.

கருத்துரை: பாலாற்றினால் இயற்கை வளம் பொருந்திய குன்றத்தூர்ப் புகழை நிலை நாட்டுகின்ற பாலறாவாயர் என்பருக்கு முன் சகோதரராகத் தோன்றிய சேக்கிழாரைக் காக்க என்று - கறைக்கண்டன் என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகை ஏழாம் பாடலில் இடம்பெற்ற சிறப்புகளைக் கொண்ட சிவபெருமானைத் தலைவராகக் கொண்டு வாழ்ந்த கணம்புல்லர் முதலான ஐவரை மகிழ்ந்து போற்றுவாம்.

அருஞ்சொற்பொருள் : ஐந்து அதிகாரி - படைத்தலுக்குப் பரமன், காத்தலுக்குத் திருமால், அழித்தலுக்கு உருத்திரன், மறைத்தலுக்கு மகேசுவரன், அருளலுக்குச் சதாசிவன் என்ற ஐந்து அதிகாரிகள் சிவபெருமானால் நியமிக்கப் பெற்றவர்கள். நிர்விகாரி - காமம் நீங்கியவர், நிர்அகங்காரி - செருக்கு அற்றவர், காரி - விடம், காரியாகாரி - விடத்தை உண்டவர், மறைக்கு - வேதத்திற்கு, கண்டருஞ்சோதி - அணுகமுடியாத ஒளி

வடிவானவர், ஓங்காரி - பிரணவ வடிவு, அருள்ஏய - சத்தியை ஏவி , ஆங்காரி - எல்லாச் செயல்களையும் செய்யும், முதல் அமர்ந்த - இறைவனை முதலாகக் கொண்ட, வன்கணம்புல்லர் - வல்லவரான கணம்புல்லர், சைவராம் ஐவர் - சிவனடியாராம் கணம்புல்லர், காரியார், நெடுமாறர், வாயிலார், முனையடுவார் என்ற ஐந்து சிவனடியார்கள், வளை - சங்கு, துறை - கரை, கந்தி - பாக்குமரம், பாலறாவாயர் - சேக்கிழாரின் தம்பி, முன் தோன்றல் - முன்பு பிறந்த சேக்கிழார்.

"கடல் சூழ்ந்த உலகெலாம்"

கடல்சூழ்ந்த யாப்புஅமர் அறம்சூழ்ந்த நெஞ்சக்
கழற்சிங்க மன்னன்மன்னிக்
கழியா மடம்கழி இடங்கழி யருட்கே
கருத்துணை செருத்துணைஅரில்
விடல்சூழ்ந்த சிந்தையொர் இகழ்த்துணை பெறாதுற
விளங்கும் புகழ்த்துணைவய
வேட்புலி எனுந்திருக் கோட்புலியிவ் ஐவரையு
மேன்மேலும் ஏத்தெடுப்பாம்
அடல்சூழ்ந்த தொண்டர்வர லாற்றுவிரி யுலகெலாம்
அறியத் தெருட்டுகுரவிற்கு
அமையப் புனைந்ததுகொல் சாதிஅடை யாளங்கொல்
அமையும்எது சொலினும்என்ன
மடல்சூழ்ந்த செங்குவளை மாலையணி திண்தோள்
வலத்தனை நிலத்தனைவரும்
வாயார வாழ்த்துகுன் றத்தூர் உதித்தபெரு
வள்ளலைக் காக்கஎன்றே. 9

பொழிப்புரை: வலிமை நிறைந்த திருத்தொண்டர்கள் வரலாறாகிய விரிநூலை உலகெலாம் அறியும் வண்ணம் தெரிவிக்கும், ஆசிரியர் தன்மை புனைந்ததாலோ அல்லது வேளாளர் சாதி அடையாளமாகவோ அமைவதை எதுவாகச் சொன்னாலும் பொருந்தட்டும். இதழ்கள் நிறைந்த செங்குவளை மாலையை அணிந்திருக்கும் வலிமையான தோளை உடைய, வெற்றி பொருந்திய, உலகத்து அனைவரும் வாயார வாழ்த்துகின்ற, குன்றத்தூரில் உதித்த பெரிய வள்ளலாம் சேக்கிழாரைக் காக்க என்று.

கடல் சூழ்ந்த யாப்பு என்று தொடங்கும் திருத்தொண்டத் தொகை ஒன்பதாம் பாடலில் கூறப்பட்ட, அறம் சூழ்ந்த நெஞ்சினை உடைய கழற்சிங்கர், நிலைத்த எஞ்ஞான்றும் நீங்காத அறியாமை நீங்கப் பெற்ற இடங்கழியார், இறைவனின் திருவருளுக்காகவே உள்ளக் கருத்தில் நெக்குருகி அன்பு செலுத்தும் செருத்துணையார், குற்றம் நீங்கப் பெற்ற திருவருட் சிந்தனை உடையாரை இகழ்வதற்குப் பொறாது உறுதுணை செய்பவராகிய புகழ்த் துணையார், வெற்றி பொருந்திய வலிமை கொண்ட வேளாளர் குலத்தில் புலி போன்று அமைந்த அழகிய கோட்புலியார் ஆகிய ஐவரையும், மேலும் மேலும் வழிபடுவோம்.

கருத்துரை: விரிநூலாகப் பெரியபுராணத்தைச் செய்து உலகுக்கு அருளிய ஞானாசிரியருக்கு ஏற்றவாறோ, அல்லது வேளாளர் குலத்திற்கு ஏற்றவாறோ ,செங்குவளை மாலை அணிந்த தோள்களைக் கொண்ட, வெற்றி பொருந்திய, உலகோர் புகழும் சேக்கிழாரைக் காக்க என்று திருத்தொண்டத் தொகையின் ஒன்பதாவது பாடலில் கூறப்பெற்ற கழற்சிங்கர் முதலாக ஐவரையும் மேலும் மேலும் வழிபடுவோம்.

அருஞ்சொற்பொருள்: மடம் - அறியாமை, கருத்துணை கருத்துள் - நை - உள்ளத்தில் நெக்குருகி, வய - வெற்றி பொருந்திய, வேட்புலி (வேள் புலி) - வேளாளரில் புலி போன்றவர், விரி - திருத்தொண்டத்தொகை முதல் நூல், திருத்தொண்டர் திருவந்தாதி வகைநூல், பெரியபுராணம் விரிநூல், தெருட்டு - மனம்தெளிய, புரவிற்கு - ஆசிரியர் தன்மைக்கு, சாதி - வேளாளர் குலம், பெருவள்ளல் - சேக்கிழார், (இப்பாடலில் திருத்தொண்டத்தொகை பாடலில் இடம்பெற்ற அடியார்கள் ஐவரை ஆசிரியர் சிறப்பித்துப் பாடியிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்)

''பத்தராய்ப் பணிவார்கள்''

பத்தரா யென்றெடுத் தருள்திருக் கவியில்இரு
பைங்கோதை யாரைவேட்ட
பான்மைக் கிணங்கவோர் இருபுதல்வி யார்தமைப்
பயவாம லேபயந்த

சுத்தராய் வன்றொண்டர் இன்றொண்டர் தழுவித்
துதிக்கவைத் தவர்களாய
தொகையுளார் என்னும்எழு வகையுளார் பொற்பதம்
தொழுதேத் தெடுத்தல்செய்வாம்
நித்தராய் மன்றுள்நடம் நவில்வார் உவக்கும்வெண்
நீற்றொளி நிலாவொளியென
நினைந்தணைந் தாங்குக்கு வளைபொலிய இன்தேன்
நிரம்பவுண வளியடைந்தாங்
கத்தராய் கண்மணித் தொடைபொலி தரப்பொலியும்
அம்புயத் தவனைநம்பும்
அளவா வளந்துன்று குன்றைநகர் மேயஅருள்
ஆளியைக் காக்கஎன்றே. 10

பொழிப்புரை: எப்பொழுதும் நிலைபெற்றவராய் பொற்சபையில் நடனம் பயில்வார் (நடராசர்) மகிழும் திருநீற்றின் ஒளியைச் (சேக்கிழார்)தம் மார்பில் பூச, அந்நீற்றொளியை நிலாஒளி என நினைந்து, குவளை மலர் மாலை மார்பில் அணைந்தது. அதிலுள்ள தேனை நிரம்ப உண்ணுவதற்கு வண்டுகள் வந்து பொருந்தியது போல, உருத்திராக்க மாலை அழகு விளங்கச் சேக்கிழார் மார்பில் பொலிந்தது. அத்தகைய தோளினை உடையவரைத் தம்பால் தோன்றுவதற்கு மிக விரும்பிய, அளவற்ற வளம் நிறைந்த குன்றத்தூரில் தோன்றி அருளிய அருளாளராம் ஆளியை (சேக்கிழாரைக்) காக்க என்று.

பத்தராய் என்று தொடங்கிய திருத்தொண்டத் தொகையில் பசிய மாலைகளை அணிந்த இரண்டு பெண்களை மணந்த தன்மைக்கு ஏற்ப, இரு பெண்மக்களைப் பெறாமலே பெற்றெடுத்தவரும்,மனம் தூயராகிய பெருமிழலைக் குறும்பர் ஆய்ந்து வணங்கத் தக்கவரும் ஆகிய சுந்தரராம் வன்தொண்டர், குறிப்பட்ட ஒருவர் அன்றித் தொகை அடியாராய்ப் போற்றிய ஏழு வகையினரின் பொற்பாதங்களைத் தொழுது போற்றுதல் செய்வாம்.

கருத்துரை: தில்லைக்கூத்தர் விரும்பும் திருநீற்றையும், வேளாண் குலத்திற்கு ஏற்பக் குவளை மலர் மாலையையும், அதில் வண்டுகள் மொய்க்கின்ற தோற்றம் போல் விளங்கும் உருத்திராக்க

மாலையையும் அணிந்த, குன்றத்தூர் என்ற ஊர் விரும்பிய வண்ணம் அங்கு தோன்றிய சேக்கிழாரைக் காக்க என்று பரவையார், சங்கிலியார் என்ற இரண்டு பெண்களை மணந்து, கோட்புலியாரின் இரண்டு பெண்களைப் பெறாமலே மக்களாய்ப் பெற்ற, பெருமிழலைக் குறும்பர் போற்றுகின்ற சுந்தரர், திருத்தொண்டத் தொகை பத்தாவது பாடலில் குறிப்பிட்ட தொகை அடியார்கள் எழுவரையும் தொழுது போற்றுவோம்.

அருஞ்சொற்பொருள் : பைங்கோதையாரை - பசிய மாலைகளை அணிந்த இரண்டு பெண்களை, வேட்ட பான்மைக்கு - திருமணம் புரிந்த தன்மைக்கு, (பரவையார், சங்கிலியார்) , இரு புதல்வியார் - கோட்புலியாரின் சிங்கடி, வனப்பகை என்ற இரண்டு பெண்கள், பயவாமலே பயந்த - பெற்றெடுக்காமல் மகளாய் ஏற்றுக்கொண்ட, வன்தொண்டர் - சுந்தரர், இன்தொண்டர் - பெருமிழலைக் குறும்பர், தழுவி - போற்றிய, துதிக்க வைத்தவர்கள் - சுந்தரர் போற்றியவர்கள், தொகை உளார்- தொகையடியார்கள், எழுவகை உளார் - பத்தராய்ப்பணிவார், பரமனையே பாடுவார், சித்தத்தைச் சிவன்பால் சேர்த்தார், திருவாரூர் பிறந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர், அப்பாலும் அடிச் சார்ந்தார் ஆகியோர், குவளை பொலிய - குவளை மலர்மாலை அழகு செய்ய, கண்மணித்தொடை - உருத்திராக்க மாலை, அம்புயம் - அழகிய தோள்களை உடையவனை, ஆளி - சிங்கம்.

"மன்னியசீர் மறைநாவன்"

மன்னிய திருப்பாட்டில் ஆகாரம் முதலிய
மறந்திராப் பகல்முயன்று
வையத்து வாழ்வார்கள் நோக்காத வண்ணம்நவ
மணியா லயம்புரிந்து
மின்னிய சடைப்பரமர் பிறதளி மறுத்தடை
விதம்கண் டுவந்தபூசல்
வித்தகர்முன் மேயஎழு வோரும்எம் இதயத்து
மேவவைத் தேத்தெடுப்பாம்

பன்னியதொ கையும்வகையும் முதல்ஆத லால்முதல்
பகர்சைவ ரேயருளினார்
பரவுவிரி இறுதிஆ தலின்இறுதி யாரெனப்
படுசைவ ரேயருளினார்
துன்னிய பொருத்தமிது என்றுலகம் மகிழ்தரத்
தொண்டர்வர லாறனைத்துந்
தூவாய் மலர்ந்தஅருள் மொழிவான வனையான்ற
தோன்றலைக் காக்கஎன்றே. 11

பொழிப்புரை: சிறப்புடைய சுந்தரர் பாடிய முதல் நூலான திருத்தொண்டத் தொகையும், நம்பியாண்டார் நம்பி பாடிய வகை நூலான திருத்தொண்டர் திருவந்தாதியும், சேக்கிழார் பாடிய விரிநூலான திருத்தொண்டர் புராணத்திற்கு ஆதி நூல்கள் ஆதலால், அதனை ஆதி சைவர் இனத்தைச் சார்ந்தவர்களே பாடினார்கள். போற்றப் படுகின்ற விரிநூலாம் திருத்தொண்டர் புராணம் இறுதிநூல் ஆதலின் அதனைப் பாடிய சேக்கிழாரும், நான்கு வருணத்தாரில் இறுதியான வேளாளர் மரபினைச் சேர்ந்து பாடியருளினார். இத்தகைய பொருத்தம் சிறந்தது என்று உலகத்தார் மகிழ்ந்து கூறிட, திருத்தொண்டர் வரலாறுகள் அனைத்தையும் தனது தூய வாயினால் மலர்ந்து அருளிய, அருள்மொழித் தேவனான அறிவும் பண்பும் நிறைந்த தோன்றலாம் சேக்கிழாரைக் காக்க என்று.

மன்னியசீர் என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகை பதினோராம் பாட்டில், ஆகாரம் முதலியவற்றை மறந்து, இரவு பகலாக முயன்று, உலகத்தில் வாழுகின்றவர்கள் அறியாத வண்ணம் புதிதான அழகிய ஆலயத்தை எழுப்பித்து, மின்னலைப் போன்ற சடையைக் கொண்ட சிவபெருமான் பிறர் கோயிலுக்கு எழுந்தருளுவதைத் தவிர்த்து, தன் மனத்தில் எழுப்பிய திருக்கோயிலில் எழுந்தருளியதைக் கண்டு மகிழ்ந்த, பூசலார் முதலான எழுவரையும் எம் இதயத்தில் எழுந்தருள வைத்துப் போற்றி வணங்குவாம்.

கருத்துரை: முதல் நூலான திருத்தொண்டத் தொகையும், வகைநூலான திருத்தொண்டர் திருவந்தாதியும், திருத்தொண்டர் புராணத்திற்கு ஆதி ஆதலின் ஆதிசைவ மரபைச் சார்ந்தவர்கள்

பாடினார்கள். விரிநூலான திருத்தொண்டர்புராணம் இறுதி நூல் ஆதலின் நான்கு வருணத்தில் இறுதியாகிய வேளாளர் குலத்தைச் சேர்ந்த சேக்கிழார் பாடியருளினார். இந்தப் பொருத்தம் சிறந்ததாகும் என்று உலக மக்கள் பாராட்டத் திருத்தொண்டர் புராணம் பாடிய அருள்மொழித் தேவராம் சேக்கிழாரைக் காக்க என்று திருத்தொண்டத் தொகை பதினோராம் பாடலில் சிவபெருமான் பிற கோயிலுக்குச் செல்வதைத் தவிர்த்து, தன் மனத்தில் கட்டிய கோயிலில் எழுந்தருளியதைக் கண்டு மகிழ்ந்த பூசலார் முதலான எழுவரையும் இதயத்தில் நினைந்து போற்றுவாம்.

அருஞ்சொற்பொருள் : மின்னிய - மின்னலைப் போன்ற, தளி - கோயில், அடைவிதம் - மனக் கோயிலில் எழுந்தருளியது, வித்தகர் - பூசலாகிய அறிஞர், எழுவர் - பூசலார், மானியார், நேசர், கோச்செங்கண்ணார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சடையர், இசைஞானியார் என்ற ஏழு சிவனடியார்கள், முதல் - ஆதி, முதல்பகர் சைவர்- முதலில் கூறியவர் ஆதி சைவர் மரபனர் (சிவாசாரியார் மரபு), பரவு - போற்றும், இறுதியார் - நால்வகை வருணத்தில் இறுதியான வேளாளர், துன்னிய - நெருங்கிய, தூவாய் - தூய்மையான வாய்,

காப்புப் பருவம் முற்றிற்று.

2. செங்கீரைப் பருவம்

(இரண்டாவது செங்கீரைப் பருவம். குழந்தை பிறந்த ஐந்தாவது மாதத்திற்கு உரியதாகக் கூறப்படுவது. சீர் - சொல். செவ்விய சொல்லைச் சொல்லும் பருவம் என்பர். அதாவது பொருள் விளங்காத மகிழ்வைத் தருகிற ஒலியைக் குழந்தை எழுப்புவதாகும். சிவந்த கீரைப் பயிர் காற்றில் அசைவது போலக் குழந்தை, ஒருகாலை நிலத்தில் பதித்து ஒருகாலைத் தூக்கி, தலையை நிமிர்த்தி இருபுறத்தும் அசைத்து ஒலியெழுப்பவதும் உண்டு.)

ஒண்கொண்ட பொதுவகத் துலகெலாம் உய்யநா
றுலகெலாம் என்றதீஞ்சொல்
உவந்தே டெழுத்தாணி கொண்டெழு திரண்டுகை
யும்புவி யுறப்பதித்து
வண்கொண்ட ஒருதாள் மடித்தூன்றி ஒருதாள்
வயங்குற எடுத்தூன்றிஒண்
வாய்கவிச் சுவையொழுக் கறிவிப்ப தெனஅமுத
மாட்சிமை ஒழுக்கெடுப்ப
வெண்கொண்ட நெற்றிநீ றிளநிலவும் ஒண்கா
திருங்குழை இளங்கதிரும்விட்
டெறிப்பஇள முறுவலும் தோன்றமலர் திருமுகம்
எடுத்துவான் அளவுநொச்சித்
திண்கொண்ட குன்றையம் பதியருள் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே. 1

பொழிப்புரை: ஒளியைத் தன்னகத்துக் கொண்ட பொற்சபையில் அசரீரியாக உலகெலாம் உய்வதற்குத் தோன்றிய, மணம் பொருந்திய உலகெலாம் என்ற இனிய மொழியை மகிழ்ந்து ஏற்று, அதனை எழுத்தாணி கொண்டு எழுதிய இரண்டு கைகளையும், பூமியில் பொருந்துமாறு பதித்து, வளமை கொண்ட ஒரு காலை மடித்து ஊன்றியும், பறிதொரு காலை எடுத்து ஊன்றியும், அழகு பொருந்திய திருவாயிலிருந்து கவிச்சுவை ஒழுகுவதை அறிவிப்பது போல, அமுதத் தன்மை பொருந்திய

எச்சில் ஒழுக, திருநீறு அணிந்த நெற்றியில் திருநீறு நிலவு போல் ஒளிசெய்ய, அழகிய காதுகளில் அணிந்த குழைகளிலிருந்து ஒளிவீச, இனிய புன்முறுவல் தோன்ற மலர்ந்த திருமுகத்தை எடுத்தமைத்து ஆகாயத்தின் அளவு உயர்ந்திருக்கும் மதில்களைக் கொண்டு வலிமையுடன் விளங்கும் குன்றத்தூரில் தோன்றிய அருள்மொழித் தேவரே, செவ்விய சொற்களைக் கூறித் தலையசைத்து ஆடி அருள்வீராக. திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலத்திற்கு நெற்றித் திலகமாய் அமைந்தவரே, செவ்விய சொல்லைக் கூறி ஆடியருளே.

கருத்துரை: பொற்சபையில் இறைவன் எடுத்துக் கொடுத்த உலகெலாம் என்ற சொல்லை முதற்சொல்லாகக் கொண்டு, ஏட்டில் எழுதிய கைகளை நிலத்தில் ஊன்றியும், கால்களைத் தவழ்வதற்கு ஏற்ப ஊன்றி மடித்து வைத்தும், வாயில் எச்சில் ஒழுக, குன்றத்தூரில் தோன்றிய அருள்மொழித் தேவராகிய, வேளாளர் குலத் திலகமே செங்கீரை ஆடியருள்வீராக,

அருஞ்சொற்பொருள்: பொதுவகம் - சிற்சபை, நாறு - மணக்கும், வயங்குற - விளங்கிட, கவிச்சுவை ஒழுக்கு அறிவிப்ப - பெரியபுராணம் என்னும் செய்யுட்கள் பாடப் பெறுவதை அறிவிக்க, ஒழுக்கெடுப்ப - எச்சில் ஒழுக, நொச்சி - மதில், திலகம் - பொட்டு,

பொருவரிய தொண்டர்கள் புராணத்துள் இறையருள்
பொலிவான் நிரம்புசொற்கள்
போற்றிடு விருப்பநீர் நம்மைமழ வாக்கிவாய்
புகல்குதலை மழலையென்ன
மருவுமொழி ஆசையுற் றீர்பயன் உறாதென்ன
வள்ளால் மறுத்துரைத்தால்
வார்த்தைப் பயன்கொள வலேந்தக்க சான்றுநீ
வாய்மலர் புராணநின்றும்
ஒருவரிய தாம்செப்பல் உற்றபொருள் என்றகவி
ஓதவேண் டுவதினிஎவன்
உனதுசொல் பயனுணர்தல் இலமென்னின் மழவா
உவப்பதும் பொய்ம்மையாமே

திருவமிகு குன்றையம் பதியருள் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே. 2

பொழிப்புரை: ஒப்பு இல்லாத திருத்தொண்டர்களின் வரலாற்றைக் கூறும் நூலுள், இறைவனின் அசரீரியாகத் தோன்றிய உலகெலாம் என்ற சொல் உள்ளிட்ட திருவருள் சொற்களைப் போற்றுகின்ற விருப்பத்தை உடைய எம்மை, (அவையடக்கப் பாடலில்) உம்மை மழலையாகக் கருதி நீர் கூறும் சொற்கள் எல்லாம் மழலை மொழியாகும், ஆதலால் ஆசை கொள்வதால் பயன்இல்லை என்று வள்ளலே, எங்கள் விருப்பத்தை நீ மறுத்துரைத்தாலும், அச்சொற்களின் பயனைக் கொள்ள வல்லமை உடையேம் நாங்கள். (அவ்வாறு கொள்வதற்கு) உம்மையே தக்க சான்றாகக் கொள்வோம். (அவ்வாறு இருக்க) நீ திருவாய் மலர்ந்த புராணத்துள் செப்பலுற்ற என்ற பாடலைக் கூறக் காரணம் என்? உன்னுடைய சொற்கள் பயனில என்றால், நாங்கள் உம்மை மழலையாகக் கொண்டு மகிழ்வதும் (பிள்ளைத்தமிழ் பாடுவதும்) பொய்ம்மையாகும். எனவே செல்வம் மிக்க குன்றையம் பதியில் தோன்றிய அருள் மொழித் தேவரே, செம்மையான சொல்லைச் சொல்லி ஆடியருளே. திருத்தொண்டை நாட்டில் தோன்றிய வேளாளர் குலத் திலகமே, செவ்விய சொல்லைச் சொல்லி ஆடியருளே.

கருத்துரை: பெரியபுராணத்தில் அமைந்த சொற்கள் எல்லாம் திருவருள் சொற்களே என்று கொண்டு போற்றுகின்ற எம்மை, சேக்கிழார் தம்முடைய பெரியபுராண அவையடக்கப் பாடலில், நூலின் சொற்கள் மழலைத் தன்மை உடையன, அது கூறும் பொருள்தான் சிறந்தது(தொண்டர்களின் பெருமை) என்று தன்னுடைய சொற்களை மழலைச் சொற்களாக (சிறப்பற்ற சொற்களாகக்) கூறியிருக்கிறார். ஆனால் அச்சொற்களின் பெருமையை நாங்கள் உணர்ந்திருக்கிறோம் என்று ஆசிரியர் கூறி, செப்பலுற்ற பொருள் என்று தொடங்கும் பாடலை ஏன் நீர் பாடினீர் என்ற காரணத்தைக் கேட்டுக் குழந்தையாகிய சேக்கிழாரைச் செங்கீரை ஆடும்படி வேண்டுகிறார்.

அருஞ்சொற்பொருள்: வான் நிரம்பு சொற்கள் - அசரீரியாகத் தோன்றிய உலகெலாம் உள்ளிட்ட சொற்கள், குதலை மழலையென - குழந்தையின் மழலைச் சொற்கள், ஒருவரியத் தாம் செப்பலுற்ற பொருள் என்ற கவி,

செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குறை யாவரும் கொள்வரால்
இப்பொ ருட்கென் னுரைசிறி தாயி னும்
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால். (பாயிரம்-7)

என்ற பாடல், இலம் என்னில் - இல்லை என்றால்,

ஒப்பரிய தொண்டர்தம் அருமையும் பெருமையும்
உவக்கும்அவர் அவர்செய்கையும்
உவமையில் லாச்செய்கை நுட்பமும் திட்பமும்
உம்பர் கோன்அருள்தட்பமுந்
தப்பரிய செந்தமிழ்த் தொடைநடையும் அடையும்
தவாப்பொருள் அணிச்சிறப்பும்
தமிழ்மறை யடங்குபல மந்தணமும் வெள்ளிடைத்
தவிரும்வெற் பெனவிளங்க
வெப்பரிய முழுமதிக் குடைநிழற் றனபாயன்
மேயஅவை அகம்நயந்து
வியந்துமெய்ப் பாட்டினொடு பாராட்டி மகிழமேல்
மேல்விரித் தருளியபிரான்
செப்பரிய குன்றையம் பதியருள் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே. 3

பொழிப்புரை: ஒப்பற்ற தொண்டர்களின் அருமையும் பெருமையும், அவர்கள் உவந்து செய்யும் செய்கையாம் தொண்டுகளையும், அத்தொண்டுகளில் பிறரால் ஒப்பாகச் செய்ய முடியாத திருத்தொண்டுகளின் நுணுக்கங்களும், அவற்றின் வலிமைகளும், தேவர்களின் தலைவனான சிவபெருமானின் அருள் தன்மையும், குற்றமில்லாத செந்தமிழ்ப் பாக்களின் நடையும், அடைமொழிகளும், குறையாத பொருள் அணி நலச் சிறப்பும், தமிழ் மறையாம் திருமுறைகளில் அடங்கிய

உள்ளுறைப் பொருள்களும், வெள்ளிடை மலை போலப் (பெரியபுராணத்தில்) விளங்க, வெம்மை என்பது இன்றிக் குளிர்ச்சியையே செய்யும் முழுமதி போல விளங்கும், வெண்கொற்றக் குடையின் கீழ் வீற்றிருந்து ஆட்சி செய்யும் அநபாயச் சோழன் தலைமையில் விளங்கும் பேரவையினர் உள்ளம் வியந்து, மெய்ப்பாட்டோடு பாராட்டி மகிழ, மேலும் மேலும் அடியார்கள் தொண்டினை விரித்து அருளிய தலைவரே , கூற இயலாத (சிறப்பினை உடைய) குன்றையம் பதியில் தோன்றிய அருள்மொழித் தேவரே, செங்கீரை ஆடியருளே, தொண்டை நாட்டு வேளாளர் குலத் திலகமே செங்கீரை யாடியருளே.

கருத்துரை: திருத்தொண்டர்களின் அருமை பெருமை, செய்கையின் நுட்பம், கவிநடை, அடைமொழி, அணிநலம்,உள்ளுறை ஆகியவற்றைப் பெரியபுராணத்தில் அநபாய சோழனின் அவையத்தார் மகிழ்ந்து பாராட்ட, வெள்ளிடை மலை என விரித்துரை செய்த சேக்கிழாரே, செங்கீரை ஆடியருளே.

அருஞ்சொற்பொருள்: உவமை இல்லாச் செய்கை - அவர்தம் தொண்டிற்கு ஒப்பாகப் பிறர் செய்ய இயலாத தொண்டு (மகனை அறிதல், தந்தையின் காலை வெட்டுதல்), உம்பர்கோன் - தேவர்களின் தலைவனாகிய சிவபெருமான், செந்தமிழ்த்தொடை - தமிழ்க் கவி யாப்பு, அடை - அடைமொழி, தவாப்பொருள் - குற்றமற்ற உண்மை மெய்ப்பொருள், அணி - அணிநலம், மந்தணம் - உள்ளுறை, வெள்ளிடைத் தவிரும் வெற்பென - வெள்ளிடையாகத் தோன்றும் மலையென, மெய்ப்பாடு - கேட்கும் பொழுது கண்ணீர்அரும்புதல் முதலான மெய்யில் தோன்றும் வேறுபாடு,

தாயவொளி யிருள்தபுபொன் மாளிகைத் தில்லைச்
சபாநடன நாதர்பெத்தான்
சாம்பானை உய்த்தனம் நிருவாண தீக்கையால்
தகுமுத்தி அடைவிஎன்றே

ஆயதிரு முகமுய்த் திடப்பெற்ற கயிலாய
அம்பரம் பரையில்அளவா
அருளுருவ மாயவ தரித்திட்ட மெய்ஞ்ஞான
அற்புத உமாபதிசிவன்
நேயமிக இம்மைக்கும் மறுமைக்கும் ஆதார
நிலையதுஈது என்றுஉணர்ந்து
நினதுவர லாறருமை பாராட்டி அருள்செய
நிரம்புமான் மியமடைந்தாய்
தேயதிகழ் குன்றையம் பதியருள் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளவர் குலதிலக
செங்கீரை யாடியருளே. 4

பொழிப்புரை: பரவி விளங்கும் ஒளியால் இருள் நீங்கிய பொன்மாளிகைகளைக் கொண்ட தில்லை நகரில் உள்ள பொற்சபையில் நடனமாடும் கூத்தப் பெருமான், பெத்தான் சாம்பனை அனுப்ப, அவனுக்கு நிருவாண தீக்கையால் முத்தி அடையும்படிச் செய்வாயாக என்று திருமுகம் கொடுத்து அனுப்ப, திருக்கயிலாயப் பரம்பரையில் அருளையே திருமேனியாகக் கொண்டு தோன்றியருளிய, மெய்ஞ்ஞானத்தை உடைய வியக்கத்தக்க செயல்களைச் செய்த உமாபதி சிவம், அவ்வாறே அவனுக்கு முத்தி கொடுத்து (தான் முத்தி அடைய), அன்பு கொண்டு இம்மை மறுமைக்கு ஆதாரமானது என்று எண்ணி, உனது வரலாற்றைப் போற்றி அருளிச் செய்திட, அத்தகைய பெருமை பெற்ற, நிலைத்து விளங்கும் குன்றத்தூரில் தோன்றிய அருள்மொழித் தேவரே, செங்கீரை ஆடியருளே, தொண்டை நாட்டு வேளாளர் குல திலகமே, செங்கீரை ஆடியருளே.

கருத்துரை: தில்லைக் கூத்தனின் திருமடலால் பெத்தான் சாம்பனுக்கு நிருவாண தீட்சையால் முத்தி கொடுத்த, திருவாவடுதுறை ஆதீன மெய்ஞ்ஞான முனிவராகிய உமாபதி சிவாசாரியார் தன்னுடைய இம்மை மறுமை வாழ்விற்கு ஆதாரம் என்று எண்ணி, சேக்கிழாரின் வரலாற்றைப் பாடியருளினார். அத்தகைய பெருமை பெற்ற அருள்மொழித் தேவரே, செங்கீரை ஆடியருளே.

அருஞ்சொற்பொருள் : இருள்தபு - இருளை ஒழிக்கும், பெத்தான் சாம்பன் - தில்லை நடராசரிடம் அன்பு பூண்டவன், ஆதி திராவிடர் மரபினன், கோயிலுக்கு விறகு வெட்டிக் கொடுக்கும் தொண்டு புரிந்தவன், அவனது பக்குவத்தைக் கண்டு சிவபெருமான், உமாபதி சிவாசாரியருக்குத் திருமடல் அனுப்பி அவனுக்கு நிருவாண தீக்கையால் முத்தி கொடுக்கக் கட்டளையிட்டார். அதன்படி அவரும் செய்தார். உய்த்தனம் - அனுப்பனோம், நிருவாண தீக்கை - சைவ சமயத்தில் தீட்சை என்பது தீக்கை என்று கூறப்பெறும். தீக்கை என்பதன் பொருள் - உயிரில் கட்டுண்ட மலங்களின் கட்டுக்களை நீக்குவது. (சை - நீக்குவது) தீக்கை மூன்று வகைப்படும், சமய தீக்கை, விசேட தீக்கை, நிருவாண தீக்கை என்பன. சமய தீக்கை - சைவ சமயத்தை உரிமையாக்கிக் கொள்வதற்கு அளிக்கப்படும் சடங்கு முறைமை, விசேட தீக்கை - மாணாக்கரைச் சிவபூசை செய்வதற்கு உரிமையாக்குதல், அதற்குரிய சடங்குகளை வழிகாட்டுதல், நிருவாண தீக்கை - முத்தி அடைவதற்கு அளிக்கப்படும் வழிபாட்டு முறை, உலகப் பற்றுக்களை நீக்கச் செய்து சிவபற்றை ஏற்படுத்துதல், திருமுகம் - கடிதம், உய்த்திட - அனுப்பப் பெற்ற, கயிலாய பரம்பரை - திருக்கயிலாய குருபரம்பரை, அற்புதம் - வியக்கத்தக்க செயல்கள், மான்மியம் - பெருமை, தேய - நிலைத்த.

பொருந்துமா யிரமுகக் கங்கைமர பில்கதிர்கள்
 பொலியுமா யிரம்உள்ளவன்
போல்தோன்றி ஆயிரம் மறைக்கும்எட் டாச்சென்னி
 பொற்பஆ யிரமுடையகோன்
மருந்துநேர் அருள்பெற்ற மைக்கேற்ப ஆயிரம்
 வயங்குபொன் கால்நிறீஇய
மண்டபம் இவர்ந்தா யிரந்தொண்டர் வரலாறு
 வாய்மலர்ந் தவவாவிவாய்
இருந்துசூழ் கொழுவுண்டு புண்டரீ கத்தின்வாய்
 இயைபுல வறத்துவட்டி
இருஞ்சங்க னம்பேடே னத்தழுவி நாணமுற்
 றியல்பேடு மற்றென்னும்

செருந்துசூழ் குன்றையம் பதியருள் மொழித்தேவ
செங்கீரை யாடியருளே
திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர் குலதிலக
செங்கீரை யாடியருளே. 5

பொழிப்புரை: பொருந்திய ஆயிரம் முகங்களைக் கொண்ட கங்கையின் மரபாகிய வேளாளர் குலத்தில், ஆயிரம் கதிர்களைக் கொண்ட சூரியனைப் போல் தோன்றி, அளவற்ற பிரிவுகளைக் கொண்ட வேதத்தாலும் அறிய முடியாத, ஆயிரம் தலைகளை உடைய சிவபெருமானின் அமிழ்தத்தை ஒத்த பேரருள் பெருக்கினைப் பெற்றதற்கு ஏற்ப விளங்குகின்ற, பொன்னாலாகிய ஆயிரம் தூண்களைக் கொண்ட ஆயிரக்கால் மண்டபத்தில் அமர்ந்து, அளவற்ற பெருமை கொண்ட தொண்டர் வரலாற்றைத் திருவாய் மலர்ந்து அருளியவரே, குளத்தின் கண் இருந்த மீனாகிய இனத்தை உண்டு புலால் நாற்றத்தைப் பெற்று, பின் தாமரை மலரிடத்துச் சென்று அதில் புலால் நாற்றம் தோன்றுமாறு அதனைக் கசக்கி வாடச் செய்து, பின்பு கரைக்கு வந்து அங்கிருந்த பெரிய சங்கைத் தனது உண்மையான பெண் அன்னம் என நினைத்து அதனைத் தழுவி, பிறகு பெண் அன்னத்தை (மற்றொரு புறத்தில்) கண்டு நாணமுற்ற ஆண் அன்னம் நிற்கும் படியான, செருந்தி மலர்கள் சூழ்ந்த குன்றையூரில் தோன்றிய அருள்மொழித் தேவனே செங்கீரை ஆடியருளே. தொண்டை நாட்டில் உள்ள வேளாளர் குலத்திற்கு நெற்றிப் பொட்டாக விளங்குபவனே, செங்கீரை ஆடியருளே.

கருத்துரை: ஆயிரம் தலைகளைக் கொண்டது போல் பல்லாயிரத் தோற்றத்துடன் விளங்கும் இறைவனின் திருவருளைப் பெற்ற சேக்கிழார், ஆயிரம் தூண்களை உடைய தில்லைத் திருக்கோயிலின் ஆயிரக்கால் மண்டபத்தில் இருந்து. திருத் தொண்டர் வரலாற்றினை நிறைவு படுத்தினார். அவர்ஆண் அன்னம் மீன் இனத்தை உண்டு மயங்கி நிற்கும் செருந்தி மலர்கள் சூழ்ந்த குன்றத்தூரில் தோன்றிய அருள்மொழித் தேவரே செங்கீரை ஆடியருளே.

அருஞ்சொற்பொருள் : ஆயிரமுகக் கங்கை மரபு - ஆயிரம் கால்வாய்களைக் கொண்ட கங்கை மரபாம் வேளாளர் மரபு, கதிர்கள் ஆயிரம் உள்ளவன் - ஆயிரம் கதிர்களை உடைய சூரியன்,

ஆயிரம் மறை - ஆயிரம் பிரிவுகளைக் கொண்ட வேதம், சென்னி பொற்ப ஆயிரம் உடைய கோன் - பல்லாயிரம் வடிவங்களைக் கொண்ட சிவபெருமான், சென்னி - தலை (வடிவு), ஆயிர வயங்கு பொன்கால் - ஆயிரம் எண்ணிக்கையோடு விளங்கும் பொன்னாலாகிய தூண்கள், மண்டபம் - ஆயிரக்கால் மண்டபம், ஆயிரம் தொண்டன் - ஆயிரம் என்ற பெரிய எண்ணிக்கையால் கூறப்பெற்ற அளவற்ற தொண்டர்கள், கொழு - மீனின் நிணம், புலவுற - புலால் நாற்றமுற, துவட்டி - கசக்கி, அம்பேடு - அழகிய பெண் அன்னம், செருந்து - செருந்தி மலர்.

தோம்பல உடையேம் பறவியை அஞ்சேம்
சுடர்நின் சினகரம்முன்
தூகேம் மெழுகேம் இரவும் பகலும்
துதியேம் ஆயிடினும்
நாம்பல தேவரை நண்ணேம் எண்ணேம்
நயவேம் வியவேமால்
நாள்மலர் பலகொடு நின்னடி யேத்தி
நயத்தலை மேற்கொண்டு
கூம்பல்செய் கையேம் எய்யேம் இதனில்
கோமான் நீஅருளும்
கூலியெ வன்கொல் அவாயது நல்'கில்
குலாவும் உவப்புறுவேம்
ஆம்பல் அவாவதல் மேய புயாசல
ஆடுக செங்கீரை
ஆரருள் ஆகர சேவையர் காவல
ஆடுக செங்கீரை. 6

பொழிப்புரை: (நாங்கள்) குற்றங்கள் பல உடையோம், ஆதலால் பிறப்புக்கு அஞ்சோம், உன்னுடைய ஒளி பொருந்திய கோயிலின் முன் சென்று அலகிடோம், மெழுகோம், இரவும் பகலும் துதிக்க மாட்டோம், ஆயினும் பல சிறு தெய்வங்களைச் சென்று வணங்க மாட்டோம். சிறு தெய்வங்களைப் பெரிதாக எண்ணமாட்டோம், விரும்ப மாட்டோம், வியந்து பாராட்ட மாட்டோம், அன்றலர்ந்த மலர்கள் பலவற்றைக் கொண்டு உன் திருவடிகளைப் போற்றி, அன்பு கொள்ளுதலை மேற் கொண்டு

கையினைக் கூப்பி வணக்கம் செய்தலை மறவோம், ஆதலால் உன்னருளால் நாங்கள் துன்பத்தை அடையமாட்டோம். எங்கள் தலைவனான நீ இதைவிட என்ன பயன் எங்களுக்குத் தர இயலும்? என்றாலும் நாங்கள் விரும்பயதை நீ கொடுக்க முன்வந்தால் அதற்குப் பெரிதும் மகிழ்வோம். (எங்களுடைய விருப்பம் எது என்றால்), குவளை மலராகிய மாலையைச் சூடிய மலை போன்ற தோள்களை உடையவரே, நீ செங்கீரை ஆடுவதுதான். பேரருளை இருப்பபிடமாகக் கொண்டவரே, வேளாளரே, தலைவரே ஆடுக செங்கீரை.

கருத்துரை: குற்றங்களை உடைய நாங்கள் திருக்கோயில் பணிகளைச் செய்யாது, சிறு தெய்வங்களையும் போற்றாது, மலர்கள் கொண்டு நாள்தோறும் உன்னுடைய திருவடிகளைப் போற்றி, துன்பங்களை அகற்றி வாழுகின்றோம். சேக்கிழார் பெருமானே இதைவிட நாங்கள் என்ன பேற்றினைப் பெறமுடியும்? எங்களின் விருப்பத்திற்கு ஏற்ப வேளாளகுலத் தலைவரே செங்கீரை ஆடியருளே.

அருஞ்சொற்பொருள்: தோம் - குற்றம், சினகரம் - திருக்கோயில், பலதேவர் - தேவர்களாகிய சிறுதெய்வங்கள், நயந்தலை மேற்கொண்டு - அன்பை மேற்கொண்டு , கூம்பல் செய் கையேம் - கை கூப்புதலை விடமாட்டோம், எய்யோம் - (எய்த்தல் - இளைத்தல்,) துன்பத்தால் இளைக்க மாட்டோம், ஆம்பல் - குவளைமலர், புயம் - தோள், அசலம் - மலை, ஆகர - இருப்பிடம், சேவையர் - வேளாளர்,

புண்ணிய முதலே பொங்கொளி மணியே
பொய்யாப் பெருவாழ்வே
பொள்ளலில் முத்தே கள்ளமில் வித்தே
புரையில் சுவைப்பாகே
தண்ணிய அமுதே மண்ணியல் மதியே
தமிழ்நா வலர் ஏறே
சத்துவ நிதியே பொத்திய மலநோய்
சாடு பெரும்பகையே

எண்ணிய அன்பர் உளத்தமு தூற
    இனிக்கும் நறுந்தேனே
  என்றும் பத்தி ரசம்கனி கனியே
    எந்நா ளினும்எங்கட்கு
அண்ணிய பொருளே ஆய்பவர் தெருளே
    ஆடுக செங்கீரை
  ஆரருள் ஆகர சேவையர் காவல
    ஆடுக செங்கீரை. 7

பொழிப்புரை: சிவ புண்ணியத்தின் வடிவே, பெருகும் ஒளி பொருந்திய மணியே, பொய்ம்மை இல்லாத நிலைபெற்ற உண்மையான பெரு வாழ்வே, துளையிடப்படாத முத்தே, வஞ்சனை இல்லாத உள்ளம் தோன்றுவதற்குரிய வித்தே, குற்றமில்லாது உண்ணத் தெவிட்டாத பாகே, குளிர்ச்சி பொருந்திய அமுதே, நிலவுலகில் வாழுகின்ற நிலவே, மண்ணில் உறைகின்ற செந்நாவினைப் படைத்த தமிழ் அறிஞர்களின் தலைவரே, சத்துவ குணத்தின் செல்வமே, உயிர்களின் அறிவை மறைத்து நிறைந்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்களை அழிக்கும் பகையே, உன்னை நினைக்கின்ற அன்பர்களின் உள்ளத்தே ஊறுகின்ற இனிமையான மணம் பொருந்திய தேனே, என்றும் பக்திரசம் கனிந்து விளங்கும் கனியே, எந்த நாளினும் எங்களுக்கு அண்மையில் இருக்கும் பொருளே, இறையருள் கொண்டு ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு அறிவாய் விளங்குபவரே, ஆடுக செங்கீரை. அருளை இடமாகக் கொண்ட வேளாளர்களின் தலைவரே, ஆடுக செங்கீரை.

கருத்துரை: முதலாக, மணியாக, வாழ்வாக, முத்தாக, பாகாக, அமுதாக, மதியாக, தலைவராக, தேனாக, கனியாக, அண்மைப் பொருளாக, அறிவாக விளங்கும் வேளாளர் குலத்தலைவரே, ஆடுக செங்கீரை.

அருஞ்சொற்பொருள்: பொள்ளல் - துளை, கள்ளம் - வஞ்சனை, சத்துவம் - உயிர்க்கு உரிய குணங்களைச் சைவ சித்தாந்தம் சாத்துவிகம், இராசதம், தாமதம் என்று வகைப்படுத்தும். அதில் சாத்துவிகம் என்று கூறப்படும் சத்துவம்

என்பது நற்காரியங்களைச் செய்வதற்கு விருப்பப்படும் குணம், பொத்திய - நிறைந்த, மலநோய் - ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்களாகிய நோய், அண்ணியப் பொருள் - நெருங்கிய பொருள், தெருள் - அறிவு.

சூழியம் மேவிய கொண்டை விளங்கத்
தொட்டுக் கட்டியபொன்
சுட்டி இலங்கப் புண்டர நீறு
துதைந்து நிலாக்கால
வாழிய கனிவாய் ஊறல் தேறல்
மார்பில் வழிந்தோட
வடிகா தில்புனை குழையில் செவ்விய
மணிஇள வெயில்வீச
வீழிஅ வாவிய வாய்இள முறுவல்
விளங்க அரைப்பொன்நாண்
மின்னுக் காலப் பேரெழில் நோக்குநர்
விழிகள் விருந்து செய
வாழிய அன்பர் அகத்தமர் செஞ்சுடர்
ஆடுக செங்கீரை
ஆரருள் ஆகர சேவையர் காவல
ஆடுக செங்கீரை. 8

பொழிப்புரை: சூழியம் என்னும் அணிகலன் சூட்டிய தலையின் உச்சிக் கொண்டை விளங்க, பொருந்தும் படியாகக் கட்டப் பெற்ற நெற்றிச் சுட்டி விளங்க, மூன்று கீற்றுக்களாக அணியப் பெற்ற திருநீறு மிகுந்து நிலவு போல் ஒளிவீச, கொவ்வைக் கனி போன்ற திருவாயில் ஊறுகின்ற தேன் போன்ற எச்சில் மார்பில் வழிந்தோட, அழகு பொருந்திய காதில் அணியப் பெற்ற தோடுகளின் ஒளி வீச, விரும்பும் வீழிப்பழம் போன்ற வாயில் இளநகை தோன்ற, இடையில் கட்டப் பெற்ற பொன்னால் ஆகிய அரைஞாண் மின்னலைப் போல் ஒளி வீச, உடம்பின் பேரழகு காண்பவரின் விழிகளுக்கு விருந்தாக அமைய, அன்பர்களின் நெஞ்சத்தில் அமர்ந்திருக்கும் செஞ்சுடர் போன்றவரே, ஆடுக செங்கீரை. அருளை இடமாகக் கொண்ட வேளாளர் குலக் காவலரே, ஆடுக செங்கீரை.

கருத்துரை: கொண்டை, நெற்றிச்சுட்டி விளங்க, திருநீறு ஒளிவீச, எச்சில் மார்பில் வழிய, தோடுகள் ஒளி வீச, வாயில் முறுவல் தோன்ற, அரைஞாண் மின்ன, உடல் அழகு விருந்து செய்ய, அன்பரின் அகத்தில் செஞ்சுடராய் விளங்க, வேளாளர் குலத் தலைவராக விளங்கும் சேக்கிழாரே, செங்கீரை ஆடியருள்க.

அருஞ்சொற்பொருள்: சூழியம் - தலையின் உச்சியில் அணியப்படுகின்ற அணிகலன், சுட்டி - நெற்றியில் அணியும் அணிகலன், புண்டர நீறு - மூன்று கீற்றுக்களாய் அணியப்படும் திருநீறு, ஊறல் - எச்சில், வீழி - இது ஒரு வகைச் செடி, அதன்பழம் சிவந்த நிறமுடையது, அரைப் பொன் நாண் - இடையில் கட்டும் அரைஞாண், பேரெழில் - உடம்பன் அழகு,

இவர் சரி யையர்இவர் கிரியையர் யோகத்
 தினர்இவர்இவர்ஞான
இயல்பினர் இவர் இலறத்து வழாதவர்
 இவர் துற வறம்நின்றார்
கவர் மனம் மொழிஇவர் பரமச ரியநிலை
 கைகொண் டோர்இவரே
கண்குளிர் வேடம் பொருள்என நம்பனர்
 கருதரும் இவர்ஆதித்
தவர்நிலை புணரா அருளினன் இறைவன்
 தக்கன உலகறியச்
சாற்றினன் அலன்அவ னேஉல கறியச்
 சாற்றிய படிஎன்ன
அவரவர் செயல்முதல் அருளிய வல்லவ
 ஆடுக செங்கீரை,
ஆரருள் ஆகர சேவையர் காவல
 ஆடுக செங்கீரை. 9

பொழிப்புரை: சைவ சமயத்தில் கூறப்பெறும் (நால்வகை நெறிகளில்) இவர் சரியை நெறியில் நிற்பவர், இவர் கிரியை நெறியில் நிற்பவர், இவர்யோக நெறியில் நிற்பவர், இவர் ஞான நெறியில் ஒழுகுபவர், இவர் இல்லற நெறியில் தவறாது வாழ்பவர், இவர் துறவறத்தில் நின்றவர், இவர் மாறுபட்ட மனத்தை ஒழித்தவர், இவர் பரமசரிய நிலையைக்

கைக்கொண்டவர், இவர் கண்ணுக்குக் குளிர்ச்சி தரும் திரு வேடத்தை உண்மைப் பொருள் என நம்பியவர், அறிவதற்கு அரிய இத்தகைய தன்மை உடைய இவர்களின் வரலாறுகளை உணரும் படியாக இறைவன் உலகறியத் தக்கவாறு அறிவிக்கவில்லை. (என்றாலும்) அவர்களின் வரலாற்றை இறைவனே கூறியது போல, அவரவர்களின் செயல்களை நன்கு அறிய அருளிச் செய்தவரே, ஆடுக செங்கீரை, அருளை இடமாகக் கொண்ட வேளாளர் குலத் தலைவரே, ஆடுக செங்கீரை.

கருத்துரை: சேக்கிழாருக்குத் திருத்தொண்டர்புராணம் பாட உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுத்த இறைவன், அந்நூலில் இடம் பெறுகின்ற அடியவர்களின் நிலைகளை, தன்மைகளை, தொண்டுகளை விரிவாக எடுத்துரைக்கவில்லை. என்றாலும் அறிய முடியாத அவர்களின் இயல்புகளை அறிந்து, உலகமறிய நூலில் விரித்துரைத்த சேக்கிழாரே ஆடுக செங்கீரை.

அருஞ்சொற்பொருள்: சரியை - சைவ சமயத்தில் இறைவனின் திருவருளை அடைய நால்வகை மார்க்கங்களாகிய நால்வகை நெறிகள் கூறப்பட்டுள்ளன. இம் மார்க்கங்களைப் பற்றி அருணந்தி சிவாசாரியார் தாம் பாடிய சிவஞான சித்தியார் சுபக்கத்தில் விரிவாகத் தந்துள்ளார். அதன்படி சரியை என்பது திருக்கோவிலில் சரீரமாகிய உடம்பால் செய்யப்படும் தொண்டுகளைச் செய்து இறைவனை வழிபடுதல் ஆகும். கிரியை - கிரியை என்பது இறைவனுடைய திருவடிவத்தை (லிங்கத்தை) எழுந்தருளச் செய்து, அபிடேகங்கள் செய்து, மந்திரங்களால் அகத்தாலும் புறத்தாலும் வழிபடுதல் ஆகும். யோகம் - மூன்றாவது மார்க்கமாகிய யோகம் இறைவனின் திருவுருவத்தை மனத்தில் மட்டும் எழுந்தருளச் செய்து , அவ்வுருவையே நினைந்து வழிபடுதல் ஆகும். ஞானம் - ஞான மார்க்கமாவது கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்ற முறையில் இறைவனைப் பற்றிய தத்துவங்களை அறிந்து, எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனை அனைத்து இடங்களிலும் அனைத்துப் பொருள்களிலும் கண்டு போற்றி வழிபடும் முறையாகும். சாற்றிலன் அலன் - கூறவில்லை, காட்டியபடி - கூறியபடி.

நந்தி வரைத்தலை ஒருமுனி சுரபி
நயக்கப் பொழிதீம்பால்
நதியாய் அங்கங் கோடுபு கூபம்
நயம்கிளர் ஏரிகுளம்
முந்தி எழுங்கால் ஓடை தடாகம்
முதல்பல வும்நிறையா
முழுத்த சுவைப்பால் ஆக்குபு பின்னும்
மூரிக் கடல்புக்கும்
புந்தி அவாவ நிரம்பலில் மாயோன்
புரிகண் துயிலும்
இடம் புகலிது வோஅது வோஎன ஆயப்
பொலிதண் டகநாட
அந்தி மதிச்சடை அண்ணற் கினியவ
ஆடுக செங்கீரை
ஆரருள் ஆகர சேவையர் காவல
ஆடுக செங்கீரை. 10

பொழிப்புரை: நந்தி மலையின் மீது வசிட்டரின் தெய்வப்பசு யாவரும் விரும்பும் வண்ணம் தன் தீம்பாலைப் பொழிந்தது. அந்தப் பாலானது ஆறுகளாக அங்கங்கே ஓடி அழகு பொருந்திய ஏரி, குளம், கிணறு ஆகியவற்றிலும், வாய்க்கால், ஓடை, நீர்நிலைகள் ஆகியவற்றிலும் கலந்து பாலின் தன்மையை நிறைவித்து, பின் வன்மை மிக்க கடலில் புகுந்து மனம் விரும்புமாறு கலந்ததால், திருமால் அறிதுயில் அமர்ந்து விளங்கும் கடல் இதுவோ, விண்ணகத்தில் உள்ள பாற்கடலோ என்று ஆய்வதற்கு இடமான, பாலியாற்றின் வளம் பொருந்திய தொண்டை நாட்டுத் தலைவரே, மாலைக் காலத்தில் தோன்றும் சந்திரனை அணிந்த சிவபெருமானுக்கு இனியவரே, ஆடுக செங்கீரை. அருளை இடமாகக் கொண்ட வேளாளர் குலத் தலைவரே, ஆடுக செங்கீரை.

கருத்துரை: தொண்டை நாட்டில் பாலாறு ஓடிக் கடலில் கலக்கிறது. இதனை இப்பாடலில் ஆசிரியர் அழகுறப் புனைந்துள்ளார். மைசூர் நாட்டில் உள்ள நந்தி மலையில் வசிட்டரின் தெய்வப்பசு பாலைச் சொரிந்தது. அந்தப்பால் ஆறாக

ஓடி, ஏரி, குளம், கிணறு, கால்வாய், ஓடை, நீர்நிலைகள் ஆகியவற்றில் கலந்து, இறுதியாகக் கடலில் போய்க் கலந்து எல்லாவற்றிலும் பாலின் தன்மையை ஏற்படுத்தியது. தெய்வப்பசு கறந்த பால் பாலாறாக மாறியது. இத்தகைய வளமை பொருந்திய தொண்டை நாட்டுத் தலைவராம் சேக்கிழாரே செங்கீரை ஆடியருள்க.

அருஞ்சொற் பொருள் : நந்திவரை - மைசூர் நாட்டில் உள்ள நந்திதுர்க்கம் என்னும் நந்திமலை. ஒருமுனி - வசிட்டர், சுரப - தெய்வப்பசு, கூபம் - கிணறு, எழுங்கால் - விளங்கும் வாய்க்கால், தடாகம் - நீர்நிலை, மூரி - வன்மை, புந்தி - மனம், மாயோன் - திருமால், அதுவோ - விண்ணகத்துப் பாற்கடலோ, கண்டக நாட - தொண்டை நாடனே, அந்தி - மாலைப்பொழுது, அண்ணல் - இறைவர்,

சங்கீரைப் பருவம் முற்றிற்று.

3. தாலப் பருவம்

(தால் என்பது நாக்கு. அந்நாக்கினை அசைத்து ஓசை எழுப்பக் குழந்தைகளை உறங்க வைப்பதால் இப்பருவம் தாலப்பருவம் ஆயிற்று. குழந்தை பிறந்த எட்டாவது மாதத்தில் நிகழ்வதாகும்.)

வெண்ணந் துரறி வயிறுளைந்து
வீற்று வீற்றாக் கருவுயிர்த்த
வெண்ணித் திலத்தை அரித்தெடுத்து
வெள்வாய்க் களமர் கரைகுவிக்க
வண்ணம் துவர்என் றுவமிக்கும்
வாய்ஓ திமம்நீர் குடைந்தெழுந்து
மற்றக் குவியல் மேல்இவர்ந்து
மருவி முதிரா வெயில்காயக்
கண்ணந் துறஉண் டெழுதரும்அக்
களமர் மராள முட்டையினைக்
கதிர்நித் திலமென் றுறக்குவித்தோம்
கடையேம் மயங்கி எனநாணும்
தண்ணம் துறைசேர் குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ. 1

பொழிப்புரை: வெண்ணிறமாகிய சங்குகள் ஒலித்து வயிறு நோகப் பெற்றெடுத்த, வேறு வேறாகக் கிடக்கும் வெள்ளிய முத்துக்களைச் சல்லடை கொண்டு சலித்து நல்லவற்றை எடுத்து, கள்ளுண்டதால் வெண்மை நிற வாயினை உடைய உழவர்கள் கரையில் குவிக்க, தங்களுடைய நிறத்திற்குப் பவளமே உவமை என்று கூறப்பெறும் அளவிற்கு வாயினைக் கொண்ட அன்னங்கள், தண்ணீரில் மூழ்கி எழுந்து கரையில் உள்ள முத்துக்களின் மேல் அமர்ந்து பொருந்தி இளவெயிலில் குளிர்காய, கள்ளினை விரும்பி உண்ட உழவர்கள் அன்னத்தின் கீழே உள்ள முத்தினை அதன் முட்டை எனக் கருதி, நாம் தவறாக முத்துக்கள் என்று எண்ணிக் கருதிக் குவித்து விட்டோமே, நாம் அறிவற்றவர் ஆயினோம் என்று நாணும்படியான, குளிர்ந்த நீர்த் துறையினை உடைய குன்றத்தூர்

தலைவரே, தாலோ தாலேலோ, சகல ஆகமங்களையும் கற்ற தெய்வத் தன்மை வாய்ந்த சைவரே தாலோ தாலேலோ.

கருத்துரை : *சங்குகள் ஈன்ற நல்ல முத்துக்களைச் சிறிது கள்ளுண்ட உழவர்கள் கரையில் குவித்தனர். நீரில் மூழ்கிய அன்னங்கள் குளிர்காய முத்துக்களின் மேல் அமர்ந்தன. மிகுந்த கள்ளண்டதால் மயங்கி அம்முத்துக்களை முட்டை என நினைத்து முட்டைகளைச் சேகரித்து விட்டோமே என்று மயங்கிய உழவர்களைக் கொண்ட, நீர்த்துறை உடைய குன்றத்தூர் தலைவரே, தாலோ, தாலேலோ.*

அருஞ்சொற்பொருள்: *வெள்நந்து - வெண்மையான சங்கு, வயிறு உளைந்து - வயிறுநொந்து, வீற்று வீற்றாக - வேறு வேறாக, அரித்து - சல்லடை கொண்டு சலித்து, வெள்வாய் - வெண்மையான வாய் (கள்குடித்து நுரை தங்கியதால் வெண்மையான வாய்), களமர் - உழவர், துவர் - பவளம், ஓதி - அன்னம், முதிரா வெயில் - இளவெயில், கள்நந்து - மேலும் கள்ளை அதிகமாக விரும்ப, மராளை - அன்னத்தின், கடையே - அறிவற்ற கடையர், நாணும் - வெட்கப்படும், தண்ணந்துறை - குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறை, சகல ஆகமம் - இருபத்தெட்டு ஆகமங்கள்.*

நண்பால் எவரும் உறத்தரிக்கும்
நலம்கூர் நீற்றின் வெள்ஒளியால்
நாவால் எவரும் அரமுழக்கம்
நாளும் செயஆம் பேர்ஒலியால்
எண்பால் புலவர் அமுதுகொளற்
கெந்த இடத்தும் நெருங்குதலால்
ஏர்சால் அரம்பை எழுதலினால்
இயல்நா கேசன் வைகுதலால்
கண்பால் கரிதோய் திருமடந்தை
காமுற் றிடலால் மாளிகைமேல்
கருமால் கிடந்து கண்துயிலும்
காட்சித் திறனால் பொங்கிஎழும்

தண்பால் கடல்நேர் குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ. 2

பொழிப்புரை: தன்பால் (அதன்பால்) உள்ள அன்பினால் அனைவரும் பொருந்தும்படி அணிந்து கொண்ட திருநீற்றின் வெண்மையான ஒளியாலும், தங்கள் நாவினால் எல்லோரும் அரகர என்று முழக்கம் செய்கின்ற ஒலியாலும், எட்டுத்திசையிலும் புலவர் பெருமக்கள் உணவு கொள்வதற்காக அனைத்து இடத்திலும் நெருங்குதலாலும், அழகு நிறைந்த வாழைகள் ஆங்காங்கு அழகுற விளங்கி நிற்றலாலும், திருநாகேசுவரப் பெருமான் எழுந்தருளியிருத்தலாலும், கண்ணிடத்து மை பூசப்பெற்ற திருமகள் விரும்ப உறைதலாலும், மாளிகைகள் மேல் கரிய மேகங்கள் சூழ்ந்து கிடத்தலாலும், திருமால் துயிலும் பாற்கடல் போல் காட்சி தருகின்ற குன்றத்தூரில் எழுந்தருளியுள்ள தலைவரே, தாலோ தாலேலோ. ஆகமங்கள் அனைத்தையும் கற்ற சகலாகம பண்டித சைவரே, தாலோ தாலேலோ.

கருத்துரை: திருமால் துயிலுகின்ற பாற்கடல் போலக் காட்சி தருவதற்குரிய வளங்களைப் பெற்ற குன்றத்தூரில் தோன்றிய தலைவரே, தாலோ தாலேலோ.

அருஞ்சொற்பொருள்: இப்பாடலில் திருமால் துயிலும் திருப்பாற் கடலில் அமைந்துள்ள நிகழ்வுகளை ஒத்து விளங்குவதால், குன்றத்தூர் திருப்பாற் கடலாக விளங்குகிறது என்று செய்தியை ஆசிரியர் கற்பனை வளத்தோடு கூறியுள்ளார். திருப்பாற்கடல் வெண்ணிறம் உடையது போல் குன்றத்தூர் வெண்மையான திருநீற்று ஒளியைக் கொண்டுள்ளது. திருப்பாற்கடலில் பேரொலி ஒலிக்கும். அதுபோலக் குன்றத்தூரில் அடியவர்கள் கூறும் அரஅர என்றஒலி மிக்கு ஒலிக்கிறது. திருப்பாற்கடலில் அமுதம் உண்ணத் தேவர்கள் நெருங்கி யிருப்பார்கள். அதுபோலப் புலவர்கள் உணவு உண்ணக் குன்றத்தூரின் எல்லா இடங்களிலும் நெருங்கியிருக்கின்றார்கள். திருப்பாற் கடல் கரையில் தெய்வப் பெண்களான அரம்பையர் முதலானவர்கள் இருப்பார்கள். அதுபோல அரம்பை என்னும்

வாழை மரங்கள் குன்றத்தூரில் வரிசையாக நிற்கின்றன. திருப்பாற் கடலில் ஆதிசேடன் என்னும் பாம்பு உள்ளது. அதுபோலக் குன்றத்தூரில் நாகேசுவரப் பெருமான் எழுந்தருளியுள்ளார். பாற்கடலில் திருமகள் விற்றிருப்பாள். அதுபோலக் குன்றத்தூரில் எல்லாச் செல்வங்களும் நிறைந்திருக்கின்றன. பாற்கடலில் திருமால் உறங்குவது போலக் குன்றத்தூர் மாளிகைகளில் கரிய மேகங்கள் படிந்திருக்கின்றன. இவ்வாறு குன்றத்தூர் திருப்பாற் கடலை ஒத்திருக்கிறது என்கிறார் ஆசிரியர். அரமுழக்கம் - அரஅர ஒலி, அரம்பை - வாழைமரம் (அரம்பையர்) , நாகேசன் - சேக்கிழார் குன்றத்தூரில் திருநாகேசுவரக் கோவிலை எழுப்பித்து அங்கு இறைவனை எழுந்தருளச் செய்தார். கண்பால் - கண்களிடத்தில், மைதோய் - மைதீட்டப்பெற்ற, திருமடந்தை - திருமகள், கருமால் - கரிய மேகம், (திருமால்), கடல் நேர் - பாற்கடலை ஒத்த.

முந்த எழுமாற் றுயர்பொன்னால்
முழுச்செம் மணியால் மாளிகையும்
முதுசூளிகையும் தெற்றிகளும்
முகப்பும் பிறவும் அமைதலினால்
இந்த நகரம் பொன்னகரத்
தினும்மிக் கிமைத்தல் விதிஉளத்தில்
எண்ணி ஆடூஉம் மகடூவாம்
எல்லா உயிரும் விழிஇமைத்தல்
நந்த அருட்சம் பந்தர் மணம்
நண்ணி யவர்க்கும் கதிகொடுத்த
நலம்போல் இதுசார் புவிஅகத்து
நகர்க்கெ லாம்செய் தனன்என்று
சந்தத் தவர்சொல் குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ. 3

பொழிப்புரை: முதன்மையான மாற்றுயர்ந்த பொன்னாலும் முழுமையான மணிகளாலும் ஆகிய மாளிகையும், நிலா முற்றங்களும் திண்ணைகளும் முகப்பும் பிற இடங்களும் செய்யப் பெற்றதினால் குன்றத்தூர் நகரம் பொன்நகரமாகிய தேவர்

உலகத்தைக் காட்டிலும் மிகுதியாக ஒளி பொருந்தி விளங்குகிறது என்று நான்முகன் உள்ளத்தில் எண்ணி, ஆண் பெண்ணாக அமைந்த எல்லா உயிர்களும், அப்பேரொளியால் தங்கள் கண்கள் இமைத்தலைக் குறைத்து, மிகுந்த அருள் நிறைந்த திருஞான சம்பந்தரின் திருமணத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் வீடு பேறு கொடுத்த தன்மை போல, இக்குன்றத்தூரும் தன்னைச் சார்ந்த உலகத்தோர்க்கு வீடுபேறு அருளுமாறு படைத்தனன் என்று கவிஞர்கள் பாராட்டும் சொல்லை உடைய குன்றத்தூர் நகரத்துத் தலைவா தாலோ தாலேலோ. சகல ஆகமங்களையும் அறிந்த தெய்வத் தன்மை பொருந்திய சைவரே தாலோ தாலேலோ.

கருத்துரை: தேவர் உலகம் போலப் பொன்னாலும் மணிகளாலும் இழைத்துச் செய்யப் பட்ட மாளிகை முதலியவற்றின் ஒளியால் குன்றத்தூர் ஒளி மிக்கு விளங்கிடத் திருஞானசம்பந்தரின் திருமணத்தில் கலந்து கொண்டவர்கள் வீடுபேறு பெற்றதைப் போல, நான்முகன் குன்றத்தூர் மக்களெல்லாம் வீடு பேறு பெறுவதற்காகப் படைத்தனன் என்று கவிஞர்கள் சொல்லுமாறு பெருமை பெற்று விளங்கும் குன்றத்தூர் தலைவரே, தாலோ தாலேலோ.

அருஞ்சொற்பொருள்: முந்த - முதன்மை பெற்ற, முதுசூளிகை - முழுநிலா முற்றம், தெற்றி - திண்ணை, முகப்பு - மாளிகையின் முகப்பு, பொன்நகரம் - தேவர் உலகம், விதி - நான்முகன், நந்த - மிகுதி, மணம் - திருமணம், நண்ணியவர்- கலந்து கொண்டவர், கதி - வீட்டுப்பேறு, இதுசார் - குன்றத்தூரைச் சார்ந்த, புவிஅகத்து - பூமியில், நகர்க்கெலாம் - நகர மக்களுக்கு எல்லாம், சந்தத்தவர் - கவிஞர்கள்.

முரிவில் வயிரம் கால்யாத்த
முழுமா ளிகையால் கடல்கடையா
முன்னம் திருமால் உருஒத்து
முயங்கும் எனவும் அதற்கருகே
பிரிவில் கருநீ லங்குயிற்று
பெருமா ளிகையைக் கடல்கடைந்த
பின்னர் அன்னான் உருவொத்துப்
பிறங்கும் எனவும் அதற்கருகே

எரிவில் விடுசெந் துகிர்மாடம்
எயில்சூழ் காஞ்சி அடைந்தன்னான்
எய்தும் உருஒத் தஃதென்றும்
எந்நா வலரும் கொண்டாடச்
சரிவில் வளம்சால் குன்றத்தூர்த்
தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலோ தாலேலோ. 4

பொழிப்புரை: *முறிக்கப்படாத வைரம் இழைக்கப் பெற்று விளங்கும் தூண்களை உடைய மாளிகைகள், திருப்பாற் கடலைக் கடைவதற்கு முன்னம் திருமாலுக்கு இருந்த வெண்ணிறத்தை ஒத்து விளங்குகிறது எனவும். அதன் அருகே இடமில்லாது கருநீலக் கற்களால் இழைக்கப் பெற்ற மாளிகைகள், கடல் கடைந்த பின்னர் திருமால் கொண்ட கருநீல நிறத்தை ஒத்து விளங்குகிறது எனவும், அம் மாளிகைகளுக்கு அருகில் தீ போன்று ஒளிபொருந்திய செம்பவளத்தால் ஆகிய மாடங்களைக் கொண்ட மதில்கள் சூழ்ந்த மாளிகைகள், திருமால் காஞ்சிபுரத்தை அடைந்த பொழுது பெற்ற செம்மை நிறத்தை ஒத்து விளங்குகிறது எனவும் கவிஞர்கள் கொண்டாடும்படி, குறையாத வளம் சேர்ந்த குன்றத்தூர் தலைவரே, தாலோ தாலேலோ. ஆகமங்கள் அனைத்தும் கற்றுத் துறை போகிய சைவரே தாலோ தாலேலோ.*

கருத்துரை : *வைர மாளிகைகளும், நீல மணி நிற மாளிகைகளும், பவள மாளிகைகளும் முறையே திருமாலின் வெண்மை நிறத்தையும், கருநீல நிறத்தையும், செந்நிற நிறத்தையும் கொண்டு விளங்குகின்றன என்று கவிஞர்கள் பாராட்டும்படி வளம் மிக்க குன்றத்தூர் தலைவா, தாலோ தாலேலோ.*

அருஞ்சொற்பொருள் : *முரிவில் - வைரப் பட்டை முறிக்கப்படாத, கால் - தூண், கடல் கடையா - திருப்பாற்கடலைக் கடைவதற்கு, உரு ஒத்து - வெண்ணிறத்தை ஒத்து, முயங்கும் - விளங்கும், பரிவில் - இடைவெளி இல்லாது, கருநீலம் - நீலநிறக் கற்கள், குயிற்று - பறித்து, உருஒத்து - கருநீல நிற உருவத்தை ஒத்து, எரி - தீ, செந்துகிர் - செம்மைநிறப் பவளம்,*

எயில் - மதில், உரு ஒத்து - செந்நிறம் ஒத்து, நாவலர் - கவிஞர்கள், சரிவில் - குறையாத.

சோறு மணக்கும் மடங்கள் எலாம்
தூய்மை மணக்கும் சிந்தைஎலாம்
சுவணம் மணக்கும் ஆடைஎலாம்
தொங்கல் மணக்கும் தோள்கள்எலாம்
சேறு மணக்கும் கழனிஎலாம்
செல்வம் மணக்கும் மாடமெலாம்
தென்றல் மணக்கும் மேடைஎலாம்
தெய்வம் மணக்கும் செய்யுள்எலாம்
நீறு மணக்கும் நெற்றியெலாம்
நெய்யே மணக்கும் கறிகள்எலாம்
நெறுப்பு மணக்கும் குண்டமெலாம்
நேயம் மணக்கும் வீதிஎலாம்
சாறு மணக்கும் குன்றத்தூர்
தலைவா தாலோ தாலேலோ
சகலா கமபண் டிததெய்வச்
சைவா தாலே தாலேலோ. 5

பொழிப்புரை: குன்றத்தூரில் உள்ள மடங்களில் எல்லாம் சோற்று மணம் வீசும். அவ்வூரில் உள்ளவர்களின் சிந்தையில் தூய்மை மணக்கும். மக்கள் உடுத்திய ஆடைகள் எல்லாம் பொன் மயமாக விளங்கும். அவர்களின் தோள்களில் தொங்குகின்ற மாலைகள் எல்லாம் நறுமணம் வீசும். அவ்வூரில் உள்ள வயல்கள் எல்லாம் உழுத சேறு மிகுந்திருக்கும். அங்குள்ள மாளிகைகளில் எல்லாம் செல்வம் நிறைந்திருக்கும். அங்குள்ள பூங்காவின் மேடைகளில் தென்றல் மணக்கும். அவ்வூரார் பாடும் பாடல்களில் எல்லாம் தெய்வமணம் கமழும். அங்குள்ளவர்களின் நெற்றிகள் எல்லாம் திருநீறு மணக்கும். உணவோடு கூடிய கறிவகைகளில் நெய் மணம் வீசும். அவ்வூரில் உள்ள வேதிகைக் குண்டங்களில் எல்லாம் நெருப்பு அணையாமல் இருக்கும். அவ்வூரில் உள்ள வீதிகளில் எல்லாம் கருணையாகிய அன்பு மணக்கும். விழாக்கள் நிறைந்த குன்றத்தூரின் தலைவா, தாலோ தாலேலோ. ஆகமங்கள் அனைத்தும் கற்றுத் துறை போகிய தெய்வத் தன்மை வாய்ந்த சைவரே, தாலோ தாலேலோ.

கருத்துரை: சேக்கிழார் தோன்றி அருளிய குன்றத்தூரில் திருமடம் முதலியவற்றுள் விளங்கும் சிறப்புக்கள் பலவாகும். அத்தகைய வளம் பொருந்திய குன்றத்தூர் தலைவரே, தாலோ தாலேலோ.

அருஞ்சொற்பொருள் : மடங்கள் - சமய நெறி சார்ந்த மாளிகைகள், சுவணம் - பொன், தொங்கல் - மாலை, கழனி - வயல், மாடம் - மாளிகை, மேடை - பூங்காவின் மேடைகள், செய்யுள் - பாடல்கள், நீறு - திருநீறு, கறிகள் - கறிவகைகள், குண்டம் - வேள்விக் குண்டம், நேயம் - அன்பு, சாறு - விழாக்கள்,

துங்கம் மிகுந்த அருந்தவம் மேவிய
தோலா நாத்திரண
தூமாக் கினியருள் தொல்காப் பியமே
தோன்றும் இலக்கணமாப்
பங்கம் இலாச்சம யாதி அடைந்து
பராம்சிவ சின்னமுறும்
பாக மரூஉம்பக் குவரே கேட்கப்
படும்அதி காரிகளா
அங்கம் எடுத்துழல் துன்பம் ஒழிந்தின்
படைவது வேபயனா
அற்புதம் மேவிய தொண்டர் புராணம
தருள்கரு ணைக்கடலே
சங்கம் மரீஇஅமர் குன்றைத் திருமுனி
தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல்
தாலோ தாலேலோ. 6

பொழிப்புரை: சிறப்பனை மிகுதியாகப் பெற்றவரும், அருந்தவத்தை உடையவரும் ஒருவருக்கும் தோற்காத நாவினை உடையவரும் ஆன, திரணதூமாக்கினியால் அருளிச் செய்யப் பெற்ற தொல்காப்பியமே தன் பாடலுக்கு இலக்கணமாய், குற்றமில்லாத சமயத் தீக்கை முதலான ஒழுக்கங்களைப் பெற்று, சிவச் சின்னங்களைக் கொண்டு இறைவனை அடைவதற்குரிய பக்குவம் பெற்ற அடியார்களே, தம் நூலைக் கேட்டு மகிழ்வதற்குரிய அதிகாரிகளாகவும் (கேட்பவர்களாகவும்)

உடலை எடுத்து வருந்தும்படியான துன்பத்தை ஒழித்து, பேரின்பத்தை அடைவதே பயனாகக் கொண்டு விளங்கும் அற்புதம் கொண்ட, திருத்தொண்டர் புராணத்தை அருளிச் செய்த கருணைக் கடலே, சங்கங்கள் பல கொண்ட குன்றத்தூரில் வாழும் அழகிய முனிவரே, தாலோ தாலேலோ. சைவப்பயிர் தழையக் குன்றத்தூரில் மழை மேகமாய் விளங்குபவரே தாலோ தாலேலோ.

கருத்துரை: தொல்காப்பயத்தை இலக்கணமாகவும், பக்குவம் பெற்ற அடியார்களைக் கேட்பதற்குரிய அதிகாரி களாகவும் (நேயர்களாகவும்), பேரின்பத்தைப் பெறுவதே நூலினைக் கேட்பதின் பயனாகவும் அமையும்படித் திருத் தொண்டர் புராணத்தை அருளிய முனிவரே, தாலே தாலேலோ.

அருஞ்சொற்பொருள்: துங்கம் - சிறப்பு, தோலா - தோற்காத, திரணதூமாக்கினி - திரண தூமாக்கினி என்றவர், பங்கம் - குற்றம், சமஆதி - சமயத்தீக்கை முதலான, பிராம்சிவ சின்னம் - திருநீறு உருத்திராக்கம் அணிதல், திருநாமம் கூறுதல், பக்குவ - பக்குவம் அடைந்தவர், அங்கம் - உடம்பெடுத்த பிறவி, இன்பம் - பேரின்பம்.

அடியார் பெருமையும் அருமையும் நாளும்
அறிஅம் பலவாணர்
அவர்வர லாறு விரித்துரை செய்பவர்
ஆரென உட்கருதிக்
கடியார் மற்றவர் அன்பத் தனையும்
கண்காண் படிசெய்து
காமரு முதலும் எடுத்தரு ளினர் இக்
கடல்சூழ் புவிஇடைஇப்
படியார் பெற்றார் தமிழ்மான் மியம்எப்
பாடைக ளுக்குளதிப்
பாக்கியம் நம்தவம் என்று பலோரும்
பகரப் படுவதீந்
தடியார் தடிசூழ் குன்றைத் திருமுனி
தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல்
தாலோ தாலேலோ. 7

பொழிப்புரை: அடியவர்களின் பெருமையையும் அருமையையும் நாடொறும் அறிந்து இன்புறுகின்ற அம்பலவாணர், அடியார்களின் வரலாற்றை விரித்து உரை செய்வதற்கு யாரென நினைந்து, விளக்கம் அமைந்த அடியார்களின் செயல்கள் அத்தனையும் சேக்கிழார் ஞானக் கண்ணால் காணும்படியாகச் செய்து பாடிட, உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுத்து அருளினார். கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் இதுபோல் ஆட்கொளப் பெற்றார் யார் உளர்? தமிழுக்கு அமைந்த இப்பெருமையைப் போல வேறு எந்த மொழிகளுக்கு உளது? இவ்வாறு அமைந்தது நம்முடைய தவமேயாகும் என்று பலரும் புகழும்படியான, இனிமைச்சுவை நிரம்பிய கரும்பு சூழ்ந்து வளர்ந்துள்ள குன்றை நகரத்துத் திருமுனியே தாலோ தாலேலோ. சைவப் பயிர் தழைய மழை மேகமாகக் குன்றத்தூரில் தோன்றியவரே, தாலோ தாலேலோ.

கருத்துரை: அடியார்களின் பெருமையை எடுத்து மொழிவதற்கு உரியவர் சேக்கிழாரே என்று எண்ணி, அவருக்கு உலகெலாம் என்ற அடியெடுத்துக் கொடுத்து, தில்லைக் கூத்தர் சேக்கிழாருக்கு முன் தோன்றிய அடியார்களைப் பற்றிய வரலாற்றை, ஞானக் கண்ணால் அறியும்படிச் செய்து திருத்தொண்டர் புராணத்தைப் பாடவைத்தார். இப்பெருமை தமிழகத்தாரின் தவப்பயனாகவும், வேறு எம்மொழிக்கும் கிடைக்காத பெருமையாகவும் அமைந்தது. இத்தகைய பெருமையுடைய சேக்கிழாரே தாலோ தாலேலோ.

அருஞ்சொற்பொருள்: அம்பலவாணர் - தில்லைக் கூத்தர், அவர் வரலாறு - அடியவர் வரலாறு, கடியார் - விளக்கமாக அமைந்த, கண் - ஞானக்கண், காமறு - விரும்புகின்ற, மாண்மியம் - பெருமை, பாடை - மொழிகள், தீந்தடி- இனியசுவையுடைய கரும்பு.

பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப்
பாடிய கவிவலவ
பயனில தாகும் சிந்தா மணிவழி
படர்தல் எனப்போதித்

துத்திச் சுமையொரு தோள்வைத் திடுபுல்
உயர்த்தோன் மனம்அடியார்
உறுசெயல் நாடப் புரிமதி வலவ
ஒலாஅரு கந்தர்திறம்
முத்தித் திறம்அல என்றள விலர்பால்
முற்றிச் சிவமடைய
முயல்செயல் வலவ வயல்கண் மடைச்செறி
முத்தம் அனைத்தினையும்
தத்திப் புனல்பாய் குன்றைத் திருமுனி
தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல்
தாலோ தாலேலோ. 8

பொழிப்புரை: பத்திச்சுவை மிகவும் சொட்டுமாறு கவிதை பாடுவதில் வல்லவனே, பயனற்ற சீவகசிந்தாமணி நூலின் சுவைவழி செல்லுதல் வேண்டா என அறிவுறுத்தி, படத்தைக் கொண்ட ஆதிசேடன் என்னும் பாம்பினால் தாங்கப் படுகின்ற உலகத்தைத் தன் தோளினால் தாங்குகின்ற, புலிக்கொடியை இமயமலையில் உயர்த்திய அநபாயச் சோழனின் உள்ளம், சிவபத்தி மிகுந்த அடியார்களின் வரலாற்றில் செல்லுமாறு செய்த வல்லவனே, பொருந்தாத ஒழுக்கத்தினை உடைய அருக தேவனின் ஒழுகும் திறம் வீடு பேறு அடைவதற்கு உரியது அன்று என்று கூறும்படி செய்து, நல்வினையால் வீடு பேறு அடைவதற்குரிய சிவநெறியாம் தன்மை பெறுவதற்கு உயரும்படியாகச் செய்திட்ட வல்லவனே, வயல்கள் தோறும் மடையில் கிடைத்த முத்துக்களை அலைத்துச் செல்லுகின்ற தண்ணீர் பாய்கின்ற குன்றத்தூரில் தோன்றிய முனிவர்களின் தலைவனே, தாலோ தாலேலோ. சைவப் பயிர்தழையுமாறு குன்றத்தூரில் தோன்றிய மழைமேகமே, தாலோ தாலேலோ.

கருத்துரை: பத்திச்சுவை பெரிதும் விளங்கப் பெரிய புராணத்தைப் பாடிய கவிஞரே, சீவக சிந்தாமணி நூலில் மனத்தைச் செலுத்திச் சுவைத்த, அநபாயச் சோழனைத் திருத்தி அடியார்களின் வரலாற்றை அறியச் செய்த வல்லவரே, சமணர்களின் தலைவராம் அருகனின் வழியில் சென்றால் முத்திப்பேற்றை அடைய முடியாது என்று உணர்த்தி,

சமணர்களைச் சைவநெறியில் செலுத்திய வல்லவரே, முத்துக்களை அலைத்து ஓடும் நீரை உடைய குன்றத்தூரின் திருமுனியே, தாலோ தாலேலோ.

அருஞ்சொற்பொருள் : படர்தல் - செல்லுதல், உத்தி - படத்தை உடைய பாம்பு, உயர்த்தோன் - அநபாயச் சோழன், ஓலா அருகர் - கூடாத சமணர், அளவிலர் பால் - அளவில்லாத பல்லோர், முத்தி - நல்வினை முத்தி, முத்தம் - முத்துக்கள், தத்தி - அலைத்து.

ஈற்றுத் தலையொரு மவுலி புனைந்தால்
என்னச் சொல்அணிஒன்று
எய்திப் பொலியப் பொருள்அணி ஆயின
எவ்விட னும்வீற்று
வீற்றுக் கிடைஇறை பட்டன அமைய
விளம்பு வனப்பனொடு
மேய முதற்பொருள் ஆதிய மூன்றும்
வண்டும்இ டத்தெய்த
ஆற்றுப் புனல்நா மப்பொருள் கோள்முதல்
அறைமற் றுள்ளனவும்
அமையத் தொண்டர் புராணம் நவின்றவ
அடருபு சூழ்ந்தபசும்
தாற்றுக் கதலிக் குன்றைத் திருமுனி
தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல்
தாலோ தாலேலோ. ೨

பொழிப்புரை: பெரியபுராணச் செய்யுளின் ஈற்றடியில் தலையில் முடி புனைந்தது ஒப்ப, செய்யுட்களில் சொல்லணியில் ஒன்றாகிய மடக்கணி விளங்க, பொருளணிகள் காணும் இடமெல்லாம் செய்யுளில் இடம்பெற, அவற்றோடு இறை உணர்வுக் கருத்துக்கள் அமையவும், பத்து அழகோடு பொருளணியில் அமைந்த முதற் பொருள், உரிப் பொருள் கருப்பொருள் ஆகிய மூன்றும் வேண்டும் இடங்களில் எல்லாம் அமைய, ஆற்றுப் புனல் என்று கூறப்படுகின்ற பொருள்கோள் முதல் எட்டுப் பொருள் கோளும் விளங்க, இவ்வாறு அணிகள்

விளங்கத் திருத்தொண்டர் புராணம் பாடியவரே, அடர்ந்தும் சூழ்ந்தும் பசுமையாக விளங்கும் குலைகளை உடைய வாழை மரங்கள் பொருந்திய குன்றத்தூரில் எழுந்தருளிய முனிவரே, தாலோ தாலேலோ. சைவப் பயிர் தழைக்கும்படி குன்றத்தூரில் தோன்றிய மழைமேகமே தாலோ தாலேலோ.

கருத்துரை: சேக்கிழார் தாம் பாடிய திருத்தொண்டர் புராணத்தில் சொல்லணியில் இடம் பெற்ற மடக்கணி அமையுவும், பொருளதிகாரத்திற்குரிய தன்மை, உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் உள்ளிட்ட அணிகள் எவ்விடத்திலும் அமையவும், அவற்றின் மூலம் இறையுணர்வுச் செய்திகள் வெளிப்படவும், பத்து அழகுகளும் முதற் பொருள் உள்ளிட்ட மூன்று பொருள்களும், ஒன்பது பொருள்கோள்களும் வேண்டும் இடங்களில் அமையவும் பாடியுள்ளார். அவ்வாறு பாடிய வாழை மரங்கள் சூழ்ந்த குன்றத்தூரில் தோன்றிய சேக்கிழாராகிய முனிவரே தாலோ தாலேலோ.

அருஞ்சொற்பொருள்: ஈற்று - செய்யுளின் இறுதி, மவுலி புனைந்தான் - மகுடம் சூடியது போலச் சொல்லணிகளில் ஒன்றான மடக்கணி. (பெரியபுராணச் செய்யுட்களின் ஈற்றடிகளில் மடக்கணி அமைந்திருப்பதைக் காணலாம்) உதாரணமாகப் பண்தரு என்று தொடங்கும் திருநாட்டுச்சிறப்பு 32-வது பாடலில், ஈற்றுவரி தண்டலை பலவும் எங்கும் தாதகி பலவும் எங்கும் என்று பலவும் என்பது மடக்கணியாக வந்தள்ளதைக் குறிப்பிடலாம். பொருளணி ஆயின - பொருளணியில் உவமை, உருவகம் , தன்மை வேற்றுப்பொருள் வைப்பு, தற்குறிப்பேற்றம் முதலிய அணிகள் பலவும் பெரியபுராணச் செய்யுட்களில் மடக்கணி அமையும்படிப் பாடியுள்ளார். வனப்பு - அழகு, செய்யுளில் அமையும் பத்து அழகுகள் - அவை சுருங்கச் சொல்லுதல் முதலாக விளங்கும் உதாரணம் வரை உள்ள அழகுகளாகும். பொருள்கோள் -

யாற்றுநீர் மொழிமாற்று நிரல்நிறை வில்புணர்
தாப்பசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு
அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே.

என எட்டுவகையாகும். மற்றுள்ளன - பாவகைகள், சந்தங்கள் முதலியன. அடருபு - அடர்ந்து, தாற்று - குலை, கதலி - வாழை.

மண்டலை வேலைப் புவியில் பத்திசெய்
 மார்க்கம் அறிந்தவர்ஆர்
வண்சுவை அமுத ஒழுக்கென வார்த்தை
 வழங்கத் தெரிகுநர்ஆர்
கொண்டலை நேர்பக டூர்தரு கூற்றம்
 குதித்துயந் திடவலர் யார்
கொற்றக் கைலைக் கணநா தர்களொடு
 கூடுபு மகிழ்பவர்ஆர்
விண்டலை யாரும் பெறல்அரும் இன்பம்
 விராவும் திறலினர்ஆர்
விமலா நீஆவ தாரம் செய்யா
 விடின்என மேயவபைந்
தண்டலை சூழும் குன்றைத் திருமுனி
 தாலோ தாலேலோ
சைவப் பயிர்தழை யத்தழை யும்புயல்
 தாலோ தாலேலோ. 10

பொழிப்புரை: மிகுந்த அலைகளை உடைய கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் இறைவன் மீது வழிபாடு செய்யும் வழியை அறிந்தவர் யாராக இருக்க முடியும்? வளமான பத்திச் சுவையை அமுதம் ஒழுகுவது போன்ற சொற்களால் கூறத் தக்கவர்கள் யாராக இருக்கமுடியும்? மேகத்தை ஒத்த எருமைமாட்டில் வரும் யமனை வென்று பழைத்திட வல்லவர் யாராக இருக்க முடியும்? வெற்றி பொருந்திய கயிலாயத்தில் தேவகணங்களோடு கூடி மகிழ்பவர் யாராக இருக்க முடியும்? தேவர் உலகத்து உள்ளவர்களும் பெறுதற்கரிய பேரின்ப வாழ்வை அடையக் கூடியவர்களும் யாராக இருக்க முடியும்? (இவை அனைத்தையும் பெற்றவர் சேக்கிழாரே ஆகும் என்ற கருத்து பெறப்படுகிறது) குற்ற மற்றவனே நீ அவதரிக்கவில்லை என்றால் என்று நாங்கள் ஏக்கம் கொள்ளும்படியாகச் சோலைகள் சூழ்ந்த குன்றத்தூரில் பிறந்த முனிவரே தாலோ, தாலேலோ. சைவப்பயிர் தழைக்கக் குன்றத்தூரில் மழை மேகமாகத் தோன்றியவரே தாலோ தாலேலோ.

கருத்துரை: சேக்கிழாராகிய குற்றமற்றவர் இவ்வுலகத்தில் தோன்றவில்லை என்றால், கடல்சூழ்ந்த இவ்வுலகத்தில் இறைவழிபாட்டைத் தெரிந்தவர்கள், பத்திச்சுவையைப் பாட வல்லவர்கள், யமனை வெல்லுபவர்கள், கயிலாயத்தில் கணநாதரோடு வாழ்பவர்கள், விண்ணுலகப் பேரின்பத்தை அடைபவர்கள் யாராக இருக்க முடியும்? (சேக்கிழாரைத் தவிர வேறொருவர் இருக்க முடியாது) அத்தகைய பெருமைகளை எல்லாம் பெற்ற, சோலை சூழ்ந்த குன்றத்தூரில் தோன்றிய முனிவரே தாலோ தாலேலோ.

அருஞ்சொற் பொருள்: மண்டு அலை - மிகுந்த அலை, கொண்டலை - மேகத்தைப் போன்ற, பகடு - எருமைமாடு, கூற்றம் - யமன், குதித்து - வென்று, விண்தலையார் - தேவர் உலகத்தில் உள்ளவர்கள், விராவும் - பெற்றிடும், மேயவ - பொருந்தியவரே. பைந் தண்டலை - பசுமையான சோலை.

தாலப்பருவம் முற்றிற்று.

4. சப்பாணிப் பருவம்

(பாட்டுடைத் தலைமையாகிய குழந்தை கையுடன் கையைச் சேர்த்து ஒலி எழுப்பக் கொட்டும் பருவமே சப்பாணிப் பருவமாகும். பாணி - கை. சப் - என்பது ஒலி குறிப்பு. எனவே ஒலிக்குறிப்பைத் தரும் கை என்ற பொருளில் சப்பாணிப் பருவமாயிற்று. இது குழந்தை பிறந்த ஒன்பதாவது மாதத்தில் நிகழும் நிகழ்ச்சியாகும்.)

விழைஅற முதல்கல்வி அறியுநுண் அறிவும்அம்
  மேதைக் கிணங்கொழுக்கும்
 மேயஇவை உடையார்த் தழீஇஅவர்
  சொல் இனிதேற்கும் மேம்பாடும் மாறுகருதா
மழைநிகர் கொடைத்திறனும் நனிவரூஉ தினிஈட்டும்
  மாண்புமாற் றலரைஅஞ்சா
 வன்மையும் இடம்காலம் முதல்அறிதலும் கடிய
  மாற்றம் நவிலாத குணமும்
உழையரும் விருப்பம்அறி யாதடக் குதலும் நலன்
  ஓங்குகாட் சிக்கெளிமையும்
 உடையன்இவன் உலகுவத் தற்குரியன் என்றுளத்
  துன்னிஇறை புனையமணிகள்
தழையும்முடி தொட்டுக் கொடுத்தருள் மலர்க்கைகொடு
  சப்பாணி கொட்டியருளே
 தண்டமிழ்க் குன்றையாம் குன்றுதித் தெழுபானு
  சப்பாணி கொட்டியருளே. 1

பொழிப்புரை: எவரும் விரும்பும் அறம் முதலிய நால்வகைப் பொருள்களையும் அறியும் நுண்மையான அறிவும், அக்கல்விக்கு ஏற்பப் பொருந்திய ஒழுக்கமும் உடையவர்களைத் தழுவி, அவர்கள் சொல்லையும் இனிதாக ஏற்கின்ற மேம்பாடும், கைம்மாறு கருதாத மழைக்கு நிகரான கொடைத்திறனும், மிகுதியான படைகளைப் பெருக்கும் குணநலனும், பகைவர்க்கு அஞ்சாத வலிமையும், இடம் காலம் முதலியவற்றை அறிந்து வன்மையான சொற்களைக் கூறாத குணமும், தம்முடைய ஆசையை பக்கத்தில் உள்ளவரும் அறியாது மனத்தை அடக்குபவனும், நன்மை பெருகும் காட்சிக்கு எளிமையும்

உடையவன் ஆதலால், இவன் உலகு மகிழ்வதற்குரிய அரசாட்சியை நடத்தக் கூடியவன் என்று மனத்தில் எண்ணி, அநபாய சோழனுக்கு மணிகள் பதித்த முடியைச் சூட்டுவதற்குத் தொட்டுக் கொடுத்து அருளிய, மலர் போன்ற கைகளைக் கொண்டு சப்பாணி கொட்டியருளே, தண்டமிழ் வழங்கும் குன்றத்தூராம் மலையில் தோன்றிய சூரியனே, சப்பாணி கொட்டியருள்வாயாக.

கருத்துரை: கல்வி கற்கும் நுண்ணறிவு, அதற்கேற்ற ஒழுக்கம் உடையவர்களை நட்பாகக் கொண்டு, கொடைத்திறன், படையைப் பெருக்கும் வலிமை, அஞ்சாத வீரம், வன்சொல் கூறாத குணம், ஆசையை அடக்கும் நிலை ஆகியவற்றை உடைய அநபாய சோழனுக்கு முடிசூட்டிய கைகளால் சப்பாணி கொட்டியருளே. (அரசனுக்கு உரிய குணங்கள் அனைத்தையும் பாடலில் கூறியிருப்பது குறிப்படத் தக்கது)

அருஞ்சொற்பொருள் : உடையார்த்தழீஇ - கல்வி அறிவும் ஒழுக்கமும் கொண்ட சான்றோர்களைத் தழுவிக் கொள்ளுதல், மாறுகருதா - கைம்மாறு கருதாது, வருஊதினி - சேனைகள், மாற்றலர் - பகைவர், கடிய மாற்றம் - வன்சொல், நவிலாத - கூறாத , உழையர் - பக்கத்தில் உள்ளவர்கள், விருப்பம் - ஆசை, உலகு உவத்தற்கு உரியவன் - உலகம் விரும்புவதற்குரிய அநபாய சோழன், இறை - அரசர், தழையும் - அணியும், முடிதொட்டுக் கொடுத்தருள் - சோழர்கள் முடிசூடும் காலத்தில் வேளாளர் மரபினர் அம்முடியைத் தொட்டுக் கொடுக்கும் வழக்கம் உடையதால் அதனைச் சேக்கிழாருக்கு உரித்தாக்கியுள்ளார், பானு - சூரியன்.

கார்க்கோல மாலோன் புரந்தருள்வன் எனும்மொழிமு
கமன்உண்மை வேளாண்மையைக்
கருதஅபி தானம்கொள் குலமே எனப்பல்நூல்
கற்றவர் இயம்ப மறையோர்
போர்க்கோல மன்னர்எட் டியர்மூவர்புறம்எனப்
புகல்மூவர் பசிவருத்தம்
போக்கினம் எனக்களிப் புறவிலே கருமம்அது
புகன்றுமகிழ் தலைசிறப்ப

வார்க்கோல முலைமங்கை பங்கர்தளி முன்பலவும்
வண்பூசை யொடுசிறப்பு
மாறாது பொலியமழை வளனும் சிறப்பஅள
வாப்பெருமை வாய்ந்தமேழி
தார்க்கோ லொடும்தொடும் செங்கைத் தலம்கொண்டொர்
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்க் குன்றையாம் குன்றுதித் தெழுபானு
சப்பாணி கொட்டியருளே. 2

பொழிப்புரை: கரிய மேகம் போன்ற கருமை பொருந்திய திருமால் உலகினைக் காப்பான் என்று கூறுகின்ற பழஞ்சொல் உபசாரமாக அமையவும், வேளாண்மையைச் செய்து உலகைக் காப்பது வேளாளர் குலமே எனப் பல நூல்களைக் கற்றவர்கள் கூறவும், மறையோர், போர்த்தொழிலைக் கொண்ட மன்னர் , வேளாளர் என்று கூறப்படுகின்ற மூவருக்கும் புறம்பாகக் கூறப்படும் அனுலோபர், பரதிலோபர், சங்கரர்ஆகிய மூவருக்கும் ஏற்படுகின்ற பசித்துன்பத்தைப் போக்கினோம் எனக் களிப்புறவும், தேவர்களும் அச்சிறப்பனைக் கருதிப் போற்றவும், கச்சணிந்த மார்பகத்தைக் கொண்ட உமையவளை ஒருபாகத்தில் உடைய இறையவருக்குக் கோவில்கள் பல எழுப்பியும், அவற்றில் பூசனை முறைகள் சிறப்பான விழாக்கள் ஆகியவற்றைச் செய்வித்தும், அவற்றால் மழை வளம் சிறக்கவும், அளவற்ற பெருமை வாய்ந்த உழவுத் தொழில் செய்த செங்கையினால் சப்பாணி கொட்டியருள்வாயாக, தண்ணிய தமிழ் மணம் மிக்க குன்றத்தூராம் மலையில் தோன்றிய சூரியன் போன்றவரே, சப்பாணி கொட்டியருள்வாயாக.

கருத்துரை: காத்தல் தொழிலைச் செய்யும் திருமால் உலகத்தைக் காக்கின்றார் என்பதை உபசாரமாக்கி(வெறுஞ் சொல்லாக்கி), வேளாண்மைத் தொழிலால் உலகத்தைக் காத்தும், அந்தணர் முதலிய மூவருக்கும், உலோபர் முதலிய மூவருக்கும் பசி வருத்தத்தைப் போக்கியும், இறைவனுக்குப் பல கோவில்கள் எழுப்பித்து அங்கு வழிபாடுகள் நிகழச் செய்தும், அதனால் மழைவளம் சிறக்கவும், வேளாண்மைத் தொழிலைச் செய்த கரங்களால் சப்பாணி கொட்டியருள்க.

அருஞ்சொற்பொருள்: கார்க்கோலம் - மேகம் போன்ற கருமைநிறம் கொண்ட கோலம், முகமன் - உபசாரம், அபதானம் - வேளாளர் எனும் பெயர், எட்டியர் - வேளாளர், புகல் மூவர் - இகழ்வாகக் கூறும் அனுலோபர் -(அந்தணருக்கும் தாழ்த்தப்பட்ட பெண்ணிற்கும் பிறந்தவர்), பிரதிலோபர் - (அந்தணருக்கும் வணிகர்குலப் பெண்ணிற்கும் பிறந்தவர்), சங்கரர் - (அந்தணருக்கும் வேளாளர் குலப் பெண்ணிற்கும் பிறந்தவர்) , இலேகர் - தேவர், தளி - கோவில், சிறப்பு - சிறப்புவிழாக்கள், மேழி - கலப்பை, தார்க்கோல் - மாடு ஓட்டும் கம்பு.

மேவாத பாயுடீஇத் தலைமயிர் பறித்துழறல்
மேயசமயப் பாழ்ங்குழி
வீழ்ந்தவர் முன் அச்சமய கண்டனம் பேசிஅது
விடஆற்று திருவாயினின்
றோவாத பிரதாபம் ஒருகதிர் எனத்தோன்றி
உள்ளகோ கனகம்எல்லாம்
உறமலர்த் திடஅவைகை ஒப்பாயி னோம்என்
றுறப்பொலிதல் தேறுபன்னார்
ஆவாத மியம்என அபயம்நல்கி உண்மைநிலை
அருளும்கை நின்றெழுபுகழ்
ஆலோன் எனத்தோன்றி எல்லாம் குவித்ததென்
றான்றோர் எடுத்துரைக்கும்
தாவாத ஒளிகிளர் நின் அங்கைத் தலம்கொண்டொர்
சப்பாணி கொட்டிஅருளே
தண்டமிழ்க் குன்றையாம் குன்றுதித் தெழுபானு
சப்பாணி கொட்டியருளே. 3

பொழிப்புரை: பொருத்தம் இல்லாத பாயை ஆடையாக உடுத்தியும், தங்கள் தலைமயிரைத் தாங்களே பறித்தும், தங்கள் வாயில் தோன்றியவற்றை எல்லாம் உழறியும் விளங்கும், சமணர்களின் சமயமாகிய பாழுங்குழியில் வீழ்ந்தவர்கள் முன்னிலையில் சமண சமயத்தின் இழிதகைமைகளைக் கூறி, அவர்களைச் சமணசமயத்தில் இருந்து மாற்றிச் சைவ சமயத்தைச் சார்வதற்குச் செய்த, சேக்கிழாரின் அருளுரையாம் திருவாயில் இருந்து வருகின்ற பிரதாபத்தை ஒப்பற்ற சூரியன் எனக் கொண்டதால், சைவ சமயத்தைச் சார்தவர்களின் மனமாகிய

தாமரைகளை எல்லாம் மலர்ந்தன. அவர்களைப் போல் சைவ சமயம் சாராது தனிமை ஆகினோம் எங்களைக் காப்பாற்றுங்கள் என்று சிலர் சேக்கிழாரை வேண்டிட, சேக்கிழார் தம் கையினால் அபயம் காட்டிட, அந்த அபயக் கரத்தைச் சந்திரனாகக் கண்டு, குறை வேண்டியவர்களின் கைகளாகிய தாமரைகள் குவிந்தன என அறிஞர்கள் எடுத்துச் சொல்ல, அத்தகைய புகழ் கொண்ட உன்னுடைய கரங்களால் சப்பாணி கொட்டியருளே, தண்டமிழ்க் குன்றத்தூராம் மலையில் தோன்றிய சூரியனே, சப்பாணி கொட்டியருள்க.

கருத்துரை: சமண சமயத்தைச் சார்ந்தவர்களின் முன்னிலையில் சமண சமயக் கொள்கையின் தாழ்வினை எடுத்துக் கூறி, அவர்களைச் சைவர்களாக்கிச் சேக்கிழார் தன்னுடைய வலிமை மிக்க உரையாகிய சூரியனால் அச்சைவர்களின் மனத் தாமரையை மலரவைத்தார். மேலும் சைவ சமயத்தைச் சாராது தனித்து ஆகிவிட்டோம் என்று சிலர் காப்பாற்றும்படித் தவச் சேக்கிழாரை வேண்ட, அவர்தம் அபயக் கரத்தைக் காட்ட, சேக்கிழாரின் அபயக்கரமாகிய சந்திரனைக் கண்டு, அவர்கள் தங்கள் தாமரை போன்ற கைகளைக் கூம்பத் (கூப்பி) தொழுதார்கள். இத்தகைய சிறப்பனை உடைய கைகளால் சப்பாணி கொட்டியருளே.

அருஞ்சொற்பொருள் : பாயுடீஇ - சமணசமயத்தைப் பாயை ஆடையாக உடுத்துபவர், உழறல் - பொருளற்ற சொற்களைக் கூறுதல், கண்டனம் - பிற சமயத்தின் கருத்துக்களை மறுத்து அதன் இழிவு கூறல், ஓவாத - நீங்காத, பிரதாபம் - பிறர் வலிமையை அடக்கித் தன் வலிமையை மேம்படுத்தும் மொழி, கதிர் - சூரியன், கோகனகம் - தாமரை, அவை கை - அப்படிப்பட்ட வகை, தேறு பின்னர் - தெரியாத சிலர், ஆவா - ஆ ஆ என்ற ஒலிக்குறிப்பு, தமியம் - தனிமைப்பட்டோம், அபயம் - அபயக்கரம், ஆலோன் - சந்திரன், ஆன்றோர் - அறிஞர்.

துருமமலர் கொய்துநீர் ஆடிநீ றிட்டுநனி
தூயகண் இருந்துநேரே
துலங்குமொரு குறியில்ஆ வாகனம்
எணுதலோடுதோன்றிடச் செய்வதன்று

பெருமஅடி யேங்களைப் புரவென்று தாழ்பவர்
பெருஞ்செல்வம் எய்திஜய
பிறங்குநா ராயணஉ பநிடதம் உரைத்தபடி
பெற்றருள்தி இவர்வணக்கம்
கருமம்முதல் எம்மனமும் நீத்தின்பம் எய்தக்
கடைக்கணித் திடுதிஎன்று
கனிந்துவேண் டுவதன்று
சிறுவருத் தமும்இலாக் காரியம் அவாவிநின்றோம்
தருமசின கரமாம் கரம்குவித் தையஒரு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்க் குன்றையாம் குன்றுதித் தெழுபானு
சப்பாணி கொட்டியருளே. 4

பொழிப்புரை: மரங்களின் மலர்களைக் கொய்து அருச்சித்து, நீர் கொண்டு முழுக்காட்டி, திருநீறு அணிந்து கொண்டு, தூய்மையான இடத்தில் இருந்துகொண்டு, தமக்கு முன்னே ஒரு கடவுளை எழுந்தருளச் செய்து, அவ்வுருவத்தில் மந்திர மொழிகளால் தெய்வத்தன்மையைப் பொருந்துமாறு செய்து, பெருமானே, மிக்க பெருஞ்செல்வத்தை எய்திய தலைவனே, நாராயண உபநிடதத்தில் உரைத்தபடி வழிபடுகின்ற எங்களை (என்று பிறர்) காப்பாயாக என்று வழிபடுபவரின் வணக்கத்தை ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அருள் செய்தது போல் செய்வாய் என்றோ, ஆணவம், கன்மம், மாயை என்ற மூவகை மலங்களும் நீங்கிப் பேரின்பத்தை அடைந்திடக் கடைக்கண் நோக்கால் அருள் செய்வாயாக என்றோ, கனிந்து நாங்கள் வேண்டுவதில்லை. ஏனென்றால் இவற்றை எல்லாம் நின்மாட்டு வேண்டினும் உனக்கு அவற்றைத் தருவது அரிது அன்று. என்றாலும் இப்பொழுது நாங்கள் உம்மிடத்தில் வேண்டுவது, மிகச் சிறிய வருத்தமும் இல்லாத காரியமேயாகும். தருமத்திற்கே உறைவிடமாக விளங்கும் கரங்களைக் கொண்டு சப்பாணிகொட்டியருள் என்று நாங்கள் கைகுவித்து வணங்கி வேண்டுவதேயாகும். தண்ணிய தமிழ்மணம் மிக்க குன்றையூராம் மலையில் தோன்றிய சூரியனே, சப்பாணி கொட்டியருள்கவே.

கருத்துரை: தமக்கு முன்னே ஒரு கடவுளை எழுந்தருளச் செய்து மந்திரத்தால் அந்த வடிவத்தில் கடவுள் தன்மையை

ஆவாகனம் செய்து, மரத்தின் மலர் கொண்டு அருச்சித்தும், நீர்கொண்டு ஆட்டியும் வழிபடுகின்றவர்கள், வழிபட்டு வரம் வேண்டுவது போல் அல்லாமல், அவ்வாறு வேண்டுபவர்க்கு வரம் அளிப்பது உனக்கு அரியசெயல் அன்று என்பதை உணர்ந்து, உன்னிடத்தில் சப்பாணி கொட்டும் எளிய செயலை நாங்கள் வேண்டுகிறோம். குன்றத்தூர் மலையின் சூரியன் போன்றவனே சப்பாணி கொட்டியருள்க.

அருஞ்சொற்பொருள் : துருமமலர் - மரக்கிளையில் பூத்திருக்கும் மலர், நீறுஇட்டு - திருநீறு அணிந்து கொண்டு, குறியில் - வடிவத்தில், ஆவாகனம் - தெய்வத்தன்மை வந்து அருள மந்திரத்தால் இறைவனை அழைத்தல், புரத்தல் - காத்தல், தாழ்பவர் - வணங்குபவர், நாராயண உபநிடதம் - உபநிடதங்கள் 108 ஆகும். அதில் நாராயணி என்ற உபநிடதம் காலையில் எழுந்து நீராடித் திருநீறு இட்டுக்கொண்டு, இறைவடிவத்தைப் பூசனை செய்யும் முறையைக் குறிப்படுவதாகும், கருமமுதல் எம்மலமும் - சித்தாந்தத்தின்படி மலங்கள் ஐந்து ஆகும். அவை ஆணவம், கன்மம், மாயை , திரோதானம் (மறைத்தல்), மாயேயம் (மாயையின் செயல்கள்) என்பவை. இந்த ஐந்து மலங்களும் மூலமாகிய மாயை என்ற முதற் காரணத்திலிருந்து தோன்றுவதாகும். கடைக்கண் - பார்வை , அவாவி - விரும்ப வேண்டி, தருமசின கரமாம் கரம் - அறத்தை அடிப்படையாகக் கொண்ட திருக்கரம்.

எண்ணியவை எண்ணிய படிக்கடி யவர்க்கருளும்
ஈசன்அருளால் அருள்உறா
ஈனசம யத்தொடக் கெல்லாம் ஒழித்தனம்
எனக்கைதட் டுதலும்ஓவாத்
திண்ணிய மலச்செருக் கெல்லாம் ஒழித்தனம்
தீர்ந்ததவ் வாதைஎன்று
செப்பக்கை தட்டுதலும் இந்திரன் மலர்க்கணான்
தேந்துழா யவன்வாழ்க்கையும்
நண்ணி எழும்கருத் தும்தவிர்ந்த தனம்என்று
நாடிக்கை தட்டுதலும்நேர்
நவிலநம் பரமகுரு சாமிஎன் றியாவரும்
நயக்கஅவ தாரம்செய்தாய்

தண்ணிய மலர்க்கைத் தலம்குவித் தையஒரு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்க் குன்றையாம் குன்றுதித் தெழுபானு
சப்பாணி கொட்டியருளே. 5

பொழிப்புரை: எண்ணியதை எண்ணியவாறு அடையும் வண்ணம்,அடியவர்களுக்கு அருள் செய்கின்ற இறைவனுடைய பேரருளாகிய அருளைப் பெறாத சமண சமயத்தின் பாச பந்தத் தொடர்புகளை ஒழித்து விட்டோம் என்று கைதட்டுதலையும், எப்பொழுதும் நீங்காத வலிமை கொண்ட மலர் போன்ற கைகளால் ஆணவத்தால் விளையும் செயல்களை எல்லாம் நீக்கி, அதனால் உண்டாகும் துன்பம் தீர்ந்தது என்று கூறிக் கைதட்டுதலையும், இந்திரன், நான்முகன், திருமால் ஆகிய மூவர் தம் வாழ்க்கையை விரும்ப எழுகின்ற வேட்கையை நீக்கினோம் என்று விரும்பிக் கை தட்டுதலையும் ஒத்தது என்று கூறும் விதமாக, எல்லாவற்றிற்கும் மேலான குருசாமி என்று அழைக்கப் பெறும் உன்னுடைய மலர்க்கரங்களால் சப்பாணி கொட்டியருள் வாயாக. தண்டமிழ் குன்றையூர் மலையில் தோன்றிய சூரியனே சப்பாணி கொட்டியருள்வாயாக.

கருத்துரை: சமண சமயத் தொடர்பை ஒழித்தனம் என்றும், ஆணவத்தால் ஏற்படும் துன்பத்தை ஒழித்தனம் என்றும், இந்திரன் முலான பிற தெய்வங்களின் வழிபாட்டைத் தவிர்த்தனம் என்றும், கைகொட்டுவதற்கு ஒத்தபடி எங்கள் குருவாகிய சேக்கிழாரே, உன் மலர்க்கைகளால் சப்பாணி கொட்டி அருள்க.

அருஞ்சொற்பொருள்: அருளுறா - அருளைப் பெறாத, தொடக்கு - பாசபந்தம், ஓவா - நீங்காத, செருக்கு - ஆணவத்தின் பயன்கள், வாதை - துன்பம், மலர்க்கணான் - நான்முகன், தேந்துழாயவன் - திருமால், பரமகுருசாமி - மேலான குருமூர்த்தி,

வம்பட் டொளிர்முலை மாதுமை காண
மணிப்பொது நடனம்செய்
வார்முனம் மனம்நைந் துருகிட நிற்றல்
மதித்தவர்முதல்நல்க

நம்மிட் டருமறை யோர்கை குவித்து
நயந்து வியந்துடனே
நறுவிரை நல்கி அலங்கல் புனைந்து
நகும்பரி வட்டம்எடுத்
தம்பட் டொளிர்சடை யவரே இவர்என்
றையமறத் தெளியா
யாத்திடு முன்னர் நன்னர் விபூதிய
தள்ளுபு கொள்ளுகெனக்
கும்பட் டேற்ற திருக்கை குவித்துக்
கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல
கொட்டுக சப்பாணி. 6

பொழிப்புரை:கச்சணிந்து விளங்குகின்ற முலைகளைக் கொண்ட உமையவள் கண்டு மகிழ, அழகிய சிற்சபையில் நடனம் செய்கின்றவரின் முன்னர், மனம் குழைந்து உருகுமாறு நிற்றலை மதித்து, அப்பெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க, தில்லைவாழ் அந்தணர்கள் விரும்பக் கைகுவித்து வணங்கிப், வியப்புடனே சந்தனத்தைக் கொடுத்து பின் மாலை சூட்டிப் பரிவட்டத்தை எடுத்து, கங்கையைத் தலையிலே உடைய சிவபெருமானே இவர் என்று ஐயம் தீரத் தெளிந்து, அதனை உம்முடைய தலையில் கட்டுவதற்கு முன்பு திருநீற்றினை அள்ளிக் கொடுத்து ஏற்றுக் கொள்க என்று கொடுத்த பொழுது, அதனைக் கும்பிட்டு ஏற்றுக் கொண்ட திருக்கரங்களைக் குவித்துச் சப்பாணி கொட்டியருள்க, தொண்டு புரிவதில் வெற்றி கொண்ட வேளாளர் தலைவரே, காவலரே, சப்பாணி கொட்டியருள்க.

கருத்துரை: பொற்சபையில் நடராசர் திருமுன்னர் வணங்கி நின்ற பொழுது, இறைவன் "உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்ததைக் கண்டு, தில்லைவாழ் அந்தணர்கள் வியப்பெய்தி மகிழ்ந்து, சந்தனம் அளித்து மாலைசூட்டிப் பரிவட்டம் கட்டுவதற்கு முன், சேக்கிழாரே உம்மைச் சிவன் என்று கருதி, அவர்கள் திருநீற்றினை ஏற்றுக் கொள்க என்று கொடுத்தபொழுது, அதை ஏற்றுக்கொண்ட கரங்களால் சப்பாணி கொட்டியருள்க.

அருஞ்சொற்பொருள் : வம்பட்டு - கச்சணிந்து, பொது - பொற்சபை, முதல் - உலகெலாம் என்ற முதற்சொல், நம்பட்டு - விரும்ப, நறுவிரை - சந்தனம், அலங்கல் - மாலை, பரிவட்டம் - பெருமைக்காக அடியவரின் தலையில் சூட்டுகின்ற இறைவனின் ஆடை, சடையவர் - சிவபெருமான், விபூதி அது அள்ளுபு - விபூதி அள்ளிக் கொடுத்து, சேவையர்- வேளாளர்.

உண்டல் உடுத்தல் மணத்தல் முதல்பல
　　உன்னுபு நல்நயம்ஆர்
　உத்தம என்றடை ஆதுலர்எண்ணம்
　　ஒருங்கு தெரிந்தனையார்
தண்டல் இலாமகிழ் பூப்ப மலர்க்கைத்
　　தலம்விரி யாதுகுவி
　தகுமொர் பழக்கம்முன் உள்ளது யாங்கள்செய்
　　தவம்வறி தாம்கொல்லோ
கண்டல் செறிந்த கருங்கடல் வண்ணன்
　　கலிகெழு பாற்கடல்மேல்
　கண்துயில் வதுபொர வெண்சுதை தீற்றிய
　　காமரு மாளிகைமேல்
கொண்டல் உறங்கும் குன்றத் தூரன்
　　கொட்டுக சப்பாணி
　கொற்றச் சேவையர் காவல நாவல
　　கொட்டுக சப்பாணி. 7

பொழிப்புரை: அன்பு பொருந்திய உத்தமனே, நாங்கள் உண்ண உணவும், உடுப்பதற்கு உடையும், வாழ்வதற்கு மணவினையும் ஆகியவற்றை நினைந்து, அவற்றை எங்களுக்கு அருள்வாயாக என்று ஏழைகள் கேட்பதற்கு முன்னமே அவற்றைத் தெரிந்து, தடையில்லாது மகிழ மலர்க்கையை விரித்து இல்லை என்று கூறாது குவித்துத் தரும் பழக்கம் முன்பே உன்னிடத்தில் உள்ளது. (அவ்வாறு இருக்கும் பொழுது) நாங்கள் செய்த தவம் வீணாகிப் போய்விடுமோ? தாழைகள் நிறைந்த கடலை ஒத்த வண்ணம் கொண்ட ஒலிமிக்க பாற்கடலில் கடல்வண்ணன் துயிலுவது போல, சுண்ணாம்பு தீட்டப் பெற்ற அழகிய மாளிகைகளின் மேல் கருமேகம் உறங்கும் குன்றத்தூரானே,

கொட்டுக சப்பாணி. வெற்றி பொருந்திய வேளாளர் குலத்தில் தோன்றிய காவலனே, நாவலனே கொட்டுக சப்பாணி.

கருத்துரை: உணவு, ஆடை கொடுத்தல், மற்றும் மணம் செய்வித்தல் முதலிய கொடைகளை அவற்றை ஏழைகள் கேட்பதற்கு முன்னே, இல்லை என்று கூறாது கொடுக்கின்ற பழக்கத்தைக் கொண்ட வேளாளர் குடியில் தோன்றிய சேக்கிழாரே, நாங்கள் கேட்காத வண்ணமே எங்களுக்கு அளிக்கின்ற அருளைப் பெற்ற எங்களுடைய தவம் பொய்யாகிப் போய்விடாது. திருமால் பாற்கடலில் துயில்வது போல குன்றத்தூர் வெள்ளை மாளிகைகளில் கருமேகம் தவழ்ந்து கிடக்கும் அழகினைக் கொண்ட குன்றத்தூராரே, கொட்டுக சப்பாணி.

அருஞ்சொற்பொருள் : உன்னுபு - நினைந்து, ஆதுலர் - ஏழைகள், தண்டல் - தடை, விரியாது - கையை விரித்து இல்லை என்று கூறாது, முன் உள்ளது - சேக்கிழார் குலத்திற்கு உள்ளது, தவம் - நாங்கள் உன்னைப் போற்றவது, வறிதாம் - வீணாக, கண்டல் - தாழை, கலி - ஒலி, சுதை - சுண்ணாம்பு.

படியிடை ஒருபை திரவரு ணனைபுரி
பாவலர் ஐந்திணையும்
பகுத்தொரு முப்பொரு ளோடும் விரித்துப்
பயனா கத்தெய்வம்
கடிதலில் சினகரம் உள்ளன ஓதக்
கற்பத் தவநெஞ்சம்
கனியக் கனியக் கண்ணீர் வாரக்
கவிபா டியஇறைவ
ஒடிவரி தாம்இரு பன்னிரு கோட்டத்
துள்ஒரு கோட்டம்அலர
தொருகோட் டமும்உறல் இல்லாய் நல்லாய்
உலவா வளமைப்பல்
குடிகள் நெருங்கும் குன்றத் தூரன்
கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல
கொட்டுக சப்பாணி. 8

பொழிப்புரை: இந்த உலகத்தில் ஒரு நாட்டினை வருணனை செய்கின்ற பொழுது, கவிஞர்கள் ஐந்து நிலங்களையும் பகுத்துக் கொண்டு, அவற்றின் முப்பொருளை விரித்துக் கூறும் பயனாக, ஒவ்வொரு நிலத்திலும் நீங்குதல் இல்லாத கோவில் (தெய்வம்) எத்துணை உள்ளன என்பதைக் கூறுவதற்குக் கற்பித்தவனே, நெஞ்சம் கனியக் கண்ணீர் வாரக் கவிபாடிய தலைவனே, இருபத்து நான்கு கோட்டத்துள் ஒப்பற்ற புலியூர்க் கோட்டம் என்ற கோட்டத்துள் மனத்தில் ஒரு கோட்டமும் இல்லாதவனே, நல்லவனே, வளப்பம் நீங்காத பல குடிகள் வாழும் குன்றத்தூரனே, கொட்டுக சப்பாணி. வெற்றி பொருந்திய வேளாளர் குலத்தில் தோன்றிய காவலனே, நாவலனே, கொட்டுக சப்பாணி.

கருத்துரை: பெரிய புராணத்தின் மூலம் நாட்டில் அமைந்துள்ள குறிஞ்சி முதலாகிய ஐவகை நிலங்களையும் கூறும்பொழுது, அவற்றின் முதல், கரு, உரி என்ற முப்பொருளை விரித்துக் கூறி, ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய கருப்பொருளில் தெய்வம் பற்றியதை (கோவில் முதலானவற்றை)க் குறிப்பிடப் பிறருக்குக் கற்றுத் தந்த கவிஞனே, நெஞ்சம் உருகக் கவிபாடிய தலைவனே, புலியூர்க் கோட்டத்தில் கோட்டம் இல்லாது வாழுகின்ற குன்றத்தூரனே, கொட்டுக சப்பாணி.

அருஞ்சொற்பொருள் : படி - உலகம், பைதிறம் - நாடு, ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து நிலங்கள், முப்பொருள் - நிலத்திற்குரிய முதல், உரி, கருப்பொருள்கள், தெய்வம் - கருப்பொருள்களில் முதலாவது தெய்வமாகும். சினகரம் - திருக்கோவில் (தெய்வம்), ஓடிவு அறிதாம் - தாழ்வு கூறுவதற்கு முடியாத, இருபன்னிரு கோட்டம் - சோழநாடு இருபத்துநான்கு கோட்டங்களைக் கொண்டது. ஒரு கோட்டம் - புலியூர்க்கோட்டம், ஒருகோட்டமும் உறல் - ஒரு குற்றமும் பொருந்துதல், இல்லாய் - இல்லாதவனே.

நாடிய விரிநூல் சொற்றிடும் திறனால்
நல்நூல் ஆசிரியன்
நகுபா சுரம்முதல் உரைசெய் தலினால்
நவில்உரை ஆசிரியன்

நீடிய பரசம யக்குழி வீழ்ந்தவர்
நீப்பப் போதனைசெய்
நிலையால் போத காசிரி யன்இவை
நிகழ்தொறும் நிகழ்தோறும்
ஆடிய ஞானத் திறன்உற லால்ஞா
னாசிரி யனும்நீஎன்
றான்றோர் பலரும் புகழப் படுபவ
அகிலம் எலாம்சென்று
கூடிய புகழ்சால் குன்றத் தூரன்
கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல
கொட்டுக சப்பாணி. 9

பொழிப்புரை: திருத்தொண்டத் தொகைக்கு விரிநூல் செய்தலால் நல்ல நூலாசிரியன் என்றும், நல்ல திருப்பாசுரம் உள்ளிட்ட தேவாரப் பாடல்களுக்கு உரை செய்தலினால் நல்ல உரையாசிரியன் என்றும், நெடிதான பிறசமயக் குழியில் வீழ்ந்தவர் அதில் இருந்து நீங்க அருளுரை செய்ததினால் போதக ஆசிரியன் என்றும், இத்தகைய உன்னுடைய நூலைப் பயில்வதினால் ஞானம் உண்டாகும்படிச் செய்ததினால் ஞானானாசிரியன் என்றும், ஆன்றோர்கள் பலரால் புகழப் படுகின்றவரே, உலகனைத்தும் நிறைந்த புகழைப் பெற்ற குன்றத்தூரரே, சப்பாணி கொட்டியருளே, வெற்றி பொருந்திய வேளாளர் குலத் தலைவனே, நாவலனே கொட்டுக சப்பாணி.

கருத்துரை: நூலாசிரியன் என்றும் உரையாசிரியன் என்றும், போதக ஆசிரியன் என்றும், ஞான ஆசிரியன் என்றும், சான்றோரால் புகழப் பெற்று, உலகப் புகழ் பெற்ற குன்றத்தூரரே, சப்பாணி கொட்டியருள்க.

அருஞ்சொற்பொருள்: விரிநூல் - முதல் நூலாகிய சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகைக்கு விரிநூல் பெரிய புராணமாகும், பாசுரம் முதல் உரைசெய்தலினால் - திருஞான சம்பந்தர் பாடிய வாழ்க அந்தணர் என்று தொடங்கும் திருப்பாசுரப் பாடல்களின் (பன்னிரண்டு பாடல்கள்) பொருள்களைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் விரித்து

உரைத்துள்ளார். எனவே தேவாரப் திருப்பாசுரத்திற்கு உரை செய்தவர் ஆகிறார், பிரசமயம் - பிறசமயம், ஞானத்திறன் - ஞானநிலை, அகிலம் - உலகம்.

நிலவிய நாகே சுரரினி தமர்தலின்
நிகழ்நா கேசுரமாய்
நீல்மணி மாடம் நிலாவலின் இந்திர
நீல பருப்பதமாய்க்
கலவிய செம்மணி மாடத் தால்ஒளி
கால்அர தனகிரியாய்க்
கருடப் பச்சையில் ஆலியா வோரும்
காண்மர கதமலையா
உலவிய வெண்சுதை நீற்றும் இலால்ஓங்
கொருகை லைக்கிரியாய்
உத்தமம் ஆர்பல ஏதுவி னால்இனும்
உரைதரு பற்பலவாய்க்
குலவிய வளமார் குன்றத் தூரன்
கொட்டுக சப்பாணி
கொற்றச் சேவையர் காவல நாவல
கொட்டுக சப்பாணி. 10

பொழிப்புரை: நிலைபெற்ற நாகேசுரராம் சிவபெருமான் இனிதாக எழுந்தருளியதால், திருநாகேச்சுரம் என்று பெயர் பெற்றதாய், நீல நிற இரத்தினக் கற்கள் பொருத்தப் பெற்ற மாடங்கள் இருத்தலினால் நீலப்பருப்பதம் என்ற பெயர் பெற்றதாய், செம்மணிகள் பொருத்தப் பெற்ற மாடங்கள் பல இருத்தலால் இரத்தனகிரி என்ற பெயர் பெற்றதாய், கரும்பச்சை எனப்படும் மணிகள் பொருத்தப் பெற்ற இல்லங்கள் பல இருத்தலால், கண்ணீர் சிந்தும் அன்பர் யாவரும் கண்டு மகிழுகின்ற மரகத மலையாம் என்ற பெயர் பெற்றதாய், வெண்மையான சுண்ணாம்பு தீட்டப் பெற்ற இல்லங்கள் பல இருத்தலால், வானம்வரை ஓங்கி நிற்கும் கயிலைமலை எனப் பெயர் பெற்றதாய், மேலும் பல பல காரணங்களால் பற்பல தலங்களாகவும் விளங்குகின்ற, நிறைந்த வளம் பொருந்திய குன்றத்தூரனே சப்பாணி கொட்டியருள். வெற்றி பொருந்திய

வேளாளர் குடியில் தோன்றிய காவலனே, நாவலனே சப்பாணி கொட்டியருள்க.

கருத்துரை: திருநாகேசுரம் என்றும், நீல பருப்பதம் என்றும், இரத்தினகிரி என்றும், மரகதமலை என்றும், கயிலைமலை என்றும் வேறு பல திருத்தலங்களின் பெயர்களைப் பெற்றதாய் , நல்ல வளங்களோடு விளங்குகின்ற குன்றத்தூரரே, சப்பாணி கொட்டியருள்க.

அருஞ்சொற்பொருள் : நாகேசுரம் - குன்றத்தூரில் சேக்கிழார் திருநாகேசுவரத்தில் வைத்த பற்றினால் நாகேசுரம் என்ற கோயிலை எழுப்பித்து, சிவபெருமானை எழுந்தருள வதைத்தார். எனவே குன்றத்தூருக்கு நாகேசுரம் என்ற பெயருண்டு. நீல பருப்பதம் - தேவாரப் பாசுரம் பெற்ற வடநாட்டுத் தலங்களில் ஒன்று, குன்றத்தூரில் நீலநிற மாளிகை இருப்பதால் இப்பெயர் பெற்றது. அரதனக்கிரி - இரத்தினகிரி. இது திருவாட்போக்கி என்னும் பெயரைக் கொண்ட தலம். குன்றத்தூர் மணிகள் பொருந்திய மாளிகைகளைக் கொண்டதால் இப்பெயர் பெற்றது. மரகதமலை - திரு ஈங்கோய் மலையின் பெயர். கரும்பச்சைநிற மணிகள் பொருந்திய மாளிகைகளால் குன்றத்தூருக்கு இப்பெயர் ஆயிற்று. கைலைக்கிரி - கயிலாயம், உத்தமம் - சிறப்பு, ஏது - காரணம், பற்பல - பலதலங்கள்.

சப்பாணிப் பருவம் முற்றிற்று.

5. முத்தப் பருவம்

(பெற்றோர்கள் குழந்தையை நோக்கித் தமக்கு வாய்முத்தம் தருக என்று வேண்டும் பருவமாகும். இது குழந்தை பிறந்த பதினோராம் மாதத்தில் நிகழ்வதாகும்.)

திருப்பஞ் சாதி மறையுணர்மண்
தேவ ராதி நால்வர்களுஞ்
செறிந்த மற்றை மூவர்களுந்
தீரா இருவல் வினைத்தொடர்பால்
உருப்பஞ் சாரும் பிறந்தைமரீஇ
யுறமேற் போயுங் கீழிழிந்தும்
உழற லாய பெருந்தாகம்
ஒருங்கு மாய்த்தின் பொருங்கடைய
விருப்பஞ் சாரு மெய்யடியார்
மிக்க தொகையா ரொன்பதின்மர்
மேய தனியா ரறுபதின்மர்
மேலு மூவர் சரித்திரமாங்
கருப்பஞ் சாறு மொழிமதுரக்
கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங்
கனிவாய் முத்தந் தருகவே. 1

பொழிப்புரை: அழகிய பஞ்சாதி என்ற உறுப்புடன் கூடிய வேதத்தை உணர்ந்த பிராமணர்களும், மண்ணுலகத்துத் தேவர்கள் எனப்படும் அந்தணர் முதலிய நால்வர்களும், இவர்களுடன் கூடிய மற்ற அனுலோபர் முதலிய மூவர்களும், நீங்காத இரண்டு கொடிய வினைகளின் தொடர்பால் வெப்பம் மிகுந்த பிறப்புக்களைப் பொருந்தி, அப்பிறப்புக்களை மேல் பிறப்பாகவும், கீழ் பறப்பாகவும் மாறி மாறிப் பிறந்து, பிறவியை முழுமையாக மாய்த்துப் பேரின்ப வாழ்வை அடைவதற்கு விருப்பம் கொண்ட, உண்மை அடியார்களாகிய தொகையடி யார்கள் ஒன்பதின்மரைப் பற்றிய, தனி அடியார் அறுபத்து மூவரையும் பற்றிய உண்மை வரலாற்றைக், கரும்பின் சாறுபோன்ற இனிமையான சொற்களால் கூறிய கொவ்வைக்கனி

போன்ற வாயினால் முத்தந் தருகவே. பொன் மயமான குன்றையூரில் வாழும் குற்றமற்றவரே முத்தந் தருகவே.

கருத்துரை: வேதம் அறிந்த பிராமணர்களாய், அந்தணர் முதலிய நால்வகைச் சாதியினராய், அனுலோபர்முதலிய இழிந்த சாதியினராய் ஆகிய மரபில், இருவினைத் தொடர்பால் பல பிறப்புக்களைப் பிறந்து, பிறகு அதனை ஒழித்துப் பேரின்பத்தைப் பெறவேண்டும் என்ற விருப்பம் கொண்ட ஒன்பது தொகையடியார்கள், அறுபத்து மூன்று தனியடியார்கள் ஆகிய திருத்தொண்டர்களின் வரலாற்றை இனிய மொழிகளால் கூறிய வாயால் குன்றத்தூர்சேக்கிழாரே முத்தந் தருகவே.

அருஞ்சொற்பொருள்: பஞ்சாதி - வேதங்களில் ஐம்பது சொற்களைக் கொண்ட ஒரு உறுப்பாகும். இவ்வாறு பல பஞ்சாதிகளைக் கொண்டதுதான் வேதங்களின் அத்தியாயம் எனப்படும். அதனை ஓதுகின்ற வேதப் பிராமணர்கள் பஞ்சாதிப் பிராமணர் எனப்படுவர். இது வேத முடிவில் கூறப்படுவதாகச் சொல்வதுண்டு. இந்த அடிப்படையில்தான் திருமுறை என்ற நிலையில் வழிபாட்டு நிறைவில் பஞ்சபுராணம் பாடப்படுகிறது. மண்தேவர் - உயர்ந்த மரபுகளை உடைய அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நால்வரும் மண்ணுலகத்தில் வாழ்வதால் மண்உலகத் தேவர் எனப்படுவர். மற்றை மூவர்கள் - உயர்ந்த சாதிக் கலப்பால் மணவினை கொண்ட அனுலோபர், பரதிலோபர் சங்கரர் ஆகியோர், இரு வல்வினை - நல்வினை, தீவினை, உருப்பம் - வெம்மை, பிறந்தை - பிறப்பு, பெருந்தாகம் - பெருவிருப்பு, இன்பொருங்கடைய - பேரின்பம் அடைய, மொழி - சொற்கள், மதுரம் - கொவ்வைக்கனி, அனகம் - குற்றமற்றவர்.

எண்ணில் பொலிபல் புலவர்குழாத்
தெய்தி நும்மோ டியாமொருவேம்
என்று கூறி யெம்பெருமான்
இருந்தாய் தருநன் னயமுடைத்தாய்
மண்ணில் பொலிபு கயிலாய
வரைக்கண் இவர்ந்தம் மாதேவன்
வடிகா தகம்புக் குள்ளுருக்கும்
வளமை யுடைத்தாய் வளந்தருவாழ்

விண்ணில் பொலிவார் களும்வியப்ப
வெள்ளென் பழத்திற் குயிர்அருளி
வெங்க ராக்கொண் டதுமீட்கும்
மிக்க விறலிற் றாய்எங்கள்
கண்ணில் பொலிசெந் தமிழ்மணக்குங்
கனிவாய் முத்தம் தருகவே,
கனகக் குன்றை அனகசெழுங்
கனிவாய் முத்தம் தருகவே. 2

பொழிப்புரை: ஐந்நூற்று நாற்பத்தொன்பது என்ற எண்களோடு விளங்கிய தலைச் சங்கப் புலவர் கூட்டத்தைப் பொருந்தி, சிவபெருமான் தாமும் ஒரு புலவராக உள்ளோம் என்று கூறி, அச்சங்கத்தின் தலைவராக இருந்து ஆராய்ந்த சொல் நயத்தையும், பொருள் நயத்தையும் உடையதாய், மண்ணுலகில் பொலிந்து விளங்கும் இறையருளால் திருக்கயிலாய மலைக்கு ஏறிச் சென்று சிவபெருமான் காதில் சுந்தரர் பாடிய திருநொடித்தான் மலைப்பதிகம் சிவபெருமானின் திருச் செவிகளின் வழியே உள்ளே நுழைந்து அவரின் உள்ளத்தை உருக்கிய வளமை உடையதாகவும், வளமை பொருந்திய கற்பக மரத்தை உடைய விண்ணலகத்தில் வாழுகின்றவர்களும் வியக்கும்படி, எலும்பாய்க் கிடந்த பிணத்திற்கு உயிர்கொடுத்தும் கொடிய முதலை உண்ட பாலனை மீட்டும், வலிமை மிக்க வெற்றிகளைக் கொண்டதாய் விளங்கும், எங்கள் கண்களுக்கு அழகு தரும் செந்தமிழின் மணம் கொண்ட கனிபோன்ற வாயால் முத்தந் தருகவே, பொன் நிரம்பிய குன்றத்தூரில் வாழும் குற்றம் இல்லாதவனே, கொவ்வைக் கனிவாயால் முத்தந் தருகவே.

கருத்துரை: சங்கப் புலவர்களுள் தாமும் ஒருவராய் இருந்து சிவபெருமான் சொல்லையும் பொருளையும் ஆய்ந்த பெருமை உடையது, இறைவன் திருவருளால் சுந்தரர் திருக் கயிலாயம் வரை சென்று பதிகம்பாடி, அப்பதிகம் சிவபெருமான் திருச்செவியில் புகுந்து அவர்மனத்தை உருக்கிய பெருமை உடையது, விண்ணவர்கள் வியப்படைய எலும்பைப் பெண்ணாக்கியதும், முதலைவாய்க் குழந்தையை மீட்டதும் ஆகிய சிறப்பினை உடையது, பல வெற்றிகளை உடையதுமாகிய சிறப்புக்களை உடையது, அத்தகைய செந்தமிழ் மணக்கும்

சொற்களால் திருத்தொண்டர்புராணம் பாடிய திருவாயால் முத்தந் தருகவே. (இப்பாடலில் தமிழின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது)

அருஞ்சொற்பொருள் :எண்ணில் - ஐந்நூற்று நாற்பத்தொன்பது என்ற எண்ணைக் கொண்ட, புலவர் குழாம் - தலைச்சங்கக் கூட்டம், நயம் - சொல்நயம், பொருள்நயம், மண்ணில் - நிலவுலகத்தில், இவர்ந்து - ஏறிச் சென்று, மாதேவன் - சிவபெருமான், தரு - கற்பக மரம், என்பு அழத்திற்கு உயிர்அருளி - (என்பு - எலும்பு, அழம் - பணம்) எலும்பாய்க் கிடந்த பணத்தை உயிர்ஊட்டி, வெங்கரா - முதலை, விறல் - வெற்றி.

சொல்லும் பொருளும் நனிசிறப்பச்
சுருங்கச் சொல்லன் முதலாய
தோட்டி யமைய அமங்கலமாஞ்
சொற்கள் புணரா தறக்களைந்து
வெல்லுந் தகைய முரண்காட்டி
விலக்கு விலக விதிதழுவி
விரும்பு மூல இலக்கியமே
வேறா காதென் றுலகேத்த
அல்லும் பகலும் அம்பலவர்
அருடற் காய வரும்பணிசெய்
தருள்பெற் றுய்ந்த அடியார்தம்
அருமை பெருமை பாராட்டிக்
கல்லுங் கரையக் கவிபாடுங்
கனிவாய் முத்தந் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங்
கனிவாய் முத்தந் தருகவே. 3

பொழிப்புரை:சொல் நயமும் பொருள் நயமும் சிறப்புடன் விளங்கவும், சுருங்கச் சொல்லுதல் முதலாகிய பத்து அழகும் அமையவும், அமங்கலமாகிய சொற்கள் ஒரு சிறிதும் இல்லாதவாறு நீக்கியும், கருத்தாலும் எடுத்துச் சொல்லும் முறைமையாலும் பிறர் நூல்களை வெல்லும் வலிமையைக் காட்டியும், விலக்க வேண்டிய குற்றங்களை விலக்கியும், நூல் பாடுவதற்கு விதிக்கப்பட்ட இலக்கணங்களைத் தழுவியும், மூல

நூலாகிய திருத்தொண்டத் தொகைக்குச் சிறிதும் வேறுபடாதது என்று அறிஞர்கள் போற்றவும், (ஆகிய பெருமைகளைக் கொண்ட நூலால்)இரவு பகலாகத் தில்லைக் கூத்தனின் திருவருளைப் பெறுவதற்குத்,திருத்தொண்டர்கள் செய்தருளிய அரிய தொண்டு களின் அருமை பெருமைகளைப் பாராட்டிக்,கல்லும் கரையுமாறு கவிதை தந்த கனிவாயால் முத்தந் தருகவே. பொன் நிரம்பிய குன்றத்தூரில் வாழும் குற்றமில்லாதவரே, முத்தந் தருகவே.

கருத்துரை: நூலுக்குரிய இலக்கணங்கள் அனைத்தும் பொருந்தி, சிவபெருமானின் அருளைப் பெற அல்லும் பகலும் தொண்டுகள் புரிந்த திருத்தொண்டர்களின் வரலாற்றைக், கல்போன்ற மனமும் கரையப் பாடிய திருவாயால் முத்தந் தருகவே.

அருஞ்சொற்பொருள் : தோட்டி - பத்து அழகுகள், அறக் களைந்து - முழுமையும் நீக்கி, முரண் - மாறுபாடு, மூலஇலக்கியம் - திருத்தொண்டத் தொகை, அருளற்காய - அருளுக்காக,

எண்ணி இதுசெய் திடின்இதனால்
எய்தப் படுவது இஃதெய்தாது
இரியப் படுவது இஃதுண்மை
எய்தப் படலால் பயன்இன்றேல்
நண்ணி யஅதை மறந்தொழிக
நள்ளார் முனைமேல் இப்பொழுது
நயந்து படர்ந்து பொருதுவமேல்
நமதே ஆகும் நகுவாகை
தண்ணி மயம்போல் புகழ்ப்போர்வை
தாங்கற் காய கருமம்இது
தப்பா தாற்றப் பொருள்வருவாய்
தவாதுண் டாம்என் றிவைமுதலாம்
கண்ணி வளவற் குரைத்தருள்செய்
கனிவாய் முத்தம் தருகவே
கனகக் குன்றை யனகசெழுங்
கனிவாய் முத்தம் தருகவே. 4

பொழிப்புரை: விரும்பி ஆராய்ந்து செய்தலால் இது கிடைக்கும், இதனைச் செய்யாது விட்டால் இது கிடைக்காது, இது

உண்மை என்றும், ஒருதொழில் செய்தலால் கிடைக்கின்ற பொருள் விரும்பும் பயனைத் தரவில்லை என்றால், செய்யப் படுகின்ற தொழிலை அப்பொழுதே மறந்து விடவேண்டும் என்றும், போர்க்களத்தில் இருக்கும் பகைவரைக் காலம் அறிந்து படையெடுத்துச் சென்று போரிட்டால் வெற்றி கிடைக்கும் என்றும், செய்யத் தக்கத் தொழிலைச் செய்தால் இமயம் போன்ற புகழைத் தரும் என்றும், இத்தொழிலைச் செய்தால் தவறாமல் பொருள் வருவாய் கிடைக்கும் என்றும், ஆகிய அரசியல் மரபுகளை ஆத்தி மாலை சூடிய அநபாயச் சோழனுக்கு அருள் செய்த கனிவாயால் முத்தந் தருகவே. பொன் நிரம்பிய குன்றத்தூரில் எழுந்தருளிய குற்றமற்றவரே, முத்தந் தருகவே.

கருத்துரை: செய்ய வேண்டிய அரசியல் தொழில்களை அநபாயச் சோழனுக்கு வகைப் படுத்திக் கூறிய திருவாயால் முத்தந் தருகவே.

அருஞ்சொற்பொருள்: எய்தப் படுவது - அடையப் பெறுவது, இரியப் படுவது - நீக்கத் தக்கது, நள்ளார் - பகைவர், வாகை - வெற்றி, தண் இமயம் போல் - குளிர்ச்சி பொருந்திய இமயமலை, கண்ணி - ஆத்திமாலை, வளவன் - அநபாயன்.

நிலஞ்சார் தெய்வக் கற்பகமே
  நிமல ஞான வாரிதியே
 நீடுஞ் சைவப் பெருவாழ்வே
  நிலவா நின்ற குணக்குன்றே
வலஞ்சார் பெருநா வலரேறே
  மாறா அருட்சிந் தாமணியே
 மதிப்பார் மதியுள் எழுஞ்சுடரே
  வாழ்த்து வார்தம் பெரும்பேறே
புலஞ்சார் பத்தி விளைநிலமே
  போக்கு வரவில் பூரணமே
 புத்திக் கினிக்குஞ் சுவையமுதே
  போற்றி இனிமேல் ஒருதாயர்
கலஞ்சார் முலைப்பால் அருந்தாத
  கனிவாய் முத்தந் தருகவே
 கனகக் குன்றை யனகசெழுங்
  கனிவாய் முத்தந் தருகவே. 5

பொழிப்புரை: நிலத்தில் இருக்கும் தெய்வத்தன்மை வாய்ந்த கற்பகத் தருவே, குற்றமற்ற ஞானப் பெருங்கடலே, நிலைபெற்று விளங்கும் சைவப் பெருவாழ்வே, நிலவுகின்ற குணக் குன்றே, வெற்றி பொருந்தி வாழும் பெருநாவலர் தலைவரே, மாறாத அருளைத் தருகின்ற சிந்தாமணியே, மதிக்கின்றவர்களின் மனத்தில் வாழும் பெரும் ஒளியே, வாழ்த்துகின்றவர்களுக்கு வேண்டியதைத் தரும் பேறே, பத்தி விளையும் மனம் என்னும் நிலமே, இறப்பு பிறப்பு இல்லாத நிறைவே, அறிவுக்கு இனிக்கும் சுவையமுதே, உன்னைப் போற்றி வளர்க்கும் தாயர் தருகின்ற தங்கள் அணிகலன் அணிந்த மார்பு முலைப்பாலை இனிமேல் அருந்தாத (பிறக்காத) கனிவாயால் முத்தந் தருகவே, பொன் நிறைந்த குன்றத்தூரில் தோன்றிய குற்றமில்லாதவரே கனிவாயால் முத்தந் தருகவே.

கருத்துரை: சேக்கிழார் பெருமானாகிய கற்பகமே, கடலே, பெருவாழ்வே, குணக்குன்றே, நாவலர் தலைவரே, சிந்தாமணியே, பெரும்பேறே, பத்திவிளை நிலமே, நிறைவே, அமுதே முத்தந் தருகவே.

அருஞ்சொற்பொருள்: கற்பகம் - கற்பகமரம்:, வாருதி - கடல், வலஞ்சார்- வெற்றி பொருந்திய, புலம் - மனம், போக்கு - இறப்பு, கலம் - அணிகலன்.

நூலாறு தேர்ந்தவர் உஞற்றும்அக் குண்டங்கள்
நோக்கிஅழல் பாய மேய
நுவல்புலவர் உதரகுண் டத்தில் சருப்பாய
நோன்மைசால் மேகம் எல்லாம்
சாலாறு பாயவலை யெறியுத்தி பாயத்
தவாதருவி வரைகள் பாயத்
தையலார் குரிசிலார் மேல்சம்ப ராரிபொழி
சரம்எலாம் பாய மலரில்
காலாறு பாயஅம் மலர்மதுப் பாயக்
கமழ்ந்தபட் டத்தி னின்றுங்
கற்பம் கழுத்தொடிய வாளைபா யப்பொய்கை
கருமேதி பாய மிக்குப்

பாலாறு காலாறு பாய்தொண்டை நன்னாட
பவளவாய் முத்தம் அருளே
பரவுசீர் உலகெலாம் விரவுசே வையர்பிரான்
பவளவாய் முத்தம் அருளே. 6

பொழிப்புரை: வேதநூலை நன்கு கற்ற அந்தணர்கள் நடத்தும் யாக குண்டங்களிலிருந்து மேல்நோக்கி நெருப்பு பாயவும், உயர்வாகப் புலவர்களால் சிறப்பித்துச் சொல்லப்படும் தேவர்களின் வயிறாகிய குண்டத்தின்கண் யாகத்தின் மூலம் கொடுக்கப் படுகின்ற அவிஉணவு நிரம்பவும், பெருமை பொருந்திய மேகங்கள் எல்லாம் நீர்நிலைகளைச் சார்ந்து நீரை மழை எனச் சொரியவும், அலை தவழும் கடலில் அந்த நதிநீர் பாயவும், குன்றாத அருவிகள் மலையிலிருந்து ஒழுகவும், பெண்கள் மீதும் ஆண்கள் மீதும் சம்பராசூரனை அழித்த மன்மதனின் அம்புமழை பொழியவும், மலர்களில் ஆறு கால்களை உடைய வண்டுகள் பாயவும், அம்மலர்களில் இருந்து தேன் பாயவும், நறுமணம் மிக்க வயல்களிலிருந்து எழும் வாளை மீன்கள் விண்ணுலகக் கற்பக மரத்தின் கழுத்து ஒடியுமாறு மேலெழுந்து பாயவும், குளங்களில் கருமையான எருமைகள் பாயவும், பாலாற்றில் மிகுந்த தண்ணீர் வாய்க்கால் வழியாக ஓடிப்பாயவும், இத்தகைய வளம் மிக்க தொண்டை நன்னாட்டுச் சேக்கிழாரே, பவளம் போன்ற உம்முடைய வாயால் முத்தந் தருகவே. விண்ணகமும் மண்ணகமும் பாராட்டுகின்ற வேளாளர் குலத் தலைவனே பவளவாயால் முத்தந் தருகவே.

கருத்துரை: குண்டங்களில் நெருப்பும், அவிர்பலியால் தேவர்கள் வயிறும், நீர்நிலைகளில் மேகத்தின் மழையும், மலைகளில் அருவிகளும், ஆண் பெண் மக்களின் மேல் மன்மதனின் அம்பும், மலரில் வண்டுகளும், மலர்களிலிருந்து தேனும், குளத்தில் வாளைமீனும் எருமையும், பாலாற்றில் வாய்க்காலும் பாய்ந்திட, வளம்மிக்க தொண்டை நாட்டுச் சேக்கிழாரே முத்தந் தருகவே.

அருஞ்சொற்பொருள்: நூலாறு - வேதங்கள், உஞற்றும் - நடத்தும், அழல் - தீ, உதரகுண்டம் - வயிறு, சரு - அவிர்பாகம் (அவிர்உணவு), சாலாறு - மிகுந்த நீர் நிலைகள், உததி - கடல், வரை - மலை, தையல் - பெண், சம்பராரி - சம்பராசூரனை

அழித்த மன்மதன், தரம் - அம்பு, காலாறு - ஆறு கால்கள், பட்டம் - குளம், வாளை - வாளைமீன், மேதி - எருமை, காலாறு - வாய்க்கால்.

மேயபல ஆரியர் குழாத்தினுள் பூரியர்
விராயதென வாய தூய
வெள்வோதி மக்குழாம் நிலைகுலைய மேதிகால்
விசைத்தெழீஇப் பாய ஆங்கண்
ஆயவெடி வாளையேர் பருகிலாங் கலிமோத
அதின்உதிர் பழத்தின் வெருவி
அம்மேதி கரையேற அதுகண்ட அவ்வாளை
ஆயவா லாமை தீரத்
தூயநெடு வான்நீர் துளைந்தாடி மீனின்
தொடக்குநீங் காமை யெண்ணிச்
சோதிமதி மண்டலங் கீண்டமுத தாரையொடு
துனையக் கிழக்கி றங்கும்
பாயதடம் மலியும் திருத்தொண்டை நன்னாட
பவளவாய் முத்தம் அருளே
பரவுசீ ருலகெலாம் விரவுசே வையர்பிரான்
பவளவாய் முத்தம் அருளே. 7

பொழிப்புரை: ஒழுக்கம் பொருந்திய வணங்கத் தக்க மேலோர் கூட்டத்துள் அற்பரானவர்கள் சென்று பொருந்தியதைப் போல, குளத்தில் இருக்கும் அன்னக் கூட்டம் நிலை குலையுமாறு எருமைக்கூட்டங்கள் கால்களால் விரைந்து எழுச்சியுடன் செல்ல, அதனால் அச்சம் கொண்ட குளத்தில் இருந்த வாளை மீன்கள் பக்கத்தில் உள்ள தென்னை மரத்தில் பாய, தென்னை மரத்தில் இருந்த தேங்காய்கள் குளத்தில் விழ, அதனால் அச்சமுற்ற எருமைகள் அங்கிருந்து கரையேற, அதுகண்ட வாளை மீன்கள் தென்னை மரத்தில் மோதிய தீட்டு நீங்க விண்ணகத்தில் உள்ள ஆகாயக் கங்கையில் நீராடி, அதனாலும் தீட்டு நீங்காது சந்திர மண்டலத்திற்குச் சென்று சந்திரமண்டலத்தைக் கீறி அங்கிருக்கும் அமுத தாரையில் நீராடி, அந்த அமுத தாரையோடு விரைந்து கீழே இறங்குகின்ற குளங்கள் நிறைந்த தொண்டை நாட்டவரே, முத்தந் தருகவே. உலகெலாம் பாராட்டப் பெறுகின்ற வேளாளர் குடியில்

தோன்றியவரே, உம்முடைய பவளம் போன்ற வாயால் முத்தந் தருகவே.

கருத்துரை: தொண்டை நாட்டில் உள்ள குளத்தில் எருமைகள் விரைந்து பாய்ந்து சென்றதால் அன்னங்கள் நடுங்கின. வாளை மீன்கள் அஞ்சித் தென்னைமரத்தில் பாய்ந்தன. தென்னைமரக் காய்கள் குளத்தில் விழுந்தன. அதனைக் கண்டு எருமைகள் கரையேறின. வாளைமீன்கள் தம் செயலாகிய தீட்டு நீங்க, ஆகாய கங்கையில் நீராடியதோடு, சந்திரமண்டலத்து அமுத தாரையிலும் நீராடி, அந்த அமுத தாரைகளோடு மீண்டும் குளத்தில் கீழிறங்கித் தவழ, இத்தகைய நீர்வளம் மிக்க தொண்டை நாட்டை உடைய சேக்கிழாரே, கனிவாயால் முத்தந் தருகவே.

அருஞ்சொற்பொருள்: ஆரியர் - மேலோர், பூரியர் - இழிந்தவர் (அற்பர்) , ஓதிமக் குழாம் - எருமைக்கூட்டம், ஆய - இருந்து, வெடிவாளை - அச்சமுற்ற வாளைமீன்கள், ஏர்பு - எழுந்து, இலாங்கலி - தென்னைமரம், ஆயவாலாமை - உண்டான தீட்டு, வான்நீர் - ஆகாயக்கங்கை, சோதிமண்டலம் - சந்திரமண்டலம், தடம் - குளம்.

மிக்குவரு வெள்ளத் தெதிர்ந்தேறு பருவரால்
வேகத் துருண்டு போதும்
வேழத்தை முட்டுபு வெகுண்டு வெடிகொண்டுதாய்
விண்ணம் துளைத்து விரைவில்
புக்குமகிழ் மழஇளங் கன்றது தெறித்தெழீஇப்
போயதெங் கென்று நாடும்
புந்திப் பெருங்காம தேனுவின் மடித்தலப்
பொம்மல்குழை வெய்த முட்டத்
திக்குதிக ழப்பசுப் பொழிகின்ற பால்வரால்
செய்த புழையூ டிறங்கித்
திரைகரை எறிந்துவரு குடிஞைக்கு முன்புதான்
செய்தபெய ரைப்பு துக்கும்
பக்குநவில் அருவளம் படுதொண்டை நன்னாட
பவளவாய் முத்த மருளே
பரவுசீர் உலகெலாம் விரவுசே வையர்பிரான்
பவளவாய் முத்த மருளே. 8

பொழிப்புரை: மிகுந்துவரும் ஆற்றுவெள்ளத்தில் எதிர்த்துச் செல்லும் பருத்த வரால்மீன், அவ் வெள்ளத்தின் வேகத்தில் உருண்டு போகின்ற யானையை முட்டியதால், கோபம் கொண்டு அச்சம் கொண்டு விரைந்து சென்று விண்ணில் தாவி அதனைத் துளைத்து விரைந்து சென்று, தன்னிடத்திலிருந்து பிரிந்து சென்ற இளங்கன்று எங்கு சென்றதோ என்று தேடுகின்ற காமதேனுவின் பருத்த மடியில் (வரால்மீன்) குழைய முட்டியது. அவ்வாறு முட்டியதால் காமதேனுவின் மடியில் இருந்து பொழிகின்ற பால் எட்டுத்திக்கும் பரவியதுடன், வரால் மீன் துளைத்த விண்ணகத்துத் துளையின் வழியாகக் கீழிறங்கி, அலைகள் கரைகளில் மோதுகின்ற ஆற்றில் கலந்து புகுந்ததால், காமதேனுவின் பாலால் பெருக்கெடுத்து ஓடிய அந்த ஆறே, சொல் அளவில் மட்டும் இருந்த ஆறு இப்பொழுது உண்மையாகப் பாலாறாக ஆயிற்று. இவ்வாறு பகுத்துச் சொல்லுவதற்குரிய வளம் கொண்ட தொண்டை நன்னாடரே, உன்னுடைய பவளம் போன்ற வாயால் முத்தந் தருக. விண்ணும் மண்ணும் பாராட்டும் வண்ணம் வேளாண் குடியில் பிறந்தவரே, உன்னுடைய செங்கனி வாயால் முத்தந் தருவாயாக.

கருத்துரை: பெருக்கெடுத்து வரும் ஆற்றை எதிர்த்துச் சென்ற வரால்மீன் யானையை முட்டியதால் ஏற்பட்ட கோபத்தால், விண்ணைத் துளைத்துக் கொண்டு சென்று, காமதேனுவின் மடியை முட்டியது. அவ்வாறு முட்டியதால் காமதேனு மடியிலிருந்து ஒழுகிய பால் விண்ணகத்திலிருந்து ஒழுகி. முன்பு பெயரளவில் மட்டும் பாலாறு என்று கூறப்பட்ட ஆற்றில் கலந்து, இப்பொழுது காமதேனுவின் பால் அவ்ஆற்றில் பெருக்கெடுத்து ஓடிப் , பழைய பெயரைப் புதுப்பித்துக் கொண்டது. இத்தகைய வளம் மிக்க தொண்டை நாடரே, உன்னுடைய பவளம் போன்ற வாயால் முத்தம் தருகவே.

அருஞ்சொற்பொருள்: பருவரால் - பெரிய வரால்மீன், வேழம் - யானை, வெகுண்டு - கோபம் கொண்டு, வெடிகொண்டு - அச்சமுற்று, தெரித்தெழீஇ - துள்ளிஎழுந்து, பொம்மல் - பெருத்த, புழையூடிறங்கி - துளையின் வழியாக இறங்கி, குடிஞை - ஆறு , பக்கு - பகுத்து.

வீங்குகரு மேதிபிணர் படுதட மருப்பினால்
விடுபடாக் கடுவேலி வாய்
விடநீக்கி உட்புகூஉம் மென்கரும் பினைமென்று
மென்றுநின் றிடவ ழிதரா
ஆங்குநிகழ் சாறப் படைப்பையை நிரப்பமேல்
அரம்பைஅம் துடவை மோதி
ஆறாகி நெல்போர் அடங்கச் சுமந்துசென்
றலைஆழி யில்க லந்து
தேங்குதிடர் செய்துவரும் மாற்றிஅம் தமிழ்வாய்ச்
செறிந்துவர லால்இனி மையாய்த்
திகழ்கின்ற தென்றெண்ணி ஆடுநர்கள் உண்டுமகிழ
தேக்களந் நாளுஞ் செயும்
பாங்குபடு செல்வமென் பால்தொண்டை நன்னாட
பவளவாய் முத்த மருளே
பரவுசீர் உலகெலாம் விரவுசே வையர்பிரான்
பவளவாய் முத்த மருளே. ௯

பொழிப்புரை: கருமைநிறம் பொருந்திய பெரிய எருமை, தன்னுடைய சொரசொரப்பு பொருந்திய வலிமை மிக்க கொம்பினால், விலக்க முடியாத கடினமான முள்வேலியை நீக்கிக் கொண்டு, வயலினுள் புகுந்து மென்மையான கரும்பினை மென்று தின்ன, அவ்விடத்து அதன் வாய் வழியாக ஒழுகும் கருப்பஞ்சாறு கரும்பு வயலை நிரப்பயதுடன், வாழைமரங்கள் நிரம்பிய தோட்டத்திலும் புகுந்து அதனை நிரப்ப, நெற்போரை அடித்துக் சென்று (கருப்பஞ்சாறு) பெருக்கெடுத்து ஓடும் ஆறாகக் கடலில் கலக்க, அக்கருப்பஞ்சாறு அடித்துச் சென்று நெற்போர் கடலில் ஒருமேட்டை உண்டாக்கிட, கருப்பஞ்சாறாம் ஆறு தன்னுடைய இனிப்பால் அக்கடலின் உவர்ப்பயையும் நீக்கி இனிய தண்ணீராக மாற்றியது. அங்கு நீராட வருகின்றவர்கள் கடல்நீர் உவர்ப் பில்லாமல் இருப்பதற்குக் காரணம் கருப்பஞ்சாறுதான் என்பதை உணர்ந்து, அதனை உண்டு மகிழ எந்நாளும் நடைபெறும்படி நன்மை பொருந்திய செல்வத்தைக் கொண்ட, மருதநிலம் பொருந்திய. வளமை கொண்ட தொண்டை நாட்டவரே, உன்னுடைய பவளம் போன்ற வாயால் முத்தந் தருவாயாக.

விண்ணும் மண்ணும் பாராட்டுகின்ற வேளாளர் குடியில் தோன்றிய தலைவரே, பவளவாயால் முத்தந் தருகவே.

கருத்துரை: பெரிய எருமை மாடு வேலி சூழ்ந்த கரும்பு வயலில். தன் கொம்பினால் வேலியை நீக்கிக் கரும்பை உண்டது. உண்ணும்போது அதன் வாயில் இருந்து ஒழுகிய கருப்பஞ்சாறு கரும்பு வயலையும் வாழைத் தோட்டத்தையும் நிரப்ப, நெற் போரை அடித்துக் கொண்டு சென்று கடலில் கலந்தது. கடலில் நெற்போரால் மேடு உண்டாயிற்று. கருப்பஞ்சாரால் கடல்நீர் இனிப்பாயிற்று. கடலில் நீராடச் சென்றவர்கள் கடல்நீர் கருப்பஞ்சாரால் இனிப்பாக இருப்பதை உணர்ந்து அதனைக் குடித்து மகிழ்ந்தார்கள். இத்தகைய வளமை கொண்ட தொண்டை நாட்டுத் தலைவரே, உனது பவளவாயால் முத்தந் தருகவே.

அருஞ்சொற்பொருள்: பணர்படு - சொரசொரப்புக் கொண்ட, விடுபடா - விலக்கமுடியாத, சாறு - கருப்பஞ்சாறு, படப்பை - கரும்புத் தோட்டம், அரம்பை அம் துடவை - வாழைகள் நிறைந்த அழகிய தோட்டம், ஆழி - கடல், திடர் - மேடு, துவரும் - உப்புத்தன்மை, தமிழ் - இனிமை, ஆடுநர்கள் - நீராடச் செல்லுபவர்கள், தேக்க - பொருந்த, பாங்கு - நன்மை,செல்வ மென்பால் - செல்வம் கொண்ட மருதநிலம்,

நீளைநேர் மாதரொடு காளைநேர் மைந்தர்கள்
நெருங்கிவிளை யாடு பாலி
நெடுவெள்ளம் உவர்ஆழி யுள்புக அனார்குழீஇ
நிறைமலர்கொய் பொழில்வா விவாய்
வாளைதாய் எழவிடபம் வைகுதேத் தடைகீற
மடைஉடைத் தென்ன வழியும்
மதுவெள்ள மும்புகக் களமர்கள் கருப்பாலை
வழிசாற்ற வெள்ளமும் எழீஇ
ஆளைமோ தும்படி புகக்கண்ட அறிஞர்ஏழ்
ஆழியும் இதன்கண் ஆய
ஆன்றநுண் அறிவினார் ஆராயின்என் றோதஅமை
யாப்பெரு வளங்கு லாவும்

பாளைவாய் கந்திமென் பால்தொண்டை நன்னாட
பவளவாய் முத்த மருளே
பரவுசீர் உலகெலாம் விரவுசே வையர்பிரான்
பவளவாய் முத்த மருளே. 10

பொழிப்புரை: நீளா தேவியை அழகில் ஒத்த பெண்களும், இளம் காளையை ஒத்த இளைஞர்களும் நெருங்கி விளையாடும் பாலாற்றின் பெருவெள்ளம், உவர்ப்புப் பொருந்திய கடலில் புகவும், அப்பெண்களை ஒத்த பிறபெண்கள் கூடி நிறைந்த மலர்களைக் கொய்கின்ற சோலையின் அருகே இருக்கும் குளத்தில் உள்ள வாளை மீன்கள் மேல் எழுந்து தாவவும், அதனால் சோலையின் அருகில் உள்ள மரக்கிளைகளில் தொங்கும் தேனடைகள் பிளந்து, மடையை உடைத்துக்கொண்டு வரும் வெள்ளம் போலப் பெருகிய தேனாறு அக்கடலில் புகவும், உழவர்கள் கரும்பினைப் பிழியும் ஆலைகளில் வழிகின்ற கருப்பஞ்சாறாகிய வெள்ளம் கடலில் புகவும், அவை கடலில் புகுவதைக் கண்ட அறிஞர்கள் ஏழு கடலும் இங்கு வந்து சேர்ந்தது என்று கூறத்தக்க, குன்றாத வளமுடைய பாக்கு மரங்களை உடைய வயல்கள் சூழ்ந்த தொண்டை நாட்டை உடையவரே, பவள வாயால் முத்தந் தருகவே. விண்ணும் மண்ணும் பாராட்டுகின்ற வேளாளர் குடியில் தோன்றியவரே, உன்னுடைய பவளம் போன்ற வாயால் முத்தந் தருகவே.

கருத்துரை: உவர்ப்பு மிக்க கடலில் பாலாற்று வெள்ளமும், தேனின் வெள்ளமும், கருப்பஞ்சாற்றின் வெள்ளமும் புக, அதனைக் கண்ட அறிஞர்கள் இக்கடல் ஏழு கடலை ஒத்தது என்று கூறும் அளவிற்கு வளம் பொருந்திய தொண்டை நாட்டுத் தலைவரே பவளவாய் முத்தந் தருகவே.

அருஞ்சொற்பொருள்: நீளை நேர் - திருமாலின் தேவியருள் ஒருத்தியாக விளங்கும் நீளா தேவி அழகுக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆவாள். தொண்டை நாட்டில் வாழும் பெண்கள் அவளை ஒத்து விளங்கினார்கள். அனார் - அப்பெண்கள், வாவி - குளம், இடபம் - மரக்கொம்பு, தேத்தடை - தேனடை, களமர் - உழவர், ஏழ்கடல் - உவர்ப்பு, நன்நீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் ஆகிய கடல்கள், கந்தி - பாக்கு மரம்.

முத்தப்பருவம் முற்றிற்று.

6. வாரானைப் பருவம்

(பெற்றோர்கள் குழந்தையைத் தம் அருகே அன்புடன் அழைக்கும் பருவம். இது குழந்தை பிறந்த பன்னிரண்டாவது மாதத்தில் நடைபெறும் நிகழ்ச்சியாகும். வருகைப் பருவம் என்றும் கூறப்பெறுவதுண்டு. வா - ரு - ஆனை எனப் பிரியும். ஆனை - தொழிற்பெயர் விகுதியாகும்.)

மண்டலம் மதிக்கும்மணி யாத்தஉச் சிப்பூவும்
　　வண்பட்ட முஞ்சுட்டியும்
　வாகுவல யமும்மதா ணியும்உதய வெயில்செய
　　மகத்துவத் தொண்டர்சீர்த்தி
விண்டலம் மதிக்கஎழு செய்யவாய்ப் புகழெழுதல்
　　விழையஎழு குறுமுறுவலும்
　வெண்ணீறு முத்தமா லிகையும்இள நிலவுசெய
　　வெய்யேம் மனத்தடத்துத்
தண்டல்அமை யாதலர் சரோருகப் பதமேல்
　　சதங்கையும் தண்டையும்ஒளி
　தவாஞெகிழி யும்படிஇக் கலகல இரட்டஉயர்
　　சைவநிலை எங்கும்நிகழக்
கொண்டல்அமர் கொடைகொண்ட கரதலச் சேவையார்
　　குலசிகா மணிவருகவே
　கொன்றைச் சடாடவியர் மன்றைப் பிராவிஎழு
　　குன்றைப் பிரான்வருகவே. 1

பொழிப்புரை: உலகத்தார் மதிக்கின்ற இரத்தினக் கற்கள் பதித்த உச்சிப் பூவும், வளமான நெற்றிப் பட்டமும், முன்நெற்றியில் சுட்டியும், தோளில் வாகுவலயமும், மார்பில் அணிகின்ற மதாணி என்ற பதக்கமும், சூரியன் தோன்றும் பொழுது விளங்குகின்ற ஒளிபோல ஒளி வீசவும், பெருமை பெற்ற திருத்தொண்டர்களின் புகழை விண்ணவர்களும் போற்றும்படி கூறிய செம்மையான வாயினில், அவர்தம் புகழை விருப்பத்தோடு கூறியதால் எழுகின்ற இளநகையும், நெற்றியில் அணிந்த வெண்ணீறும், முத்து மாலையும், இள நிலவுபோல் ஒளியைச் செய்யவும்,கொடுமை மிக்க எமது மனமாகிய குளத்தில் மலரும் திருவடித் தாமரையில் சதங்கையும், தண்டையும், சிலம்பும்

பொருந்திக் கலகல என்று ஒலிக்கவும், எல்லாச் சமயங்களிலும் உயர்ந்த சமயமான சைவ சமயம் எங்கும் நிகழ, மேகம் விரும்புமாறு கொடை கொடுக்கும் திருக்கரங்களை உடைய வேளாளர் குலத்தின் சிகாமணியே வருகவே, கொன்றை அணிந்த சடையாகிய காட்டினை உடைய சிவபெருமானின் மன்றலினை என்றைக்கும் போற்றி வணங்குகின்ற குன்றத்தூர் பிரானே வருகவே.

கருத்துரை: உச்சிப்பூ, நெற்றிப்பட்டம், நெற்றிச் சுட்டி, தோள்வளை, மார்புப் பதக்கம், இளமுறுவலாம் நகை, வெண்ணீறு, முத்துமாலை, சதங்கை, தண்டை, சிலம்பு ஆகிய அணிகலன்களை அணிந்திருக்கும், சைவ சமயம் பரவக் கொடை கொடுக்கும் கரங்களைக் கொண்ட வேளாளர் குலச்சிகாமணியே வருக வருகவே.

அருஞ்சொற்பொருள்: உச்சிப்பூ , நெற்றிப்பட்டம், முகச்சுட்டி, வாகுவலயம் , மதாணி - அணிகலன்கள், வாகுவலயம் - தோளணி, மதாணி - மார்பில் அணியும் பதக்கம், முறுவல் - நகை, வெய்யேம் - கொடுமை மிக்க, தண்டல் அமையாது - நீங்காது, அலர்சரோருகம் - மலரும் தாமரை(திருவடி), ஞெகிழி - சிலம்பு.

நிலவுவிரி மதியும்ஒண் பனியும்உவ வாஎனினும்
நெஞ்சம்எப் பொழுதும்நெக்கு
நெக்குருகு வார்மதியும் அத்தகையர்கண்பனியும்
நேரேஉ வத்தல் செய்வ
கலவுசெம் மையும்மணமும் உடைமைக் கிணங்கஎவர்
கடையின்அவை உள்ளவேனும்
காமுறுவ அளிவிரா வுறமலர்வ ஆயகோ
கனகநறு மலர்இரண்டும்
உலவுதலில் அன்புசெறி யுந்தலைப் பெயராமை
உள்ளவே னும்பெயர்த்தே
உவகையெங் கட்குவர மறுசம யருக்கெலாம்
உட்குவர முறுவலித்துக்

குலவுபுக ழேபோர்வை யாக்கொண்ட சேவையார்
குலசிகா மணிவருகவே
கொன்றைச் சடாடவியர் மன்றைப் பராவியெழு
குன்றைப் பிரான்வருகவே. 2

பொழிப்புரை: (தாமரை மலர்கள்) ஒளி விளங்கும் சந்திரனையும், குளிர்ந்த பனியையும் விரும்பாது என்றாலும், எப்பொழுதும் உமது (சேக்கிழாரின்) திருவருளை நினைந்து நெஞ்சம் நெக்கு உருகின்றவர்களின் அறிவாகிய மதியையும், அவ்வாறு உருகுகின்றவர்களின் கண்களில் இருந்து ஒழுகுகின்ற கண்ணீராகிய பனியையும் நேரே (சேக்கிழாரின் திருவடித் தாமரைகள்) கண்டு மகிழ்ந்து, தன்னிடத்தில் இயல்பாகக் கலந்துள்ள செம்மையும் (செந்நெறி), மணமும்(திருவருள் மனம்) இருப்பதற்கு ஒப்ப, (நேரில் கண்டவரில்) யார் யாருக்கு அவை இருக்கிறதோ அவர்களை விரும்பும், வண்டு ஊத மலர்கின்ற திருவடித் தாமரைகள் இரண்டும், கெடுதல் இல்லாத அன்பு உடையவர்களிடத்தில் நீங்காமல் இருந்தாலும், சைவ சமயத்தைச் சார்ந்த எங்களுக்கு மகிழ்ச்சியையும் மற்ற சமயத்தார்க்கு நாணத்தையும் கொடுக்கின்ற முறுவலோடு, புகழைப் போர்வை யாகக் கொண்ட வேளாளர்குலத் தலைவரே, இங்கு வருகவே. கொன்றை அணிந்த சடையாகிய காட்டை உடைய சிவபெருமானின் பொற்சபையை எப்பொழுதும் போற்றுகின்ற குன்றை நகர்த் தலைவரே வருக வருகவே.

கருத்துரை: (இப்பாடலில் இயற்கையான தாமரை மலரையும், சேக்கிழாரின் திருவடித் தாமரை மலர்களையும் சிலேடை அணியாக நூலாசிரியர் பாடியிருப்பது குறிப்படத் தக்கது.) இயற்கையான தாமரை மலர் சந்திரனையும் பனியையும் விரும்பாது என்றாலும், சேக்கிழாரின் திருவடித் தாமரைகள் இறைவனின் திருவருளை நினைந்து உருகின்றவர்களின் அறிவாகிய மதியையும்(சந்திரன்), கண்ணீராகிய பனியையும் விரும்பும். மேலும் தாமரைக்குச் செம்மையும் மணமும் இருப்பது போலச் சேக்கிழாரின் திருவடித் தாமரைகளுக்குச் செம்மையாகிய நன்னெறியும், திருவருளாகிய மனமும் உடையன. இத்தகைய திருவடித் தாமரைகள் அன்பர்களின் மனத்தில் நீங்காது இருந்தாலும், இப்பொழுது சைவம் சார்ந்தவர்களுக்கு மகிழ்வும்,

பிற சமயத்தார்க்கு நாணமும் தருகின்ற இள நகையோடு வேளாளர் குலத் தலைவரே வருக.

அருஞ்சொற்பொருள்: மதி - சந்திரன், அறிவு, பனி - இரவுப்பனி, கண்ணீர், நெக்கு - திருவருளை நினைந்து, நெகிழ்ந்து, செம்மை - சிவப்புநிறம், செம்மைநெறி, மணம் - வாசனை, திருவருளாகிய மனம், எவர் கடையின் - எவரிடத்தும் (யார் யாரிடத்தும்) , அவை - செம்மை, மணம், அளி - வண்டு, கோகனகம் - திருவடித் தாமரைகள், உட்கு - நாணம்.

நீடும்இன் பரிவையர் புணர்ப்பென்ம ரும்ஐந்து
நிகழ்கந்த மும்கெடுதலே
நிலவும்இன் பென்மரும் குணம்மூன்றும் ஒழிதலே
நிரம்பல்உறும் இன்பென்மரும்
நாடும்இன் பருவினைக் கேடென்ம ரும்மலம்
நசித்தலே இன்பென்மரும்
நவில்விக்கி ரகநித்தம் இன்பென்ம ரும்தோன்றும்
ஞானமே இன்பென்மரும்
பாடும்இன் புயிர்கெடுதல் என்மரும் பகுதிமேல்
கெடுதலே இன்பென்மரும்
படுசித்தி இன்பென்ம ரும்பிறரும் வாதம்
படர்ந்துவரு திறன் அறவளம்
கூடுசெந் தமிழ்அருமை அறிபெருஞ் சேவையார்
குலசிகா மணிவருகவே
கொன்றைச் சாடாடவியர் மன்றைப்
பிராவியெழுகுன்றைப் பிரான்வருகவே. 3

பொழிப்புரை : பெண்களோடு கூடி மகிழ்வதே (சிற்றின்பம்) பேரின்பமாகிய முத்தியாகும் என்று கூறுகின்ற உலோகாயதமும், ஐந்து கந்தங்கள் கெடுதலே பேரின்பம் என்று கூறும் பௌத்தமும், மூவகைக் குணம் அறுதலே பேரின்பம் என்று கூறும் நிகண்ட வாதமும், நல்வினை தீவினை என்னும் இரண்டும் கெடுதலே பேரின்பம் என்று கூறும் பரபாகரமும், ஆணவமலம் கெடுதலே பேரின்பம் எனக்கூறும் பேதவாதமும், சுத்த மாயா சரீரம் (உடல்) அழியாமல் இருப்பதே பேரின்பம் எனக்கூறும் சிவசமவாதமும், ஞானம் தோன்றுதலே பேரின்பம் எனக்கூறும்

மாயா வாதமும், உயிர்கெடுதலே பேரின்பம் எனக் கூறும் பாற்கரிய வாதமும், பகுதி மேல் கெடுதலே பேரின்பம் என்று கூறும் பாடாண வாதமும், எண்வகைச் சித்திகளைப் பெறுவதே பேரின்பம் எனக் கூறும் மதமும், இன்னும் பிறர் தத்தம் மதங்கள் கூறுவதே சரி என்று கூறி மயக்குகின்ற மதங்களின் வலி அழியுமாறு மறுத்து, முழுமுதற் கடவுளின் திருவடிகளைச் சேர்தலே பேரின்பம் ஆகும் என்ற சைவ சித்தாந்த நெறியை வற்புறுத்தும், திருமுறைகளின் அருமைகளை உள்ளவாறு உலகிற்கு உணர்த்தியருள, வேளாளர் குலத்தில் தோன்றிய தலைமை மணியே வருக, கொன்றை அணிந்த சடையாகிய காட்டை உடைய சிவபெருமானின் பொற்சபையை என்றும் போற்றி வணங்கும் குன்றை நகர்த் தலைவரே வருக வருகவே.

கருத்துரை: முத்தி அடைவதாகிய பேரின்பம் பற்றி உலகாயதம் முதலாகிய மதங்கள் கூறுவதை மறுத்து, சிவபெருமான் திருவடியைச் சேர்ந்து ஒன்றியிருப்பதே பேரின்பம் என்று கூறுகின்ற சைவ சித்தாந்த மதத்தின் கருத்தை வெளிப்படுத்துகின்ற திருமுறைகளின் சிறப்பை உலகிற்கு உணர்த்துவதற்கு, வேளாளர் குலச் சிகாமணியே வருக.

அருஞ்சொற்பொருள்: அரிவையர் புணர்ப்பு - பெண் களிடம் சிற்றின்பம் அனுபவித்தல், ஐந்து கந்தம் - உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ்ஞானம் எனக் கூறப்படும் தொடர்பு, குணம் மூன்று - இராசதம், தாமசம், சாத்வீகம், இருவினை - நல்வினை, தீவினை, மலம் - ஆணவமலம், விக்கிரக நித்தம் - உடல் அழியாது இருத்தல், பகுதி மேல் கெடுதல் - ஆன்மா உணர்ச்சியின்றி, அப்பாடாணம் போல் (மரக்கட்டை போல்) இருத்தல், சித்தி - அட்டமாசித்தி, அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பராத்தி, பரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பன, அற - ஒழிய, வளம்கூடு செந்தமிழ் - திருமுறை. இப்பாடலின் கருத்திற்கு நூலாசிரியருக்குப் பெருந்துணையாக அமைந்தவை சைவசித்தாந்த சாத்திர நூல்களாகும். மேலும் சிவஞான சுவாமிகளின் மாபாடியமும் ஆகும். முத்தி பற்றிய பறசமயக் கருத்தை உமாபதி சிவம் எழுதிய சிவப்பிரகாசம் என்ற சாத்திரநூல் கீழ்வருமாறு குறிப்பிடும்.

அரிவையர் இன்புறு முத்தி கந்தம் ஐந்தும்
அறும் முத்தி திரிகுணமும் அடங்கும் முத்தி
விரிவுவினை கெடும் முத்தி மலம்போம் முத்தி
விக்கிரக நித்தி முத்தி விவேக முத்தி
பரவும் உயிர்கெடும் முத்தி சித்திமுத்தி
பாடாண முத்தி இவை பழிசேர் முத்தி
திரிமலமும் அகலஉயிர்அருள்சேர் முத்தி
திகழ் முத்தி இதுமுத்தித் திறத்ததாமே. (பா.50)

இச்சிவப்பிரகாசப் பாடலை ஒப்பிட்டுக் காண்பது நலம் பயக்கும்.

செற்றசெங் கன்னல்படு தரளமும் கந்திச்
செழுஞ்சோலை படுதரளமும்
திண்மருப் புக்கடாக் களிறுமறை யப்போய
செஞ்சாலி படுதரளமும்
துற்றபைங் கதலியில் படுதரள மும்பாலி
துறைதொறும் எடுத்துவீசுஞ்
சுடர்மணிக ளுங்கரும நடவுவோர் வாருபு
சுமந்துகொடு வந்துதூய
முற்றமெங் கணுநிறை தாக்குவித் திடல்கண்டு
மோகம் முற்றுஓடியாடி
முகந்திடறி ஏற்றியொன் றாக்கிவிளை யாடுசிறு
முண்டகத் தாள்பெயர்த்துக்
கொற்றவன் தருமுதன்மை கொண்டுமிளிர்
சேவையார்குலசிகா மணிவருகவே
கொன்றைச் சாடாடவியர் மன்றைப் பராவியெழு
குன்றைப் பிரான்வருகவே. 4

பொழிப்புரை : *நெருங்கிய கரும்பில் தோன்றிய முத்துக்களையும், பாக்குமரச் சோலைகளில் உண்டான முத்துக் களையும், வலிமையான கொம்பும், மதமும் கொண்ட யானை மறையும் அளவிற்கு நீண்டு வளர்ந்த செந்நெல்லில் உண்டான முத்துக்களையும், பசுமையான வாழையிலிருந்து உண்டான முத்துக்களையும், பாலியாற்றின் கரையில் ஒதுங்கிய ஒளிவீசும் மணிகளையும், வயலில் தொழில் புரிவோர் வாரிக் கொண்டு*

வந்து தூய்மையான முற்றங்களில் எல்லாம் குவித்தலைக் கண்டு, ஆசையோடு ஓடி ஆடி அவற்றை அள்ளி எறிந்து விளையாடுகின்ற, சிறிய தாமரை போன்ற திருவடிகளை எடுத்து வைத்து அநபாயச் சோழன் அளித்த முதலமைச்சர் பதவியை ஏற்று, நன்கு பணிசெய்யும் வேளாளர் குலச் சிகாமணியே வருகவே, கொன்றை அணிந்த சடையாகிய காட்டை உடைய சிவபெருமானின் பொற்சபையை எப்பொழுதும் வணங்கும் குன்றை நகர்த் தலைவரே வருக வருகவே.

கருத்துரை: கரும்பு, பாக்கு, செந்நெல், வாழை இவற்றில் தோன்றிய முத்துக்களையும், பாலியாற்றங்கரையில் கிடைத்த மணிகளையும் உழவர்கள் வீட்டு முற்றத்தில் குவித்திட, அதனைக்கண்டு மகிழ்ந்து அள்ளி எறிந்து விளையாடுகின்ற, சோழன் தந்த முதலமைச்சர் பதவியைச் சிறப்புடன் செய்யும் சிகாமணியே வருகவே.

அருஞ்சொற்பொருள்: கடாக்களிறு - மதம் பொருந்திய யானை, கரும நடவுவோர் - உழவுத் தொழிலைச் செய்வோர், மோகம் - விருப்பம், எற்றி - உதைத்து (எறிந்து) , முண்டகம் - தாமரை, முதன்மை - முதலமைச்சர் பணி,

மாயா மலம்கரும மலம்இவைக் கேதுவாம்
 மலம்வே ரொடும்கழன்று
வலியதன் சத்திகெடு மாறுதிரு அருள்பதிய
 வந்துபதி செம்மலர்த்தாள்
ஆயாத எம்மனமும் அகலாத தாள்அடியர்
 அவிர்புதல்வர் தோழர் தாங்கள்
அடைந்தமார்க் கம்பொலிய எண்ணும் திருத்தாள்
 அராவுரி நிகர்த்ததூசு
காயாத கால்நீத்த மலரொடு விரித்தஇக்
 கடையில்பெ யர்த்துவைத்துக்
கருங்கொண்டல் போல்வானும் மிகையெனக்
 கடல்சூழ்ந்த காசினிஉ ளாரைஎல்லாம்
கூயா தரிக்குங் குணம்தழுவு சேவையார்
 குலசிகா மணிவருகவே
கொன்றைச் சடாடவியர் மன்றைப் பராவியெழு
 குன்றைப் பிரான்வருகவே. 5

பொழிப்புரை: மாயை ஆகிய மலமும் கன்மமாகிய மலமும் ஆகிய இரண்டும் தோன்றுவதற்கு மூலகாரணமான ஆணவ மலமாகிய மூன்றும் அடியோடு கழன்று, அவற்றின் வலிமை கெடும் வண்ணம் திருவருளைப் பதிய வைக்கும் செம்மலர் திருவடிகளாக விளங்குவதும், நன்மை விளைவிக்கும் திரு வருளைப் பற்றிச் சிறிதும் அறியாத என்னுடைய புல்லிய மனத்தில் அகலாது வீற்றிருக்கும் திருவடிகளாக விளங்குவதும், இறைவனின் திருவருளை அடைவதற்குரிய அடியார்கள் நெறி, புதல்வர் நெறி, தோழமை நெறி, நீர் அடைந்த ஞான நெறி ஆகிய நான்கு நெறிகளையும் விளக்க வந்த திருவடிகளாக விளங்குவதும், ஆகிய உம்முடைய திருவடிகளை பாம்பினது தோலைப் போன்ற மென்மையான ஆடையின் மீது வாடாத, காம்பு நீக்கிய மென்மையான மலர்களைப் பரப்பிய இந்த இடத்தில் பெயர்த்து வைத்து, கருமை நிறம் கொண்ட திருமால் காத்தல் தொழிலுக்குத் தேவையில்லை என்று எண்ணுமாறு, கடல்சூழ்ந்த உலகத்தில் உள்ளவர்களை எல்லாம் வாருங்கள் என்றழைத்து, உண்டியும் உறையுளும் கொடுத்து ஆதரிக்கும் குணம் கொண்ட வேளாளர் குலச் சிகாமணியே வருகவே, கொன்றை அணிந்த சடையாகிய காட்டை உடைய சிவபெருமானின் பொற்சபையை எப்பொழுதும் போற்றி வணங்கும் குன்றையூர்த் தலைவரே, வருக வருகவே.

கருத்துரை: மும்மதங்களை நீக்கித் திருவருளைப் பதிய வைப்பதும், புல்லிய மனத்திலிருந்து நீங்காது இருப்பதும், சைவ நெறி நான்கையும் வெளிப்படுத்துவதும் ஆகிய திருவடிகளை, மெல்லிய துணியில் விரித்து வைத்த மலர்கள் மீது பெயர்த்து வைத்து, திருமால் செய்து வரும் காத்தல் தொழிலை இவ்வுலகத்தில் செய்துவரும் வேளாளர் குலத் தலைவரே வருகவே.

அருஞ்சொற்பொருள்: இவைக்கு ஏதுவாம் - மூலகாரண மாக, (மாயா மலத்திற்கும் கன்ம மலத்திற்கும் மூலகாரணமாக விளங்குவது ஆணவமலமாகும். ஆணவமலம் குறைவதற்கே உயிர்கள் செய்த மாயையினால் உடம்பும், கன்ம வினையினால் இன்ப துன்பங்களும் இறைவன் அளிக்கிறான் என்பது சைவ சித்தாந்த முடிவாகும்.) திருவருள் பதிய - சத்திநிபாதம் தோன்ற,

அடியர் - தாசமார்க்க நெறி, அவிர்புதல்வர் - சத்புத்திர மார்க்கநெறி, தோழர் - சகமார்க்கநெறி, தாங்கள் அடைந்த மார்க்கம் - ஞானநெறியாகிய சன்மார்க்கநெறி, இந்த நால்வகை நெறிகளும் இறைவனின் திருவருளை அடைவதற்குரிய மார்க்கங்களாகச் சைவசித்தாந்தம் குறிப்படும். அருணந்தி சிவாசாரியார் இயற்றியருளிய சிவஞான சித்தியார்சுபக்கம் இந்நால்வகை நெறி பற்றிய செய்திகளை விரிவாகத் தருகிறது. அராவுரி - பாம்பு உரித்துப் போட்ட சட்டை, காயாத - வாடாத, கருங் கொண்டல் போல்வார் - திருமால், கூயா - கூவி அழைத்து, சைவ நன்னெறி நான்கில் சத்புத்திர மார்க்கம் என்னும் மகன்மை நெறி நின்றவர் திருஞானசம்பந்தர் என்றும், தாதமார்க்கமாம் அடிமை நெறியில் நின்றவர் திருநாவுக்கரசர் என்றும், சகமார்க்கமாம் தோழமை நெறியில் நின்றவர் சுந்தரமூர்த்தி நாயனார் என்றும், சன்மார்க்கமாம் ஞானநெறியில் நின்றவர் மாணிக்கவாசகர் என்றும் சைவசமயம் கூறிவந்த நிலையில், இப்பாடலில் நூலாசிரியர் தாங்கள் அடைந்த மார்க்கம் என்று குறிப்பட்டுச் சேக்கிழார் சன்மார்க்க நெறியில் நின்றவர் என்று சொல்லியிருப்பது நினைவுகூரத் தக்கதாகும்.

நலத்தின் உயரும் பழையனூர்
　　நாளும் பொலியும் அவையகத்து
　நலிவு புரிநீ லியைக்கண்டு
　　நடுங்கா நின்ற வணிகனுக்கு
நிலத்தில் இயல்நின் உயிர்க்கிறுதி
　　நேரு மாயின் இனியாமெல்லாம்
　நெருப்பில் முழுகி உயிர்துறப்போம்
　　நீஓ ருதிஎன் றுரைத்தபடி
வலத்தின் உயரச் சொல்தவறா
　　வண்ணம் எழுநாக் குழிமுழுகி
　வடஆ ரணியத் தாடொருவர்
　　மலர்த்தாள் அடைந்த எழுபதின்மர்
குலத்தில் உதித்தார் அருள்மழைபெய்
　　கொண்டல் வருக வருகவே
　குன்றைப் பொருமா ளிகைக் குன்றைக்
　　கோமான் வருக வருகவே. 6

பொழிப்புரை : நன்மை தருவதில் உயர்ந்திருந்த பழையனூர் என்ற ஊரில், நாள்தோறும் நன்கு விளங்கும் வழக்கு மன்றத்தில், போவோர் வருவோர்க்குத் துன்பம் தரும் பேயாய் நின்ற நீலி என்பவளைக் கண்டு வருந்தி நின்ற ஒரு வணிகனுக்கு, இன்று இவ்விடத்தில் அவள் கூற்றுப்படி நீ இருப்பாயாக, அவளால் உன் உயிருக்கு இறுதி நேருமாயின் நாங்கள் நெருப்பில் மூழ்கி உயிர் துறப்போம், இதனை உணர்க என்று கூறியபடி, அவன் அன்றிரவு இறந்து பட்டதால் அவ்வணிகனுக்கு அளித்த வாக்குப்படி, வெற்றியைத் தரும் ஏழு நாவினைப் பெற்ற தீக்குழியில் புகுந்து, திருஆலங்காடு என்னும் தலத்தில் எழுந்தருளியிருந்து திருவருள் புரியும் இறைவனின் திருவடிகளை அடைந்த, எழுபது பேர் தோன்றிய வேளாளர் குலத்தில் தோன்றி, அருள் மழை பொழியும் மேகமே வருக வருகவே, மலையை ஒத்து விளங்கும் மாளிகைகள் சூழ்ந்த குன்றத்தூர் தலைவரே, வருக வருகவே.

கருத்துரை: தேவாரம் அருளிய மூவராலும் பாடப்பெற்ற பழையனூர் என்ற ஊரில் நீலி என்ற பேயாகிய பெண்ணைக் கண்டு அஞ்சிய ஒரு வணிகனைக் காப்பாற்றுவோம் என்று கூறி, அவ்வாறு காப்பாற்ற முடியாததால், தாங்கள் கூறியபடி தீயில் மூழ்கிய எழுபதின்மர் தோன்றிய வேளாளர் குலத்தில் உதித்த மேகம் போன்ற சேக்கிழாரே வருக வருகவே.

அருஞ்சொற்பொருள்: பழையனூர் - திருஆலங்காடு திருத்தலத்திற்கு அருகில் உள்ள ஊர், அவையகம் - அறங்கூறும் மன்றம் (நீதி மன்றம்), நிலத்தின்இயல் - இம்மண்ணுலகில் வாழும் பொழுது, உறுதி - உணர்க, எழுநா - ஏழுநாவினைக் கொண்ட, வடஆரணியம் - திருஆலங்காடு, குலம் - வேளாளர் குலம். இப்பாடலில் இடம்பெற்ற வரலாறு - வணிகன் ஒருவன் வேறு மகளிர் இன்பத்தில் ஈடுபட்டதால் அவன் மனைவி நீலி கண்டித்தாள். ஆதலால் அவ்வணிகன் வஞ்சனையால் அவளைக் கொன்றான். கொலைப்பட்ட மனைவி பேயாக மாறிக் கணவனை அழிப்பேன் என்று கூறித் திரிந்தாள். அவ்வாறு திரிந்தவள் கணவனைக் கொல்வதற்காகப் பேய் வடிவத்தை மாற்றி உண்மையான நீலி வடிவத்தில் ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தாள். அவ்வழியாக அவ்வணிகன் சென்ற பொழுது, வணிகனைத்

தன்னோடு தங்குமாறு கூறினாள். அவன் அதற்கு மறுத்தான். பேயாகிய நீலி விடவில்லை. வழக்கு மன்றத்திற்குச் சென்று வழக்குரைத்தாள். வழக்கு மன்றத்தில் இருந்த எழுபது பேர் இருவரின் கூற்றுகளை ஆராய்ந்து, வணிகனை அன்றிரவு பேய் நீலியாடு தங்குமாறு கூறி, அவனுக்குத் துன்பம் நேர்ந்தால் அவனுக்காகத் தாங்கள் உயிர் துறப்போம் என்று கூறினார்கள். அன்றிரவு அவர்களை நம்பி, பேய் நீலியோடு வணிகன் தங்கினான். அவளால் கொல்லப்பட்டான். வணிகன் தனியே இறந்து கிடப்பதை அறிந்த எழுபது வேளாளர்கள் தாங்கள் சொன்ன சொல்லைக் காப்பற்றத் தீக்குழியில் இறங்கி, திருஆலங்காடு இறைவனின் திருவடியை அடைந்தார்கள். இதனை வஞ்சப்படுத்து ஒருத்தி வாணான் கொள்ளும் வகை கேட்டு "அஞ்சும் பழையனூரர்" என்று ஞானசம்பந்தர் குறிப்பிடுவார். அவரைப் போல உமாபதி சிவமும் சேக்கிழாரும் தங்கள் நூல்களில் இவ்வரலாற்றைக் குறிப்பிட்டுள்ளனர்.

அண்டம் அளவும் வரைநாட்டில்
அரசர் கலகம் ஆதலினால்
ஆங்காங் கொருவி வணிகர்எலாம்
அயல்நாட் டகம்புக் கினிதமர்ந்து
விண்ட கலகத் திறம்தெரிந்து
மேய தத்தம் இடம்புக்க
விதம்உள் உணர்ந்து தம்சரணா
மேவி இருந்த மடக்கொடியை
மண்ட அழைத்துக் கொடுசென்றிம்
மடமா தினைக்கொள் ளுதிர்என்ன
மயங்கல் கண்டு தங்கைஎனும்
வாய்மை கொடுமைத் துனக்கேண்மை
கொண்ட குலத்தில் உதித்தருள்பெய்
கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைகுன்றைக்
கோமான் வருக வருகவே. 7

பொழிப்புரை:வானகம்வரை உயர்ந்து நிற்கும் மலைகளைக் கொண்ட சேரநாட்டில், மன்னர்களுக்குள் கலகம் ஏற்பட்டதால், அங்கிருந்து புறப்பட்டு வணிகர் குலத்தினர் எல்லாம்

அயல்நாட்டில் பல பகுதிகளில் தங்கி வாழ்ந்தனர். மன்னர்களின் கலகம் தீர்ந்த பிறகு தத்தம் இடத்திற்கு வணிகர்கள் திரும்பினார்கள், அப்பொழுது அவர்கள் குலத்தைச் சார்ந்த ஒருபெண் தொண்டை நாட்டு வேளாளர் பால் முன்பு அடைக்கலம் புகுந்திருந்தாள். (கலகம் தீர்ந்தபின்) தன்பால் அடைக்கலம் புகுந்திருந்த பெண்ணை அழைத்துக் கொண்டு சென்று, வணிகர்களை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்ட, சிலநாட்கள் அயலாரிடம் தங்கிய பெண்ணை ஏற்றுக் கொள்ளச் சேரநாட்டு வணிகர்கள் மயங்கியதைக் கண்டு, நான் இவளைத் தங்கையாகத் தான் பாவித்திருந்தேன் என்று கூறி, வணிகர்குல ஒருவனுக்கு அப்பெண்ணை மணம் செய்யும்படி வேண்டி மணமுடிக்கச் செய்தார். மேலும் அவ்வேளாளர் வணிகர்களோடு மைத்துனர் உறவும் கொண்டார். அத்தகைய வேளாளர் குலத்தில் தோன்றிய அருள்மழை பெய்யும் மேகமே வருக வருகவே. மலைகள் போன்று உயர்ந்திருந்த மாளிகைகளைக் கொண்ட குன்றத்தூரின் தலைவரே வருக வருகவே.

கருத்துரை: சேர நாட்டு மன்னர்களுக்குள் ஏற்பட்ட கலகத்தால் சேர நாட்டிலிருந்து புறப்பட்டு, அயல் பகுதிகளில் தங்கியிருந்த வணிகர்களுள் ஒருத்தி, தொண்டை நாட்டு வேளாளரிடம் அடைக்கலம் புகுந்தாள். மன்னர்களின் கலகம் தீர்ந்தபின், அடைக்கலம் புகுந்த பெண்ணைத் திரும்பக் கொணர்ந்து வணிகர் குலத்தில் மணம்புரிவித்து, தன்னையும் மைத்துனர் உறவு கொண்டாடிய வேளாளர் குலத்தில் தோன்றிய தலைவரே, வருக வருகவே.

அருஞ்சொற்பொருள் : வரைநாடு - சேரநாடு, விண்ட - நீங்கிய, சரணா - சரண், மண்ட - விரைந்து, மயங்கல் - அயலாரிடம் சிலநாள் தங்கியிருந்த பெண் என்பதால் மயங்கி, தங்கை - வேளாளர் அவளைத் தங்கையாகப் பாவித்தமை, வாய்மைகொடு - கூறி, மைத்துனக்கேண்மை - மைத்துனர் என்ற உறவு.

விற்றங் கியவி பூதியினால்
விளர்ப்புற் றன்பன் வழிஇயங்கி
வேறு வேறாம் பரசமய
வெய்ய கோடை முழுதொழியச்

சிற்றம் பலநா யகர்கருணைத்
திரைவா ரிதியில் படிந்துண்டு
திசைஎங் கணும்தோற் றிடமின்னித்
தீய ஒழுக்கம் தபக்கறுத்துக்
கற்றங் கமையார் மலத்துன்பம்
கழல அரமா முழக்கெழுப்பிக்
கருதா நின்ற திருத்தொண்டர்
காமர் வாய்ந்த சரித்திமாம்
கொற்றம் பொலியும் மழைபொழிந்த
கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக்
கோமான் வருக வருகவே. 8

பொழிப்புரை : ஒளி பொருந்திய திருநீற்றினால் வெண்ணிறம் கொண்ட மேகம், அன்பின் வழியில் நடந்து, வேறு வேறு கருத்துகளைக் கொண்ட பிறசமயங்களாம் வெம்மை மிகுந்த கோடை வெயில் முழுதும் நீங்க, சிற்றம்பலத்தில் நடனம் புரியும் கருணையாகிய அலைகளைக் கொண்ட கடலில் மூழ்கி, அந்நீரைப் பருகிக் (கருநிற மேகமாகி) எல்லாத் திக்குகளிலும் அருள் கிடைக்க மின்னி, தீய ஒழுக்கங்கள் கெடும்படியாகச் சினந்து, கற்றபடி வாழாதவரின் மலங்களாகிய துன்பம் நீங்க, அரஅர என்ற முழக்கை எழுப்ப, மனத்தில் ஐந்தெழுத்து மந்திரம் நீங்காதிருக்கும் திருத்தொண்டர்களின் சரித்திரமாம் வெற்றி பொருந்திய மழையைப் பொழியும் மேகமே வருக வருகவே, மலைகளை ஒத்த மாளிகைகளைக் கொண்ட குன்றத்தூர் தலைவரே வருக வருகவே.

கருத்துரை: சேக்கிழாராகிய மேகம் திருநீற்று ஒளிபோன்று வெண்ணிறமாகத் தோன்றி, அன்பின்வழி நடந்து, பிறசமயக் கோடை வெப்பம் நீங்க, தில்லைக் கூத்தன் அருளாகிய கடலில் புகுந்து, அருள் விழைய மின்னி, அரஅர என்னும் ஒலியை இடியாக இடித்து, திருத்தொண்டர் சரித்திரம் என்னும் மழையைப் பொழிந்தது. அத்தகைய மேகமே வருக வருகவே.

அருஞ்சொற்பொருள் : வில்தங்கு - ஒளி தங்கிய, பரசமயம் - உலகாயதம், சௌத்திராந்திகம், யோகசாரம், மாத்மிகம்,

வைபாடியம் ஆகிய பிற சமயங்கள், தபக்கருத்து - நீங்கச்செய்து, மலத்துன்பம் - மும்மலத்துன்பம், காமர் - விருப்பம்.

விள்ளும் மலர்ஆ தனத்தானும்
வெய்ய சுதரி சனத்தானும்
விரும்பும் அதிகா ரக்கதையா
விளம்பா நின்ற கோல்கொள்ள
நள்ளும் பிரம சரியர்எலாம்
நாடும் பலாசக் கோல்கொள்ள
நான்காம் ஆச்சி ரமத்தமைந்தார்
நயந்து முந்தூழ்க் கோல்கொள்ளத்
தெள்ளும் வணிகர் குலம்எல்லாம்
தேற்றும் துலாக்கோல் அதுகொள்ளச்
செம்பொன் மோலி அரசர்எலாம்
செங்கோல் கொள்ளச் சிறுகோல்கைக்
கொள்ளும் குலத்தில் உதித்தஅருள்
கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக்
கோமான் வருக வருகவே. 9

பொழிப்புரை: மலர்ந்த தாமரையை இருக்கையாகக் கொண்ட பிரமனும், கொடுமை மிக்க சுதரிசனம் என்னும் சக்கரப்படையை உடைய திருமாலும், விரும்பி மேற்கொண்ட அதிகாரத்திற்குரிய யோக தண்டமாகிய கோலையும், அம்பாகிய கோலையும் முறையாகக் கொள்ள, அறநெறியை விரும்பும் பரமசாரியர்கள் எல்லோரும் முள்முருங்கைக் கோலைக் கொள்ள, பரமசரியம், இல்லறம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு நெறியில் நான்காவதாக அமைந்த சந்நியாசம் கொள்பவர்கள் மூங்கில் கோலைக் கொள்ள, தெளிவான அறிவுடைய வணிகர் குலம் எல்லாம் அக்குலத்திற்குரிய தராசுக்கோலைக் கொள்ள, செம்பொன்னால் ஆகிய கிரீடம் அணிந்த மன்னர்கள் எல்லாம் செங்கோலினைக் கொள்ள, மாடுகளை விரட்டும் சிறிய கோலினைக் கொண்ட வேளாளர் குலத்தில் தோன்றிய அருள்மழை மேகமே வருகவே, மலையை ஒத்த மாளிகைகள் சூழ்ந்த குன்றத்தூர் தலைவரே வருக வருகவே.

கருத்துரை: பிரமனும், திருமாலும், பரமசாரியர்களும், சந்நியாசியர்களும், வணிகர்களும், அரசர்களும் அவரவர் களுக்குரிய கோல்களைக் கொள்ள, மாடுகளைச் செலுத்தும் சிறிய கோலினைக் கொண்ட வேளாளர் குலத்தில் தோன்றிய அருள்மேகமே வருக வருகவே.

அருஞ்சொற்பொருள் : மலர் ஆதனம் - தாமரை மலர் இருக்கை, சுதரிசனம் - திருமால் கையில் கொண்ட சக்கரத்தின் பெயர், கோல் - கொள்ள, பரமன் யோக தண்டமும், திருமால் அம்பும், பலாசக்கோல் - முள்முருங்கைக் கொம்பு, முந்தூழ் - மூங்கில் கோல், துலாக்கோல் - தராசுக்கோல், மோலி - திருமுடி, சிறுகோல் - உழும்பொழுது மாடு ஓட்டும் கோல். (இப்பாடலில் குறிப்பு ஒன்று அமைந்துள்ளது - வேளாளர்கள் உழவுத் தொழிலைச் செய்யச் சிறுகோலைக் கைக்கொள்ளவில்லை என்றால், திருமால் உள்ளிட்டவர்கள் தங்களுக்குரிய கோல்களைக் கைக்கொள்ள முடியாது என்பதாம் அது. இத்துடன் உழவன் சேற்றில் கால் வைக்கவில்லை என்றால் ஊரார்சோற்றில் கைவைக்க முடியாது என்ற பழஞ்சொல்லை ஒப்பிடலாம்.

எள்ளும் திறத்துப் பரசமயர்
ஏறு வருக தேறுதலில்
எங்கள் உணர்வின் கணும்மதுரித்
தினிக்கும் இருங்கோல் தேன்வருக
தெள்ளும் புலத்தர் பெறுகாம
தேனு வருக அருகந்தர்
சிந்தா மணியைப் பொருட்படுத்தாச்
செல்வச் சிந்தா மணிவருக
உள்ளும் அவருக் கெய்ப்பிடைவைப்
பொத்துள் எழும்ஒள் ஒளிவருக
ஒழியாப் பத்திக் கடல்வருக
உலவா தமைந்த சிவபோகம்
கொள்ளும் சைவப் பயிர்வளர்க்கும்
கொண்டல் வருக வருகவே
குன்றைப் பொருமா ளிகைக்குன்றைக்
கோமான் வருக வருகவே. 10

பொழிப்புரை: இகழ்வதற்குரிய தன்மை கொண்ட பிறசமயத்தவர்கள் அஞ்சும்படியான ஆண் சிங்கமே வருக, தெளிதல் இல்லாத எம்முடைய உணர்விற்கு இன்பமாக இனிக்கும் கொம்புத் தேனே வருக, தெளிந்த அறிவினை உடைய அறிஞர்களால் அடைவதற்கு உரிய காமதேனுவே வருக, சமணரின் சிந்தாமணி என்னும் நூலை ஒரு பொருளாகக் கருதாதபடி இலக்கியச் செல்வமாக அமைந்த சிந்தாமணியே வருக. அன்பினால் நினைந்து உருகுபவர்களுக்குத் தளர்கின்ற பொழுது, உற்றுழி உதவும் சேமநிதியைப் போன்று எழுகின்ற ஒளியே வருக, அழியாத பத்திக் கடலே வருக, குறையாது சிவமாகிய விளைவைத் தருகின்ற சைவப் பயிர்களை வளர்க்கும் மேகமே வருக, மலையை ஒத்த மாளிகைகள் சூழ்ந்த குன்றத்தூர் தலைவரே வருக வருகவே.

கருத்துரை: பிற சமயத்திற்குச் சிங்கமே, அறியாத உள்ளத்திற்குக் கொம்புத்தேனே, அறிவுடையவர்களுக்குக் காமதேனுவே, சமணர்களின் சிந்தாமணியை வெறுத்திடச் செய்யும் செல்வச் சிந்தாமணியே, தளர்ச்சி உடையவர்களுக்கு வைப்புநிதி போன்ற ஒளியே, பத்திக் கடலே, சைவப் பயிர் வளர்க்கும் மேகமே வருக வருகவே.

அருஞ்சொற்பொருள் : ஏறு - சிங்கம், மதுரித்து - இன்பம் செய்யும், கோல்தேன் - கொம்புத் தேன், அருகந்தர் - சமணர், எய்ப்பு - தளர்ச்சி, வைப்பு - சேமநிதி, உலவாத - நீங்காத.

வாரானைப் பருவம் முற்றிற்று.

7. அம்புலிப் பருவம்

(நிலவைப் பார்த்து அழைத்துக் குழந்தையுடன் ஆடும்படிக் கேட்பது அம்புலிப் பருவமாகும். குழந்தை பிறந்த பதினெட்டாவது மாதத்தில் நிகழும் நிகழ்ச்சி. பிற பருவங்களைப் போலக் குழந்தையை நோக்கிக் கூறாமல் அம்புலியை நோக்கிக் கூறுவதாகும்.)

பாடுமதி யோன்எனப் படுதலால் வாய்விண்டு
பதினா யிரம்சுரும்பர்
பண்பாட இன்நறவு வீசுகமு நீர்மாலை
பாங்குற உவந்திடுதலால்
நீடுசுடர் படுசம்பு வொடுகூட லால்கலை
நிரம்பத் தழைத்திடுதலால்
நெடியஅம் பரவைஅல றத்தோன்ற லால்என்றும்
நிகழ்சாந்த மேஉடைமையால்
வாடுதலில் சேக்கிழான் ஆதலால் நகும்ஏர்
வளம்தழுவ லால்எம்ஐயன்
மானுதல் தெரிந்துவரு கென்றழைத் தான்மழைபெய்
வானம்கிழித்து மேல்போய்
ஆடுகொடி மாளிகைக் குன்றைநகர் ஆளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருள்உருத் தேசுபொலி அருள்மொழித் தேவனுடன்
அம்புலீ ஆடவாவே. 1

பொழிப்புரை: சந்திரனே, நீ பெருமை மிக்க மதி (அறிவுடைய) என்னும் பெயரை உடையதைப் போல (எம் சேக்கிழாரும் பெருமை பொருந்திய அறிவுடையவர்) உன்னைக் கண்டு ஆம்பல் மலர் மலர்வது போலச் (சேக்கிழாரும் அளவற்ற எண்ணிக்கை கொண்ட வண்டுகள் பண் ஒலிக்கத் தேன்சொட்டும் நறுமணம் மிக்க ஆம்பல் மலர் மாலையை அணிந்திருப்பவர்), நீ இறைவனின் சடைமுடிமேல் எந்நாளும் தங்கி மகிழ்தல் போலச் (சேக்கிழாரும் அளவற்ற பேரொளி உடைய இறைவனின் திருவடியை அடைந்து இன்புறுவார்), நீ பதினாறு கலைகளைக் கொண்டு நிறைந்து ஒளிபெற்று விளங்குதல் போல, (சேக்கிழாரும் பல கலை அறிவும் அதன் பயனாக விளங்கும் அருள் உணர்வும்

நிரம்பப் பெற்றவர்), நீண்ட கடல் ஒலிக்க நீ தோன்றுவது போலச் (சேக்கிழாரும் பிறசமயத்தார் அவையைத் தன் சமய வாதத்தால் அலறும்படி செய்பவர்): நீ எப்பொழுதும் குளிர்ந்திருப்பது போலச் (சேக்கிழாரும் சாந்த குணம் உடையவர்), நீ இடப ராசிக்கு உரியது போலச் (சேக்கிழாரும் ரிஷபக் கொடியை உடையவர் ஆவார்), நீ அழகு பொருந்திய அமுதம் உடையது போலச் (சேக்கிழாரும் உழவுத் தொழிலைச் உணவு வளமாம் அமுதத்தை உடையவர்). இத்தகைய ஒப்புமை உடைமையால் உன்னை அழைக்கின்றான், ஆதலால் மழைமேகம் தவழும் விண்ணைக் கிழித்து அதன்மேல் சென்று ஆடும்படியான கொடிகளை உடைய மாளிகைகள் சூழ்ந்த குன்றை நகர்த் தலைவரோடு ஆட வருவாயாக, அருளே உருவாகக் கொண்டு ஞான ஒளியுடன் விளங்கும் அருள்மொழித் தேவருடன் சந்திரனே, நீ ஆட வருவாயாக.

கருத்துரை: அறிவுடையது, ஆம்பல் மலர் மலர்வது, சிவபெருமானின் தலையில் இருப்பது, கலைகள் நிரம்பியது, கடல் ஒலிக்க எழுவது, குளிர்ச்சி உடையது, இடபராசி உடையது, அமுதம் உடையது ஆகிய சந்திரனைப் போலச், சேக்கிழார் அறிவு, ஆம்பல்மாலை, சிவன் திருவடியில் இருத்தல், கலைகளை அறிந்திருத்தல், பிற சமய அவை அலறச் செய்தல், சாந்த குணம், இடபக்கொடி, வேளாண் விளைவாகிய அமுதம் உடைமை ஆகியவற்றால் சந்திரனை ஒத்து விளங்குகிறார் எனக் கூறப்பெற்றுள்ளது. இப்பாடல் சந்திரனுக்கும் சேக்கிழாருக்கும் ஒப்புமை கூறுவதால் சாம (சமம்) உபாயம் அமைந்த பாடல் இது.

அருஞ்சொற்பொருள்: மதியோன் - அறிவுடையவன், பதினாயிரம் - அளவற்ற எண்களைக் குறிப்பது, சம்பு - சிவபெருமான், பரவை - கடல், வாடுதலில் சே - வாடுதல் இல்லாத ரிஷபம் (ராசி), மானுதல் - ஒத்தல்.

மேயஅம் போருகம் எலாம்குவி கரத்தினை
இராமனை அடங்கஅளவா
வியன்சாலி யொடுபொலிய மகிழ்வையால்
ஓர்அறவர் விழியின்வெளி வந்தொளிருவை

பாயபர மன்சடா டவிஅமரும் வரநதிப்
பந்தமுளை நந்தமர்கரப்
பண்ணவனும் மிகையெனப் பல்உயிரும் ஓம்பிடப்
படுகருவி யாய்நின்றனை
நேயமிகும் இவையாதி யால்எங்கள் பெருமானை
நிகரா திராய்அடுக்கு
நிலையேழு கொண்டமையின் உலகேழு மேஎன
நிரம்புபா வலர்புகழுதற்கு
ஆயமணி மாளிகைக் குன்றைநகர் ஆளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருள்உருத் தேசுபொலி அருண்மொழித் தேவனுடன்
அம்புலீ ஆடவாவே. 2

பொழிப்புரை: *சந்திரனே, குளத்தில் இருக்கும் தாமரை மலர்கள் அனைத்தும் குவியும்படியான ஒளிக்கதிரை உடையை, (அதுபோலச் சேக்கிழாரைக் காண்பவர்கள் அனைவரும் கைகளைக் குவித்து வணங்குவர்), நீ உன்னுடைய மனைவிகள் பலரோடும் கூடி வாழாது (அடங்க), பெருமை பொருந்திய உரோகிணியோடு மட்டும் பொலிந்து வாழ்வாய், (எம் சேக்கிழாரும் மனைகள் எல்லாம் அடங்காத வண்ணம் நெற்குவியல்களைக் குவித்து வாழ்பவர்), நீ அத்திரி முனிவரின் கண்ணிலிருந்து ஒழுகிய கண்ணீரால் தோன்றியவன், (எம் சேக்கிழாரும் அறவாழி அந்தணனாகிய இறைவனுடைய திருக்கண் நோக்கால் ஒலிபெற்று வாழ்பவர்), நீ இறைவனின் பரந்த சடையில் அமர்ந்து கங்கையோடு உறவு கொண்டவன் ஆவாய். (அது போல எம் சேக்கிழாரும் வேளாளர் மரபால் (கங்கைகுல மரபு எனும்) மரபினர் ஆவார், நீ உயிர்களைக் காப்பதற்குத் திருமாலும் மிகையானவன் என்று கூறும்படிப் பயிர்களைப் பாதுகாப்பதற்குக் கருவியாய் இருப்பவன். (எம் சேக்கிழாரும் திருமால் காப்பது மிகை என்று நாட்டில் உள்ள மக்களைக் காக்கின்ற முதலமைச்சராய் உள்ளவர்), இவை போன்ற அன்புடைய காரணங்களால் எம் தலைவனை உனக்கு நிகராகக் கொண்டுள்ளாய். ஏழுநிலை மாளிகைகளைக் கொண்டிருப்பதால் ஏழு உலகங்களை ஒத்துள்ளது என்று நூல்கள் பலவற்றையும் கற்ற புலவர்கள் பராட்டுவதற்குரிய மாளிகைகள் சூழ்ந்த குன்றை நகர்த்*

தலைவருடன் விளையாட வருவாயாக, அருளே உருவாகக் கொண்டு ஞான ஒளியுடன் விளங்கும் அருண்மொழித் தேவனுடன் விளையாட வருவாயாக.

கருத்துரை: *சந்திரன் தாமரை மலர்களைக் குவித்து, மனைவியராகிய அசுவதி போன்றவரோடு அடங்காது உரோகிணி எனும் அருந்ததியோடு வாழ்ந்து, அத்திரி முனிவரின் கண்ணீர் மூலமாகத் தோன்றி, சிவபெருமானின் சடையில் தங்கித், திருமால் காத்தல் மிகை என்று பயிர்களைக் காத்து விளங்குகிறது.*

அதுபோலப் பிறர் கைகுவித்து வணங்க, மனைகள் தோறும் அடங்க வேளாண்மைத் தொழிலால் நெல்லை நிறைவித்து, அறவாழி அந்தணனாம் இறைவன் திருக்கண்ணால் வளர்ந்து, சடையை உடைய சிவபெருமானின் அருளைப் பெற்று, கங்கைகுல மரபு சார்ந்து திருமால் மிகை என்று கூறும்படி நாட்டுமக்களைக் காத்து விளங்குவதால் சந்திரனை ஒத்து விளங்குகிறார். இத்தகைய ஒற்றுமை கொண்ட சேக்கிழார் அம்புலியைத் தன்னோடு ஆடவருக என்று அழைக்கிறார். இப்பாடலும் சந்திரனுக்கும் சேக்கிழாருக்கும் ஒப்புமை கூறுவதால் சாம உபாயம் அமைந்த பாடலாகும்.

அருஞ்சொற்பொருள்: *அம்போருகம் - தாமரை, விராமனை - பொருந்திய மனையிடம், அடங்க அளவா - அடங்காதவாறு, வியன்சாலி - ஒருவகை நெல், அறவர் - அத்திரிமுனிவர், (தவம் இருந்த இவர் கண்களில் இருந்து ஒழுகிய கண்ணீரில் பேரொளி தோன்றியது. அவ்வொளி திசையெங்கும் பரவி, பத்துத் தேவியர்களின் கருவில் தங்கி பதினெண் கலைகளோடு சந்திரன் தோன்றியது என்பது புராண வரலாறு), வரநதி - கங்கை, பண்ணவன் - திருமால்.*

இரவோன் எனத்திரிவை நீமகாப் பிரபுஎன
எங்கள்ஐ யன்பொலிகுவன்
இகழ்ச்சிசால் கள்வனை உவப்பைநீ உவவாமல்
இவன்வெறுப் பான்ஞான்றும்
உரவோன்எம் வள்ளலே நல்லோன் எடுத்தினி
உரைப்பதெவன் நீஅல்லோனே
உயர்வினால் எமன்வான வன்காண் உரைப்பார்
உனக்கும்ஒரு தானவப்பேர்

பரவோன்அ லாதவன் எனல்குறித் தல்லவோ
பாதிகொண் டான்நின்னைஎம்
பண்ணவனை முழுமையும் கொண்டனன் காண்மணிப்
பணியெனத் தோள்புனைந்த
அரவோன் உணர்ந்திடுதி குன்றைநகர் ஆளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருளுருத் தேசுபொலி அருள்மொழித் தேவனுடன்
அம்புலீ ஆடவாவே. 3

பொழிப்புரை: நீ இரவில் திரிபவன், பிறரிடத்தில் இரந்து உண்ணுபவன் , எம் சேக்கிழாரோ உலகைக் காத்திடும் மகாப்பிரபு எனக் கூறப்படுபவன், நீ இகழ்ச்சி பொருந்திய கள்வனைக் கண்டு (கடகராசியைக்) மகிழ்வாய், எம் சேக்கிழாரோ கள்வனை வெறுப்பவன், எக்காலத்தும் அறிவு வல்லமை உடையவனாகிய சேக்கிழாரை இப்பொழுது அறிவு வல்லவன் என்று கூற வேண்டியது எதற்கு? வேண்டியதில்லை. ஆனால் நீ அறிவு வல்லவன் அல்லாதவன் ஆவாய், சேக்கிழாரைப் பாராட்டிக் கூறுகின்றவர்கள் அவருடைய பெருமை கருதி வானவன் என்றே கூறுவார்கள். ஆனால் உனக்கோ அசுரன் என்ற பொருளுடைய தானவன் என்ற பெயர் உள்ளது. பாம்பினை அணிந்த சிவபெருமான் உன்னை மேலானவன் அல்லன் என்று கருதி அல்லவோ உன் உருவில் பாதியை ஏற்றனன். எம் சேக்கிழாரையோ முழுமையாக ஏற்று அருளினான். இவற்றை யெல்லாம் நன்கு உணர்வாயாக. (இவை எல்லாம் அறிந்தும் உன்னை அழைக்கின்றான்). ஆதலால் எம் குன்றை நகர்த் தலைவனுடன் விளையாட வருவாயக. அருளே வடிவாகக் கொண்டு ஞான ஒளியுடன் விளங்கும் அருள்மொழித் தேவனுடன் சந்திரனே விளையாட வருகவே.

கருத்துரை: சந்திரன் இரவில் தோன்றுபவன், சிவபெருமானிடத்தில் தனக்கு வேண்டியவற்றை யாசித்துப் பெற்ற இரவோன். இரவில் விளங்கும் கள்வரை விரும்புவன் ஆவான். அறிவில் வல்லமை அற்றவன், அசுரன் என்ற பொருளுக்குரிய தானவன் என்ற பெயரைப் பெற்றவன். சிவபெருமானால் முழுமையாக ஏற்றக் கொள்ளப்படாமல் பாதியாகிய பிறைச் சந்திரனாக ஏற்றுக் கொள்ளப்பட்டவன்.

சேக்கிழாரோ வேளாளர் குலத்தில் தோன்றி உயிர்களைக் காக்கும் மகாப்பிரபு ஆவார். கள்வர்களை எக்காலத்தும் விரும்பாதவர், எப்பொழுதும் அறிவு வல்லமை கொண்டு ஞானியாக விளங்குபவர். சிவபெருமானால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப் பெற்றவர். இவ்வாறு சந்திரனுக்கும் சேக்கிழாருக்கும் வேறுபாடு கூறுவதால் பேத உபாயம் அமைந்த பாடலாக இது விளங்குகிறது.

அருஞ்சொற்பொருள்: இரவோன் - இரவில் திரிபவன், யாசகம் வாங்குபவன், கள்வன் - கடகராசி, திருடுபவர், உரவோன் - அறிவு வல்லமை உடையவன், வானவன் - வானத்தில் வாழும் சிறந்தவன், தானவன் - அசுரனுடைய பெயர், பாதி - பிறைச்சந்தின், அரவோன் - பாம்பினை மாலையாக அணிந்தவன்.

சாறுசால் வீதித் திருத்தில்லை அம்பலம்
தன்னில்எஞ் ஞான்றும்நின்று
தாண்டவம் நவிற்றிஉல குய்யச் செயும்பரம
சற்குரவன் இனிதுசெய்யும்
பேறுமே வியஅனுக் கிரகம்முழு தும்பெற்ற
பெரியோன் இவற்குவானோர்
பேணுகுர வன்பாங்கர் நிக்கிரக மேபெற்ற
பேதைநீ மாற்றுயர்ந்து
வீறுசெம் பொன்னோ டிரும்பொத்த போதினும்
மேஒப் புறாமைமண்ணும்
விண்ணும்உண ரும்கருணை நினைஅழைத் தஃதிந்த
விதம்ஓர்ந்து கொடியோடும்வான்
ஆறுதோய் சூளிகைக் குன்றைநகர் ஆளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருளுருத் தேசுபொலி அருள்மொழித் தேவனுடன்
அம்புலீ ஆடவாவே. 4

பொழிப்புரை: திருவிழாக்கள் நிறைந்த வீதிகளைக் கொண்ட தில்லையம்பலத்தில், எப்பொழுதும் நின்றவண்ணம் ஆடல் புரிந்து உலகம் வாழ அருளுகின்ற, மேலான ஞானகுருவாக விளங்கும் நடராசப் பெருமான் வழங்கி அருளும் பேறுகள் அனைத்தையும் சேக்கிழார் பெற்றவர் , சந்திரனே, நீயோ தேவர்கள்

விரும்புகின்ற குருவாகிய வியாழனால் சாபம் பெற்ற பேதை, மேலும் உனக்கும் சேக்கிழாருக்கும் மாற்றுயர்ந்த சிறந்த பொன்னிற்கும் இரும்பிற்கும் உள்ள ஒப்புமை போன்ற ஒப்புமையாகும். இத்தகைய ஒப்பற்ற தன்மைகளை மண்ணகமும் விண்ணகமும் உணரும். சேக்கிழார் தன் கருணையால் உன்னை அழைக்கின்றார், ஆதலால் இதனை நன்கு அறிந்து, ஆகாய கங்கைவரை உயர்ந்திருக்கும் கொடிகள் கட்டியிருக்கும் நிலா முற்றங்கள் சூழ்ந்துள்ள மாளிகைகள் கொண்ட குன்றத்தூர் தலைவரோடு விளையாட வருக, அருளே உருவாகக் கொண்டு ஞான ஒளியுடன் விளங்கும் அருள்மொழித் தேவருடன் நீ விளையாட வருவாயாக.

கருத்துரை: சந்திரன் தேவர்களின் குருவாகிய வியாழனிடம் சாபம் பெற்றவன், இரும்பை ஒத்தவன். சேக்கிழார் தில்லைக் கூத்தனின் முழு அருள் பெற்றவர், செம்பொன்னை ஒத்தவர், சந்திரனின் வேறுபாடு அறிந்தும் அழைக்கின்ற கருணை உள்ளம் கொண்டவர். இத்தகைய பேதங்கள் கூறப்படுவதால் பேதஉபாயம் அமைந்த பாடலாக இது விளங்குகிறது.

அருஞ்சொற்பொருள்: சாறு - திருவிழாக்கள், தாண்டவம் - நடனம், பரமசற்குரவன் - மேலான ஞான ஆசிரியர், அனுக்கிரகம் - அருள், வானோர் பேணு குரவன் - தேவர்கள் விரும்பும் வியாழ பகவான் என்னும் ஆசிரியன், நிக்கிரகம் - சாபம், வான் ஆறுதோய் - கங்கைவரை, சூளிகை - நிலாமுற்றம்.

எம்மைஇனி தாள்பவன் செம்மைமதி யோன்நீ
இயற்கையே வெண்மைமதியோன்
எற்றைக்கும் மிகுதண்மை யுடையரோ டுறவுகொளும்
இயல்பினால் எங்கள்ஐயன்
வெம்மையுடை யவர்களொடு மதிதொறும்
விராய்உறவு கொள்ளுவோன்நீ
வியக்கும்ஒரு தன்மையோன் எங்கள்கிரு பாமூர்த்தி
மெய்ம்மைஒரு கால்வளருவாய்
மும்மையுல கறியஒரு கால்தேய்கு வாய்இவை
முயங்காதொர் கால்ஒழிகுவாய்
மொழியும்நீ இவைஓர்ந்தும் ஆடவா என்றது
முழுக்கருணை காண்எஞ்ஞான்றும்

அம்மைஅனை யார்மருவு குன்றைநகர் ஆளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருளுருத் தேசுபொலி அருள்மொழித் தேவனுடன்
அம்புலீ ஆடவாவே. 5

பொழிப்புரை: எம்மை இனிதாக ஆளுகின்ற சேக்கிழார், செம்மைப் பொருளாகிய உண்மைப் பொருளை அறியும் அறிவுடையவர், சந்திரனே. நீயோ இயற்கையாக வெள்ளை அறிவுடையவன் (அறிவற்றவன்), எம் சேக்கிழார்அருள் உள்ளம் படைத்தவரோடு என்றைக்கும் உறவு கொள்பவர். நீயோ திங்கள் தோறும் வெம்மையுடைய பாவியருடன் உறவு கொள்பவன். எம் சேக்கிழார் வியத்தற்குரிய நிலையில் எப்பொழுதும் ஒரு தன்மையாக விளங்குபவர். ஆனால் சந்திரனே, நீயோ மூவுலகும் அறியும்படி ஒரு பட்சத்தில் வளர்வதும், ஒருபட்சத்தில் தேய்வதுமாய் இருப்பவன். மேலும் அமாவாசையில் முழுவதும் அழிந்து விடுவாய். இவற்றை எல்லாம் அறிந்தும் தன் முழுக்கருணையால் சேக்கிழார் உன்னை ஆடவா என்கின்றார். எக்காலத்தும் உலக அம்மையை ஒத்து அன்பு செலுத்துகின்றவர்கள் வாழுகின்ற குன்றத்தூர் நகரத் தலைவருடன் அம்புலீ ஆடவா, அருளையே உருவாகக் கொண்டு ஞான ஒளியுடன் விளங்கும் அருள்மொழித் தேவனுடன் அம்புலியே ஆடவா.

கருத்துரை: சந்திரன் இயற்கையாக வெண்மை அறிவுடையவன் (வெள்ளை அறிவு - அறிவற்ற தன்மை) , திங்கள் தோறும் திங்கள் தோறும் சூரியன் உள்ளிட்ட ஒன்பது கோள்கள் மேஷம் முதலிய பன்னிரண்டு ராசிகள் ஆகிய வெப்பம் உடைய பாவியர்களோடு உறவு கொள்பவன், ஒரு பட்சத்தில் வளர்ந்தும் ஒரு பட்சத்தில் தேய்ந்தும், அமாவாசையில் முழுவதும் அழிவதும் உடையவன்.

சேக்கிழார் எப்பொழுதும் செம்பொருளாகிய உண்மைப் பொருளை அறிந்தவர். எப்பொழுதும் அருள் உள்ளம் படைத்தவரோடு உறவு கொள்பவர், எப்பொழுதும் ஒரே தன்மையில் இருப்பவர், இத்தகைய வேற்றுமைகளைக் கூறுவதால் இப்பாடலும் பேத உபாயம் அமைந்த பாடலாகும்.

அருஞ்சொற்பொருள்: செம்மைமதி - உண்மைப் பொருளாம் சிவபெருமானை அறிந்த அறிவு, வெண்மை - மதி, வெள்ளை அறிவு - அறிவற்ற தன்மை, வெம்மை உடையவர் - சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது என்ற ஒன்பது கோள்கள், இடபம் , மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சி, தனுசு, மகரம், கும்பம், மீனம் எனும் பன்னிரெண்டு ராசிகள், ஆகிய இவற்றோடு கூடிச் சந்திரன் உலாவுவதால் கால மாற்றமாகிய பகையை ஏற்படுத்துகிறவர், கிருபா மூர்த்தி - கருணை வள்ளல், ஒருகால் - பட்சம், அமாவாசை, ஓர்ந்து - உணர்ந்து.

குறையுடைய பாம்பொன் றெடுத்துண் டுமிழ்ந்திடக்
குலைகுலைந் துழல்வைஎங்கள்
கோமான் பெருங்கல்வி ஆட்சியை உணர்ந்துசெங்
குருமணிச் சூட்டுமோட்டு
நிறைவுகெழு துத்திப் பணாடவிப் பாம்பொன்று
நேரடைய மன்றுள்நாளும்
நினையீன்ற தொருபரவை இலகுவே பாரமென
நெல்நுனைத் தனையும்எண்ணேன்
முறையின்ஒரு சிறுநூக்கில் எழுபரவை யும்புக
முடித்துற நிறுத்தான்இவன்
மொழிஎங்கள் தம்பிரான் வல்லபம் உணர்ந்திலைகொல்
முத்தமா ளிகைவானயாற்
றறைமணித் திடராய குன்றைநகர் ஆளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருள்உருத் தேசுபொலி அருள்மொழித் தேவனுடன்
அம்புலீ ஆடவாவே. 6

பொழிப்புரை: சந்திரனே, உடல் குறைவு உடைய இராகு, கேது பாம்புகளால் உண்ணப் பட்டு, பிறகு உமிழப் படுவதால் நிலை குலைந்து அஞ்சுவாய். எம் சேக்கிழார் பெருங்கல்வியால் உலகம் எல்லாம் ஆட்சி செய்வார், அதனை நினைந்து, சில சிவந்த மணிகளைத் தலையில் கொண்டதும், புள்ளிகளை உடைய படத்தினைக் கொண்டதும், ஆயிரம் தலைகளைக் கொண்டதும் ஆகிய, சிறந்த அறிவுடைய ஆதிசேடன் என்னும் பாம்பு,

சேக்கிழாரின் முன்னேவர அஞ்சும். உன்னைப் பெற்றெடுத்த ஒரு கடல், மிக எளிமையுடையதே அன்றிப் பளுவுடையது என்று நெல்லின் முனை அளவும் எண்ணமாட்டேன். எங்கள் சேக்கிழார் ஒரு சிறிது பாடலில் ஏழு கடலையும் அடங்குமாறு பாடியமைத்த பெருமை உடையவர். இத்தகைய சேக்கிழாரின் பெருமைகளை எல்லாம் உணராது நீ இருக்கின்றாய். (இனி உணர்ந்து) முத்துக்கள் பதித்த மாளிகைகள் ஆகாய கங்கைக் கரையில் மேடாக விளங்கும், வளம் பொருந்திய குன்றைநகர்த் தலைவனோடு ஆடவருக, அருளே வடிவாக ஞான ஒளியுடன் விளங்கும் அருள்மொழித் தேவருடன் அம்புலி ஆட வருகவே.

கருத்துரை: சந்திரன் இராகு கேதுகளால் உண்டு, உமிழப்பட்டு நிலைகுலைந்து வருந்தும். சந்திரனை ஈன்றது ஒருகடல்.

சேக்கிழாரின் ஆளுமைத் திறத்தால் ஆதிசேடன் என்ற பாம்பு அவர்முன் வர அஞ்சும். தன் நூலில் ஒரு பாடலில் (தடுத்தாட் கொண்ட புராணம், பா. 148) ஏழு பரவையாம் கடலை அடக்கிப் படைத்து மொழிந்தவர். இத்தகைய வேறுபாடுகளைக் கூறுவதால் பேதஉபாயம் என்ற தன்மை அமைந்த பாடல் இது.

அருஞ்சொற்பொருள்: உழல்வை - திரிவை, நாணும் - வெட்கப்படும் (ஆதிசேடன் என்னும் பாம்பு - பாணினி என்ற முனிவரின் வடிவு என்பர். எனவே பேரறிவு படைத்த பாம்பு சேக்கிழார் முன் வர நாணிற்று. சந்திரன், இராகு கேது பாம்பால் நிலை குலைந்தது. ஆனால் ஆதிசேடன் என்ற பாம்பு சேக்கிழார் முன் வர நாணமுற்றது. இது வேற்றுமையாகும்). இலகு - இலேசானது. சந்திரன் கடலில் தோன்றியதில் அக்கடலிற்குப் பெருமையில்லை. ஏனென்றால் சந்திரன் மட்டும் அல்லாது காமதேனு, நஞ்சு, இலக்குமி ஆகியவைகளும் தோன்றியதால், சந்திரனை ஈன்ற கடல் பெருமை உடையது அன்று. நூக்கில் - பாட்டில், எழுபரவை - பரவை என்ற ஏழு சொற்கள், (தடுத்தாட் கொண்ட புராணத்தில் 148-ஆம் பாடலாகிய பேர்பரவை என்று தொடங்கும் பாடலில் இடம் பெற்றுள்ளது) வல்லபம் - வல்லமை, திடல் - மேடு.

செந்தமிழ்ச் சங்கத்து முதன்மையோன் அன்பன்ஐந்
திணையென நவின்றநூலின்
செப்பய விதிப்படி கரிகுழைத் தெழுதுகண்
செய்யவாய் வெண்நகைநலார்
முறிவற வணங்குதோ றெருவிடுத லால்வளரும்
மொய்ம்பு பெற்றனைஎநாளும்
மொய்த்தஎரு விடுதல்அத னால்வளர்தல் உழவுதொழில்
முயல்இவன் காட்டுதொழிலே
மறிவரிவ இந்நன்றி உள்உணர்ந் தனைஎன்னில்
வாராதிருப்பை கொல்லோ
மதியோன் எனும்பெயர் குறிப்புறா மல்கவிக
மகன்வாதி வாக்கிஆய
அறிவர்கழ கம்பரவு குன்றைநகர் ஆளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருளுருத் தேசுபொலி அருள்மொழித் தேவனுடன்
அம்புலீ ஆடவாவே. 7

பொழிப்புரை: சந்திரனே, முழுமுதல் பரம்பொருளாகிய இறைவன் எல்லாக் கலைகளும் நிறைந்து விளங்கும் தமிழ்ச்சங்கத்திற்குத் தலைமை தாங்கி , அன்பின் ஐந்திணை என்று தொடங்கும் இறையனார் களவியல் என்னும் நூலைச் செய்தருளினார். அந்நூலில் கூறிய அக இலக்கணப்படி , மையில் குழைத்து எழுதிய கண்களை உடையவர்களும், சிவந்த வாயினை உடையவர்களும், வெள்ளிய பற்களை உடையவர்களும் ஆகிய பெண்கள், தங்களுடைய மன வருத்தம் நீங்குமாறு, (பிறைதொழுதல் என்பதற்கேற்ப)ச் சந்திரனே, உன்னை வணங்கும் தோறும் எருவால் உருவாக்கப் பட்ட விராட்டிகளை எறிய, அதனால் நீ மேலும் மேலும் வளரும் நிலையைப் பெற்றினை. அது எருவிடுதலால் பயிர் வளரும் நிலையினை வேளாளர் குடியில் தோன்றிய சேக்கிழார் உனக்குக் காட்டிக் கொடுத்ததன் பயனே ஆகும். நீ இந்த உதவியை மறவாது இருப்பாயானால், அவர் அழைக்க நீ வாராதிருப்பாயோ, வாராதிருக்க மாட்டாய், மதி எனும் பெயரை மட்டுந்தான் பெற்றுள்ளாய். ஆனால் சேக்கிழார் அப்பெயரை வைத்துக் கொள்ளாமலே கவி, கமகன், வாதி, வாக்கியப் புலவர் என்ற

குழுவினர் வணங்கத் தக்க புலமை அறிவு உடையவராய் உள்ளார். அத்தகைய குன்றை நகர்த் தலைவனுடன் விளையாட வருக. அருளே உருவாக ஞான ஒளியுடன் விளங்கும் அருள்மொழித் தேவருடன் விளையாட வருக.

கருத்துரை: *இறைவன் தமிழ்ச் சங்கத்தில் அருளிய இறையனார் களவியல் நூலின்படி பிறைதொழும் மகளிர் எருவிடுதலால் சந்திரன் வளர்ந்தவன். எருவிடுதலால் வளர்தல் உண்டு என்பதை , வேளாளர் உழவுத் தொழில் மூலம் சேக்கிழார் காட்டியதால் சந்திரனுக்குப் பயன் கிடைத்தது. இந்த உதவியை நினைத்தால் சந்திரன் வாராது இருக்கலாமோ. நால்வகைக் கவியிலும் வல்ல புலவர்கள் போற்றும் குன்றையூர் தலைவரோடு விளையாட வருக. இது சேக்கிழாரின் பெருமை கூறிச் சந்திரனுக்குப் பெருமை அளிப்பதால் தானத் தன்மை அமைந்த தான உபாயப் பாடல்.*

அருஞ்சொற்பொருள்: *நவின்ற நூல் - இறையனார் அகப்பொருள், கரி - கண்மை, எருவிடுதல் - பிறைதொழுதலில் பெண்கள் எரு (விராட்டியை) எறிதல், மொய்ம்பு - பலன், இவன் - வேளாளர் குலச் சேக்கிழார், கவி - ஆசுகவி, சித்திரகவி, வித்தாரகவி, மதுரகவி என்ற நான்கு கவிகளைப் பாடும் புலவர், கமகன் - அரிய பொருளை எளிமையாகக் காட்டும் புலவர், வாதி - ஏது, மேற்கோள் ஆகியவற்றைக் காட்டிப் பிறர் கருத்தை மறுத்துத் தன் கருத்தை நிறுவும் கவிஞர், வாக்கி - அறம் , பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் சுவைபட விரித்துரைப்பவர் கழகம் - சபை.*

பெருநாவ லோஎனும் முழக்கறா மென்பால்
  பிறங்குபயிர் கொடிசெடிஎலாம்
பேணும் கருக்கொள்ள நீஉப கரித்தல்உள்
  பேணா திருந்தான்அலன்
திருநாவ லூரர்சீ காழியார் கூன்அறத்
  திருவாய் மலர்ந்ததொப்பச்
செயிர்கொள்நின் கூன்ஒழிப் பான்வாய் மலர்ந்துகூன்
  செய்யுளினும் உறவைத்திலான்

ஒருநாவ லொடுபெயர் பெறும்பொலத் தினும்அருமை
உறநவில் புராணத்தினோர்
ஒப்பிலா எங்கள்பெரு மான்நட்பு மதிநிற்
குயிர்க்குறுதி செய்வதாகும்
அருநாவ லோர் பரவு குன்றைநகர் ஆளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருளுருத் தேசுபொலி அருண்மொழித் தேவனுடன்
அம்புலீ ஆடவாவே. 8

பொழிப்புரை: உழவர்கள் எருதினைக் கொண்டு உழவுத்தொழில் செய்யும் பொழுது, எருதுகளை ஓட்ட நாவலோ என்று ஒலிக்கும் ஒலியானது நீங்காத மருத நிலத்தின் செடி, கொடிகள் எல்லாவற்றிலும் கரு தோன்றுமாறு, உன்னுடைய குளிர்ச்சி பொருந்திய ஒளிக்கதிர்கள் உலவுதலை, எம் தலைவராம் சேக்கிழார் தம் மனத்தில் மறந்து விட்டாரில்லை. திருநாவலூர்ச் சுந்தரரும், சீகாழி திருஞானசம்பந்தரும் பறரின் கூன் நீங்குமாறு திருவாய் மலர்ந்ததைப் போல, தம் பாடலால் சேக்கிழார் பெருமானும் உன்னிடத்தில் பொருந்தியிருக்கின்ற கூனையும் தீர்த்து வைப்பார். மேலும் சாம்புநதம் என்னும் பெயரைப் பெற்ற பொன்னைக் காட்டிலும் உயர்ந்தது என்று சொல்லிப் புகழும்படியான, திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டர் புராணம் என்ற நூலில் ஒரு கூன்கூட வைக்காது பாடியுள்ளார். ஆதலால் அவரை விரும்ப நீ நட்புக் கொள்வாயாக. அந்த நட்பு உன்னுடைய கூனைப் போக்குவதோடு, உன் வாழ்க்கைக்கு உறுதிப் பொருளையும் தரும். ஆதலால் நாவலர்கள் போற்றும் குன்றையூர்த் தலைவனோடு ஆட வருவாயாக. அருளே உருவாகக் கொண்டு ஞான ஒளியுடன் விளங்கும் அருள்மொழித் தேவருடன் அம்புலியே ஆட வருவாயாக.

கருத்துரை: மருத நிலத்தின் செடி, கொடிகள் எல்லாம் கரு கொள்ள, சந்திரனின் ஒளி உதவுகிறது. இதனைச் சேக்கிழார் அறிந்ததால் சுந்தரரும், ஞானசம்பந்தரும் பிறர் கூனை நீக்கியது போல, சந்திரனே உனது கூனையும் சேக்கிழார் நீக்குவார். தாம் பாடிய திருத்தொண்டர் புராணத்தில் செய்யுள் உறுப்புகளில் ஒன்றான தனிச் சொல் என்பது விட்டிசை கூன் தனிநிலை என்று கூறப்படும். அத்தகைய கூன் உறுப்பு இல்லாது சேக்கிழார்

பாடியுள்ளார். ஆதலால் அவருடன் நட்புக் கொண்டு உன் கூனை நீக்கிக் கொள்ள அம்புலியே, ஆட வருகவே. இது சேக்கிழாரின் பெருமை கூறியதால் பெருமை தரப்பட்ட தான உபாயம் அமைந்த பாடலாகும்.

அருஞ்சொற்பொருள் : நாவலோ - உழவுத் தொழிலில் எருது ஓட்டும் ஒலி, உபகரித்தல் - உதவுதல், திருநாவலூரர் - சுந்தரர், இவர் பரவையார் வீட்டில் ஏவல் செய்து கொண்டிருந்தவர்களின் கூனையும் குருட்டையும் நீக்கினார் என்பது வரலாற்றுச் செய்தி. சீர்காழியார்- திருஞானசம்பந்தர். இவர் கூன்பாண்டியனாம் நின்றசீர் நெடுமாறப் பாண்டியனின் கூனை நீக்கியவர், கூன் - செய்யுள் உறுப்பு, பொலத்தினும் - பொன்னின் வகையான சம்பிரதம், நட்புமதி - நட்பைப் பெற்றுக்கொள்.

தலைமயிர் பறித்தும்அரை யில்பாய் உடுத்தும்
தழைத்திரள்கை வைத்தும்உழலும்
சழக்கர்மத மாம்களங் கம்பரவல் நீக்கிஉயர்
சைவநிலை எங்கும்ஆக்கும்
நிலைவுடைய தம்பரான் நின்களங் கம்போக்கி
நிகழ்புனித மேஆக்குவான்
நீடும்இதன் மேல்உறுதி என்னைகொல் நினக்கின்னும்
நேர்அளப் பரியசான்றோர்
கலைபலவும் ஓர்உருக் கொண்டனையர் அருள்நோக்கு
காதலார் நிற்கவும்நினைக்
கடைக்கணித் தாடவா என்றழைத் ததுபெருங்
கருணையே கங்கையினும்மிக்
கலைமருவு புனல்வளக் குன்றைநகர் ஆளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருளுருத் தேசுபொலி அருள்மொழித் தேவனுடன்
அம்புலீ ஆடவாவே. 9

பொழிப்புரை: தம் தலைமயிரைப் பறித்தும், இடுப்பில் கோரைப்பாயினை உடுத்தியும், மயிற்பீலிக் கற்றைகளைக் கையில் ஏந்தியும் திரிகின்ற வஞ்சகர்களாம் சமண சமயத்தவரின் கறைகள் வளர்வதைப் பரவாமல் தடுத்து, உயர்ந்த சைவக் கொள்கையின்

கருத்துகள் எவ்விடத்தும் பரவும்படிச் செய்யும் தன்மை உடையவர் சேக்கிழார் பெருமான். அவர், சந்திரனே உன்னிடத்தில் உள்ள கறை பரவுதலையும் நீக்கி, எக்காலத்தும் உனது கலைகளின் ஒளி குறையாமல் ஆக்குவார். இதற்குமேல் உனக்கு உறுதி உள்ளதோ? (யாதுமில்லை). ஒப்பற்ற ஒழுக்கங்களைக் கொண்ட சான்றோர்களும், பல கலைகள் வடிவடுத்தது போன்ற நிறைந்த கல்வியறிவு பெற்ற சான்றோர்களும், அருளையே விரும்ப நிற்கும் அடியார்களும் தன்னைக் காணுவதற்குக் காத்துக்கொண்டு வெளியில் நிற்க, அவர்களை வருக என்று அழைக்காது, உன்னை வருக என்று சேக்கிழார் அழைத்தது அவரின் பெருங் கருணையாகும். கங்கையாற்றினும் மிகுதியான அலைகளை உடைய பாலியாற்றின் வளங்கொண்ட குன்றையூர்த் தலைவருடன் ஆட வருகவே. அருளே வடிவாகி ஞான ஒளி விளங்கும் அருள்மொழித் தேவருடன் அம்புலியே ஆட வருகவே.

கருத்துரை: சமணர்களின் களங்கத்தைச் சேக்கிழார் போக்கியதைப் போலச் சந்திரனே உன்னுடைய களங்கத்தையும் போக்குவார். இதைவிடப் பெரிய நன்மை உனக்கு வேறு என்ன வேண்டும்? சான்றோர்கள், அறிஞர்கள், அடியவர்கள் ஆகியோர் தம்மைப் பார்க்க ஆவலுடன் காத்திருக்க, பெருங் கருணையுடன் சேக்கிழார் உன்னை அழைக்கின்றார். ஆகவே அம்புலியே ஆட வருகவே. இப்பாடலில் சேக்கிழாரின் பெருமை தானமாகக் கூறப்பெற்றதால் தான உபாயம் அமைந்த பாடல் இது.

அருஞ்சொற்பொருள்: பாய் - கோரைப்பாய், தழைத்திரள் - மயிற்பீலி, நேர் அளப்பரிய சான்றோர் - ஒப்புமை இல்லாத ஒழுக்கம் கொண்ட சான்றோர், அருள் நோக்கு காதலால் - சிவபெருமான் அருளை நோக்கி நின்ற அடியவர்கள், கடைக்கணித்து - கருணையோடு.

காதலொடு வாளென் றழைத்தவுடன் வந்திலன்
கருதியதென் என்றுசற்றே
கறுக்கச் சிவத்தல்கூ டாதுநாண் பூண்டான்
களங்கத் திறத்தின்என்று

போதலுற யாம்புகன் றேம்இனி முனிந்திடில்
போக்குவே றில்லையாகும்
புன்மையான் இவன்என்றொர் கவிகூறின் முக்கண
புராதனனும் உனைவெறுப்பன்
வீதலுற லேஅன்றி வேறொன்றும் உள்ளதுகொல்
விளைகுவ தனைத்தும்ஓர்ந்தும்
மேயினேன் மேயினேன் என்றடையின் நலம்உண்டு
மேல்உலக வாழ்க்கையோர்மிக
காதலுற விழைதரும் குன்றைநகர் ஆளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருளுருந் தேசுபொலி அருள்மொழித் தேவனுடன்
அம்புலீ ஆடவாவே. 10

பொழிப்புரை: *அன்புடன் விளையாட வருக என்று அழைத்தவுடன் சந்திரனே நீ வரவில்லை. நீ உள்ளத்தில் நினைத்தது என்ன என்று எம் தலைவர் சேக்கிழார் கோபிக்க, நாங்கள் அவரை நோக்கிக் கோபிக்கக் கூடாது என்று கூறி, சந்திரன் தன்பால் உள்ள களங்கத்தால் வருவதற்கு வெட்கப் படுகிறார் என்று அமைதிப் படுத்தியுள்ளோம். இனியும் சேக்கிழார் கோபிப்பாரேல் நீ தப்புவதற்கு வேறு வழி இல்லை. சந்திரனாகிய நீ இழிந்தவன் என்று அவர் ஒரு பாடலைப் பாடினால் மூன்று கண்களை உடைய சிவபெருமானும் உன்னை வெறுப்பான். அவ்வாறு வெறுத்தால் நீ அழிவது அன்றி வேறில்லை. ஆதலால் பின்னர் வருவதை நினைந்து வந்தேன் வந்தேன் என்று கூறி, இவரிடம் வந்தால் உனக்கு நலம் உண்டாகும். மேலுலகத்தில் உள்ள வானவரும் மிக்க அன்போடு விரும்புகின்ற குன்றையூர்த் தலைவருடன் சந்திரனே விளையாட வருக. அருளே வடிவாகக் கொண்டு ஞான ஒளியுடன் விளங்கும் அருள்மொழித் தேவருடன் விளையாட வருகவே.*

கருத்துரை: *சந்திரனே, அன்புடன் உன்னை வா என்று அழைத்தும் வாராதிருந்ததால், சினங் கொண்ட சேக்கிழாரை உன்*

நிலை கூறி அமைதிப் படுத்தினோம். இனியும் வாராதிருந்தால் அவர் கோபம் கொள்வார். உனக்குத் துன்பம் நேரும். சேக்கிழார் ஒரு பாடலால் உன்னை இழிந்தவன் என்று பாடினால் சிவபெருமானும் வெறுப்பார். ஆதலால் இவற்றை எல்லாம் உணர்ந்து குன்றையூர்த் தலைவருடன் ஆடவருக. இதில் அம்புலி ஆட வரவில்லை என்றால், சேக்கிழாரும் சிவபெருமானும் வெறுக்க, சந்திரனுக்கு அழிவு உண்டாகும் என்று தண்டனை கூறியதால் தண்ட உபாயம் அமைந்த பாடல் இது.

அருஞ்சொற்பொருள்: கருக்க - கோபிக்க, முனிந்திடில் - சினமுற்றால், புன்மையான் - தாழ்ந்தவன், முக்கண் புராதனன் - சிவபெருமான், வீதல் - அழிதல், மேவினேன் - வந்தேன்.

அம்புலிப் பருவம் முற்றிற்று.

8. சிற்றில் பருவம்

(சிறு - இல் - சிறுவீடு எனப் பொருள் படும். இப்பருவம் முதல் மூன்று பருவங்கள் ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்களாகும். சிறு பெண்கள் மணலாலும் கற்களாலும் சிறுவீடு கட்டி விளையாடும் பொழுது, பாட்டுடைத் தலைவர்களாகிய ஆண்பால் சிறுவர்கள் அதனைக் காலால் தள்ளிக் கலைத்து விளையாடும் விளையாட்டாகும். அவ்வாறு ஆண்கள் சிறுவீட்டைக் கலைக்கும் பொழுது அதனைக் கண்ட பெண்கள் எங்கள் சிறுவீட்டினைச் சிதைக்காதே என்று வேண்டிக் கொள்ளும் பருவமாகும். குழந்தையின் மூன்றாம் ஆண்டில் இந்நிகழ்ச்சி நடைபெறும்.)

வாரும் திருவீ தியின்ஒருசார்
வண்ணித் திலங்கள் கொடுமுயன்றில்
வகுக்கும் திறத்தே அறிவுசெலும்
மாண்பால் நினது வரவுணரா
தாரும் இருக்கை எழாதிருந்தோம்
அறிந்து தருக்கி இருந்திலமால்
அண்ணல் அஃதுள் கொண்டுபகை
அமையப் பாராட் டுதல்அழகோ
ஒரும் புகழ்கற் பகத்தளிகள்
ஒருங்கு மொய்ப்ப தெவன்என்றே
உம்பர் நடுங்கி நிலைகுலைய
ஒருவேற் றுமையும் உணர்வரிதாச்
சேரும் பொழில்தண் டகநாடா
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்வம் செருக்கு குன்றையருள்
செல்வா சிற்றில் சிதையேலே. 1

பொழிப்புரை: நீண்ட அழகிய வீதியின் ஒரு பக்கத்தில் செழுமையான முத்துக்களை முயன்று கொண்டு வந்து, சிறுவீடு கட்டும் திறத்தில் எங்கள் அறிவு சென்ற காரணத்தால் சேக்கிழார் பெருமானே, உமது வரவைக் காணாமையால் பெண்களாகிய நாங்கள் எழுந்து நில்லாது இருந்தோம். அஃதல்லாமல் செருக்குக்

கொண்டு எழாது உட்கார்ந்திருக்கவில்லை. நாங்கள் செருக்குக் கொண்டு உட்கார்ந்திருந்ததாக எங்கள் மீது பகைகொண்டு, அதற்காக நாங்கள் கட்டிய வீட்டை அழிக்க முற்படுவது அழகாகுமோ? புகழுடைய கற்பக மரத்தில் பூவுலகத்து வண்டுகள் கூடி மொய்த்தலால் என்ன தீங்கு நிகழுமோ என்று தேவர்கள் அச்சம் கொண்டு வருந்தும் வண்ணம், விண்ணில் உள்ள கற்பக மரத்திற்கும் தொண்டை நாட்டில் உள்ள மரங்களுக்கும் வேற்றுமை காணமுடியாது, தொண்டை நாட்டில் உள்ள மரங்கள் விண்ணுலகம் வரை சென்று, உயர்ந்து வளரும்படியான சோலைகள் சூழ்ந்த தொண்டை நாட்டின் தலைவரே, அறிவில் சிறியோர்களாகிய எங்கள் சிறு வீட்டைச் சிதையாது அருள்வாயாக. பொருள் செல்வத்தால் நிறைந்து பெருமிதம் கொண்டு விளங்கும் குன்றத்தூர் வாழும் அருட்செல்வரே, எம் சிறுவீட்டைச் சிதையாது அருள்வாயாக.

கருத்துரை: சிறுமிகளாகிய நாங்கள் கட்டும் சிறுவீட்டில் எங்கள் நினைவைச் செலுத்திக் கொண்டிருந்ததால், தாங்கள் வருவதை அறியாது எழுந்திராமல் உட்கார்ந்திருந்து விட்டோம். எனவே அதனைப் பகையாகக் கருதுவது உமக்கு அழகோ? விண்ணுலகத்துக் கற்பக மரங்களில் மண்ணுலக வண்டுகள் மொய்ப்பது கண்டு, தேவர்கள் அஞ்சும் வண்ணம் மண்ணுலகத்துத் தொண்டைநாட்டு மரங்கள் விண்ணுலகம் வரை உயர்ந்து வளரக் கூடிய. வளப்பத்தைக் கொண்ட தொண்டை நாட்டுத் தலைவரே, எங்கள் சிறுவீட்டைச் சிதையாது அருள்வாயாக.

அருஞ்சொற்பொருள் :வாரும் - நீண்ட, நித்திலம் - முத்து, தருக்கு - செருக்கு, தளிகள் - மண்ணலகத்து வண்டுகள், உம்பர் - விண்ணுலகத்துத் தேவர், தண்டகநாடு - தொண்டைநாடு.

ஒழிக்கும் திறத்தில் அருகந்தன்
உறையா நின்ற பாழிகொல்அவ்
உறுவர் அமரும் பள்ளிகொல்மற்
றுள்ளார் ஆய பரசமயர்
பழிக்கும் படிவாழ் இருக்கைகொல்யாம்
பாங்கில் புரிஇச் சிறுவீடு
பதத்தில் சிதைத்தால் வருகின்ற
பயன்புண் ணியமோ புகழ்கொல்லோ

சுழிக்கும் செலவில் பாலிநதி
சுரந்து பாய மாலியானைத்
தொண்டை எடுப்பு மறையும்விதம்
துவன்றி வளர்ந்து விளைசெந்நெல்
செழிக்கும் வயல்தண் டகநாடா
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்வம் செருக்கு குன்றைஅருள்
செல்வா சிற்றில் சிதையேலே. 2

பொழிப்புரை: *அழிப்பதற்குரிய சமணரது அருகக்கடவுள் பொருந்தியிருக்கும் கோயிலோ ? அல்லது அச்சமணமுனிவர்கள் பொருந்தி வாழும் பள்ளிகளோ? அல்லது இகழும் படியான கொள்கைகள் உடைய பிற சமயத்தார் வாழுகின்ற மடங்களோ? சிறுமிகளாகிய நாங்கள் அழகாகக் கட்டியிருக்கும் இச்சிறு வீடுகள்? (அல்லவே). எங்கள் சிறுவீட்டை உமது காலால் அழித்தலால், உமக்கு வருகின்ற பயன் புண்ணியப் பயனும் அன்று, புகழ்ப் பயனும் அன்று, சுழிகளுடன் விரைந்து செல்லும் பாலியாற்று நீரில் பாய்ந்து செல்லும் யானையின், தூக்கிய துதிக்கைகள் மறையும் வண்ணம், செந்நெல் பயிர்கள் நீண்டு நெருங்கி வளர்ந்து விளைந்து செழிக்கும் வயல்களை உடைய தொண்டை நாட்டுத் தலைவரே, சிறுமியர்களாகிய நாங்கள் கட்டிய சிறுவீட்டைச் சிதையாது அருள்வாயாக. பொருள் செல்வத்தால் நிறைந்து பெருமிதம் கொண்டு விளங்கும் குன்றத்தூர் வாழும் அருட் செல்வரே, எங்கள் சிறுவீட்டைச் சிதையாது அருள்வாயாக.*

கருத்துரை: *அருகக் கடவுள் வாழும் சமணக் கோயில், சமண முனிவர்கள் வாழும் பள்ளி, பிறசமயத்தார் வாழும் திருமடம் ஆகியவை அல்ல, நாங்கள் கட்டிய சிறு வீடுகள். இவ்வீடுகளை அழிப்பதால் உமக்குப் புகழும் புண்ணியமும் ஏற்படாது. பாலிநதி பெருகி அதில் செல்லும் யானையின் தூக்கிய கையை மறைக்கும் அளவிற்கு வளர்ந்துள்ள நெற்பயிர் வளப்பம் நிறைந்த தொண்டைநாட்டுத் தலைவரே, சிற்றில் சிதையேலே.*

அருஞ்சொற்பொருள்: *ஒழிக்கும் - அழிப்பதற்குரிய, அருகந்தன் - அருகதேவன், அவ்வுருவர் - சமணர்கள், (முனிவர்கள்), இருக்கை - திருமடம், பதம் - கால், சுழிக்கும்*

செலவில் - சுழித்துச் செல்லும் வழி, மாலியானை - பெரியயானை, தொண்டை - துளையுடைய கை, துதிக்கை.

வெய்ய அமையும் பரசமய
விருப்பம் சுமந்த திருவில்லார்
வினையைச் சிதைத்தி அவர்மாயை
வீயச் சிதைத்தி ஆணவமும்
நையச் சிதைத்தி இவைசிதைத்தால்
நாடும் புகழ்புண் ணியம்இரண்டும்
நாளும் நினக்கு மேல்மேலாம்
நகையாம் எங்கள் செயல்சிதைத்தல்
வையம் வியக்கும் செங்கரும்பும்
வாழைக் குலையும் பசுங்கமுகும்
வயங்கும் இளநீர் இலாங்கலிபும்
மகவான் அவைக்கோர் அலங்காரம்
செய்ய உயர்தண் டகநாடா
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்வம் செருக்கு குன்றையருள்
செல்வா சிற்றில் சிதையேலே. 3

பொழிப்புரை: தீமைகள் நிறைந்த பிற சமயக் கோட்பாடுகளைக் கேட்டு, சிவ புண்ணியம் இல்லாமையால், அதன்படி நடப்பவர்களின் தீவினையை அழிக்கின்றாய். அவர்களின் மாயையையும் அழிக்கின்றாய். ஆணவமாம் அவரின் அறியாமையையும் நையுமாறு அழிக்கின்றாய். இவைகளை அழிப்பதால் உமக்கு மேலும் மேலும் புகழ், புண்ணியம் இரண்டும் வளரும். (அதனை விடுத்து) எங்கள் சிறுவீட்டினைச் சிதைத்தால் நகைப்பே உண்டாகும். உலகோர் வியக்கும் வண்ணம் செங்கரும்புகளும், வாழைக் குலைகளும், பசுமையான கமுகுகளும், விளங்கும் தென்னையும் ஆகிய மரங்கள், தேவலோகத்தில் இந்திரனின் அவையில் அழகு செய்யும்படி உயர்ந்து வளர்ந்திருக்கும் தொண்டை நாட்டுத் தலைவரே. சிறுமியர்களாகிய நாங்கள் கட்டியிருக்கும் வீட்டினைச் சிதையாது அருள்வாயாக. பொருள் செல்வத்தால் நிறைந்து பெருமிதம் கொண்டு விளங்கும் குன்றத்தூரில் வாழும் அருட்செல்வரே, எம் சிறுவீட்டைச் சிதைக்காது அருள் செய்வீராக.

கருத்துரை: புறச் சமயத்தாரது வினை, மாயை, ஆணவம் ஆகியவற்றைச் சிதைக்கின்றாய். அதனால் சேக்கிழாரே உமக்குப் புகழ் புண்ணியம் உண்டு. அதை விடுத்து எங்கள் சிற்றிலை அழித்தால் பெருமை ஏற்படாது; இகழ்ச்சியைத் தருவதாகும். குன்றத்தூர் கரும்பும், வாழை முதலிய மரங்களும் வளர்ந்து, இந்திரன் அவையை அழகு செய்கின்ற வளங்கொண்ட தொண்டை நாட்டுத் தலைவரே, எம் சிறுவீட்டைச் சிதையாது அருள்வீராக.

அருஞ்சொற்பொருள்: வெய்ய - கொடிய கொள்கைகள், திருவில்லா - இறையருள் இல்லாதவர், வினை - முன் பிறவியில் செய்த கன்மவினை, மாயை - தம்மையும் தலைவனையும் அறியாத மயக்கம், ஆணவம் - அனைத்தும் இறைவன் செயல் என்பதை அறியாத நிலை, நகையாம் - இழிவாம், இலாங்கலி - தென்னைமரம், மகவான் - இந்திரன்.

பொருந்து நிலத்தே ரால்உழுதல்
புகழாம் விதியும் அதுவாகும்
பொருந்தா நிலங்கா லால்உழுதல்
புகன்ற இரண்டுள் ஒன்றாமோ
வருந்தும் அரிய திருவடியும்
மண்டு புழுதி அடையும்நறு
மலர்தோய் பவைமற் றிதுதோய்தல்
வழக்கோ கண்டார் சருப்பாரோ
முருந்து முறுவல் மடமாதர்
முயங்கும் பொழில்வாய்க் கருஞ்சுரும்பர்
முரலா நின்ற பண்கேட்டு
முகத்து கொடுக்கும் பொன்காசில்
செருந்து மலர்தண்ட டகநாடா
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்வம் செருக்கு குன்றைஅருள்
செல்வா சிற்றில் சிதையேலே. 4

பொழிப்புரை: சேக்கிழாரே, பயிர்கள் விளைவதற்குப் பொருந்திய நிலத்தில், உழுதலால் உமக்குப் புகழ் உண்டாகும். அதுவே வேளாளர் குலத்தில் தோன்றிய உமக்குக் கடமையும்

ஆகும். அவ்வாறு இல்லாது உழுவதற்குப் பொருத்தம் இல்லாத, சிறியோம் கட்டிய சிறுவீட்டினை உமது காலால் உழுது சிதைத்தல் புகழ், கடமை என்ற இரண்டில் ஒன்றாகுமோ? (ஆகாது). மேலும் பெறுவதற்கரிய உனது திருவடியும் வருந்தும். நிறைந்த புழுதியும் படியும். அன்பால் வழிபடும் மணம் மிக்க உயர்ந்த மலர்களில் பொருந்த வேண்டிய உமது திருவடிகள், புழுதி மிக்க இச்சிறுவீட்டில் தோய்தல் முறையோ? உமது திருவடிகள் புழுதியில் தோய்வதைக் கண்டால், கண்டவர்கள் மனம் பொறுப்பரோ? மயில் இறகின் குருத்து போன்ற பற்களை உடைய இளம் பெண்கள் குழுமி விளையாடுகின்ற சோலையில் கரிய வண்டுகள் ஒலிக்கும் இசையைக் கேட்டு, அள்ளிக் கொடுக்கின்ற கொடையான பொன் காசு போன்ற செருந்தி மலர்கள் சொரியும் தொண்டை நாட்டுத் தலைவரே, சிறுமியர்களாகிய நாங்கள் கட்டிய சிற்றிலைச் சிதையேலே. பொருள் செல்வம் நிறைந்து பெருமிதம் கொண்டு விளங்கும் குன்றத்தூர் வாழும் அருட்செல்வரே, எம் சிறுவீட்டினைச் சிதையாது அருள்வீராக.

கருத்துரை: சேக்கிழாரே, விளைநிலத்தை உழுவது உமக்குப் புகழும், உம் குலத்திற்குரிய விதியும் ஆகும். வீணான நிலத்தை (எங்கள் சிறுவீட்டை) உழுவது புகழும் விதியும் ஆகாது. உமது திருவடி வருந்துவதோடு புழுதியையும் அடையும். அதனைக் கண்டவர்கள் பொறுக்க மாட்டார்கள். சோலைகளில் வண்டுகள் பாட, அதனைக் கேட்டுப் பரிசிலாக வழங்குகின்ற பொன்னைப் போல மலர்ந்துள்ள செருந்தி மலர்களின் வளத்தைக் கொண்ட தொண்டை நாட்டுத் தலைவரே, எம் சிறுவீட்டைச் சிதையேலே.

அருஞ்சொற்பொருள் : பொருந்து நிலம் - உழுவதற்குரிய நிலம், விதி - விதித்த தொழில், சருப்பரோ - பொறுப்பரோ, முருந்து - மயில்இறகின் அடிப்பகுதி, செருந்து மலர் - செம்மையான ஒருவகை மலர்.

உற்றார் சகியார் புனல்ஆட்டல்
　　உரியார் பலரும் அடிக்கடிஇவ்
　ஒல்லாப் புழுதி தோய்வு எவன்என்று
　　உரைப்பார் தவம்செய் தருமருந்தில்

பெற்றார் செவியோ ரினும்பதைப்பார்
பறங்கக் காணில் என்படுவார்
பேசா அருமை பாராட்டிப்
பேணி எடுப்பா ரையும்சினப்பார்
கற்றார் அரிய நூல்பலவும்
கண்டார் விளங்க நூலின்உரை
கரைந்தார் வரைந்து சிவன்அடியில்
கலந்தார் கடிந்து பரசமயம்
செற்றார் செறிதண் டகநாடா
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்வம் செருக்கு குன்றையருள் செல்வா
சிற்றில் சிதையேலே. 5

பொழிப்புரை: உம்மிடத்தில் அன்புடையவர்கள் உமது திருவடியில் புழுதியைக் கண்டால் மனம் பொறுக்க மாட்டார்கள். உம்மை நீராட்டும் உரிமை பெற்றவர்கள் அடிக்கடி சிற்றிலைச் சிதைப்பதால் ஏற்படும் புழுதியைக் கண்டு, காரணம் என்ன என்று ஆராய்ந்து அருவருப்பார்கள். பெறுவதற்கரிய அமிழ்தத்தை ஒத்த உம்மைப் பெற்றவர்கள் இச்செயலைக் கேட்டால் பதைப்பார்கள். நேரில் கண்டால் என்ன பாடுபடுவார்களோ? உமது பிறப்பின் சிறப்பை எடுத்துக்கூறிப் போற்றி வளர்க்கும் செவிலித் தாயரையும் உம் பெற்றோர்கள் கோபிப்பார்கள். பல நூல்களைக் கற்ற அறிவுடையவர்கள், நூல்களை இயற்றிய ஆசிரியர்கள், நூல்களின் நுண்பொருளை விளக்கி உரைத்த உரையாசிரியர்கள், இவ்வுலக இன்பத்தை நீத்து இறைவனின் திருவடியை அடைகின்ற சிவனடியார்கள், புறச்சமயங்களைக் கடிந்து சைவ சமயத்தை நிலை நாட்டியவர்கள் ஆகிய பலமக்கள் நிறைந்து வாழும் தொண்டை நாட்டுத் தலைவரே, சிறுமியர்களாகிய நாங்கள் கட்டிய சிறுவீட்டை அழிக்காது அருள்வீராக. பொருள் செல்வம் நிறைந்து பெருமிதம் கொண்டு விளங்கும் குன்றத்தூர் வாழும் அருட்செல்வரே, எம் சிறுவீட்டினைச் சிதையாது அருள்வீராக.

கருத்துரை: சேக்கிழாரே, எமது சிறுவீட்டை அழித்து, உமது திருவடியில் புழுதி படிந்தால் அதனைக் கண்ட அன்பர்கள், உம்மை வளர்த்து நீராட்டும் செவிலித்தாயார், பெற்றோர்கள் ஆகியோர் வருந்துவார்கள். வளர்த்தவர்களைக் கோபிப்பார்கள்.

நூல் கற்றோர், நூலைச் செய்தோர், நூலுக்கு உரை செய்தோர், சிவனடியை விரும்புவோர், பிற சமயத்தை மறுத்துச் சைவத்தை நிலை நாட்டுவோர் ஆகியோர் நிறைந்த தொண்டை நாட்டுத் தலைவரே, எம் சிறுவீட்டைச் சிதையாது அருள்வீராக.

அருஞ்சொற்பொருள்: *உற்றார் - அன்புடையவர், புனலாட்டல் - நீராட்டல், பதைப்பர் - வருந்துவர், பேணி எடுப்பார் - வளர்க்கும் செவிலியார், உரை கரைந்தார் - உரை சொன்னவர், கலந்தார் - முத்தியடையும் அடியவர்கள்.*

தாங்கும் வளவன் அனபாயன்
தன்கண் மணியாய் அவன்அமைச்சர்
தங்கள் சூளா மணியாய்உத்
தமச்சோ ழப்பல் லவன்எனும்பேர்
ஓங்கும் படிகொள் விண்மணியாய்
உவக்கும் அடியார் சரித்திரமுற்
றுரைசெய் தருள்சிந் தாமணியாய்
உயர்வு பூணின் இளம்பருவ
வாங்கும் பறைநல் நுதலார் செய்
வண்டல் சிதைக்க வேண்டுவதோ
வாழைக் குருத்து மதிநடுப்போய்
மாரன் குடைக்கோர் காம்பாகித்
தேங்கும் திருத்தண் டகநாடா
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்வம் செருக்கு குன்றைஅருள்
செல்வா சிற்றில் சிதையேலே. 6

பொழிப்புரை: *உலக உயிர்களைக் காக்கும் சோழன் ஆகிய அநபாயச் சோழனின் கண்மணியாகவும், அவனுக்குத் துணையாகும் அமைச்சர்களுள் முடிமணியாகவும், உத்தமச் சோழப் பல்லவன் என்னும் பட்டம் சூட்டப் பெற்று ஒளி விளங்குமாறு நிலத்திற்கு அமைந்த சூரியனாகவும், மகிழும்படியான அடியார்களின் வரலாற்றை அருளிச் செய்தருளிய சிந்தாமணியாகவும் விளங்குகின்ற மேலோனாகிய சேக்கிழாரே, உயர்ந்த அணிகளையும், இளம் பருவத்தையும், வளைந்த பிறைபோன்ற நெற்றியையும் உடைய எம்மனோரால் கட்டப் பெற்ற இச்சிறு*

வீட்டினைச் சிதைத்தல் அழகாகுமோ.? வாழையின் குருத்து மிக வளர்ந்து, விண்ணகத்துச் சந்திரனைத் துளைத்துச் சென்று மன்மதனின் குடைக்குக் காம்பாக விளங்குமாறு அமைந்த நீர்வளம் மிக்க தொண்டை நாட்டுத் தலைவரே, சிறியவர்களாகிய எங்களின் வீட்டை அழியாது அருள்வாயாக. பொருள் செல்வத்தால் சிறந்து பெருமிதம் கொண்ட குன்றத்தூரில் வாழும் அருட்செல்வரே, எம்முடைய சிறுவீட்டைச் சிதைக்காது அருள்வாயாக.

கருத்துரை: அநபாய சோழனுக்குக் கண்மணியாய், அமைச்சர்களுக்குத் தலைமணியாய், மண்ணில் விண்ணகத்துச் சூரியனாய், அடியார்களின் வரலாற்றைத் தந்த சிந்தாமணியாய் விளங்கும் சேக்கிழாரே, சிறுமியரின் சிறுவீட்டை அழிக்கத் தகுமோ? குன்றத்தூர்வாழை மரத்தின் குருத்து விண்ணகம் வரை சென்று, சந்திரனைத் துளைத்துக் கொண்டு போய் மன்மதன் குடைக்குக் காம்புபோல் தோன்றும் வளம்மிக்க தொண்டைநாட்டுத் தலைவரே, எமது சிறுவீட்டைச் சிதையாது அருள்புரிவீர்.

அருஞ்சொற்பொருள்: வளவன் - சோழன், சூளாமணி - முடிமணி, உத்தம சோழப் பல்லவன் - சேக்கிழாரின் பட்டப் பெயர், விண்மணி - சூரியன், சிந்தாமணி - தேவலோகத்தில் உள்ள மணி, பிறை - சந்திரன், மாரன் - மன்மதன், (வாழைக் குருத்து மன்மதனின் குடையாகிய சந்திரனைத் துளைத்து நின்றதால் குடையின் காம்பு போலக் காட்சி அளித்தது என்ற வருணனை சிறப்புடைத்தாம்)

ஏதம் அகல வளவன்முனம்
　　ஏற்று குடிகள் ஒருநாற்பத்
　தெண்ணா யிரத்துள் ஒருகுடிஎன்
　　றியம்பேம் அபயன் அமாத்தியருள்
போதம் மருவும் ஒருவன்எனப்
　　புகலேம் புராணம் செய்தாருள்
　பொலியும் ஒருவன் எனநவிலேம்
　　புகலின் மூவ ருளும்ஒருவன்

நாதம் அகன்ற பரமன்என
    நவிலின் அடைவ தடையுமென
  நன்று தெரிந்தேம் எங்கள்செயல்
    நயவா திருக்கும் திறம்என்னே
சீத வளத்தண் டகநாடா
    சிறியேம் சிற்றில் சிதையேலே
  செல்வம் செருக்கு குன்றையருள்
    செல்வா சிற்றில் சிதையேலே. 7

பொழிப்புரை: *குற்றம் நீங்கக் கரிகாற் சோழன், முற்காலத்தில் தொண்டை நாட்டில் குடியேற்றிய நாற்பத்தெண்ணாயிரம் குடிகளுள் ஒரு குடியாகிய, சேக்கிழார் குடியில் பிறந்த ஒருவர் என்று நாங்கள் உம்மை (ஏளனமாகக்) கூறமாட்டோம். அநபாயச் சோழனின் அறிவுமிக்க அமைச்சர்களுள் நீயும் ஒருவரே என்று கூறமாட்டோம். புராணம் பாடிய அறிஞர்களுள் நீயும் ஒருவரே என்று கூறமாட்டோம். இவ்வாறு எல்லாம் கூறின், நாத தத்துவத்திற்கு அப்பாற் பட்ட பரமேசுவரனைப் பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மூவருள்ளும் ஒருவனாவான் என்று கூறினால், அதனால் வருகின்ற பாவமும் எங்களுக்கு வரும் என்பதை நாங்கள் நன்கு அறிவோம். இப்படி உன்னைப் போற்றுகின்ற எங்களால் செய்யப்பெற்ற சிறு வீட்டினை விரும்பாதிருப்பது என்னே? நீர்வளம் மிக்க தொண்டை நாட்டுத் தலைவனே, சிறுமியர் களாகிய எங்களின் சிறுவீட்டைச் சிதையேலே, பொருள் செல்வத்தில் சிறந்து பெருமிதம் கொண்டு விளங்கும் குன்றத்தூரில் வாழும் அருட் செல்வரே, எமது சிற்றிலைச் சிதைக்காது அருள்வீராக.*

கருத்துரை: *சேக்கிழாரே, உம்மை கரிகால் சோழன் அழைத்து வந்த நாற்பத்தெண்ணாயிரம் குடிகளுள் ஒருகுடியாகிய சேக்கிழார் குடியைச் சேர்ந்தவர் என்றும், அமைச்சர்களில் ஒருவர் என்றும், புராணம் கூறியவர்களில் ஒருவர் என்றும் உம்மை இகழ்ந்து கூறமாட்டோம். அவ்வாறு கூறினால் சிவபெருமானை முக்கடவுளரில் ஒருவனாகக் கூறிய பாவத்தை அடைவோம். உம்மைச் சிறப்பிக்கும் சிறுமியர்களாகிய எங்கள் சிறுவீட்டைச் சிதைக்காது அருள்வீராக.*

அருஞ்சொற்பொருள்: ஏதம் - துன்பம், ஒருகுடி - சேக்கிழார்குடி, ஆமாத்தியர் - அமைச்சர், ஒருவன் - சிவபெருமான், நாதம் அகன்ற - நாதத்திற்கு மேலான.

பொன்னம் சிலம்பு புலம்படிமண்
பொருந்தித் துளையும் விழைவடையில்
பொலியும் பற்பல் உபநிடதம்
புகறல் கேட்டு நீறொருவும்
முன்னம் கொள்சிற் றிலர்நுதலின்
முயங்கிப் படிந்த மண்தோய்ந்து
முருங்கத் துளைதல் கூடிடில்அம்
மோகம் அவர்நீத் துய்வாரே
கன்னம் கரிய கடாய்ப்பாய்ந்து
காமர் பொய்கை நீர்கலக்கல்
கழிந்தோட் டெடுக்க வரால்எழுந்து
கடுக மோதப் பலவுதிரும்
தென்னம் பழத்தண் டகநாடா
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்வம் செருக்கு குன்றைஅருள்
செல்வா சிற்றில் சிதையேலே. 8

பொழிப்புரை: பொற் சிலம்பு ஒலிக்கும் உமது திருவடிகள் மண்ணில் பொருந்தி, புழுதி படும்படி விளையாட விரும்பினால் சேக்கிழாரே பொருள் சிறப்பினை உடைய வேதத்தின் உறுப்பு நூலாகிய உபநிடதங்கள் சிவனது வெண்ணீற்றின் பெருமைகளை எடுத்துக் கூறியதைக் கேட்டறிந்தும், அத்திரு வெண்ணீற்றை அணியாமல், வைணவர்கள் தம் நெற்றியில் விரும்பி அணிந்திருக்கும் திருநாமமாகிய மண்ணை உனது திருவடிகளால் தீண்டி, அம்மண் அழியும்படி விளையாடுக. அவ்விளையாட்டு அவர்களுக்குக் கூடினால் உள்ளத்தில் உள்ள மயக்க உணர்வுகளை நீக்கி அவர்கள் பிறவித் துன்பத்திலிருந்து பிழைப்பார்கள். மிகக் கரிய எருமைக்கடா அழகிய பொய்கையில் பாய்ந்து, தண்ணீரைக் கலக்கியபின் அதிலிருந்து விரைந்து ஓட, அதனால் வரால் மீன்கள் எழுந்து தென்னை மரத்தில் மோதின. அதன் காய்கள் பலவும் உதிர்ந்தன. இத்தகைய வளம் பொருந்திய தொண்டை நாட்டை

உடையவனே, சிறுமியர்களாகிய நாங்கள் கட்டிய வீட்டினை அழியாது அருள்வாயாக. பொருள் செல்வம் நிறைந்து பெருமிதம் கொண்டு விளங்கும் குன்றத்தூர் வாழும் அருட் செல்வரே, எம் சிறுவீட்டைச் சிதையாது அருள்வீரே.

கருத்துரை: சேக்கிழாரே, உமது திருவடிகள் மண் பொருந்த நீ விளையாடக் கருதினால் வைணவரின் நெற்றியில் படிந்த திருநாமமாகிய மண் அழியும்படியும், உன் கால்கள் தோயும் படியும் விளையாடுக. அவ்வாறு விளையாடினால் அவ் வைணவர்கள் தங்கள் குற்றம் நீங்கி உயிர் பிழைப்பர். கருமை எருது நீரில் பாய்ந்து ஓடியதால், பொய்கையில் இருந்த வரால்மீன் மேலே எழுந்து தென்னையில் பாய, அதில் உள்ள காய்கள் விழுகின்ற வளம்மிக்க தொண்டை நாட்டுத் தலைவரே, சிறுமியர் களாகிய எங்களின் சிறுவீட்டைச் சிதைக்காது அருள்வீராக.

அருஞ்சொற்பொருள்: பொன்னம் சிலம்பு - பொற்சிலம்பு, விளைவு - விருப்பம், நீறுருவும் - திருநீற்றை நீக்கும், படிந்த மண் - நெற்றியில் இடப்பட்ட திருநாமமாகிய மண், முருங்க - உருவம், (நாமத்தின் வடிவம்), மோகம் - மயக்கம், கடா - எருது.

மாறு படுமன் னவர்எனினும்
 வளவன் கழல்கால் தொழின்அவர்வாழ்
மணிமா ளிகைகள் மிக்குயரு
 மாறு விடுப்பாய் மறையோர்முன்
கூறுபடுநம் பரன் அடியார்
 குறிப்புள் உணர்ந்து நெடுவானும்
குறுக நிமிர்மா டங்கள்பல
 குயிற்றிக் கொடுத்துக் குடிஅமைப்பாய்
வேறு படுமா றியாம்வகுத்த
 வீட்டை விடுத்துச் செலின்வரல்என்
வேழக் கரும்பின் சாறோடி
 விரிந்த காம்பும் பாய்ந்துகுழை
சேறு படுதண் டகநாடா
 சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்வம் செருக்கு குன்றைஅருள்
 செல்வா சிற்றில் சிதையேலே. ௯

பொழிப்புரை: சேக்கிழாரே, மாறுபட்ட அரசர்களாக இருந்தாலும் சோழ மன்னனின் திருவடிகளை வணங்கின், அவ்வரசர்கள் மீண்டும் வாழும்படியாக அழகிய மாளிகைகள் அனைத்தையும், முன்னைய நிலையைக் காட்டிலும் மிக உயர்ந்து விளங்குமாறு செய்வாய். அந்தணர் முதலிய நால்வகை வருணத் தார்களில் சிவபெருமானிடத்து அன்பு செய்து வாழும் அடியவர் களுக்கு, அவர்கள் திருக்குறிப்பை உணர்ந்து அவர்களுக்கு ஆகாயமும் அண்மை ஆகும்படி உயர்ந்த நெடிய மாளிகைகளை உருவாக்கி அங்கு குடியிருக்கச் செய்வாய். (இப்படிப்பட்ட நீர்) அத்தன்மைக்கு வேறாக நாங்கள் கட்டிய சிறுவீட்டினை அழிப்பது அழகாகுமோ? அழியாது விட்டு விட்டால் வரும் குற்றந்தான் என்ன? வேழக் கரும்பின் சாறு ஓடிப் பாழ் நிலங்கள் எல்லாம் பாய்வதால், அந்நிலங்கள் குழைந்து சேறாக்கும் வளமுடைய தொண்டை நாட்டுத் தலைவனே, சிறுமியர்களாகிய நாங்கள் கட்டிய சிறுவீட்டினை அழியாது அருள்வீராக. பொருள் செல்வம் சிறந்து பெருமிதம் கொண்டு விளங்கும் குன்றத்தூரில் வாழும் அருட்செல்வரே, எங்கள் சிறுவீட்டினை அழியாது அருள்வீராக.

கருத்துரை: பகையரசராயினும் அநபாயச் சோழன் திருவடிகளை வணங்கினால், அமைச்சராய் இருக்கும் நீ அவர்கள் உயருமாறு செய்து, உயர்ந்த மாளிகைகளில் வாழச் செய்வாய். நால்வகை வருணத்து அடியார்களின் உள்ளம் உணர்ந்து அவர்களுக்கு வானம் வரை உயர்ந்து இருக்கும் மாடங்களை அமைத்து, அங்கு அவர்களைக் குடியமர்த்துவாய். இத்தகைய நீ, நாங்கள் கட்டிய வீட்டினை அழிக்காது அருள் செய்தால் உனக்கு வரும் குற்றந்தான் யாது? கரும்பின் சாறு கரம்பை நிலங்களையும் சேறாக்கும் வளமுடைய தொண்டை நாட்டுத் தலைவனே, சிறுமியர்களாகிய எங்களின் வீட்டை அழிக்காது அருள்வீராக.

அருஞ்சொற்பொருள்: மறையோர் முன் - அந்தணர் முதலாகச் சொல்லப்பட்ட நான்கு வருணத்தார், நம்பிரன் - சிவபெருமான், குயிற்றி - அமைத்து, வரல்என் - வரும்குற்றம் என், கரம்பு - விளைச்சல் இல்லாத நிலம்.

அலைக்கும் புனல்சூழ் அம்பலத்தில்
ஆடும் பெருமான் அருள்பெற்றால்
அவன்செய் தொழில்ஓர் ஐந்துண்டு
அமைந்த தொழிலோ மேற்கோடல்
நிலைக்கும் கடைஎன் றொழித்தனையோ
நினையா நிற்கும் அனுக்கிரகம்
நீயே அதுசெய் யாவிடின்எம்
நிரப்பு நீக்கு பவரியாரே
மலைக்கும் பிறவிப் பிணிமருந்தே
வாழ்த்து வார்சிந் தாமணியே
வயங்கும் சைவப் பெருவாழ்வே
மாறாக் கருணை மாக்கடலே
சிலைக்கும் தமிழ்த்தண் டகநாடா
சிறியேம் சிற்றில் சிதையேலே
செல்வம் செருக்கு குன்றையருள்
செல்வா சிற்றில் சிதையேலே. 10

பொழிப்புரை: *அலைகள் பொருந்திய நீர் சூழ்ந்த பொன்னம்பலத்தில் என்றும் ஆடியருளும் இறைவனது திருவருளைப் பெற்றதால், அவனுடைய ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழில்களில் நடுவில் இருக்கும் அழித்தல் தொழிலையா நீ மேற்கொள்வது? நாங்கள் விரும்ப வேண்டுகின்ற அருள் என்பது, ஐந்து தொழிலில் இறுதியாக உள்ளதாகும். அத்தொழிலைச் செய்தால் உன் பெருமைக்குக் கடைப்பட்டது என்று எண்ணி விலக்கி விட்டீரோ? பெருமைக்குரிய நீயே அருளைச் செய்யாவிடில், எம்முடைய அருள் வேட்கையை நிரப்புவதற்கு யார் இருக்கின்றார்கள்? மயக்கத்தைச் செய்யும் பிறவி நோய்க்கு மருந்தே, உம்மை வேண்டி வாழ்த்துவார்க்கு வேண்டியன அளிக்கும் சிந்தாமணியே, சைவ சமயத்தின் பெருஞ் செல்வமே, என்றும் மாறாத கருணைக் கடலே, செந்தமிழ் முழக்கம் ஒலிக்கும் தொண்டை நாட்டுத் தலைவரே, சிறுமியர்களாகிய எங்களின் சிற்றில் சிதையலே. பொருள் செல்வம் நிறைந்து பெருமிதம் கொண்டு விளங்கும் குன்றத்தூர் வாழும் அருட்செல்வரே, எம் சிறுவீட்டைச் சிதையாது அருள்வீரே.*

கருத்துரை: அம்பலத்தாரின் அருள் பெற்ற சேக்கிழாரே, அவரின் ஐந்து தொழிலில் நடுவாக அமைந்த அழித்தல் தொழிலையா நீ செய்வது? அருள் தொழில் கடைசியானது என்று நினைத்து அதனை ஒதுக்கி விட்டாயோ? நீர் அருளைச் செய்யாவிடில் வேறு யார் அருளைத் தருவார்கள்? மருந்தே, சிந்தாமணியே, பெரு வாழ்வே, கடலே, தொண்டை நாட்டுத் தலைவ, சிறுமியர்களாகிய நாங்கள் கட்டிய சிற்றிலைச் சிதையாது அருள்வாயே.

அருஞ்சொற்பொருள்: அலைக்கும் புனல் - அலைகளை உடைய கடல், தொழில் ஐந்து - படைத்தல் முதலாகிய ஐந்து தொழில்கள், கடை - இறுதியானஅருள், மலைக்கும் - மயக்கும், வயங்கும் - விளங்கும், சிலைக்கும் - முழக்கும்.

சிற்றில் பருவம் முற்றிற்று.

9. சிறுபறைப் பருவம்

(சிறுபறை என்பது ஒருவகை இசைக்கருவி. இது தோலால் ஆகியது. இது சிறுவர்களால் அடிக்கப் படுதலின் சிறுபறை எனப்பட்டது. பாட்டுடைத் தலைவனாகிய குழந்தையைச் சிறுபறையாம் இந்தக் கருவியை அடித்து விளையாடும்படி வேண்டுதல் இப்பருவமாகும். குழந்தையின் மூன்றாம் ஆண்டில் நிகழ்வதாகக் கூறப்படுவதுண்டு.)

ஆயபர சமயக் கருங்கடா யானைக்
கரிக்குருளை வாய்முழக்கும்
அரும்புகழ்ச் சைவப் பசும்பயிரக்கு உலகுசூழ்
ஆழியுள் புயல்முழக்கும்
பாயமிடி யாளருக்கு அளவில்பொன் செறிசெய்த
பண்டார வாய்திறந்து
பலவும் கவர்ந்திடுமின் எனல்தெரித் திடுகொடைப்
பயன்முரசின் எழுமுழக்கும்
நேயமிகு வளவர்பெரு மாற்காக அப்பாரில்
நேர்ந்ததன் படைஎழுப்பும்
நிலாம்பணை முழக்குமா கக்குணில் மலர்க்கைகொடு
நிகழ்பாலி வளன்உணர்ந்து
தேயமுழு தும்பரவு துண்டீர வளநாட
சிறுபறை முழக்கியருளே
தென்றலங் கன்றுலவு மன்றஒண் குன்றைமுனி
சிறுபறை முழக்கியருளே. 1

பொழிப்புரை: *பிற மதங்களாகிய கரிய ஆண் யானைகளுக்குச் சிங்கக் குட்டியின் முழக்காகவும், அரிய புகழை உடைய சைவ சமயமாகிய பயிர்களுக்கு, உலகினைச் சூழ்ந்துள்ள கடல் நீரை உண்ணும் மேகத்தின் முழக்காகவும், பொருந்திய வறுமை அடைந்தவர்களுக்குக் கணக்கில் அடங்காதபடி , பொன் நிறைந்திருக்கும் செல்வப் பண்டகசாலையின் வாயிற் கதவுகளைத் திறந்து, வேண்டியன அள்ளிக் கொள்ளுங்கள் என அறிவித்திடும், கொடைப் பயன் கருதி அறையப்படுகின்ற கொடைமுரசின் ஒலியாகவும், உயிர்களிடத்தில் அன்பு நிறைந்த சோழன் அநபாயன் பொருட்டுப் போர்க்களத்தின் கண் நிகழ்ந்த தன் போர்ப்படை*

எழுச்சிக்கு எழுப்பப்படும் போர்முரசின் ஒலியாகவும், பிறையை அடிக்கும் சிறு கோலினை உம் மலர் போன்ற கையில் கொண்டு,நீர்வளம் மிக்க பாலியாற்றின் அருளை உணர்ந்து உலகோர் போற்றும் தொண்டை நாட்டை உடைய சேக்கிழாரே, சிறிய பறையை முழக்குவீராக. மெல்லிய தென்றல் காற்று வீசும்படியான மன்றங்களை உடைய குன்றத்தூரில் வாழும் முனிவரே, உமது சிறுபறையை முழக்கி அருள்க.

கருத்துரை: புறச்சமயமான யானைகளுக்குச் சிங்கக் குட்டியின் முழக்கமாகவும், சைவப் பயிருக்கு மழைமேகத்தின் முழக்கமாகவும், வறுமையாளருக்குக் கொடைமுரசு முழக்கமாகவும், சோழ மன்னனுக்குப் போர்ப்பறை முழக்கமாகவும் அமைய, மலர் போன்ற கையில் சிறுகோல் கொண்டு, வளம் நிறைந்த தொண்டை நாடரே சிறுபறையை முழக்குக.

அருஞ்சொற்பொருள்: பரசமயம் - பிறமதங்கள், அரிக் குருளை - சிங்கக் குட்டி, படியாளர் - வறியவர், நிலாம் பணை முழக்கு - நிலைத்திருக்கும் போர் முரசு ஒலி, குனில் - சிறுகோல், தும்பீர நாடர்- தொண்டை நாடர்.

ஓங்குமுனி வர்இருவர் கைகுவித் தரமுழக்
குறஎழுப் பிக்களிக்க
உலகமுழு தீன்றசிவ காமவல் லித்தாய்
உலோசனம் விடுத்துநிற்கப்
பாங்குபுனை செம்பொன்அம் பலநடனம் நவிலும்
பரஞ்சோதி மதுவொழுக்கும்
பச்சைத் துழாய்அண்ணல் மத்தள முழக்கினும்
பரவுபேர் உவகைபூப்ப
வாங்குதிரை யால்பாலி வீசுசெம் மணியும்வெள்
வயிரமும் கரைவிராவ
வண்படுகர் மேயும்வளை கோட்டெருமை அதுகண்டு
வாய்வெரீஇ ஓட்டெடுக்கும்
தேங்குதிரு வம்பரவு துண்டீர வளநாட
சிறுபறை முழக்கியருளே
தென்றலங் கன்றுலவு மன்றஒண் குன்றைமுனி
சிறுபறை முழக்கிஅருளே. 2

பொழிப்புரை: தவத்தால் ஓங்கிய பதஞ்சலி, வியாக்கிரபாதர்ஆகிய இரு முனிவர்களும் கைகூப்பித் தொழுது, அரஅர என்று முழக்கமிட்டு மகிழவும், உலகம் முழுவதையும் படைத்தவளாகிய சிவகாமி அம்மை தன் திருக்கண்களால் பார்த்து மகிழவும், அழகு பொருந்த அமைக்கப் பெற்ற சிவந்த பொன்னம்பலத்தில் நடனம் செய்யும் நடராசப் பெருமானுக்கு, அந்நடனத்திற்கு ஏற்பத் தேன் ஒழுகும் துழாய் மாலையை அணிந்த திருமால் கொட்டும் மத்தள முழக்கைக் காட்டிலும் போற்றத் தக்க மகிழ்ச்சி பொங்க அலைகளால் பாலாற்றில் அடித்துக் கொண்டு வரப் படும் செம்மணிகளும், வயிரமும் தரையில் வீசி எறியப்பட, அவற்றைக் கண்டு பாலியாற்றங்கரையின் ஓரம் மேய்கின்ற வளைந்த கொம்பினை உடைய எருமைகள் அஞ்சி அலறி ஓடும்படியான செல்வ வளத்தைக் கொண்ட தொண்டை நாட்டவரே, சிறுபறையை முழக்கி அருள்க. மெல்லிய தென்றல் காற்று வீசும்படியான மன்றங்களை உடைய குன்றத்தூரில் வாழும் முனிவரே, சிறுபறையை முழக்கி அருள்க.

கருத்துரை: இரு முனிவர்கள் மகிழ, சிவகாமி அம்மை கண்களால் பார்த்து மகிழ, பொற் சபையில் நடராசப் பெருமான் ஆடுகின்ற நடனத்திற்குத் திருமால் முழக்கும் மத்தள ஒலியை விட மிகுமாறு, மணியும் வயிரமும் பாலியாற்றங்கரையில் ஒதுங்குவது கண்டு, நீர் நிலையின் ஓரம் மேய்கின்ற எருமை அஞ்சி ஓடும் தொண்டை நாடரே, சிறுபறையை முழக்கி அருள்க.

அருஞ்சொற்பொருள்: முனிவர் - பதஞ்சலி, வியாக்கிர பாதர், உலோசனம் - கண்ணால் விழித்து, பரஞ்சோதி - நடராசப் பெருமான், அண்ணல் - திருமால் , படுகர் - நீர்நிலை ஓரம்.

புகழ்ச்சரியை கிரியையை அனுட்டித்து வருகின்ற
புண்ணியப் பேற்றினார்க்குப்
புலரியில் சிவபிரான் தனிஎழும் சங்கமுன்
போதரு முழக்காகவும்
இகழ்வில்சிவ யோகசா தனம்மரீஇ அம்முறை
இயங்குதிற லாளருக்காங்
கெழுகின்ற சங்கபட கம்பேரி ஆதியின்
இசைப்பெரு முழக்காகவும்

அகழ்கின்ற பாலியாற் றலைஎழீஇக் கற்பகம்
அலைத்தோட அதன்அடிக்கண்
அவாய்நின்ற காமதே னுவைநோக்கி நின்னால்
அமைந்ததிப் படர்எனதனி
திகழ்கின்ற செல்வம்உயர் துண்டீர வளநாட
சிறுபறை முழக்கியருளே
தென்றலங் கன்றுலவு மன்றஒண் குன்றைமுனி
சிறுபறை முழக்கியருளே. 3

பொழிப்புரை: சைவ சமயத்தில் உயிர்கள் முத்தி அடைவதற்குச் சொல்லப் படுகின்ற சரியை, கிரியை நெறிகளைத் தினசரி வாழ்வில் கொண்டு ஒழுகும் நற்பேறு உடையவர்களுக்கு, விடியல் காலத்தில் சிவபெருமான் திருக்கோவிலில் எழுப்பப் படுகின்ற சங்கு முதலியவற்றின் முழக்காகவும், மேற்கூறிய நெறிகளில் மூன்றாவது நெறியாகிய சிவயோகத்தைக் கொண்டு, அந்நெறியில் ஒழுகுபவர்களுக்கு யோக நெறியின் பலனாக உள்ளத்தில் எழுகின்ற சங்கம், படகம், பேரி முதலிய இசைக் கருவிகளின் முழக்காகவும், ஆழம் கொண்ட பாலியாற்றின் அலைகள் எழுந்து, விண்ணகத்தில் உள்ள கற்பக மரத்தை அலைத்துக் கொண்டு ஓட, அக்கற்பக மரம் தன் நிழலில் தங்கியிருந்த காமதேனுவைப் பார்த்து, இத்தகைய துன்பம் ஏற்பட்டதற்குக் காரணம் உனது பாலைப் பாலியாறு பெற்றதால் அல்லவோ, நீர்வளம் கொண்ட தொண்டை நாட்டை உடையவரே சிறுபறையை முழக்கி அருள்க. மெல்லிய தென்றல் காற்று வீசும்படியான மன்றங்களை உடைய குன்றத்தூரில் வாழும் முனிவரே, சிறுபறையை முழக்கி அருள்க.

கருத்துரை: சைவ நால்வகை நெறிகளில் சரியை, கிரியையில் நிற்கின்றவர்களுக்குச் சிவன் கோவில்களில் எழுப்பப்படும் வெண்சங்கு முழக்காகவும், யோக நெறியில் நிற்பவருக்குச் சங்கம், படகம், பேரி முழக்காகவும் பாலியாற்று அலை விண்ணகத்துக் கற்பக மரத்தை அலைத்துக்கொண்டு ஓட, வருந்திய கற்பக மரம் தன் வருத்தத்திற்குக் காரணம் காமதேனு பாலைச்சொரிந்து, அது பாலாறாக ஓடியதே ஆகும் என்று கூறும் அளவிற்கு வளம் கொண்ட தொண்டை நாடரே, சிறு பறையை முழக்கி அருள்க.

அருஞ்சொற்பொருள்: சரியை கிரியை - சைவ நால்வகை மார்க்கங்களில் முதல் இரண்டு நெறிகள், அனுட்டித்து - கடைப்பிடித்து, புலரியில் - காலைப்பொழுதில், தளி - கோவில், சங்கம், படகம், பேரி என்பன யோகியரின் உள்ளத்தில் எழும் நாத ஒலிகளாகும். அவாய் - விரும்ப, படர் - துன்பம்.

ஆன்றசிவ புண்ணிய முழக்கமும் பற்பலவர்
ஆயஅடி யவர்தம்வரலாறு
ஆகிய சரித்திர முழக்கமும் தெய்வமணம்
அகலாத தமிழ்முழக்கும்
என்றபல அறமுழக் கமும்இணை இலாதாய
இனியதிரு அருள்முழக்கும்
எய்துதற் கரிதாம் சிவானு போகப்பேர்
இரும்பெரும் முழக்கும்ஆன
மான்றபைங் கமுகம் பொழில்தலைத் தவிர்செய்ய
மதுவநிறை தேத்தடைக்கண்
வான்பிறைக் கோடுதற் கவர்இனன் எனக்கீள
வாவிருளம் ஓடைஎங்கும்
தேன்தவழ அதுவிழும் துண்டீர வளநாட
சிறுபறை முழக்கியருளே
தென்றலங் கன்றுலவு மன்றஒண் குன்றைமுனி
சிறுபறை முழக்கியருளே. 4.

பொழிப்புரை: பெருமை நிறைந்த சிவபுண்ணிய முழக்கமும், பற்பல அடியார்களின் வரலாறாகிய புராண முழக்கமும், தெய்வ மணம் நீங்காத தமிழ் முழக்கமும், பொருந்திய அரஅர என்னும் சிவமுழக்கமும், ஒப்பில்லாததாகிய இனிமை பொருந்திய திருவருள் முழக்கமும், எய்துவதற்கு அரிதான சிவானுபோகம் எனப் பெயர் பெற்ற பரம்பொருளுடன் இரண்டறக் கலக்கும் பெருமுழக்கமும், ஒப்பு என்று கூறும்படி நெருங்கி ஒன்றோடு ஒன்று மயங்கிக் கிடக்கும் பசிய பாக்குமரச் சோலையில் இருக்கின்ற சிவந்த தேன் நிறைந்த தேன் கூட்டின் கண், வானத்தில் உள்ள பிறைச் சந்திரன் தன் ஒளியைக் கவர்ந்து கொண்ட சூரியன் என்று தேனடையைக் கிழிக்க, அத் தேனடையில் இருந்து ஒழுகிய தேன், கிணறு, குளம், ஆறு

முதலிய இடங்கள் அனைத்தும் தேன்கலந்து ஓடுகின்ற வளமுடைய தொண்டை நாட்டை உடைய தலைவரே, சிறிய பறையை முழக்கி அருள்வாயாக. மெல்லிய தென்றல் காற்று வீசும்படியான குன்றத்தூரில் வாழும் முனிவரே, சிறுபறையை முழக்கி அருள்வாயாக.

கருத்துரை: சிவபுண்ணிய முழக்கமும், புராண முழக்கமும், தமிழ் முழக்கமும், அரகர முழக்கமும், திருவருள் முழக்கமும், சிவானுபோக முழக்கமும் ஒப்பாகும்படி சோலையில் உள்ள தேன்கூட்டைச் செஞ்ஞாயிறு என்று சந்திரன் கருதி, தன்னுடைய பிறைக்கொம்பினால் கீற, அதிலிருந்து ஒழுகும் தேன் கிணறு, குளம், ஆறு எல்லாவற்றிலும் பாய்ந்திடும் வளம் பொருந்திய தொண்டை நாடரே, சிறுபறை முழக்கி அருள்க.

அருஞ்சொற்பொருள்: சிவபுண்ணியம் - சிவபெருமான் மகிழச் செய்யும் அறங்கள், இயன்ற - பொருந்திய, இணைஇலாத - ஒப்பில்லாத, திருவருள் முழக்கம் - இறைவனின் திருவருள் இருந்தவாறு என்னே என்று வியந்திடும் முழக்கம், சிவானுபோகம் - சிவனை அனுபவிக்கின்ற இன்பம், இரும்பெரும் - சிவனோடு ஐக்கியமாகிய பேரின்பம், மான்ற - மயங்கிய , கமுகம் - பாக்கு, தேத்தடை - தேன்கூடு, இனன் - சூரியன், கீள - கீறிட.

வில்லூரும் மணிமோலி வளவர்பெரு மான்பொன்அடி
விழாத மருவலர்க்கும்
வெண்ணீறு கண்மணி புனைந்து ஐந்தெழுத்தெணா
வீணராம் சமயருக்கும்
எல்லூரும் ஒண்சிவ மணம்கமழ்தல் இல்லாது
இயைந்தசிந் தாமணிமுதல்
எந்நூற்கும் நெய்தலம் பறைமுழக் கேயாக
எல்ஒளி மழுக்கும்மேனிச்
சொல்லூரும் எம்பிரான் பெருமதம் பொழிமண்
துழாம்கைமா லியானைதந்த தோல்போர்வை
போர்த்ததெனத் தென்றல்வந்து உலவஅழல்
தோற்றுதே மாஞ்சோலைமேல்

செல்லூரும் மேன்மையமை துண்டீர வளநாட
சிறுபறை முழக்கியருளே
தென்றலங் கன்றுலவு மன்றஒண் குன்றைமுனி
சிறுபறை முழக்கியருளே.

பொழிப்புரை: ஒளிமிக்க மணிகளை உடைய முடியினைச் சூடிய அநபாயச் சோழர் பெருமானின் பொன் போன்ற திருவடிகளை வணங்காத பகை அரசர்களுக்கும், வெண்ணீறும் உருத்திராக்க மாலையும் அணிந்து, ஐந்தெழுத்தினைத் தியானம் செய்யாது, பயனற்ற முயற்சியைக் கொண்டிருக்கும் பிற சமயத்தார்க்கும், புகழமைந்த சிவமணம் கமழ்தல் இல்லாத, பொருந்தாத சீவகசிந்தாமணி முதலிய எல்லா நூல்களுக்கும் சாப்பறை முழக்கேயாக, சூரியனின் ஒளியும் குன்றுமாறு சிவந்த மேனியையும் புகழையும் உடைய, எம் பெருமானாகிய சிவபெருமான் மதநீரைச் சொரியும் நிலம்வரை தொங்கும் துதிக்கையை உடையதும் ஆகிய யானையால் தரப்பெற்ற தோலைப் போர்வையாகப் போர்த்தி இருப்பதை ஒப்ப, தென்றல் காற்று வீசும்படியான நெருப்புப் போன்ற செந்நிறம் பொருந்திய மாமரச் சோலையின் மீது மேகம் தவழ்ந்து காட்சி தருகிறது. இத்தகைய வளப்பம் அமைந்த தொண்டை நாடரே, சிறுபறை முழக்கி அருள்க. மெல்லிய தென்றல் காற்று வீசும்படியான மன்றங்களை உடைய குன்றத்தூர் வாழும் முனிவரே, சிறுபறை கொட்டி அருள்க.

கருத்துரை: சோழனது பகைவர்க்கும் திருநீறு, உருத்திராக்கம் அணியாது, ஐந்தெழுத்தை ஓதாத வீண் சமயத்தார்க்கும், சிவமணம் கமழாத சீவகசிந்தாமணி முதலிய நூல்களுக்கும் சாப்பறை முழக்கமாக செம்மேனி கொண்ட சிவபெருமான் கரிய யானைத்தோலைப் போர்த்தியதற்கு ஒப்ப, செம்மைநிறத் தளிர்களை உடைய மாமரச் சோலையில் கருமேகங்கள் தவழ்ந்து கிடக்கும் வளமுடைய தொண்டை நாடரே, சிறுபறை முழக்கி அருள்க.

அருஞ்சொற்பொருள்: வில்லூரும் - ஒளிபரவும், மோலி - திருமுடி, மருவலர் - பகைவர், எல்லூரும் - ஒளிபெற்ற, சிந்தாமணி - சீவகசிந்தாமணியாகிய நூல், நெய்தலம்பறை - சாப்பறை (இறப்பு நிகழ்வில் ஒலிக்கப்படும் பறை), சொல்லூரும்

- புகழை உடைய, மாறியானை - பெரிய யானை, செல்லூரும் - மேகம் தவழும், மேல்மை - வளமை.

பிதிரும் தரம்அற இன்பால் அளவிப்
பழிசுவை மதுவிரவிப்
பிறங்கிய புல்ல கண்ட நிறீஇச்சுவை
பெறுகண் டுங்கூட்டி
எதிரும் பொருளில் பலாக்கனி மாங்கனி
இவைவா ழைக்கனிமுன்
இயையும் முழுக்கனி முந்திரி கைக்கனி
இவ்இர தமும்நாட்டி
அதிரும் கடல்அமிர் தமும்உள் உறுத்தி
அவாங்குழல் வீணைஇசை
அத்தனை யும்புக வைத்துச் சிவமணம்
அகலா தேகமழ
முதிரும் அருட்கவி பாடிய புலவன்
முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத்தூரன்
முழக்குக சிறுபறையே. 6.

பொழிப்புரை: திரிதல் இல்லாத குற்றம் தீர்ந்த இனிய பாலில், பழியப் பட்ட இனிய தேனைக் கலந்து, அதில் வெண்ணிறமான சர்க்கரையையும், சுவை மிகுந்த கற்கண்டுப் பொடியையும் சேர்த்து, சுவையில் தமக்கு ஒப்பில்லாத பலாப்பழம், மாம்பழம் வாழைப்பழம் ஆகிய முக்கனிகளுடன் , முதன்மையாகப் பொருந்தும் முதிர்ந்த பழமாகிய மாதுளை, திராட்சைக் கனிகளின் சாற்றையும் சேர்த்து, இவற்றுடன் ஒலியுடைய திருப்பாற்கடலில் தோன்றிய அமிர்தத்தினையும் உள்ளே கலக்குமாறு கூட்டி, இவற்றுடன் யாவரும் விரும்புகின்ற குழல், வீணை இவற்றின் இசை முழுமையும் உள்ளே அடங்குமாறு சேர்த்துச் சிவமணம் அகலாது மணக்க, முதிர்ந்த அருட்கவிகளைப் பாடிய புலவர் தலைவரே, சேக்கிழாரே, சிறிய பறையை முழக்கி அருள்வாயாக. முழுதும் மணிகளால் இழைக்கப்பட்ட மாளிகைகளை உடைய குன்றத்தூரரே, சிறுபறை முழக்கி அருள்வாயாக.

கருத்துரை: பால், தேன், சர்க்கரை, கற்கண்டு, மா பலா வாழை என்ற முக்கனி, மாதுளை,முந்திரிகைக் கனி ஆகியவைகளின் சாற்றுடன், பாற்கடல் அமிர்தத்தையும் உள்ளே கலந்து, குழல், வீணை ஆகிய இசைகளையும் புகவைத்து, சிவமணம் அகலாது அருட்கவிகளைப் பாடிய சேக்கிழாரே, சிறுபறை கொட்டியருளே.

அருஞ்சொற்பொருள்: பிதிரும் - திரிந்திடாத, மது - தேன், புல்லகண்டம் - வெள்ளைச் சர்க்கரை, கண்டு - கற்கண்டு, முழுக்கனி - மாதுளை, முந்திரிகை - திராட்சை, இரதம் - சாறு, முதிரும் - விளைந்த.

அத்தி தருங்கவி என்மரும் நன்றா
அறைகுதிர் அம்மட்டோ
அவாவிய புத்தி தருங்கவி என்மரும்
அதுமட் டோஇன்னும்
சித்தி தருங்கவி என்மரும் எல்லாத்
தீர்த்தங் களும்உறுமா
செய்யாச் சுத்தி தருங்கவி என்மரும்
செப்பிய அம்மட்டோ
பத்தி தருங்கவி என்மரும் ஆகிப்
பாரிற் புலவர் எலாம்
பல்லா றோதுபு பாராட் டக்கதி
பற்றிய பல்லோர்க்கும்
முத்தி தருங்கவி பாடிய புலவன்
முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன்
முழக்குக சிறுபறையே. 7

பொழிப்புரை: கடவுள், உயிர், தளை ஆகியவை இல்லை என்பார்க்கு , உண்டு என்று உணரும்படிச் செய்த கவி உம்முடைய கவி என்று கூறுவாரும், விரும்பியவாறு ஞானத்தை நல்கும் கவி என்று கூறுவாரும், எண்வகைச் சித்திகளையும் தருகின்ற கவி என்று கூறுவாரும், காவிரி, கங்கை முதலிய தீர்த்தங்களில் நீராடினாலும், அவற்றால் விளையாத தூய்மையைத் தரும் கவி என்று கூறுவாரும் கூறட்டும். இவ்வாறு சொல்லப்பட்ட நன்மைகளை மட்டுமா

அக்கவி தருகிறது. இல்லை, பத்தியை விளைவிக்கும் கவியே சேக்கிழார் கவி என்று பலவாறாகக் கூறிப் பாராட்டப் பெறும் , நற்கதியாம் வீட்டுப் பேற்றை விரும்புகின்றவர்களுக்கு, அவ்வீட்டுப் பேற்றினைத் தரும் கவியைப் பாடிய புலவரே, சிறுபறையை முழக்கி அருள்க. முழுதும் மணிகளால் இழைக்கப்பட்ட மாளிகைகளை உடைய குன்றத்தூரரே, சிறுபறையை முழக்கி அருள்க.

கருத்துரை: சேக்கிழாரே, உமது கவி, முப்பொருள் இல்லை என்பார்க்கு உண்டு என்று கூறும் கவி, ஞானம் தரும் கவி, சித்தி தரும் கவி, சுத்தி தரும் கவி என்று கூறுவார் கூறட்டும். அவை மட்டுமல்ல, சேக்கிழார் கவி பத்திச்சுவை தரும் கவியேயாகும் என்று புலவர்கள் பலவாறு பாராட்டவும், வீட்டுப் பேற்றைத் தருகின்ற கவியைப் பாடிய புலவரே சிறுபறை கொட்டியருள்க.

அருஞ்சொற்பொருள்: அத்தி - உண்டு(பதி, பசு, பாசம் என்ற முப்பொருளும் இல்லை என்று கூறுகின்ற நாத்திகர்களுக்கு உண்டு என்று கூறுகின்ற கவி), புத்தி - ஞானம், சித்தி - வேண்டியதை வேண்டியவாறு தரும் அட்டமா சித்தி, தீர்த்தம் - கங்கை முதலிய ஆறு, நற்கதி - வீட்டுப்பேறு, முத்தி தரும் - வீடு பேறு தரும்.

கனிவில் எமைப் பொருவார்களும் நெஞ்சு
கரைந்து கரைந்துருகக்
காமரு பத்தியும் வயிராக் கியமும்
கவினக் குதிகொள்ளத்
தனிவில்பொன் மேருவெ னக்கொடு திரிபுர
தகனம் புரிபெருமான்
தயங்குபொன் அம்பலம் நின்றுபல் லோர்
அஞ்சலிசெய நடம்நவில
நனிவில் இடும்புகழ் மிகுசம் பந்தரும்
நாவுக் கிறையவரும்
நாவலர் கோவும் சிரம்கரம் கம்பிதம்
நன்கு புரிந்தருள

முனிவில் தமிழ்க்கவி பாடிய புலவன்
முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன்
முழக்குக சிறுபறையே. 8

பொழிப்புரை: உருகும் தன்மை வாய்க்கப் பெறாத எம்மைப் போன்றவர்களுடைய நெஞ்சமும் கரைந்து கரைந்து உருகவும், விரும்புகின்ற பத்தியும், உறுதிப்பாடும், அழகும் நடனம் செய்யவும், ஒப்பற்ற பொன் மேருவை வில்லாகக் கொண்டு முப்புரங்களை எரித்து அருளிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பொன்னம்பலத்தில் நின்று, (உம் பாடலைக் கேட்டு)பலரும் கைகூப்பித் தொழுது நடனம் நவிலவும், மிக்க புகழை உடைய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தியும் நுண்ணுடலில் நின்று தலை அசைத்தும், கை அசைத்தும் மனம் மகிழவும், வெறுப்பற்ற இனிய தமிழ்ப் பாடல்களைப் பாடிய புலவரே, சிறுபறை கொட்டியருளே. முழுதும் மணிகளால் இழைக்கப் பெற்ற மாளிகைகளை உடைய குன்றத்தூரரே, சிறுபறை கொட்டி அருள்க.

கருத்துரை: உருகாத மனம் கொண்டவரின் நெஞ்சம் கரைந்துருக, பத்தியும் வைராக்கியமும் குதி கொள்ள, நடராசப் பெருமான் நடனம் செய்யும் பொற்சபையில் பாடல் கேட்டவர்கள் மகிழ்ந்து ஆடவும், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் சிரம், கரம் அசைத்து மகிழவும், வெறுப்பற்ற செந்தமிழ்ப் பாடல்களைப் பாடிய புலவரே, சிறுபறை கொட்டியருள்க.

அருஞ்சொற்பொருள்: கனிவில் - கனியாத மனம், வைராக்கியம் - உறுதிப்பாடு, குதி கொள்ள - நடனம் கொள்ள, எனக்கொடு - வில்லாகக் கொண்டு, நாவலர்கோ - சுந்தரர், கம்பிதம் - அசைத்து, காலத்தால் முற்பட்ட இவர்கள், பிற்பட்ட சேக்கிழாரின் கவியை நுண்ணுடலில் இருந்து (அருவமாக இருந்து) அசைக்க, முனிவில் - வெறுப்பற்ற.

நந்து புராணம்எவ் வளவா யிற்றென
நாடுறும் அனபாயன்
நகைமகிழ் பூப்ப மணிக்கால் ஆயிரம்
நண்ணிய மண்டபவாய்

வந்து விராவும் இடத்தில் அமர்ந்து
வயங்குறு கையேட்டின்
மாண்பார் கண்டம் கொண்டங் கெழுதுநர்
மாறாதே எழுதப்
பிந்து வரைந்த எழுத்தினுள் ஒன்றும்
பெயரா தக்கரமாம்
பெயர்ப்பொருள் தேற்றுபு நிலைபெற யார்க்கும்
பெட்கும் விருப்பம்எழ
முந்து தமிழ்க்கவி பாடிய புலவன்
முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன்
முழக்குக சிறுபறையே. 9

பொழிப்புரை: ஆக்கம் தரும் திருத்தொண்டர் புராணம் எவ்வளவு பாடப் பெற்றுள்ளது என்று அநபாயன் அடிக்கடி விருப்பமாகக் கேட்க, அவன் மகிழுமாறு அழகிய ஆயிரக்கால் மண்டபத்து வந்து, பொருந்திய இடத்தில் சேக்கிழார் அமர்ந்து பாடிட, வலிமை கொண்ட ஏட்டில், மிகச் சிறந்த எழுத்தாணி கொண்டு எழுதும் பணியாளர்கள் விடாது எழுத, பந்து எழுத்து என்று கூறப்படும் மெய்யெழுத்துக்களில் ஒரெழுத்தும் நீங்காது, அக்கரம் என்று கூறப்படுகின்ற பெயர்ச்சொல்லின் பொருள் எல்லாம் தோன்றுமாறு நிலைபெற்று நிற்க, சைவர்கள் யாவரும் விரும்பக் கற்க, இறைவனை அறிவதற்கு எல்லா மொழிகளிலும் முன் மொழியாக அமைந்த தமிழ்க்கவி பாடிய புலவரே, சிறுபறை கொட்டியருள்க, முழுதும் மணிகளால் இழைக்கப்பெற்ற மாளிகைகளை உடைய குன்றத்தூரரே, சிறுபறை கொட்டியருள்க.

கருத்துரை: அநபாய சோழன் திருத்தொண்டர் புராணம் எத்தகைய அளவில் உள்ளது என்று கேட்க, ஆயிரக்கால் மண்டபத்தில் உரிய இடத்தில் இருந்து சேக்கிழார் பாட, ஓலை எழுதுவோர் விடாது எழுத, மெய்யெழுத்து என்னும் புள்ளி எழுத்துக்கள் குறையாத வண்ணம், உயிரெழுத்தாகிய அகரத்திற்கு ஏற்பப் பொருள் கொண்டு அழிவில்லாத, சைவர்கள் மிகுதியாக விரும்பிக் கவி பாடிய சேக்கிழாராகிய புலவரே சிறுபறை கொட்டியருள்.

அருஞ்சொற்பொருள்: நந்து - வளரும், மணிக்கால் ஆயிரம் - ஆயிரங்க்கால் மண்டபம், கண்டம் - எழுத்தாணி, மாறாது - விடாது, பந்து வரைந்த எழுத்து - மெய்யெழுத்து என்ற புள்ளி எழுத்து, அக்கரம் - அழியாத, யார்க்கும் - சைவர்களுக்கு, பெட்கும் - கற்கும்.

தங்கு தமக்கெதிர் நின்றுளம் உருகத்
தரிசித் திடுவளவன்
தன்செவி பரிசனர் அம்செவி மறையவர்
தம்செவி யும்கேட்க
எங்கும் அளாம்புகழ் இச்சே வையர்கோன்
யாமே முதல்நல்க
எம்அடி யார்வர லாறு முழுக்க
இனிக்கப் பாடினனால்
பாங்கு விருப்பில் கேட்குக என்னாப்
பொன்அம் பலவாணர்
பொலிதிரு வாக்கடி ஞெகிழியின் ஒலியொடு
பொற்ப எழுப்பஅருள்
முங்கு தமிழ்க்கவி பாடிய புலவன்
முழக்குக சிறுபறையே
முழுமணி மாடக் குன்றத் தூரன்
முழக்குக சிறுபறையே. 10

பொழிப்புரை: பொற்சபையில் எப்பொழுதும் நடனமாடித் தங்கும் நடராசர், தமக்கு முன் நின்று உள்ளம் உருகி வணங்கிடும் அநபாயச் சோழனின் செவியிலும், அவனது அமைச்சர் முதலான பணியாளர் செவியிலும், அந்தணர்களின் செவியிலும் கேட்கும் படி, யாம் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க, மிகுந்த புகழ் அமைந்த சேக்கிழார் எம் அடியவர்கள் வரலாறு அனைத்தையும் முழுக்க முழுக்க இனிக்கும்படிப் பாடியருளினார். அதனை அனைவரும் கேட்பீராக என்று சிவபெருமான் திருவாக்கும், அவர் திருவடிகளில் அணிந்துள்ள பொற் சிலம்பு ஒலித்தும் கூற, அருளோடு கூடிய தமிழ்க்கவி பாடிய புலவரே, சிறுபறை முழக்கி அருள்க. முழுதும் மணிகளால் இழைக்கப் பெற்ற மாளிகைகளை உடைய குன்றத்தூரரே, சிறுபறை முழக்கி அருள்க.

கருத்துரை: அநபாய சோழனின் செவி, அவனின் பணியாளர்கள் செவி, தில்லைவாழ் அந்தணர்களின் செவி ஆகிய எல்லோரது செவிகளும் கேட்கும்படி ஒலித்த உலகெலாம் என்ற சொல்லைக் கொண்டு, அடியார் வரலாற்றைச் சேக்கிழார் பாடினார். அவற்றை முழுமையாகக் கேட்க என்று சிவபெருமான் திருவாக்கும், அவர் அணிந்த சிலம்பின் ஒலியும் ஒலிக்க அருட்கவி பாடிய புலவரே, சிறுபறை கொட்டியருள்க.

அருஞ்சொற்பொருள்: தமக்கு - சிவ பெருமானுக்கு, பரிசனர் - பணியாளர்கள். மறையவர் - தில்லைவாழ் அந்தணர், சேவையர்கோன் - சேக்கிழார், முதல் - உலகெலாம் என்ற சொல், ஞெகிழி - சிலம்பு,

சிறுபறைப் பருவம் முற்றிற்று.

10. சிறுதேர்ப் பருவம்

(பாட்டுடைத் தலைவனாகிய குழந்தையை விளையாடுவதற்குரிய சிறு தேரினை உருட்டி விளையாடும்படிக் கூறுவது . இப்பருவ நிகழ்ச்சி குழந்தையின் நான்காவது ஆண்டில் நிகழ்வதாகக் கூறப்பெறும்.)

மருவாய் நறுந்தா தகித்தொங்கல் வளவர்கோ
மகனுடன் இவர்ந் திருகையும்
மணிக்கவரி வாங்கிவீ சக்கற்ப கப்பூ
மகிழ்ந்துவா னாடர் தூற்றப்
பெருவாய் திறந்துபட கம்பேரி முதலாம்
பெரும்பணை எலாம் முழங்கப்
பிறங்குமூ வாயிரவர் முதலியோர் மறையொலி
பிறங்கத் தொடர்ந்து போதக்
கருவாய் உறாமற்றை யாரும் தலைக்குமேல்
கைகுவித் தேத்தி மேவக்
கருதும் புராணமுடி வில்குஞ் சரத்தில்
கடத்திவர்ந் தோங்கு தில்லைத்
தெருவாய் உலாப்போது சேவையர் குலாதிபன்
சிறுதேர் உருட்டி அருளே
சிறுகோல் எடுத்தரசு செங்கோல் நிறுத்தினோன்
சிறுதேர் உருட்டி யருளே. 1

பொழிப்புரை: *நறுமணம் மிக்க ஆத்திமாலை அணிந்த சோழர் பெருமானாகிய அநபாயன் பட்டத்து யானையின் மேல் உடன் இருந்து கொண்டு, தம் இரு கைகளிலும் அழகிய கவரி கொண்டு வீசவும், தேவர்கள் மனம் மகிழ்ந்து கற்பக மலர்களைத் தூவவும், படகம், பேரிகை, பெரியமுரசம் ஆகிய இசைக்கருவிகள் எல்லாம் வாய் திறந்து முழங்கவும், விளங்கும் தில்லை மூவாயிரவர், அவர்களை ஒத்த பிறர் வேதம் ஓதிக்கொண்டு பின்செல்லவும், தாய்க்கருவில் இனித் தோன்றாத வண்ணம் சிவபுண்ணியம் செய்த அடியார்கள் அனைவரும் , தம் தலைமீது கைகுவித்து வாழ்த்தி வணங்கி வரவும், உயர்ந்தவர்களாகிய திருத்தொண்டர்களின் வரலாற்றை நிறைவு செய்து அருளிய பின், யானை மீதுள்ள தவிசில் எழுந்தருளியிருந்து, தில்லைத்*

தெருக்களில் உலாவரும் சேக்கிழார் குடியின் ஒப்பற்ற தலைவரே, சிறு தேரினை உருட்டி அருள்வீராக. சாற்றுக்கோலைக் கொண்டு உழவுத் தொழிலைச் செய்து அரசனின் செங்கோலை நிலைநாட்டுபவரே, இச்சிறு தேரை உருட்டி அருள்வீராக.

கருத்துரை: வளவர் கோன் கவரி வீச, தேவர்கள் கற்பக மலர் தூவ, இசைக் கருவிகள் எல்லாம் முழங்க, தில்லை அந்தணரும் பிறரும் வேதங்கள் ஒலித்து வர, அடியவர்கள் போற்றி மகிழத் திருத்தொண்டர்புராணத்தை நிறைவு செய்து, யானை மீதிருந்து தில்லை நகரில் உலா வருகின்ற வேளாளர்குலத் தலைவரே, சிறு தேர்உருட்டி அருள்க.

அருஞ்சொற்பொருள்: வளவர் கோமகன் - அநபாயச் சோழன், பெரும்பனை - பெரிய இசைக் கருவிகள், கருவாய் - பிறப்பில், குஞ்சரம் - யானை.

முறியும்மல ரும்பொருவு திருமேனி உமைஅம்மை
மூவுல குயத் தழுவுபு
மூரிப் புனல்கம்பை எம்பிரான் திருமேனி
முற்றும் குழைத்த ஞான்றில்
அறியும்வகை அறம்எலாம் பொலியஇரு நாழிநெல்
அளந்துஅப் பிரான் கொடுக்க
அனையமா தேவியேல் ஏற்றகை உயிர்த்தமக
ளால் உயிர்த்தோர்களே நல்
நெறியும்நல னும்பெருக உளர்எனல் குறித்துஅவர்கை
நீட்டப் பணிந்து வாங்கி
நீடும் கொழுக்கொடுதம் மனைஉதவி யால்நனி
நிரம்பப் பெருக்கு குடியுள்
செறியும்ஒரு குடியாய சேவையர் குலாதிபன்
சிறுதேர் உருட்டி யருளே
சிறுகோல் எடுத்தரசு செங்கோல் நிறுத்தினோன்
சிறுதேர் உருட்டி யருளே. 2.

பொழிப்புரை: நிறத்தால் தளிரையும், மென்மையால் மலரையும் ஒத்த அழகிய உடலை உடைய உமையம்மையார், மூவுலகும் வாழுமாறு தழுவ, வலிமை பொருந்திய கம்பை நதியின் கரையில் எமது தலைவராகிய சிவபெருமானின் திருமேனி

முழுமையும் குழையச் செய்த சமயத்தில், அச்சிவபெருமான் எல்லா உலகங்களும் அறியும் வண்ணம், எல்லா அறங்களும் வளர்வதற்காக இருநாழி நெல்லை அளந்து கொடுக்க, அதனை உமையம்மை கொண்டு அவ்வாறு ஏற்ற கையில் தோன்றிய அன்னையின் மகளாகிய கங்கை நதியின் வழி தோன்றிய வேளாளர்களே நன்னெறியில் வாழ்பவர்கள் எனக் கருதி, வேளாளர் கையில் அந்நெல்லைக் கொடுக்க, அவர்களும் அதனைப் பணிந்து ஏற்று, நீண்ட கலப்பை கொண்டும், தம் மனைவியரின் உதவியால் தங்கள் குடி வளத்தைப் பெருக்கும் வேளாளர் குடியில் ஒரு குடியாகிய சேக்கிழார் குடியில் தோன்றிய தலைவரே சிறுதேரை உருட்டி அருள்க. சாற்றுக்கோல் கொண்டு உழவுத் தொழிலைச் செய்து அரசனின் செங்கோலை நிலைநாட்டுபவரே, சிறுதேரை உருட்டி அருள்வீராக.

கருத்துரை: உமையம்மை தழுவியதால் சிவபெருமான் மேனி குழைந்தபொழுது, அவர் இருநாழி நெல்லைக் கொடுக்க, அதனை வாங்கிய உமையவள், கங்கை குலத்தில் தோன்றிய வேளாளரிடம் கொடுக்க அதனை வாங்கி உழவுத் தொழில் செய்து, தன் இல்லற வாழ்வின் உதவியால் அனைத்து அறங் களையும் செய்த வேளாளர் குடியின் ஒரு குடியான சேக்கிழார் குடியின் தலைவரே, சிறுதேர் உருட்டி அருள்க.

அருஞ்சொற்பொருள்: முறி - தளிர் மூரி - வலிமை, ஞான்று - பொழுது, கை உயிர்த்த - உமையவள் கையில் தோன்றிய கங்கை, உயிர்த்தோர்களே - தோன்றியவர்களே, கொழு - ஏர்,

வெருவப் பகைக்கடல் சுவற்றழல் அரும்புகண்
விரைத்தாத கித்தொ டையலான்
வீசவீ சப்பெற்று வாம்பரி உலகத்துமிளிர்
வெங்கடாக் களிறு கைத்தும்
உருவக் கதிர்த்தரள மாலைகால் யாத்திட்ட
ஒள்ஒளிய ஆனம் ஊர்ந்தும்
ஒருநம்பி ஆரூர னைப்புகலி ஆண்தகையை

ஒப்பாயி னாய்அ தான்று
மருவப் பொலிந்தமண் தேர்ஊரின் முதலடி
மரீஇய இருவருள் ஒருவரும்
மனுவாய் வையகம் எடுத்தேத்த நிறைபுனல்
வயங்கும்ஊ ருணிநி கர்த்த
திருவப் பெருக்கினமை சேவையர் குலாதிபன்
சிறுதேர் உருட்டி யருளே
சிறுகோல் எடுத்தரசு செங்கோல் நிறுத்தினோன்
சிறுதேர் உருட்டி யருளே. 3.

பொழிப்புரை: அஞ்சுகின்ற பகையாகிய கடல் வற்றும்படி, நெருப்பை உமிழும்படியான கண்களையும், நறுமணமிக்க ஆத்தி மாலையையும் சூடிய அநபாயச் சோழனைத் தம் கையால் கவரி வீசுமாறு, தாவுகின்ற குதிரையில் சென்றும், கொடிய மதநீர் கொண்ட யானையில் சென்றும், ஒளிமிக்க வெண்மை நிறம் பொருந்திய முத்து மாலைகள் தொங்கவிடப் பெற்ற பல்லக்கில் சென்றும், ஒப்பற்ற நம்பியாரூரரையும், திருஞான சம்பந்தரையும் ஒத்தவரானீர். அது மட்டுமல்லாது நிலத்தில் செல்லுமாறு பொலிவு பெற்று விளங்கும் மண்ணலாகிய தேரை ஓட்டிச் சென்று, இப்பாட்டின் முதல் பகுதியில் அமைந்த சிவபெருமான், அநபாயன் என்ற இருவரில் ஒருவராகிய சிவபெருமானையும் ஒத்தவர் ஆவீர் என்று உலகோர் பாராட்டிப் போற்ற மிகுந்த தண்ணீரால் விளங்கும் ஊருணியை ஒத்த செல்வச் சிறப்பு மிக்க சேக்கிழார்குலத்துத் தலைவனே, சிறுதேரை உருட்டியருள்க. சாற்றுக் கோலைக் கொண்டு உழவுத் தொழிலைச் செய்து அரசனின் செங்கோலை நிலை நாட்டுபவரே, சிறுதேரை உருட்டி அருள்க.

கருத்துரை: சோழன் கவரி வீச, குதிரை, யானை , பல்லக்கு ஆகியவற்றில் சென்ற சேக்கிழாரே, அதனால் நம்பியாரூரர், திருஞானசம்பந்தர் ஆகியவரை ஒத்தவர் ஆவீர். மேலும் தேரினைச் செலுத்தியதால் சிவபெருமானையும் ஒத்தவர் ஆவீர். நீர் நிறைந்த ஊருணி போல் நிறைந்த செல்வத்தை உடைய சேக்கிழார் குடித் தலைவரே, சிறுதேரை உருட்டி அருள்க.

அருஞ்சொற்பொருள்: வெருவ - அஞ்ச, சுவற்ற - வற்ற, வாம்பரி - தாவும் குதிரை, ஆனம் - பல்லக்கு, ஒருநம்பி ஆரூரனை - சுந்தரரைச் சேக்கிழார் ஒத்து விளங்குவதாகக் கூறப்பட்டுள்ளது. பகையாகிய கடல்கள் அஞ்சி ஓடி வற்றும்படித் தீ தோன்றிய நெற்றிக் கண்ணை உடைய ஆத்திமாலையை உடைய சிவபெருமான் குதிரை நல்க, அதனைச் சேரமான் பெருமாள் நாயனார் செலுத்தி முன்னே செல்ல, வெம்மையுடைய மதநீர் உடைய யானையின் மீது ஊர்ந்து கயிலைக்குச் சென்றவர் சுந்தரர். அதுபோலப் பகைக் கடலை வற்றச் செய்கின்ற சினம் தோன்றும் கண்களையும், ஆத்திமாலையையும் அணிந்த அநபாயச் சோழனுக்கு அமைச்சராக இருந்த பொழுது போருக்குரிய குதிரையைச் செலுத்தியும், திருத்தொண்டர் புராணம் பாடி முடித்த பிறகு சோழன் தன் இரு கைகளாலும் கவரி வீசி, யானையில் சேக்கிழாரை இருத்தியதால் யானையைச் செலுத்தி ஒப்பானார்.

புகலி ஆண்தகையை ஒப்பாகினாய் - சீர்காழியில் அவதரித்த திருஞான சம்பந்தருக்குச் சேக்கிழார் ஒப்பாவார். திருஅறத் துறையில் முத்துமாலைகள் கட்டித் தொங்கவிடப் பெற்ற சிவபெருமானால் அளிக்கப் பெற்ற முத்துப் பல்லக்கில், திருஞானசம்பந்தர் திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டார். அதுபோலச் சேக்கிழார் அமைச்சராக இருந்த பொழுது முத்துப் பல்லக்கில் அமர்ந்து உலாவந்தார்.

மண்தேர் ஊரின் - சிறுதேராகிய மண்தேரை இழுத்துச் சென்றால், இருவருள் ஒருவரும் மனுவாய் - முன்பகுதியில் கூறப்பட்ட இறைவன், அநபாயச் சோழன் என்ற இருவரில் இறைவனைச் சேக்கிழார் மனுவாய் ஒப்பாவார். அதாவது அநபாயச் சோழனின் அமைச்சராக இருந்த பொழுது, போர்க்கள மண்ணில் தேரை, சிவபெருமான் முப்புரத்தை எரிப்பதற்குத் தேரைச் செலுத்தியது போலச் செலுத்தி ஒப்பானார். ஊருணி - நீர்நிறைந்த குளம், திருவப் பெருக்கு - செல்வச் சிறப்பு.

வசைதவிர் வினைத்திட்பம் வாயந்ததாக வப்பாரின்
மாற்றலர் எதிர்ந்த காலை
மழைமதக் களியானை வாம்பரி சயந்தனம்முன்
மற்றுள வரூதி னியெலாம்

அசைவில்பல் படைக்கலம் கொடுநூழில் ஆட்டுபுபல்
ஆறா எழுந்த நெய்த்தோர்
அவ்வனிக அழன்இழுத் தோடிஉவர் ஆழிபுக்கு
அளவில்திடர் செய்ய நோக்கி
இசைமலர் அலங்கலொடு வாகையும் சூடியார்
எய்தப் புனைந்த பெருமான்
இரும்புலியை மேருமுடி ஏற்றிப் பெருந்தேர்
இணங்குற உருட்டி நேமி
திசைதிசை உருட்டச் சேவையர் குலாதிபன்
சிறுதேர் உருட்டி யருளே
சிறுகோல் எடுத்தரசு செங்கோல் நிறுத்தினோன்
சிறுதேர் உருட்டி யருளே. 4

பொழிப்புரை: குற்றம் தீர்ந்த மனத்திண்மையுடன் சேக்கிழார், போர்க்களத்தின் கண் பகைவர்கள் எதிர்த்த பொழுது, பகைவரின் மழைநீர் போல மதநீர் ஒழுகும் யானைகளையும், தாவும் குதிரைகளையும், தேரினையும், மற்றுமுள்ள காலாட் படைகள் பலவற்றையும், பல்வேறு ஆயுதங்கள் கொண்டு கொன்று குவித்த பொழுது, ஆறாகப் பெருகி ஓடும் இரத்த ஆற்றில் அந்தப் படைவீரர்களின் பிணங்கள் மிதந்து ஓடிக் கடலில் புகுந்து அளவற்ற மேடுகளைச் செய்ய, அதனால் ஏற்பட்ட வெற்றியைக் கண்டு பெருமிதம் கொண்டு ஆத்தி மாலையோடு, வாகை மாலையையும் சூடிய அநபாயச் சோழனின் இலச்சினை யாகிய புலிக்கொடியை இமயமலையில் பொறித்து, பெரிய தேரை ஓட்டித் தமது ஆணைச் சக்கரத்தை, எட்டுத்திக்கிலும் உருட்டி ஆட்சி செய்து அருள, அவனுக்கு உதவிய சேக்கிழார் குடியின் தலைவரே, சிறு தேரினை உருட்டி அருள்க. சாற்றுக் கோலைக் கொண்டு உழவுத் தொழிலைச் செய்து, அரசனின் செங்கோலை நிலைநாட்டுபவரே, சிறு தேரை உருட்டியருள்கவே.

கருத்துரை: சேக்கிழாரே, பகைவரைப் போர்க்களத்தில் எதிர்த்த பொழுது, பகைவரின் நால்வகைப் படைகளையும், போர்க்கருவிகளால் கொன்று குவித்து, அதனால் எழுந்த இரத்த ஆற்றில் பிணங்கள் மிதந்து கடலில் புகுந்து மேட்டினை உண்டாக்கின. அதனைக் கண்டு மகிழ்ந்த சோழன் ஆத்தி மாலையோடு, வெற்றி மாலையாம் வாகை மாலையைச் சூடித்

தன்னுடைய இலச்சினையாகிய புலிக்கொடியை இமயமலையில் பொறித்து, எட்டுத் திக்குகளிலும் தன் ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்திட உதவிய நீர், சிறு தேரினை உருட்டி அருள்வாயாக.

அருஞ்சொற்பொருள்: வசை - குற்றம், ஆகஅப்பார் - போர்க்களம், சயந்தனம் - தேர், வரூதினி -சேனை, ஊழில் ஆட்டுபு - கொன்று குவித்து, மேய்த்தோர்- இரத்தம், திடர் - மேடு, இசைமலர் - உரிய ஆத்திமாலை, இரும்புலி - பெரிய புலிக்கொடி, நேமி - ஆணைச்சக்கரம்.

சாதகப் பறவைக் கிரும்புயல் துளியும்
சகோரத்தி னுக்கு திக்கும்
சந்திரன் விடும்கரமும் அம்புயத் திற்கேழு
தாம்பரித் தேர்இ ரவியும்
மேதக உறுந்தவத் திற்கருளும் அவ்வருள்
விளக்கத் தினுக்கு முவலும்
மேவரும் கல்விக்கு நுண்அறிவும் நுண்அறிவு
வீக்கத்தி னுக்கொ ழுக்கும்
நோதக இலாதமைத் தாங்கருள் வழிச்செலீஇ
நோய்ப்பிறவி போக்கு வார்க்கு
நோற்றவர் புராணம்இல் லாதுஅமை தராதாம்
நுவன்றெம்மை ஆண்ட பெம்மான்
தீதகம் மதித்திடாச் சைவயர் குலாதிபன்
சிறுதேர் உருட்டி யருளே
சிறுகோல் எடுத்தரசு செங்கோல் நிறுத்தினோன்
சிறுதேர் உருட்டி யருளே. 5

பொழிப்புரை: வானம்பாடிப் பறவைக்கு மழைத்துளியும், சகோரப் பறவைக்குச் சந்திரனின் ஒளியும், தாமரைக்கு ஏழு குதிரைகளால் இழுத்துச் செல்லப்படும் கதிரவன் ஒளியும், பெருமை பொருந்திய தவத்திற்கு அருளும், அவ்வருளுக்குப் பேரன்பும், மேன்மை பொருந்திய கல்விக்கு நுண்ணறிவும், நுண்ணறிவின் பெருக்கத்திற்கு நல் ஒழுக்கமும், துன்பமிலாது அமைந்தது போல, அருள்வழிச் சென்று பிறவிப் பணியைப் போக்குவார்க்குச் சரியை முதலாகிய நால்வகை நெறிகளிலும் பொருந்தி, பயன் பெற்ற திருத்தொண்டர்களின் வரலாறு மிகவும்

பயன்படத் தக்கதாகும். இப் புராணம் அல்லாது பயன் தருவதற்கு வேறு எதுவும் இல்லை. இப்புராணம் கொண்டே எம்மனோரை ஆட்கொண்டு அருளியவரும், தீயவற்றை நெஞ்சத்தாலும் நினைக்காதவரும், சேக்கிழார் குடியில் உதித்தவரும் ஆகிய எம் தலைவரே, சிறுதேர் உருட்டி அருள்வாயாக. சாற்றுக்கோல் கொண்டு உழவுத் தொழிலைச் செய்து அரசனின் செங்கோலை நிலைநாட்டுபவரே, சிறுதேர் உருட்டி அருள்கவே.

கருத்துரை: சாதகப் பறவைக்கு மழைத்துளியும், சகோரப் பறவைக்குச் சந்திரன் ஒளியும், தாமரைக்குச் சூரிய ஒளியும், தவத்திற்கு அருளும், அருளுக்கு அன்பும், கல்விக்கு நுண்ணறிவும், நுண்ணறிவுக்கு ஒழுக்கமும் இன்றியமையாதது போல, பிறவியைப் போக்குவாருக்குத் திருத்தொண்டர் புராணம் இன்றியமையாததாகும். அத்தகைய நூலைத் தந்த சேக்கிழார் குடியின் தலைவரே, சிறுதேர் உருட்டி அருளே.

அருஞ்சொற்பொருள் : புயல் துளி - மழைத்துளி, விடுகரம் - தோன்றும் கதிர், இரவி - சூரியன், நோதகவு - துன்பம், நோற்றவர் புராணம் - தவம் புரிந்தவர் வரலாறு, இல்லாது அமை தராது - இன்றியமையாதது, தீதகம் - தீமைக்குணம்.

எய்குன்ற வார்சிலைப் பெருமான் உளத்துவகை
எய்த மறையோர்கள் குழுமி
இயையஉப கரணம்எல் லாம்தகச் சேர்த்தினிய
தென்னும்ஒரு தேத்த மர்ந்து
பொய்குன்ற யாககுண் டத்தழல் எழுப்பமேல்
போயபூம் பகைவா னாடு
பொலியும்உச் சைச்சிரவம் அயிராவ தம்தான்
பொறுத்த நிறம்மே வச்செயா
மெய்குன்ற வந்தவா றென்னெனக் கற்பகம்
வெதும்பப் புரிந்து பின்னும்
விண்ணா டடங்கவும் நண்ணா அரம்பையர்
விழித்துணை ஒருங்கி மைப்பச்
செய்குன்றை அம்பதிச் சேவையர் குலாதிபன்
சிறுதேர் உருட்டி யருளே
சிறுகோல் எடுத்தரசு செங்கோல் நிறுத்தினோன்
சிறுதேர் உருட்டி யருளே. 6

பொழிப்புரை: மேருமலையை வில்லாகக் கொண்டு, அதற்குரிய அம்பினை எய்து திரிபுரத்தை எரித்த சிவபெருமானின் மனம் மகிழுமாறு, அந்தணர்கள் அனைவரும் சேர்ந்து யாகத்திற்கு வேண்டிய துணைக்கருவிகளை எல்லாம் சேர்த்துக் கொண்டு, தக்க இடத்தைத் தேர்ந்தெடுத்து அதில் அமர்ந்து, நாட்டில் பொய்ம்மை குன்றவும், மெய்ம்மை மேலோங்கவும், யாக குண்டம் அமைத்து அதில் எழுப்பப் பெற்ற தீயைக் காத்திட, அவ்விடத்திலிருந்த எழுந்த புகை மேலுலகத்தில் சென்று இந்திரனது கூர்ச்சைத் திரவம் என்னும் குதிரையையும், ஐராவதம் என்னும் யானையையும் அவற்றின் நிறம் குன்றிப் புகையின் கருநிறத்தைப் பெற, அதனால் அவை இரண்டும் என்ன காரணத்தினால் இது நிகழ்ந்தது என்று வருந்த, மேலும் அப்புகை கற்பக மரத்திலும் பொருந்தி வருத்த, மேலும் அப்புகை தேவலோகம் முழுவதும் பரவ, அதனால் தேவலோகப் பெண்கள் தங்கள் கண் இமைகளைச் சுருக்கி இமைக்கச் செய்யும்படியான, வேள்வி வளம் நிறைந்த குன்றத்தூர் வாழும் சேக்கிழார் குடியில் தோன்றியவரே, சிறுதேர் உருட்டி அருள்க. சாற்றுக்கோல் கொண்டு உழவுத் தொழிலைச் செய்து, அரசனின் செங்கோலை நிலைநாட்டுபவரே, சிறு தேரை உருட்டி அருள்கவே.

கருத்துரை: அந்தணர்கள் அமைத்த யாககுண்டத்திலிருந்து எழுந்த புகை, தேவருலகத்தில் இந்திரனின் வெள்ளைக் குதிரை யையும், வெள்ளை யானையையும் கருமையாக்க, கற்பக மரம் வருந்த, விண்ணகத்தில் பரவ, விண்ணக மகளிர் இமையைச் சுருக்கி இமைக்கச் செய்தது. அத்தகைய வேள்வி அமைந்த குன்றத்தூர் சேக்கிழார் குடித் தலைவரே. சிறுதேர் உருட்டி அருள்க.

அருஞ்சொற்பொருள்: தேத்து - இடத்து, பொய் குன்ற - பொய்ம்மை குன்ற, உச்சைச்சிரவம் - தேவலோகக் குதிரை, வெதும்ப - வருந்த.

புழுங்கும் கதிர்ப்பருதி எழமுறுக் குடைமுகப்
புண்டரீ கத்த டத்துப்
பொலிதரச் சூழ்ந்துநிற் கின்றதரு விடபமலர்
பொழிமது முழுக்க வீழ்ந்தே

எழுங்குங் குமத்தோள் இணைந்தமுலை யார்கள்கன
இரதம்அன் றென்று நீங்க
எறிதிரை கொளும்காலை அளவில்ஓ திமம்ஆங்கண்
எய்திப் படிந்து துளையா
வழங்கும் தரத்தவாய் மேல்எழமுன் நீங்கிஓர்
ஆகம்முழு வதும்ந னைந்தே
அருமைவெண் முகில்செய்ய தேன்பொழிதல்
எனவியந் தாகாயம் நோக்கி நிற்கும்
செழுங்குன்றை அம்பதிச் சேவையர் குலாதிபன்
சிறுதேர் உருட்டி யருளே
சிறுகோல் எடுத்தரசு செங்கோல் நிறுத்தினோன்
சிறுதேர் உருட்டி யருளே. 7

பொழிப்புரை: வெம்மை தரும் ஒளியை உடைய உதயசூரியன் தோன்றிய பொழுது, முருக்கு உடைந்து மலர்ந்த தாமரை மலர்கள் நிறைந்த பொய்கையின் கரைகளில், சூழ்ந்து நிற்கின்ற மரங்களின் கிளைகளில் உள்ள மலர்களில் இருந்து ஒழுகும் தேனானது, அப்பொய்கையில் விழுந்து பொய்கை முழுவதையும் நிறைவித்திட, அங்கு நீராட வந்த குங்குமம் தோய்ந்த தோள்களையும், மார்பினையும் உடைய பெண்கள், இப்பொய்கையில் இருப்பது நீரன்று, தேனாக உள்ளது என்று எண்ணி அதிலிருந்து நீங்கிக் கரையில் நிற்க அப்பொழுது அப்பொய்கையில் எழுந்த அலைகள் வீசி எழும்பொழுது அங்குள்ள அன்னப் பறவைகள் பொய்கை நீரில் மூழ்கி, பின் அங்கிருந்து மேலே பறக்க, அப்பறவைகளின் உடலிலிருந்து சிந்திய தேனானது, முன்பு தேன் என்று நீங்கி நீராடாது நின்ற பெண்களின் உடலை நனைத்தது. அதனால் அவர்கள் வெள்ளை மேகம் தேன் மழை பொழிந்தது போலும் என வியந்து, ஆகாயத்தை நோக்கி நிற்கும் வளப்பம் பொருந்திய குன்றையூர்ச் சேக்கிழார் குடித் தலைவரே. சிறுதேரை உருட்டி அருள்வாயாக. சாற்றுக்கோல் கொண்டு உழவுத் தொழிலைச் செய்து, அரசனின் செங்கோலை நிலை நாட்டுபவரே, சிறுதேரை உருட்டி அருள்வாயாக.

கருத்துரை: தாமரை பூத்த குளத்தின் கரைகளில் இருந்த, மரக்கொம்புகளில் இருந்து மலர்த்தேன் ஒழுகி, குளத்து நீரில்

முழுவதும் கலக்க, குளத்தில் நீராட வந்த மகளிர் நீரன்று, தேன் என எண்ணி அதில் நீராடாது கரையில் ஒதுங்கி நிற்க, குளத்து நீர் அலைகளில் படிந்து மேலே எழுந்த அன்னப்பறவைகளின் உடம்பில் இருந்த தேன்துளிகள் மேலே இருந்து சிந்தி, கரையில் இருந்த பெண்களை நனைக்க, அப்பெண்கள் மேகத்திலிருந்து தேன்மழை பொழிந்தது என எண்ணி வானத்தை நோக்கி நிற்க, அத்தகு நீர் வளம் மிகுந்த குன்றத்தூர் தலைவரே, சிறுதேர் உருட்டி அருள்கவே.

அருஞ்சொற்பொருள்: புழுங்கும் - வெப்பம் தரும், தடம் - குளம் (பொய்கை), கனஇரதம் - நீர், ஓதிமம் - அன்னம், ஆகம் - உடம்பு.

வெங்கடிய ஆணவ மலக்குருட் டிருள்உளம்
வெரீஇப் பதறிஓட் டெடுக்கும்
வெண்ணீறு சாதனம் விழைந்தவர்தம் முககமலம்
மேவுற் றொருங்கு மலரும்
பங்கமுற மேவுபர சமயர்வாய் ஆம்பல்பல
வும்துயர்அ மைந்து குவியும்
புரவுவே தாகம புராணம்எனும் மங்கலப்
பணைமிக் கெழுந்தொ லிக்கும்
அங்கலுழும் மாதரார் ஊடலின் எறிந்தகுழை
அன்றித் தடுப்பார் இலர்
அவைகளையும் அகலுற அகற்றினேம் மண்ணகத்
தமைய எழுகின்ற தாய
செங்கதிர் எனச்சொலச் சேவையர் குலாதிபன்
சிறுதேர் உருட்டி யருளே
சிறுகோல் எடுத்தரசு செங்கோல் நிறுத்தினோன்
சிறுதேர் உருட்டி யருளே. 8

பொழிப்புரை: மிகக் கொடிய ஆணவ மலமாகிய இருள் உலகத்திலிருந்து பதறி ஓடும்படி, திருவெண்ணீறாகிய சாதனத்தை விரும்ப அணிந்தவர்களின் முகமாகிய தாமரை மலரவும், இழிவு பொருந்திய பிற சமயத்தை விரும்புகின்றவர்களின் வாயாகிய ஆம்பல் துன்பமடைந்து குவியவும், போற்றுகின்ற வேதம், ஆகமம், புராணம் ஆகிய மங்கலக் கருவிகள் ஒலிக்கவும், அழகு

மிக்க பெண்கள் தங்கள் கணவர் மாட்டுக் கொண்ட ஊடலால், தங்கள் காதுகளில் இருந்து பறித்து எறியப்பட்ட குழை (தோடு) அன்றித் தெருவில் நீர் தேர் உருட்டுவதற்கு வேறு தடையில்லை, தோடுகளாகிய தடையையும் நாங்கள் நீக்கி விட்டோம். எனவே மண்ணுலகத்துச் சூரியன் எனப்படும் சேக்கிழார் குடியில் உதித்தவரே, சிறிய தேரினை உருட்டி அருள்வாயாக. சாற்றுக் கோலைக் கொண்டு உழவுத் தொழிலைச் செய்து அரசின் செங்கோலை நிலைநாட்டுபவரே, சிறுதேரை உருட்டி அருள்வீராக.

கருத்துரை: ஆணவ மலமாகிய இருள் ஓடும்படி, வெண்ணீற்றுச் சாதனத்தை அணிந்தவர் முகமாகிய தாமரை மலரவும், புறச்சமயத்தாரின் வாயாகிய ஆம்பல் குவியவும், வேதம், ஆகமம், புராணம் என்னும் இசைக்கருவிகள் ஒலிக்கவும், நாங்கள் தடைகளை அகற்றி விட்டதால் மண்ணகத்துச் சூரியனாகிய நீர் உமது தேரை உருட்டி அருளுக.

அருஞ்சொற்பொருள் :மங்கலப்பணை - இசைக்கருவிகள், அம்கழுலும் - அழகுபொருந்திய, குழை - காதணி, தடுப்பார் - தடை, செங்கதிர் எனச் சொல - மண்ணகத்துச் சூரியன் எனச் சொல்லும்.

சுவைஅமையும் மோதகம் கனிபலவும் மற்றவும்
　　தும்பிமுக வற்கு நல்கித்
　தொழ அமுது செய்தலால் ஊறுஎன் பதுஇந்நகர்
　　சூழ்நக ரினும் புகாது
நவையது அடையாது என்னின் அச்சுமுதல்வலியவே
　　நவிலவேண் டுவது இனிஎவன்
　நன்னுதல் திருநீறு நிலவுஎறிக் கக்குழை
　　நலம்கொள் மணி வெயில்எறிக்க
அவையகம் வியக்கும்முப் புலவர்அருள் முக்கனி
　　அருந்தமிழ்ச் சுவை அனைத்தும்
　ஆராய்ந் தெடுத்துப்பல்செய்யுள்முக மாஅறிய
　　அறிவித்த பெரு நாவலன்

சிவையுதவு சொற்கொண்ட சேவையர் குலாதிபன்
சிறுதேர் உருட்டி யருளே,
சிறுகோ லெடுத்தரசு செங்கோ னிறுத்தினோன்
சிறுதேர் உருட்டி யருளே. ௯

பொழிப்புரை: சுவை மிகுந்த கொழுக்கட்டை, பழங்கள், அப்பம் முதலியவற்றை விநாயகப் பெருமானுக்குக் கொடுத்து வழிபட்ட பிறகே, குன்றையூரில் உள்ளவர்கள் உணவு அருந்து வார்கள். ஆகையால் அந்த நகரத்திற்கு மட்டுமல்லாமல், அவ்வூரின் புற நகரிலும் இடையூறு என்பது புகுவது கிடையாது. இடையூறு அடையாது என்பதால் சேக்கிழார் இழுத்துச் செல்லும் தேரின் அச்சும் முறியாது. வலிமை உடையதாகவே இருக்கும் என்று கூற வேண்டுவதில்லை. நல்ல நெற்றியில் திருநீற்றின் ஒளி பெருகவும், காதில் அணியும் குழைகளின் நிறம் பொருந்திய மணிகளின் ஒளிபெருகவும், கற்றோர் அவை வியக்குமாறும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரும் அருளிய முக்கனிகளாம் மா, பலா, வாழை ஆகியவற்றின் சுவை போன்று, ஆராய்ந்து மூவரால் கூறப்பட்ட தேவாரத் திருமுறை களின் சுவை அனைத்தையும் நன்கு அறிந்து, அவற்றின் பொருளையும் திருத்தொண்டர் புராணத்தின் செய்யுட்கள் மூலமாக உலகோர் அறியுமாறு அறிவித்த பெருநாவலரே, சிவனருளால் தோன்றிய உலகெலாம் என்ற சொல்லைக் கொண்ட வேளாளர் குலத்தில் தோன்றிய தலைவரே, சிறுதேர் உருட்டி அருள்கவே. சாற்றுக்கோல் கொண்டு உழவுத் தொழிலைச் செய்து அரசனின் செங்கோலை நிலை நாட்டுபவரே, சிறுதேரை உருட்டி அருள்வீராக.

கருத்துரை: மூவர் தேவாரங்களாகிய முக்கனிச் சுவையை ஆராய்ந்து, தம்முடைய திருத்தொண்டர் புராணச் செய்யுட்கள் மூலமாக திருமுறைகளின் சுவையையும் பொருளையும் அறிவித்த பாவலராம் சேக்கிழாரே, குன்றத்தூர் மக்கள் விநாயகருக்கு நைவேத்திய பொருட்களைப் படைத்த பின்னரே தாம் உண்ணு வார்கள். ஆதலால் அந்நகருக்கும் அதைச் சுற்றியுள்ள பகுதி களுக்கும் இடையூறு ஏற்படாது. எனவே நீ சிறுதேரை ஓட்டிச் செல்லும் பொழுது தடையும் ஏற்படாது, அச்சும் முறியாது. எனவே சிறுதேரை உருட்டி அருள்க.

அருஞ்சொற்பொருள்: மோதகம், கனி பலவும் - விநாயகருக்கு நைவேத்திய பொருள்களான மோதகம், கனி வகைகள், அப்பம் முதலியன. தும்ப முகவர் - தும்பிக்கை கொண்ட முகத்தையுடைய விநாயகர், தடை - இடையூறு, முப்புலவர் - திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், முக்கனி - மா, பலா, வாழை, முகமா - மூலமாக, சிவையுதவு - சிவனின் அருட்சத்தி அருளிய, சொல் - உலகெலாம் என்ற சொல்.

பண்புகெழு நின்சரித் திரமினிய பாவால்
பரப்பிய திருக் கைலாய
பரம்பரை உமாபதி சிவன்புகழு மவன்முனோர்
பைம்புகழு மவன் வழிவரும்
நண்புபுனை தவர்புகழு மினிமேலும் வருபவர்
நயப் புகழும் நீடுவாழ
நாடுவித நீசெய்த மாபுரா ணத்தமரு
நாயன்மார் பெருமை வாழ
விண்புகழும் நால்வர்திரு வாய்மலர்ந்து அருள்திரா
விடவேத மென்றும் வாழ
மெய்யன்ப னின்னா லயப்பணி முதற்புரி
விருப்பமிக் கார்கள் வாழத்
திண்புவி யெடுத்தேத்து சேவையர் குலாதிபன்
சிறுதேர் உருட்டி யருளே
சிறுகோ லெடுத்தரசு செங்கோல் நிறுத்தினோன்
சிறுதேர் உருட்டி யருளே. 10

பொழிப்புரை: பண்பு கொண்ட உமது வரலாற்றை இனிய பாக்களால் அருளிய திருக் கைலாய பரம்பரை உமாபதி சிவாசாரியாரின் புகழும், அவர்தம் முன்னோர் புகழும், அவர் வழிவந்த தவத்தால் திருவேடப் பொலிவு பெற்று விளங்கு பவர்களின் புகழும், இனிமேலும் பரம்பரை வழி வருபவர்கள் புகழும் நெடிது வாழவும், நயம் கொண்ட பெருமை பொருந்திய நீர் செய்த திருத்தொண்டர் புராணத்தில் இடம்பெற்ற அடியார்களின் பெருமை வாழவும், விண்ணகத்தார் புகழும் படியான நால்வர்கள் திருவாய் மலர்ந்தருளிய திராவிட வேதம் என்று கூறப்படும் தேவாரத் திருவாசக திருமுறைகள் என்றும்


வாழவும், உண்மை அன்பினால் ஆலயப்பணி முதலான சிவப்பணிகளைச் செய்வார்கள் யாவரும் வாழவும், பெருமை பெற்ற உலகோர் பாராட்டிப் போற்றும் சேக்கிழார் குலத்தில் உதித்த தலைவரே, சிறுதேர் உருட்டி அருள்கவே. சாற்றுக் கோலைக் கொண்டு உழவுத் தொழிலைச் செய்து, அரசனின் செங்கோலை நிலைநாட்டியவரே, சிறுதேர் உருட்டி அருள்வீராக.

கருத்துரை: சேக்கிழார் பெருமானே, உமது சரித்திரத்தைக் கூறிய உமாபதி சிவத்தின் புகழும், அவர் முன்னோர், வழிவந்தோர், வரப் போகின்றவர் ஆகியோரின் புகழும், பெரிய புராணத்தில் கூறப்பெற்ற நாயன்மார்களின் பெருமை வாழவும், நால்வர் அருளிய திருமுறைகள் எக்காலத்தும் வாழவும், கோவில் பணி செய்யும் பெரியோர் வாழவும் நீர் சிறுதேரை உருட்டி அருள்வீராக.

அருஞ்சொற்பொருள்: அவன்முனோர் - முன்னவர்கள், பைம்புகழ் - எக்காலத்தும் பேசப்படும் புகழ், நண்பு புனைந்தவர் - நல்ல புகழையுடைய தவத்தைச் செய்தவர், நாடுவிதம் - எல்லோரும் விரும்பும் வண்ணம், திராவிட வேதம் - மூவர் தேவாரமும் திருவாசகமும், மெய்யன்பன் - உண்மை அன்பினால்.

சிறுதேர்ப் பருவம் முற்றிற்று.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ் உரை முற்றிற்று.



திருச்சிராப்பள்ளித் தமிழ்ச்சங்கம்

ஆர்.ஜி.பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி-620 002. போன் : 0431-2700417